


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பொதிகைத் தமிழ் உரை

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

## பொதுத்தமிழ்

இவ்வுரை நூலில்...

- கவிதைப்பேழை (செய்யுள்) : வினா – விடை
- உரைநடை : வினா – விடை
- விரிவானம் (துணைப்பாடம்) : வினா – விடை
- இனிக்கும் இலக்கணம் : வினா – விடை
- கற்பவை கற்றபின், செய்யுள்நயம் பாராட்டல்
- மொழியை ஆள்வோம், மொழியாக்கம்
- மொழியோடு விளையாடு, நிற்க அதற்குத் தக
- கலைச்சொல் அறிவோம், மொழிப்பயிற்சி
- பலவுள் தெரிக, மொழிப்பயிற்சி (பாடநூல் வினாக்கள்)
- காலாண்டு மற்றும் அரையாண்டு வினாத்தாள்கள்
- மாதிரி வினாத்தாள்கள்
- பொதுத்தேர்வு வினாத்தாள்கள் (விடைகளுடன்)
- மனப்பாடப்பகுதி

ஆகிய அனைத்தும் இடம்பெற்றுள்ளன.

உருவாக்கம் :
பதிப்பகப் புலவர்குழு

www.Padasalai.Net

பொதிகைப் பதிப்பகம்
கல்விநூல் வெளியீட்டாளர்
43, பந்தர் தெரு, சென்னை – 600 001.
தொடர்பு எண்கள் : 90 8777 9111 / 044-2538 1415

விலை ரூ.375.00

# பதிப்புரை

சொல்வளமும் பொருள்வளமும் நிறைந்த, காலத்தை வென்று வாழும் இளமைத் தன்மையும் வாய்ந்த, உயர்தனிச் செம்மொழியாம் செந்தமிழைப் பயிலும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவச் செல்வங்களுக்குப் 'பொதிகைத் தமிழ் உரை'நூலை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். பாடநூலைத் தழுவிய வினாக்கள் அனைத்துக்கும் எளிய இனிய நடையில், தெளிவான சொற்றொடர் அமைப்புடன், அளவான விடைகள்!

அரசு உருவாக்கிக் கொடுத்துள்ள பலாக்கனிபோன்ற 'தமிழ்ப் பாடநூலை'ப் பிளந்து, தோல்நீக்கி, பாலின் பிசிர் போக்கி, சடையாய் அமைந்த பகுதிகளை உரித்துக் களைந்து, உண்ணத்தக்க சுளைகளைமட்டும் தேர்வுசெய்து, எளிய தமிழில் வழங்கியுள்ளோம்.

மாணவர்களே! தன்னம்பிக்கை, கடினஉழைப்பு, விடாமுயற்சி எனும் மூன்றையும் உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்ளுங்கள்! தேர்வின்போது படிப்பது தேவையே! எனினும், அன்றாடம் படிப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டு, அதையே நிரந்தரமான வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்! அதனால், தேர்வை அச்சமின்றி எதிர்கொள்ளலாம்.

'விழுமிய கருத்துவிளக்கத்தோடு அமைகிற உரைநூலே பெரிதும் பயனுடைத்து' என்னும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் கூற்றுக்கிணங்க, கூர்த்த மதித்திறனும், பன்னெடுங்காலம் பயிற்றுவித்துக் கற்பித்தல் கலையில் பட்டறிவும் வாய்ந்த பைந்தமிழ்ப் புலவர் பெருமக்களால் இவ்வுரைநூல், உருவாக்கப் பெற்றுள்ளது என்பதனைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தேர்வில் உயர்மதிப்பெண் பெற்றிட, இந்நூல் மாணவ மாணவியர்க்குத் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

மாணவச் செல்வங்களுக்குப் பொதிகைத் தமிழ் உரை நூலைப் பரிந்துரைக்குமாறு தமிழாசிரியப் பெருமக்களைக் கனிவுடன் வேண்டுகிறோம். இவ்வுரைநூல், மேலும் சிறப்பாக அமைய உங்கள் ஆலோசனைகளை வரவேற்கிறோம்.

– பதிப்பாளர்

**Bank Details for Direct Deposit**

| | | |
|---|---|---|
| Account Name | : | **Pothigai Pathippagam** |
| Bank Name | : | Kotak Mahindra Bank |
| Branch | : | Porur, Chennai - 600 116. |
| Account Number | : | **5448198319** |
| IFSC | : | **KKBK0000472** |

முதல் பதிப்பு : ஜூலை, 2022
திருத்திய பதிப்பு : ஜூன், 2023, 2024
அச்சிட்டோர் : ஸ்ரீ முருகன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 005.

| இயல் | பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | செய்யுள் | இளந்தமிழே ! | 5 |
| | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | 10 |
| | செய்யுள் | தண்டியலங்காரம் – தன்னேர் இலாத தமிழ் | 19 |
| | துணைப்பாடம் | பாரதியின் கடிதம் – தம்பி நெல்லையப்பருக்கு | 24 |
| | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 27 |
| 2 | உரைநடை | பெருமழைக்காலம் | 38 |
| | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 48 |
| | | நெடுநல்வாடை | 52 |
| | துணைப்பாடம் | முதல்கல் | 58 |
| | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 61 |
| 3 | உரைநடை | தமிழர் குடும்ப முறை | 70 |
| | செய்யுள் | விருந்தினர் இல்லம் | 77 |
| | | கம்பராமாயணம் | 79 |
| | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 89 |
| | இலக்கணம் | பொருள் மயக்கம் | 92 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 102 |
| 4 | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 111 |
| | செய்யுள் | இதில் வெற்றி பெற | 118 |
| | | இடையீடு | 122 |
| | | புறநானூறு | 125 |
| | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | 132 |
| | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 133 |
| 5 | உரைநடை | மதராசப்பட்டினம் | 145 |
| | செய்யுள் | தெய்வமணிமாலை | 153 |
| | | தேவாரம் | 158 |
| | | அகநானூறு | 162 |
| | துணைப்பாடம் | தலைக்குளம் | 167 |
| | இலக்கணம் | படிமம் | 169 |


www.Padasalai.Net

| இயல் | பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| 6 | உரைநடை | திரைமொழி | 178 |
| | செய்யுள் | கவிதைகள் | 187 |
| | | சிலப்பதிகாரம் | 189 |
| | | தொல்காப்பியம் – மெய்ப்பாட்டியல் | 197 |
| | துணைப்பாடம் | நடிகர் திலகம் | 201 |
| | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | 205 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 215 |
| 7 | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 225 |
| | செய்யுள் | அதிசய மலர் | 233 |
| | | தேயிலைத் தோட்டப் பாட்டு | 235 |
| | | புறநானூறு | 238 |
| | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | 243 |
| | இலக்கணம் | தொன்மம் | 244 |
| 8 | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 253 |
| | செய்யுள் | முகம் | 263 |
| | | இரட்சணிய யாத்திரிகம் | 265 |
| | | சிறுபாணாற்றுப்படை | 271 |
| | துணைப்பாடம் | கோடை மழை | 281 |
| | இலக்கணம் | குறியீடு | 283 |
| | ➲ | பலவுள் தெரிக (பாடநூல் வினாக்கள்) | 291 |
| | ➲ | மொழிப்பயிற்சி (பாடநூல் வினாக்கள்) | 303 |
| | ➲ | மாதிரி வினாத்தாள்கள் | 324 |
| | ➲ | பொதுத்தேர்வு வினாத்தாள்கள் (விடைகளுடன்) | 351 |
| | ➲ | மனப்பாடப்பகுதி | 395 |


www.Padasalai.Net

# இயல் – 1

## கவிதைப்பேழை

## 1. இளந்தமிழே !

(கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்)

### நம்மை அளப்போம்

### குறுவினா

1. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?(Mar.-20, July-22,23)**
   ★ தங்கள் கைகள் **செந்நிறத்து வானம்போலச்** சிவந்திட உழைக்கும் தொழிலாளர்களின் **வியர்வை வெள்ளம்,** அவர்களின் திரண்ட தோள்மீது முத்துமுத்தாய் **வீற்றிருக்கும்.**
   ★ இந்த அழகினை வியந்து பாடத் தமிழின் துணை வேண்டும் என்கிறார் கவிஞர் சிற்பி.

### கூடுதல் வினாக்கள்

2. **"முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" – யார், யாரைப் பற்றிக் கூறியது ?**
   ➤ கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், தமிழ்த்தாயைப் பற்றிக் கூறியது. (PTA - 5)
3. **"பழமைநலம் கொண்ட மொழி, தமிழ்மொழி" – எவ்வாறு?**
   ➤ தமிழ்மொழி, பாண்டிய மன்னர்கள் அமைத்த சங்கத்திலே தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சி செய்த மொழியாகும்.
   ➤ பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்த பழமை நலம் கொண்ட மொழியாகும்.
4. **கவிஞர் சிற்பி குறிப்பிடும் முத்தமிழின் சிறப்புகள் யாவை?**
   ➤ எங்களின் உள்ளத்தில் பொங்கிவரும் கவிதை வெறிக்கு உணவாக எப்பொழுதும் நீக்கமற நிறைந்தது முத்தமிழ்மொழியே! வள்ளல் பலரைத் தமிழ்நாட்டிற்குத் தந்தவளும், முத்தமிழ்மொழி வளர முச்சங்கத்தின் வழி உதவியவளும், தமிழ்த்தாய் ஆவாள்.
5. **தமிழ்மொழி எத்தகைய வலிமை வாய்ந்தது?**
   ➤ தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும் அறியாமையும் அவர்களை விட்டு முழுமையாக அகன்றிட, அவர்கள் சிறைப்பட்டிருக்கும் அடிமைத்தனக் கூண்டினை உடைத்திடச் சிங்கம்போலச் சீறிப்பாயும் வலிமை வாய்ந்தது தமிழ்மொழி.
6. **'செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்' – விளக்குக.**
   ➤ மாலை நேரத்தில் கதிரவனின் செந்நிற ஒளியால், மேற்குத் திசை வானவெளியெல்லாம் செந்நிறப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்ற பூக்காடுபோல் விளங்குகிறது எனக் கூறுகிறார் கவிஞர்.
7. **கவிஞர் சிற்பி அவர்கள், தென்தமிழை எவ்வாறு சீறி எழுந்து வரச் சொல்கிறார்?**
   ➤ "அடைத்து வைத்திருக்கும் கூண்டினைத் தகர்த்துக்கொண்டு வெளியேறும் சிங்கம்போல, தன் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவற்றை யெல்லாம் தகர்த்தெறிந்து விட்டுச் சீறி எழுந்து வருமாறு, கவிஞர் சிற்பி தென்தமிழை அழைக்கிறார்.
8. **சிற்பி பாலசுப்பிரமணியம் ஆற்றிய பணிகள் யாவை?**
   ➤ கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் பேராசிரியராகப் பணியாற்றியதோடு கவிதை, உரைநடை நூல்களை இயற்றியுள்ளார்.
   ➤ மலையாளத்திலிருந்து கவிதைகளையும், புதினங்களையும் மொழி பெயர்த்துள்ளார்.
   ➤ சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## சிறுவினாக்கள்

**1. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' – தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.** (July - 23)

★ மாலைக் கதிரவன், மலை முகட்டின்மீது தலையைச் சாய்க்கின்றான். கதிரவனின் செம்மஞ்சள் நிறம், வானம் முழுவதும் பூக்காடுபோலப் பரவிப் படர்ந்துள்ளது. இயற்கை ஓவியன் புனைந்த அழகிய செந்நிறத்துப் பூக்காடாக வானம் தோன்றுவதற்கு மாலை நேரத்துக் கதிரவன் காரணமாக அமைந்துள்ளான் என்பதை இத்தொடர் அழகாக வெளிப்படுத்துகிறது.

★ நாள் முழுதும் உழைத்துக் களைத்தக் கதிரவன் தலைசாய்த்ததால் அந்தி வானம் பெற்ற சிவந்த நிறமும், அன்றாடம் உழைத்து வாழும் உழைப்பாளிகளின் கை வண்ணமும் ஒன்றே என்பதைக் கவிஞர் சிற்பியின் இவ்வரிகள் நயமாகக் காட்சிப்படுத்துகின்றன.

**2. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே!<br>– நன்னூல். | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு மெய் சிலிர்க்கத் தமிழ்க்குயிலே கூவி வா,வா!<br>– சிற்பி பாலசுப்பிரமணியம். |

**நன்னூல்** : ஒருமொழியில், பல்வேறு காலங்களில் தோன்றிய இலக்கியங்களை நோக்கின் பழைய சொல்வழக்குகள் அழிதலும், புதிய சொல்வழக்குகள் தோன்றுதலும் ஆகிய இப்பண்பு இடம் பெற்றிருக்கும்.

**சிற்பி பாலசுப்பிரமணியம்** : நாட்டின் வளர்ச்சியில் **புதுமையை** ஏற்றதனால் தமிழ்நாட்டின் பண்டைய பழக்க வழக்கங்கள், **வாழ்வியல் நெறிமுறைகள்,** மொழிப் பயன்பாடு என எல்லாம் சிதைந்து மாறிவிட்டன.

**நன்னூல்** : கால மாற்றத்திற்கு ஏற்ப மொழியில் பழையன எல்லாம் அழிவதும் புதியன எல்லாம் புகுவதும் போற்றற்குரியன.

**சிற்பி பாலசுப்பிரமணியம்** : புதியவற்றுக்கு வழிவிட்டதனால் பழமைநலம் சிதைவுற்று அழிந்துவிட்டது. பழமையானதானாலும் பண்டைய **பண்பாடும் ஒழுக்கநெறிகளும்** தளிர்க்கத் **தமிழ்க்குயிலே** நீ மீண்டும் கூவி வர வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

**3. சிற்பி பாலசுப்பிரமணியம் குறித்துக் குறிப்பெழுதுக.** (PTA - 1)

➤ பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர், கவிஞர் எனப் பன்முகம் கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம். பாரதியார் பல்கலைக்கழகத்தில், தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்தவர்.

➤ நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி முதலிய கவிதை நூல்களை இயற்றியவர். இலக்கியச் சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவடும் என்னும் உரைநடை நூல்களையும் எழுதியவர்.

➤ மலையாளக் கவிதைகளையும் புதினங்களையும் மொழிபெயர்த்தவர். மொழிப்பெயர்ப்புக்காக ஒருமுறையும், 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதை நூலுக்கு ஒருமுறையும் சாகித்திய அகாதமி விருது பெற்றவர். இவர் கவிதைகள், ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

**4. தமிழன்னை ஏன் சீறி வரவேண்டும் எனச் சிற்பி பாலசுப்பிரமணியம் விரும்புகிறார்?**

➤ உள்ளத்தில் பொங்கிவரும் உணர்வுகளை உணர்ச்சிமிகு கவிதையாக எழுதப் பண்டைய நாளிலிருந்த தமிழ்நலமும் தமிழ்நாட்டுப் பொதுமை நலமும் மீண்டும் இத்தமிழ் மண்ணில் புதுப்பிப்பதற்கு நீ குயில் போலக் கூவி வரவேண்டும்.

➤ இன்று தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் முழுவதுமாகச் சிறைப்படுத்தப் பட்டிருக்கும் அடிமைத்தனக் கூட்டினை உடைத்திடத் தமிழன்னை சிங்கம்போலச் சீறி நீ புறப்பட்டு வரவேண்டும் எனச் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5. 'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது? (Mar.-23)**

- முற்காலத்தில் முதற் இடைச்சங்கங்கள் கடல்கோளால் அழிந்தபோதிலும், மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்த பாண்டியரின் அவை முன்னிலையில் தமிழ் அன்னை கொலுவாக வீற்றிருந்தாள். பாண்டிய நாடெங்கும் தமிழ்மொழி இலக்கிய இலக்கண வளம் பெற்றுத் தழைத்தோங்கியது.
- சேந்தன் பூதனார், சிறுமேதாவியார், நக்கீரர் முதலான புலவர்கள் நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பரிபாடல் எனப் பல சிறந்த நூல்களை உருவாக்கினர். தமிழன்னை ஈன்று தந்த பாரி முதலான கடையெழு வள்ளல்கள் தமிழ்ப் புலவர்களை பெரிதும் ஆதரித்தனர்.
- இத்தகைய பழமை நலமிக்க தமிழ்மொழி காலத்திற்கேற்ப புதிய புதிய இலக்கியங்களைப் பெற்று மீண்டும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டும், பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக்கொண்டும் மிளிர வேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.

**6. முத்தமிழ், மூண்டுவரும் கவிதை வெறிக்கு உணவாய் ஆகும் விதத்தைச் சிற்பி கூறியவாறு எழுதுக.**

- தம் உள்ளத்துள் உள்ள உணர்ச்சிகளைக் கதையாய் வடிக்க முயல்கிறான் கவிஞன். கவிதை வடித்திடத் துணையாய் இருப்பது தமிழ்மொழி. தமிழ்மொழியில் அமைந்த சொல்நயம், பொருள்நயம், எதுகை, மோனை முதலான வடிவங்கள், கவிதை வடித்திடப் பேருதவியாய் அமைகின்றன.
- அதனால்தான் சிற்பி அவர்கள், "முத்தமிழே! மூண்டுவரும் கவிதை வெறிக்கு உணவாய் நீயுள்ளாய்" என்கிறார்.

## நெடுவினா

**1. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி. பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. (Sep.-21, May - 22)**

**முன்னுரை :**

தமிழ்மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீட்சி; உலகம் தோன்றிய காலந்தொட்டு, மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு **உயிர்ப்போடும் இளமையோடும்** இருப்பது. இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் இலங்குகிறது. இத்தகைய தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைக் காணலாம்.

**மாலைநேரக் கதிரவன் :**

சிவந்த நிறமுடைய கதிரவன் தலைசாய்ப்பதுபோல் மலையின் பின்னே மாலைநேரத்தில் மறைவான். அப்போது **வானம் சிவந்த பூக்காடுபோலக்** காட்சியளிக்கும். அந்தச் சிவந்த நிறத்தைப்போலத் தம் கைகள் சிவக்க உழைக்கும் **தொழிலாளர்களின் வியர்வைத் துளிகள்** அவர்களின் பருத்த தோள்கள்மீது **முத்துமுத்தாய்** இருக்கும். இவற்றையெல்லாம் வியந்து பாட, எனதருமைச் செந்தமிழே **உன்னையன்றி** ஏற்ற துணை வேறுண்டோ!

**குளிர்பொதிகைத் தென்தமிழே! :**

தமிழ்க்குயிலே! பொங்கிவரும் **கவிதைவெறிக்கு** உணவாய் இருக்கின்றாய். சங்கம் வைத்துத் தமிழ் அறம் வளர்த்த பாண்டியர்களின் அவையில் வீற்றிருக்கின்றாய். பாரி முதலான **பல வள்ளல்களைப்** பெற்றுத் தந்திருக்கின்றாய். தமிழ்க்குயிலே! அன்று நீ செய்த அந்தப் பழமையான நலத்தை மீண்டும் புதுப்பித்துக் கொண்டுவர, என்றன் **மெய்சிலிர்க்கக்** கூவி வா! குளிர்ந்த பொதிகை மலையில் தோன்றிய தென்தமிழே, சீறி வருவாயாக! **புதுப்பொலிவுடன்** விளங்கும் தமிழே தவழ்ந்து வருவாயாக! எனக் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

**முடிவுரை :**

காலத்திற்கேற்பத் **தன்னைப் புதுபித்துக்கொண்டு** இன்றளவும் சிறப்புற்றுத் திகழ்கின்ற தமிழின் சிறப்பைக் கவிஞர் சிற்பி வியந்து பாடுகின்றார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பலவுள் தெரிக

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" – கவிஞர் குறிப்பிடும் பழமைநலம், (July - 23)

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

**விடை : ஈ) க, ங இரண்டும் சரி**

## கூடுதல் வினாக்கள்

2. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் (PTA - 4)

அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி

இ) சூரிய நிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி

**விடை : ஆ) ஒரு கிராமத்து நதி**

3. "தமிழ்க்குயிலே! கூவி வா, வா!" எனக் கூறியவர் : (May - 22)

அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) பாரதியார்

இ) சுரதா ஈ) பாரதிதாசன்

**விடை : அ) சிற்பி பாலசுப்பிரமணியம்**

4. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்? (PTA - 6)

அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி

**விடை : ஆ) சீறி**

5. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம்பெற்ற நூல் (Mar. - 20)

அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம்

**விடை : ஆ) நிலவுப் பூ**

6. சிற்பி. பாலசுப்பிரமணியம், எழுதிய உரைநடை நூல் ______.

அ) நிலவுப்பூ ஆ) ஒளிப்பறவை

இ) இலக்கியச் சிந்தனைகள் ஈ) சூரியநிழல்

**விடை : இ) இலக்கியச் சிந்தனைகள்**

7. கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கிய நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது?

அ) ஒரு கிராமத்தின் கதை ஆ) ஒரு கிராமமே அழுதது

இ) ஒரு கிராமத்தின் நதி ஈ) ஒரு புளியமரத்தின் கதை

**விடை : இ) ஒரு கிராமத்தின் நதி**

8. சிற்பியின் கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மராத்தி, இந்தி மற்றும் ______ மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

அ) மலையாள ஆ) உருது இ) தெலுங்கு ஈ) வங்காள

**விடை : அ) மலையாளம்**

9. செந்நிறத்துப் பூக்காடுபோல இருந்தவை எவை?

அ) உழைத்த தொழிலாளர்களின் கரங்கள் ஆ) தொழிலாளர்களின் கண்கள்

இ) தொழிலாளர்களின் பாதங்கள் ஈ) உழைத்த தொழிலாளர்களின் தோள்கள்

**விடை : அ) உழைத்த தொழிலாளர்களின் கரங்கள்**

10. 'சிவந்து' என்பதன் இலக்கணக்குறிப்பு,

அ) உவமை ஆ) உருவகம் இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்

**விடை : இ) வினையெச்சம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இலக்கணக்குறிப்பு

**செந்தமிழ், செம்பரிதி, செந்நிறம்** – பண்புத்தொகைகள்
**முத்துமுத்தாய்** – அடுக்குத்தொடர்
**வியர்வைவெள்ளம், தமிழ்க்குயில்** – உருவகங்கள்
**சிவந்து, வியந்து, ஈன்று, கூவி, உடைத்து** – வினையெச்சங்கள்

## உறுப்பிலக்கணம்

1. **சாய்ப்பான் – சாய் + ப் + ப் + ஆன்**
**சாய்** – பகுதி
**ப்** – சந்தி
**ப்** – எதிர்கால இடைநிலை
**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

2. **விம்முகின்ற – விம்மு + கின்று + அ**
**விம்மு** – பகுதி
**கின்று** – நிகழ்கால இடைநிலை
**அ** – பெயரெச்ச விகுதி.

3. **வியந்து – விய + த் (ந்) + த் + உ**
**விய** – பகுதி
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை
**உ** – வினையெச்ச விகுதி.

4. **இருந்தாய் – இரு + த் (ந்) + த் + ஆய்**
**இரு** – பகுதி
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை
**ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

5. **தந்தாய் – தா (த) + த் (ந்) + த் + ஆய்**
**தா**–பகுதி, 'த' ஆனது விகாரம்
**த்**–சந்தி, 'ந்' ஆனது விகாரம்
**த்**–இறந்தகால இடைநிலை
**ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **செம்பரிதி – செம்மை + பரிதி**
'ஈறுபோதல்' – செம் + பரிதி, 'செம்பரிதி' எனப் புணர்ந்தது.

2. **வானமெல்லாம் – வானம் + எல்லாம்**
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே', 'வானமெல்லாம்' எனப் புணர்ந்தது.

3. **உன்னையல்லால் – உன்னை + அல்லால்**
'இ ஈ ஐ வழி யவ்வும்' – உன்னை + ய் + அல்லால்
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'' – 'உன்னையல்லால்' எனப் புணர்ந்தது.

4. **செந்தமிழே – செம்மை + தமிழே / செந்நிறம் – செம்மை + நிறம்**
'ஈறுபோதல்' – செம் + தமிழே / செம் + நிறம்
'முன்னின்ற மெய் திரிதல்' செந் + தமிழே / செந் + நிறம்
'செந்தமிழே' எனப் புணர்ந்தது. / 'செந்நிறம்' எனப் புணர்ந்தது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. **வீற்றிருக்கும் – வீற்று + இருக்கும்**

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' – வீற்ற் + இருக்கும்

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – 'வீற்றிருக்கும்' எனப் புணர்ந்தது.

6. **எம்மருமை – எம் + அருமை**

'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' – எம்ம் + அருமை

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – 'எம்மருமை' எனப் புணர்ந்தது.

7. **அவையெல்லாம் – அவை + எல்லாம்**

'இ ஈ ஐ வழி யவ்வும்' – அவை + ய் + எல்லாம்

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – "அவையெல்லாம்" எனப் புணர்ந்தது.

### கற்பவை கற்றபின்

1. **தமிழ்மொழிப் பாடத்தில் மொழிவாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

**பார்வதி** : மொழி என்பது, இங்குத் தாய்மொழியாகிய தமிழ்மொழியைக் குறிக்கும். எனவே, மொழிவாழ்த்து என்பது, தமிழ்மொழியை வாழ்த்துதல் எனப் பொருள்படும்.

**காவியா** : நீ சொல்வது சரிதான் பார்வதி. மொழியே மக்களது அறிவை வளரச் செய்வது. தமிழ்மொழி நமது அடையாளம்; பண்பாட்டின் நீட்சி; தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டும், எழுதப்பட்டும், உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது.

**கலையரசன்** : அத்தகைய சிறப்புகளைப் பெற்ற மொழியைத் தெய்வமாகக் கருதி, அறிவைப் பெருக்க வேண்டி வாழ்த்துதல் அவசியம்தான்.

**கண்ணப்பன்** : இத்தகைய காரணங்களால்தான் தமிழ்மொழிப் பாடத்தில் மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கும், சிந்தனை ஆற்றலைத் தூண்டுவதற்கும் உற்ற துணையாக விளங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, மொழியைத் தெய்வமாகப் போற்றி வணங்குவதற்காக, மொழிவாழ்த்துப் பாடல் இடம்பெறச் செய்யப் பெற்றுள்ளது.

**பார்வதி** : மொழிவாழ்த்தைப் புரிந்து படித்து, மாணவர்களாகிய நாம் நம் மொழித்திறனை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

## உரைநடை உலகம்

# 2. தமிழ்மொழியின் நடை அழகியல்

(தி. சு. நடராசன்)

### குறுவினாக்கள்

1. **'நடை அழகியல்' பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.** **(July-21,22,23)**

★ 'நடைபெற்றியலும்' என்றும் 'நடைநவின்றொழுகும்' என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.

★ மேலும், 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி" என்றும் தொல்காப்பியம் கூறுகிறது. இவ்வகையில், தெளிவான பார்வையோடு 'நடை' என்ற சொல் இடம்பெறுகிறது.

2. **"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**

**கடாஅ யானைக் கலிமான் பேக" – இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**

**ஓசை நயமிக்க சொற்கள் :** படாஅம் ஈத்த, கெடாஅ நல்லிசை, கடாஅ யானை, நல்லிசை

**இலக்கணக் குறிப்புகள் :** படாஅம் ஈத்த, கெடாஅ நல்லிசை, கடாஅ யானை – இசைநிறையளபெடைகள்

**நல்லிசை :** பண்புத்தொகை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

★ **விடியலில்** உதிக்கும் கதிரவனின் தோற்றம், இயற்கையின் **வனப்பை** எடுத்துரைக்கும்.

## கூடுதல் வினாக்கள்

4. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்றுபவை எவை? (May - 22, Mar.-23)

➤ உவமை, உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவையாகும்.

5. சொல்லில் பொதிந்து கிடப்பன யாவை?

➤ உணர்வும் பொருளும் சொல்லில்தான் பொதிந்து கிடக்கின்றன.

➤ கலையும், பண்பாடும், வரலாறும், அரசியலும்கூடச் சொல்லில்தான் பொதிந்து கிடக்கின்றன.

6. இலக்கியத்தனம் என்பது யாது?

➤ இலக்கியம் என்ற மொழிசார் கலை, மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்றமட்டும் தனக்கு உரியதாக்கிக் கொள்கிறது.

➤ அது இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத் தன்மையைத் தந்து விடுகிறது. இத்தகைய தன்மைதான் கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று பேசப்படுகிறது.

7. தொடரியல் வடிவம் செய்யும் பணிகள் யாவை?

➤ பாடலின் தளத்தை, ஒலிக்கோலமும் சொற்புலமும், சொற்றொடர் நிலையும், ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன. அதற்குரிய, பாத்திகட்டி வரப்பு உயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவமைக்கிறது.

8. ஒலிப்பின்னல் என்பது யாது?

➤ மொழி சார்ந்த கவிதை, இசையோடும் இசைக் கருவியோடும்தான் பிறக்கிறது.

➤ ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கிறது.

➤ இதனையே பனுவலின் (பாடலின்) 'ஒலிப்பின்னல்' என்கிறோம்.

9. சங்க இலக்கியம் எவற்றைப் பாடற் பொருளாகக் கொண்டுள்ளது?

➤ சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும், புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற் பொருளாக வடிவமைத்துக் கொண்டுள்ளது.

10. தமிழ் அழகியலின் நெடும்பரப்பு எது?

➤ சமூகப் பண்பாட்டு மரபிற்கேற்பவே கலைப் படைப்பை – அழகியல் நெறியை – பண்பாட்டின் இலச்சினையாகச் சித்தரிப்பதற்குத் தமிழ் மரபு முன்வந்திருக்கிறது; முன்மொழிந்திருக்கிறது.

➤ இதுவே, தமிழ் அழகியலின் நெடும்பரப்பு ஆகும்.

11. நடையியலில் எவை முக்கியமானவை?

➤ ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் பாட்டு, கவிதை நடையியல் கூறுகளில் மிக முக்கியமானவை.

12. தொடரமைப்பு என்பது யாது?

➤ உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு.

13. கலை முழுமை எனப்படுவது யாது?

➤ இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியம் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான் கலை முழுமை எனப்படும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**14. அறவியல் கருத்துகளைத் தொல்காப்பியம் எப்படி இணைத்துக் கூறுகிறது?**

➤ புணர்தல், பிரிதல் முதலான அகம் சார்ந்த உரிப்பொருளைப் பேசும் தொல்காப்பியம், அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் இலட்சியப் பொருள்களோடு இரண்டற இணைத்து விடுகிறது. அதேபோல் பாவகை நான்கு எனக் கூறிவிட்டு, அந்தப் பாவகைகளோடு அறவியல் கருத்துகளையும் இணைத்துப் பேசுகிறது.

**15. இலக்கிய உருவாக்கத்தின் பயன் தொல்காப்பியத்தில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?**

➤ அறம், பொருள், இன்பம் அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளை உருவாக்கி உணர்த்துவனவாக இலக்கிய உருவாக்கத்தின் பயன்கள் இருக்க வேண்டும்.

➤ இதனை இயந்திரப்போக்கில் சொல்லாமல், தொல்காப்பியம் மிகத் தெளிவாக அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், சரிவர இணைந்திருக்க வேண்டுமெனக் கூறுகிறது.

## சிறுவினா

**1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். – விளக்குக.**

(PTA-2, Mar.-23, Sep.-21,22)

★ சங்கப் பாடல்களில் **ஓசையும் பொருளும்** இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதனையே பாடல்களில் ஒலிப்பின்னல் என்கிறோம். இந்த ஒலிக்கோலங்கள் உணர்ச்சிகளைக் காட்டும் விதமாக அமைக்கப்பட்டுள்ளன.

“கடந்தடு தானை மூவிருங்கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;
முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;”

★ என்னும் புறநானூற்றுப் பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டும் க, த, ட, ற என்ற வல்லின மெய்கள் பிற மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வந்துள்ளன.

“படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக” (புறம் – 145)

★ இதில், **உயிர் ஒலிகள்** குறிப்பாக **நெடில்** ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் **திரும்ப வரல்** தன்மை பெற்றிருப்பதும், இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டு களும் சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக விளங்கியதை உணர்த்தும்.

## கூடுதல் வினாக்கள்

**2. கலை முழுமை என்றால் என்ன? விளக்குக.** (Mar - 20)

➤ இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைத் தொல்காப்பியம் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான், கலை முழுமை எனப்படுகிறது.

➤ புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளைத் தொல்காப்பியமானது இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் ‘லட்சியப்’ பொருள்களோடு இரண்டற இணைத்துவிடுகிறது.

➤ இது செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறமாகும். சமூக–பண்பாட்டு மரபிற்கு ஏற்பவே, கலைப்படைப்பை, அழகியல் நெறியைப் பண்பாட்டின் இலச்சினையாகச் சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்து முன்மொழிந்திருக்கிறது. தமிழ் அழகியலின் நெடும்பரப்பு இது.

**3. கவிதை மறுதலைத் தொடர் – சான்று தந்து விளக்குக.** (PTA - 6, Sep. - 20)

➤ பேச்சு, இயல்பு வழக்குகளில் உரைநடைத் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள், அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவது மரபு. ஆனால், சங்கப்பாடல்கள் பலவற்றில் இம்முறை பிறழ்ந்து வருகிறது. இதுவே, கவிதை மறுதலைத் தொடர் எனப்படுகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**சான்று :** "இடுக வொன்றோ, சுடுக வொன்றோ
படுவழிப் படுக இப்புகழ் வெய்யோன் தலையே" (புறநானூறு. 239)

- இப்பாடலின் இறுதி அடிகள், ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்துள்ளது.
- முந்தைய அடிகள் மணந்தான், சூடினான், பேசினான், வழங்கினான் என நேர்பட, வரிசையாகத் திட்டமிட்டுச் செல்கின்றன.
- ஒவ்வோர் அடியும் தனித்தனி வினைமுற்றோடு தன்னிறைவோடு முடிகின்றன.
- இறுதியில் அவன் மறைந்ததைக் கூறி, புதைத்தால் புதை; சுட்டால் சுடு என அலுத்துக் கொண்டு இயல்பு நிலை பிறழ்ந்து அமைகிறது. இதுவே, கவிதை மறுதலைத் தொடர் எனப்படுகிறது.

**4. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை"–இப்பாடலில் ஒலிக்கோலங்களின் பண்பை விளக்குக.(May - 22)**

- சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தொடங்கிய தொன்மையான மொழியைச் சார்ந்த கவிதை, இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கிறது. இதனைப் பாடலின் 'ஒலிப் பின்னல்' என்பர். சங்கப் பாடல்களின் சில அடிகளை இதன் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்தால், 'ஒலிக்கோலத்'தின் வலிமையை அறியலாம்.
- சங்கப் பாடல்களில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள், பிற மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வந்து, வன்மையான உணர்ச்சியைக் காட்டுவதைக் காணலாம். இதன் அடிப்படையில் சில பாடல்களை ஒப்பிட்டுப் பார்த்து, ஒலிக்கோலங்களின் பண்பை அறியலாம்.

"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக"

- என்னும் பாடல் வரிகளில், உயிர் ஒலிகளின் – குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்ப வரப் பெற்றிருப்பதும், சொல் விளையாட்டுடன் ஒலிக்கோலப் பண்பைப் பெற்றுள்ளதைத் தெளிவாக விளக்குகிறது.

**5. தி.சு. நடராசன் – குறிப்பு எழுதுக.**

- திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி. சு. நடராசன் குறிப்பிடத் தக்கவர்.
- போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.
- கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

**6. செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் எது?**

- சங்க இலக்கியம் அகம், புறம் சார்ந்த செய்திகளைப் பாடற் பொருளாக வடிவமைத்துள்ளது.
- புணர்தல், பிரிதல் முதலான அகம் சார்ந்த ஐந்திணைகளைத் தொல்காப்பியம் அறம், பொருள், இன்பம் ஆகிய அறவியல் 'இலட்சியப்' பொருள்களோடு இரண்டற இணைத்து விடுகிறது. தொடர்ந்து பாவகைகள் நான்கு எனக் குறிப்பிடும் தொல்காப்பியம்,

"அந்நில மருங்கின் அறமுதலாகிய
மும்முதற் பொருட்டும் உரிய என்ப" (தொல். செய். 105)

என்று பாவகைகளோடு அறவியல் கருத்துகளையும் இணைத்துச் சொல்கிறது. செவ்வியல் தமிழ் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் இதுவே ஆகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## நெடுவினா

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

**முன்னுரை :** (PTA - 1, Sep.-20,Mar.-23)

கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளில் **ஒலிக்கோலங்கள், சொற்புலம்,** தொடரியல் போக்குகள் மிக முக்கியமானவையாகும். இவற்றைக் குறித்து நாம் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

**ஒலிக்கோலங்கள் :**

இசையோடும் இசைக்கருவியோடும்தான் மொழி சார்ந்த கவிதை பிறக்கும். ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதை **ஒலிப்பின்னல், ஒலிக்கோலம்** என்பர். வன்மை உணர்ச்சியை வெளிப்படுத்தப் பாடல்களின் வல்லின மெய்யொலிகள் மிகுதியாக இடம்பெறும். இனிய இசைக்காக நெடில் ஒலிகள் அதிகமாக இடம் பெறும். சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பத் திரும்ப வரும் தன்மையும் பாடல்களில் இடம் பெறும். இந்த ஒலிக்கோலம் என்பது **சங்கப் பாடல்களில்** முக்கியமான ஒரு பண்பாகும்.

**சொற்புலம் :**

ஒரு பொருள் குறித்து வரும் பல சொற்களும், பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லும் சொல் வளத்திற்குச் சான்று. பல்வேறு துறைகள், சூழல்கள், புனைவுகளுக்கும் உரியவகையில் உணர்வும் தெளிவும் கொண்டதாகச் **செழிப்பானதொரு தளத்தைச்** சொல் கொண்டிருக்கிறது. **தனிச்சொல்லாகவும், தொகைநிலைமொழியாகவும்** சொற்கள் இயங்குகின்றன. இது வாக்கிய அமைப்பில் ஒருசொல் போலவே இயங்கும்.

**தொடரியல் போக்குகள் :**

பாடலின் தளத்தை முழுமையடையச் செய்வது தொடரியல் போக்காகும். சொல்பவனுடைய மொழித்திறனை, கேட்பவன் அல்லது வாசிப்பவன் முழுமையாகப் பெறவேண்டும். பரிமாறப்படும் சொல் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் நேர் நடந்தும், ஏறி இறங்கியும், திரும்பியும், சுழன்றும் இயங்கும். இவையே கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் ஆகும்.

**முடிவுரை :**

வடிவமைப்பின் பகுதிகளையும் முழுமையினையும் சார்ந்தே நடையைக் கட்டமைக்கும் கூறு இருக்கிறது. அத்தகைய தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியங்களே அடிப்படை.

**2. 'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.** (Sep.-22)

**'சொல்லோவியங்கள்' – கவிதை நூல் வெளியீட்டு விழா**

இடம் : அரசு மேனிலைப்பள்ளி
அருப்பாவூர்

நாள் : 07.07.2023 புதன்கிழமை
நேரம் : பிற்பகல் 3 மணி

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| **தமிழ்த்தாய் வாழ்த்து** | : செல்வி தனலட்சுமி |
| **வரவேற்புரை** | : திரு. ச. நடராசன் (தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, அரும்பாவூர்) |
| **நூல் அறிமுக உரை** | : திரு. க. சுப்பையா அவர்கள் (ஓய்வுபெற்ற தமிழாசிரியர்) |
| **நூல் வெளியீடு மற்றும் வாழ்த்துரை** | : திரு. இரா. இளங்குமரனார் அவர்கள் திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர் |
| **முதல் பிரதியைப் பெறுபவர்** | : திரு. அ. அமலதாஸ் அவர்கள் (பேரூராட்சித் தலைவர், அரும்பாவூர்) |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| | | |
|---|---|---|
| நூலாசிரியர் உரை | : | திரு. அ. குமார் ஐயா அவர்கள் (எழுத்தாளர், தமிழாசிரியர், பணிநிறைவு) |
| தலைமை உரை | : | திரு. இல. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (தலைமையாசிரியர், ஓய்வு) |
| விழிப்புணர்வுப் பாடல்கள் | : | மாணவியர் |
| நன்றியுரை | : | திருமதி. த. வாசுகி (கணித ஆசிரியை) |
| நாட்டுப்பண் | : | மாணவ – மாணவிகள் |

## நன்றியுரை

அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்!

இன்று நம் பள்ளியில் நடைபெறும் இவ்விழா, மிக முக்கியமான விழாவாகும். ஒரு பேனா தலைகுனியும் போது, ஒரு சமூகம் தலை நிமிரும் என்பார்கள். இன்று 'சொல்லோவியங்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமையேற்று, இனிய தலைமையுரை தந்து எழுத்துகளின் வலிமையை இச்சமூகம் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்திய தேசிய விருது பெற்ற எழுத்தாளர், பணிநிறைவு பெற்ற தலைமையாசிரியர் திரு. இல. கிருஷ்ணமூர்த்தி ஐயாவிற்கு உங்கள் அனைவரின் சார்பாகவும் மனமகிழ்வுடன் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கிய திருவள்ளுவர் தவச்சாலையின் நிறுவனர் இளங்குமரனார் அவர்கள், மாணவர்கள் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார். அந்தப் பெருந்தகைக்கும் நன்றி.

இந்நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்ட பேரூராட்சித் தலைவர் திரு. அ. அமலதாஸ் அவர்கள் நல்ல மனம் கொண்ட கொடையாளர். அவருக்கும் நம் நன்றிகளைத் தெரிவிப்போம்.

சொல்லோவியங்கள் கவிதை நூலில் உள்ள கருத்துகளை எளிமையாகவும் இனிமையாகவும் எடுத்துரைத்த ஓய்வு பெற்ற தமிழாசிரியர் திரு. க. சுப்பையா அவர்கள் மிக அற்புதமாக நூலை அறிமுகம் செய்தார். அவருக்கும் நம் நன்றிகளைக் காணிக்கையாக்குகிறோம். மிக அற்புதமாக நூலை உருவாக்கி நம் கரங்களில் இன்று தவழவிட்ட எழுத்தாளரும், நம் பள்ளியின் மூத்த தமிழ் ஆசிரியருமான திரு. அ. குமார் ஐயா அவர்களுக்கும் நம் நன்றியினைக் கரவொலியோடு தெரிவிப்போம்.

மிக அருமையாக இந்த விழாவினை நெறிப்படுத்திய நம் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. ச. நடராசன் அவர்களுக்கு இருகரம் கூப்பி நன்றி தெரிவிக்கிறேன். வரவேற்புரை வழங்கிய திரு. ம. செல்லபாண்டியன், நடனமாடிய மாணவ மாணவிகள், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த இருபால் ஆசிரிய தீபங்கள் மாணவ – மாணவிகள் அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். நன்றி! வணக்கம்!

## பலவுள் தெரிக

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் ______. (Sep.-22)

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

**விடை : இ) தொல்காப்பியம்**

2. **கருத்து 1 :** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.

**கருத்து 2 :** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது. (PTA - 5, Sep. - 21)

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

**விடை : இ) இரண்டு கருத்தும் சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. பொருத்துக. (PTA - 2)

அ) தமிழ் அழகியல் – 1. பரலி. சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப் பூ – 2. தி. சு. நடராசன்
இ) கிடை – 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி – 4. கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை : ஈ) 2, 3, 4, 1**

## கூடுதல் வினாக்கள்

4. எழுத்து, சொல்லைப் போன்று செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகக் கூறும் நூல்,

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ) யாப்பருங்கலக்காரிகை ஈ) தண்டியலங்காரம்

**விடை : ஆ) தொல்காப்பியம்**

5. ‘தமிழ் மொழியின் நடை அழகியல்’ என்ற பாடப்பகுதி, தி. சு. நடராசனின் எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது?

அ) கவிதையெனும் மொழி ஆ) திறனாய்வுக் கலை
இ) தமிழின் பண்பாட்டு வெளிகள் ஈ) தமிழ் அழகியல்

**விடை : ஈ) தமிழ் அழகியல்**

6. ‘நீர்ப்படு பசுங்கலம்’ – இதில் ‘பசுங்கலம்’ என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு,

அ) தொகைநிலை ஆ) பண்புத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

**விடை : ஆ) பண்புத்தொகை**

7. அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தரும் நூல்,

அ) நன்னூல் ஆ) சிலப்பதிகாரம் இ) தண்டியலங்காரம் ஈ) தொல்காப்பியம்

**விடை : ஈ) தொல்காப்பியம்**

8. “படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக” – இப்பாடல் யாரைப் பற்றியது?

அ) பேகன் ஆ) நள்ளி இ) ஆய் ஈ) அதியன்

**விடை : அ) பேகன்**

9. சொல்லில்தான் ______, ______ பொதிந்து கிடக்கின்றன.

அ) ஏக்கமும், பொருளும் ஆ) பொருளும் குணமும்
இ) உணர்வும் பொருளும் ஈ) இவற்றில் எதுவுமில்லை

**விடை : இ) உணர்வும் பொருளும்**

10. இயல்பு வழக்கு என்பது ______, ______ உள்ளிட்டவையாகும்.

அ) உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு ஆ) உரைநடை வழக்கு, எழுத்து வழக்கு
இ) எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு ஈ) பேச்சு வழக்கு, இலக்கண வழக்கு

**விடை : அ) உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருப்பது,

அ) தொடரியல் ஆ) ஒலிக்கோலம் இ) சொல்வளம் ஈ) நடையியல்

விடை : இ) சொல்வளம்

12. அகன் ஐந்திணைகளைப் பற்றிப் பேசும் நூல்,

அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) குறுந்தொகை ஈ) தொல்காப்பியம்

விடை : ஈ) தொல்காப்பியம்

13. **கருத்து 1** : சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.

**கருத்து 2** : தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) கருத்து 1 சரி, 2 தவறு ஈ) இரண்டு கருத்துகளும் சரி

விடை : ஈ) இரண்டு கருத்துகளும் சரி

14. **கருத்து** : தொன்மையான மொழி, சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.

**விளக்கம்** : மொழி தோன்ற அடிப்படையாக இருப்பது ஒலியே. ஒலியை வெவ்வேறு வடிவங்களில் உச்சரிக்கும்போது மொழி தோன்றுகிறது.

அ) கருத்து சரி, விளக்கம் தவறு ஆ) கருத்தும் விளக்கமும் சரி

இ) கருத்தும் விளக்கமும் தவறு ஈ) கருத்து தவறு விளக்கம் சரி

விடை : ஆ) கருத்தும் விளக்கமும் சரி

## கற்பவை கற்றபின்

1. கவிஞர் பாரதிதாசனின் அழகின்சிரிப்பு – குன்றம் – ஒளியும் குன்றும் என்னும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச்சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.

### ஒளியும் குன்றும்

அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே!
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர் மணியின் குப்பை!

எருதின்மேற் பாயும் வேங்கை
நிலவுமேல் எழுந்த மின்னல்!
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பார டாநீ!

மலையின் உச்சியிலிருந்து அருவி, கீழ்நோக்கிப் பாய்கிறது. கவிஞர் பாரதிதாசனின் பார்வையில் அருவியின் வீழ்ச்சி ஒளிவீசும் வயிரத்தைக் கட்டித் தொங்கவிட்டதுபோலக் காட்சியளிக்கின்றது. அருவியின் கரைகளில் உள்ள மரங்களில் நெருக்கமாகப் படர்ந்திருக்கும் கொடிகள், பச்சை நிறத்தில் அமைந்த பட்டாடைபோலக் காணப்படுகின்றன.

மரங்களில் அமர்ந்திருக்கும் குருவிகள், தங்கத்தால் ஆகிய கட்டிகள் போலுள்ளன. மலர்கள் எல்லாம் மணியின் மேடைபோன்று அமைந்துள்ளன. கவிஞர் கூறும் ஒவ்வோர் உவமையும், அவரது புதிய நோக்கையே சுட்டுகிறது. அருவியைப் பலரும் பலவிதமாகப் பாடியுள்ளனர். ஆனால், மாறுபட்ட நிலையில் கவிஞர் பாரதிதாசன் பாடிய தன்மை புதுமையானது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**உலகிலுள்ள விலை உயர்ந்த பொருள்களாகிய வைரம், தங்கம், மாணிக்கம் முதலிய பொருள்களோடு, அருவியின் காட்சியை ஒப்பிட்டுக் கூறுகிறார். அதற்குக் காரணம், அவர் கண்ட அருவியின் காட்சி, விலை மதிக்க முடியாத உயர்ந்த தன்மை உடையது என்பதைப் புலப்படுத்தவே அவ்வாறு கூறியுள்ளார் எனலாம். இயற்கைக் காட்சியின் தன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்தவே இப்பாடலில் அவ்வாறு கூறியுள்ளார் கவிஞர் பாரதிதாசன்.**

**குன்றம்**

தங்கத்தை உருக்கி விட்ட
வானோடை தன்னி லேநீர்,
செங்கதிர் மாணிக் கத்துச்
செழும்பழம் முழுகும் மாலை!

செங்குத்தாய் உயர்ந்த குன்றின்
மரகதத் திருமே னிக்கு,
மங்காத பவழம் போர்த்து
வைத்தது வையம் காண!

இப்பாடலில் ஆசிரியர், வானத்தை ஓடையாக, அதுவும் தங்கத்தை உருக்கிவிட்ட ஓடையாக உருவகித்துள்ளார். மாலைப் பொழுதினைச் சிவந்த கதிர்களையுடைய சூரியன், மாணிக்கத்துச் செழும்பழம் முழுகுவதுபோலக் குன்றின் பின்னால் மறைந்தான் எனக் கூறுகிறார். செங்குத்தாய் உயர்ந்த குன்றானது, மரகதத் திருமேனிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. குன்றானது பவழத்தைப் போர்த்தியது போன்று காட்சியளிக்கின்றது. இவ்வாறு அழகாக வருணித்துப் பாடுவதில் வல்லவர் கவிஞர் பாரதிதாசன்.

உவமை, உருவகங்களுடன் இயற்கையை வருணித்துப் பாடியுள்ளார். அருவியின் அழகு, குன்றின் அழகு ஆகியவற்றை வருணித்துப் பாடியுள்ள பாரதிதாசனின் மொழிநடை மற்ற கவிஞர்களினின்றும் வேறுபட்ட மொழிநடையை உடையதாக விளங்குகிறது.

2. **தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை / மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.**

**யானை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யானை | ஆம்பல் | பெருமா | கரி | மதகயம் | வேழம் |
| ஆனை | வாரணம் | கள்வன் | போதகம் | களிறு | இபம் |
| பூட்கை | கயம் | விரமலி | களபம் | இரதி | ஒருத்தல் |
| சிந்துரம் | மதோற்கடம் | மாதங்கம் | குஞ்சரம் | ஓங்கல் | வயமா |
| கடம் | கைம்மா | இருள் | நாக | புகர்முகம் | பிடி |
| உம்பர் | தும்பு | பொங்கடி | தந்தி | அதவை | உம்பல் |
| வல்விலங்கு | கும்பி | மதாவளம் | வடவை | அஞ்சனாவரி | தூங்கல் |
| தும்பி | தந்தாவளம் | கரிணி | அரசுவா | தோல் | நால்வாய் |
| கைம்மலை | அத்தினி | அல்லியன் | கறையடி | கரேணு | வழுவை |
| மந்தமா | அறுபடை | எறும்பி | உவா | மருண்மா | |

**மலர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரும்பு | போது | செம்மல் | ஆம்பல் | உந்தூழ் | நனைமலர் |
| அடும்பு | ஆரம் | எருமை | முகை | பூ | அதிரல் |
| ஆவிரை | எறுழம் | மொக்கு | வீ | அவரை | இருள்நாறி |
| கண்ணி | முகிழ் | பொதும்பர் | அனிச்சம் | இலவம் | கருவினை |
| மொட்டு | பொம்மல் | அத்தி | ஈங்கை | காஞ்சி | |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## கவிதைப்பேழை

# 3. தன்னேர் இலாத தமிழ்

(தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்)

### கூடுதல் குறுவினாக்கள்

1. **தமிழ் மொழியானது எத்தகைய வலிமை வாய்ந்தது?** (PTA - 3)
   - தமிழ் மொழியானது, வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் **வலிமை** மிக்கது.
   - உலகின் புற இருளைப் போக்கும் ஆற்றல் கொண்ட கதிரவனுக்கு ஒப்பாகவும், அதற்கு மேலாகவும் மக்களின் **அக இருள் போக்கும்** வலிமையுடையது.

2. **தமிழ்மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை?** (PTA - 6)
   - தமிழ்மொழி, தொன்மையான இலக்கியங்களைப் பெற்று உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது.
   - பொதிகை மலையில் தோன்றிச் சான்றோரால் தொழுது வணங்கப்பட்டு, உலக மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்கி, ஒப்புமை இல்லாததாகத் திகழ்வது.

3. **அணியிலக்கணத்தைமட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
   - தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம் ஆகியன அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்களாகும்.

4. **அணி இலக்கணத்தையும் கூறும் தமிழ் இலக்கண நூல்கள் யாவை?**
   - தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் என்பன எழுத்து, சொல் முதலியவற்றோடு அணி இலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்களாகும்.

5. **'தன்னேரிலாத தமிழ்' என்னும் பாடலில் கூறப்படும் தமிழ், சூரியன் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள ஒத்த தன்மைகள் யாவை?**
   - மலையில் தோன்றியது, உயர்ந்தோரால் தொழப்பட்டது, உலகத்து இருளைப் போக்குவது என்னும் மூன்றும் தமிழுக்கும் சூரியனுக்கும் உள்ள ஒத்த தன்மைகள் ஆகும்.

6. **ஞாலத்து இருள் அகற்றுவன எவை?**
   - ஒளி பொருந்திய ஒற்றைச் சக்கரத்தைக் கொண்ட தேரில் செல்லும் **சூரியன்**, தனக்கு நிகரில்லாத பெருமை கொண்ட தமிழ் ஆகிய இரண்டும் ஞாலத்து இருள் அகற்றுவன.

7. **'ஓங்கலிடை வந்து' எனத் தொடங்கும் பாடல் எவ்வகைப் பாவைச் சேர்ந்தது? விளக்குக.**
   - இப்பாடல், வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்றிருப்பதோடு, ஈற்றடி முச்சீராயும் ஏனைய அடிகள் நாற்சீராயும் அமைந்துள்ளது. இரு விகற்ப அடி எதுகை பெற்றும், தனிச்சொல் பெற்றும் வந்திருப்பதால், இப்பாடல் இருவிகற்ப நேரிசை வெண்பா ஆகும்.

8. **தண்டியலங்காரத்தின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?**
   - பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்பன தண்டியலங்காரத்தின் மூன்று பெரும் பிரிவுகளாகும்.

9. **"ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும்" – இவ்வடியின் பதவுரையை எழுதுக.**
   - "இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பெற்ற இவ்வுலகத்தின் இருளைப் போக்கும்" என்பது இவ்வடியின் பொருள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## சிறுவினாக்கள்

1. "ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.(PTA-1,2, Mar.-20, 24)

**இடம்** : இப்பாடல் வரி, 'தண்டியலங்காரம்' என்னும் அணி இலக்கண நூலின் பொருளணியியலில் இடம் பெற்றுள்ள **உரைமேற்கோள் பாடல்** அடியாகும்.

**பொருள்** : ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட இவ்வுலகின் **இருளை அகற்றும்** என்பதே இத்தொடரின் பொருளாகும்.

**விளக்கம்** : எப்போதும் ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும் கடல் சூழ்ந்த இந்த உலகின் இருளை அகற்றும் கதிரவன், **மக்களால் போற்றப்பட்டு,** உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, **சான்றோரால் தொழப்படுகின்ற** ஒன்றாகும். தமிழோ, பொதிகை மலையில் தோன்றினாலும் மக்களின் **அறியாமை இருளை** அகற்றும் சிறப்புடையது.

## கூடுதல் வினாக்கள்

2. 'தன்னேர் இலாத தமிழ்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (May - 22)

**இடம்** : தண்டியலங்காரம் என்னும் நூலின் 'உரை மேற்கோளாக இடம்பெற்ற பாடலில்' இத்தொடர் இடம் பெற்றுள்ளது

**பொருள்** : "தனக்கு நிகரில்லாத தமிழ்" என்பது இத்தொடரின் பொருள்.

**விளக்கம்** : பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அக இருளாகிய அறியாமையைப் போக்குவதோடு உலக இருளைப் போக்கும் சூரியனுக்கும் ஒப்புவமை இல்லாதது தமிழ் எனக் கூறப்பட்டுள்ளது.

3. பொருள் வேற்றுமையணியைச் சான்று தந்து விளக்குக. (Sep.--22)

**அணி** : பொருள் வேற்றுமையணி.

**அணி விளக்கம்** : இருவேறு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர், வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமையணி எனப்படும்.

**சான்று** : "ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

**சான்று விளக்கம்** : எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றும் கதிரவன், உயர்ந்த மலைகளுக்கிடையே தோன்றும். குளிர்ச்சி பொருந்திய பொதியமலையிலே தோன்றிய தமிழ்மொழி, மக்களின் அறியாமை எனும் அக இருளை அகற்றும். அத்தமிழ் மொழிக்கு நிகர் வேறு எதுவும் இல்லை.

**அணிப்பொருத்தம்** : தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையேயுள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி, அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால், இது பொருள் வேற்றுமையணிக்குப் பொருத்தமாயிற்று. இது வேற்றுமையணியின் ஒரு பிரிவாகும்.

## பலவுள் தெரிக

1. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது (PTA - 1, Sep.-22, Mar.-24)
தன்னேர் இலாத தமிழ்!" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்,

அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை

**விடை : இ) அடி எதுகை, சீர் மோனை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

2. தண்டியலங்காரம், ______ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது. (Mar.-23)
அ) சூரிய நிழல் ஆ) வீரசோழியம் இ) காவியதர்சம் ஈ) முத்துவீரியம்
**விடை : இ) காவியதர்சம்**

3. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் ______. (May - 22)
அ) முத்து வீரியம் ஆ) தொல்காப்பியம்
இ) தண்டியலங்காரம் ஈ) வீர சோழியம்
**விடை : இ) தண்டியலங்காரம்**

4. வெங்கதிர் – இலக்கணக் குறிப்பைக் கண்டறிக. (Sep. - 21)
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
**விடை : அ) பண்புத்தொகை**

5. அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்
அ) முத்துவீரியம் ஆ) வீரசோழியம்
இ) தண்டியலங்காரம் ஈ) இலக்கண விளக்கம்
**விடை : இ) தண்டியலங்காரம்**

6. கீழ்க்காண்பனவற்றுள் 'வினையாலணையும் பெயர்' ______.
அ) உயர்ந்தோர் ஆ) வந்தான் இ) நடப்பான் ஈ) உயர்ந்து
**விடை : அ) உயர்ந்தோர்**

7. 'ஈறுபோதல்', 'முன்னின்ற மெய் திரிதல்' எத்தொடருக்குரிய புணர்ச்சி விதிகள் ______.
அ) கருங்குயில் ஆ) வெங்கதிர் இ) நெடுந்தேர் ஈ) முதுமரம்
**விடை : ஆ) வெங்கதிர்**

8. தண்டியலங்காரம் ______ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.
அ) காவியதர்சம் ஆ) மாறனலங்காரம் இ) வீரசோழியம் ஈ) குவலயானந்தம்
**விடை : அ) காவியதர்சம்**

9. 'வெங்கதிர்' – இலக்கணக்குறிப்பைக் கண்டறிக.
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
**விடை : அ) பண்புத்தொகை**

10. 'உயர்ந்தோர்' – என்பதன் இலக்கணக்குறிப்பு ______.
அ) பண்புத்தொகை ஆ) வினையாலணையும் பெயர்
இ) வினைத்தொகை ஈ) வினையெச்சம்
**விடை : ஆ) வினையாலணையும் பெயர்**

11. 'இலாத' – என்பதன் இலக்கணக்குறிப்பு ______.
அ) வினையாலணையும் பெயர் ஆ) வினைத்தொகை
இ) இடைக்குறை ஈ) பண்புத்தொகை
**விடை : இ) இடைக்குறை**

12. 'ஓங்கலிடை' எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற பகுதி ______.
அ) பொருளணியியல் ஆ) தண்டியலங்கார உரை மேற்கோள்
இ) சொல் அணியியல் ஈ) பாயிரம்
**விடை : ஆ) தண்டியலங்கார உரை மேற்கோள்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. சான்றோரால் போற்றப்படுவதும், மக்களின் அறியாமையைப் போக்குவதும் ______.
அ) கல்வி ஆ) தன்னேரிலாத தமிழ்
இ) தமிழ் நிலம் ஈ) கடவுள்
விடை : ஆ) தன்னேரிலாத தமிழ்

14. 'மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது' – இவ்வடியில் 'ஆழி' என்பதன் பொருள் ______.
அ) சக்கரம் ஆ) தமிழ் இ) சூரியன் ஈ) கடல்
விடை : அ) சக்கரம்

15. **கருத்து 1 :** மக்களின் அறியாமையை அகற்றுவது தமிழ்மொழியாகும்.
**கருத்து 2 :** புற இருளைப் போக்கக் கதிரவன் உதவுவான்.
அ) இரண்டு கருத்துகளும் சரி ஆ) கருத்து 1 சரி, 2 தவறு
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) இரண்டு கருத்துகளும் தவறு
விடை : அ) இரண்டு கருத்துகளும் சரி

## இலக்கணக்குறிப்பு

**வெங்கதிர்** – பண்புத்தொகை
**உயர்ந்தோர்** – வினையாலணையும் பெயர்
**இலாத** – (இல்லாத) இடைக்குறை விகாரம்; எதிர்மறைப் பெயரெச்சம்
**வந்து, தொழ, விளங்கி** – வினையெச்சங்கள்
**ஒலிநீர்** – வினைத்தொகை
**இருளகற்றும்** – இரண்டாம் வேற்றுமைத்தொகை

## உறுப்பிலக்கணம்

1. வந்து – வா (வ) + த் (ந்) + த் + உ
**வா** – பகுதி, 'வ' எனக் குறுகியது (குறுக்கல்) விகாரம்
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை
**உ** – வினையெச்ச விகுதி.

2. உயர்ந்தோர் – உயர் + த் (ந்) + த் + (ஆர்) ஓர்
**உயர்** – பகுதி
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை;
'ஆர்' என்னும் விகுதியில் ஈற்று அயல் எழுத்தான 'ஆ' என்பது, 'ஒ' ஆகத் திரிந்தது;
**ஓர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

3. விளங்கி – விளங்கு + இ
**விளங்கு** – பகுதி
**இ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. ஆங்கவற்றுள் – ஆங்கு + அவற்றுள்
'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' – ஆங்க் + அவற்றுள்
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – ஆங்கவற்றுள்.

2. தனியாழி – தனி + ஆழி
'இ ஈ ஐ வழி யவ்வும்' – தனிய் + ஆழி
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – தனியாழி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. **வெங்கதிர் – வெம்மை + கதிர்**

'ஈறுபோதல்' – வெம் + கதிர்

'முன்னின்ற மெய் திரிதல்' – வெங் + கதிர் – வெங்கதிர்.

4. **(i) ஓங்கலிடை – ஓங்கல் + இடை (ii) இருளகற்றும் – இருள் + அகற்றும்**

**(iii) கதிரொன்று – கதிர் + ஒன்று**

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – (i) ஓங்கலிடை (ii) இருளகற்றும் (iii) கதிரொன்று

## கற்பவை கற்றபின்

1. **வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

**வேற்றுமையணி இலக்கணம்:** முதலில் இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறிப் பின்னர், அவற்றை வேறுபடுத்தி ஒன்றைவிட இன்னொன்றை உயர்ந்ததாய்க் கூறுவது வேற்றுமையணி ஆகும்.

**சான்று : 1**

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்.

**சான்று விளக்கம் :** இச்செய்யுளில் கரும்பின் சாறு, பலாக்கனியின் சுளை, காய்ச்சிய பாகின் சுவை, பசுவின் பால், தென்னையின் இளநீர் ஆகியன இனிமை தருவன என ஒப்புமைப்படுத்திவிட்டு, உயிர்போன்ற 'தமிழ்' அவற்றைவிடவும் இனியது என்று வேறுபடுத்திக் கூறியுள்ளமையால், இச்செய்யுள் வேற்றுமை அணிக்குச் சான்றாகும்.

**சான்று : 2**

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் – திங்கள்
மறுவாற்றும் சான்றோர்அஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

**சான்று விளக்கம் :** இச்செய்யுளில் சான்றோருக்கும் திங்களுக்கும் முதலில் ஒப்புமை கூறிப் பின்னர், அகல் நிலாப் பாரிக்கும் திங்களினும் சான்றோர் சிறந்தவர் என்று வேறுபடுத்திக் கூறியுள்ளதால், இச்செய்யுளில் வேற்றுமையணி பயின்று வந்துள்ளது.

2. **'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்பொழிவில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரையை உருவாக்குக.**

**தமிழின் தொன்மை :**

தமிழ்மொழி, கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றி மூத்த பழங்குடியினரால் பேசப்பட்ட பெருமை வாய்ந்த மொழி! அது மட்டுமா? படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வந்த முடிமன்னர் மூவரால் பேணி வளர்க்கப்பட்டது.

எல்லையறு பரம்பொருள், பல்லுயிரும் பலவுலகும் படைத்து அளித்துத் துடைக்கினும், தான்மட்டும் முன் இருந்தபடியே இன்றளவும் யாதொரு மாறுபாடுமின்றி இருந்து வருகிறது. அஃதேபோல் நம் செந்தமிழும் தான்தோன்றிய காலம்முதல் இன்றளவும் எந்த மாறுபாடுமின்றி என்றும் கன்னி இளமையோடு நின்று நிலவுகின்றது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தமிழின் சீரிளமைத் திறம் :**

நம் தாய்மொழியாகிய இத்தமிழிலிருந்தே கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் சேய் மொழிகளாகத் தோன்றியுள்ளன. பல சேய்களை ஈன்றும் தாய்த்தமிழ், இளமை கெட்டு முதுமையுற்று வளமையற்றுப் போகவில்லை. அத்திறத்தைத் 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடிய, மனோன்மணீயம் சுந்தரனார் வியந்து போற்றியுள்ளார்.

**தமிழ்மொழியின் தனிச்சிறப்புகள் :**

இனிய மொழி, எளிய மொழி, சிறந்த மொழி, பழைய மொழி, தனித்த மொழி என்ற ஐந்து அடைமொழிகளுக்கும் தமிழ் ஒன்றேதான் தகுதியானது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய இலக்கணங்களைப் பெற்றது.

கண்ணால் காணமுடியாத, மனத்தால் நினைக்கப்படுகின்ற பொருள்களுக்கு இலக்கணம் கூறுகின்ற அகப்பொருள் இலக்கணத்தைக் கொண்டது.

பிற மொழிகளில் காணப்படாத ழகர எழுத்தைச் சிறப்பாகக் கொண்டது.

ஒழுக்கத்தை மட்டும் வலியுறுத்திக் கூறும் தனிநூல்கள் பலவற்றைக் கொண்டது.

**தன்னேரிலாத தமிழ் :**

'தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே! என் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே'

என்று தமிழைக் குழைந்து போற்றுகின்றனர்.

தமிழ் எதனோடும், எம்மொழியோடும் ஒப்பிட்டுக் கூறமுடியாத தன்னேரிலாத தமிழாக விளங்குகின்றது. இதன் சிறப்பைப் பற்றிப் பாடாத புலவர்கள் இல்லை; பேசாத அறிஞர்கள் இல்லை என்றே கூறலாம்.

இதனையே பாரதிதாசன், "தமிழ் என்றன் உயிரை, உணர்வை வளர்க்கின்றது" என்று கூறியுள்ளார். மேலும், "தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனவும், தமிழின் பெருமையையும் சிறப்பையும் போற்றிப் பாடியுள்ளார்.

## விரிவானம்

# 4. தம்பி நெல்லையப்பருக்கு

(பாரதியார்)

## நெடுவினா

1. **பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.** (Sep.-21, May - 22, Mar.-23)

**முன்னுரை :**

கடிதங்களை இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள், மொழிக்கு அதன் வழியாகத் தனி அழகை உருவாக்கித் தருகிறார்கள். அந்த வகையில் தம்பி நெல்லையப்பருக்கு, பாரதியார் எழுதிய கடிதம்மூலம் நாம் அறியும் **மொழிப்பற்று, சமூகப்பற்று** ஆகியவற்றைக் காணலாம்.

**மொழிப்பற்று :**

"தம்பி நெல்லையப்பரே! உனது **உள்ளக் கமலத்திலே** பேரறிவாகிய ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி, உனக்கு **நல்லின்பம்** உண்டாகுமென்றே கருதுகின்றேன்.

நெஞ்சம் இளகி, விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் **மெலியாருக்கு** நாம் **இரங்கி,** அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டுமென்று பாடுபடுதலே, நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும்.

உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு மொழிகள் தெரிந்திருந்து, அந்த மொழிப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடையாகத் தெரிந்துகொண்டால், தமிழ்நாட்டிற்கு நன்மை உண்டாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் **தமிழை வளர்ப்பதே** கடமையாகக் கொள்ள வேண்டும். புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்'' என்று கூறுகின்றார். இதில் **மொழிப்பற்று மிளிர்வதைக்** காணலாம்.

**சமூகப்பற்று :**

“தம்பி, தமிழ்நாடு வாழ்க என்றெழுது. தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ்நாட்டில் வீதிதோறும் **தமிழ்ப் பள்ளிக்கூடங்கள்** மலிக என்றெழுது. அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது.

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்று எழுது. அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது. **பெண்ணைத் தாழ்மை செய்தோன், கண்ணைக் குத்திக் கொண்டான்** என்றெழுது. தொழில்கள் இந்நாட்டில் அதிகம் பெருகுதல் வேண்டும் என்று கூவு. வியாபாரம் வளர்க; யந்திரங்கள் பெருகுக; முயற்சிகள் ஓங்குக என்றெழுது.

இசை, சிற்பம், யந்திரநூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு. இவை எல்லாவற்றையும் அடையச் சக்தி வேண்டும். அதற்குச் சக்தி, சக்தி, சக்தி என்று பாடு'' என எழுதித் தமிழ்ச் சமூகம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தைப் பிரதிபலிக்கச் செய்துள்ளார்.

**முடிவுரை :**

பாரதியார், தம்பி சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாக மொழிப்பற்று, சமூகப்பற்று இரண்டும் ஒன்றிற்கொன்று போட்டியிட்டு மிளிர்வதைக் காணமுடிகின்றது. ஆதலால், நாமும் மொழிப்பற்றும் சமூகப்பற்றும் உடையவர்களாகத் திகழ்ந்து **நாட்டையும் மொழியையும்** உயர்த்த வேண்டும் என்பதில் உறுதி கொள்வோமாக!

## பலவுள் தெரிக

1. பெண்ணைத் தாழ்வு செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது – என்று கடிதம் எழுதியவர் **(PTA - 1)**

   அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

   **விடை : ஆ) பாரதியார்**

2. பாரதியார் எங்கிருந்து பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்? **(PTA - 3)**

   அ) புதுச்சேரி ஆ) எட்டயபுரம் இ) கடையம் ஈ) சென்னை

   **விடை : அ) புதுச்சேரி**

3. தம்பி நெல்லையப்பருக்கு – கட்டுரையின் ஆசிரியர் **(Sep.-22)**

   அ) பாரதியார் ஆ) உத்தமசோழன்
   இ) ஐராவதம் மகாதேவன் ஈ) பூமணி

   **விடை : அ) பாரதியார்**

4. ‘சக்தி சக்தி சக்தி என்று பாடு’ – இவ்வாறு கூறுபவர் ______.

   அ) பாரதிதாசன் ஆ) பாரதி இ) சிற்பி ஈ) சோமசுந்தர பாரதி

   **விடை : ஆ) பாரதி**

5. எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி எழுதியவர் ______.

   அ) சு. நெல்லையப்பர் ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்
   இ) வெங்கடேசுவரர் ஈ) பாரதி

   **விடை : ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்**

6. ‘வம்சமணி தீபிகை’யைத் திருத்தி வெளியிட ஆசை கொண்ட பாரதி, ______ என்பவருக்குக் கடிதம் எழுதினார்.

   அ) வெங்கடேசுர எட்டப்பர் ஆ) ரா. அ. பத்மநாபன்
   இ) சி. சு. நெல்லையப்பர் ஈ) வீரேசலிங்கம் பந்துலு

   **விடை : அ) வெங்கடேசுர எட்டப்பர்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. பாரதி, ______ என்பவரைத் தம் அருமைத் தம்பியாகவே கருதி அன்பு காட்டி வந்தார்.
அ) பரலி சு. நெல்லையப்பர் ஆ) ரா. அ. பத்மநாபன்
இ) கவிமணி ஈ) குள்ளச் சாமியார்
**விடை : அ) பரலி சு. நெல்லையப்பர்**

8. வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் ______.
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) பரலி சு. நெல்லையப்பர்
**விடை : ஈ) பரலி சு. நெல்லையப்பர்**

9. பாரதி எழுதிய கண்ணன் பாட்டு, நாட்டுப் பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர் ______.
அ) சி. வை. தாமோதரம் பிள்ளை ஆ) பரலி சு. நெல்லையப்பர்
இ) பாரதியார் ஈ) அயோத்தி தாசர்
**விடை : ஆ) பரலி சு. நெல்லையப்பர்**

10. பாரதியார் நடத்திய இதழ்கள் ______.
அ) சூரியோதயம், கர்மயோகி ஆ) கர்மயோகி, நவ இந்தியா
இ) சக்கரவர்த்தினி, யங் இந்தியா ஈ) சூரியோதயம், தி இந்து
**விடை : அ) சூரியோதயம், கர்மயோகி**

11. பாரதி பதினைந்து வயதில் கல்விகற்க உதவி வேண்டி யாருக்குக் கடிதம் எழுதினார்?
அ) தந்தைக்கு ஆ) உறவினர்க்கு
இ) எட்டயபுர அரசருக்கு ஈ) நண்பருக்கு
**விடை : இ) எட்டயபுர அரசருக்கு**

12. "கைப்பொருள் அற்றான் கற்ப தெவ்வகை?" – என்று, பாரதி ______க் கடிதம் எழுதினார்.
அ) எட்டயபுர ஜமீனுக்கு ஆ) சாமி தீட்சிதருக்கு
இ) வெங்கடேசுர எட்டப்பருக்கு ஈ) இளசைமணி என்பவருக்கு
**விடை : அ) எட்டயபுர ஜமீனுக்கு**

13. பாரதியார், நெல்லையப்பருக்கு எழுதிய கடிதங்களைப் பதிப்பித்தவர் ______.
அ) இளசை மணி ஆ) ரா. அ. பத்மநாபன்
இ) கி. ராஜநாராயணன் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்
**விடை : ஆ) ரா. அ. பத்மநாபன்**

14. **கருத்து 1 :** ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றார் பாரதி.
**கருத்து 2 :** பரலி சு. நெல்லையப்பர் பாரதியின் பாப்பாப் பாட்டைப் பதிப்பித்தவர்.
அ) இரண்டு கருத்துகளும் தவறு ஆ) இரண்டு கருத்துகளும் சரி
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
**விடை : ஆ) இரண்டு கருத்துகளும் சரி**

## கற்பவை கற்றபின்

**காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக் கடிதம் ஒன்றினை எழுதுக.**

தன்மானமிக்க தமிழ்க் கவியே! உம்மை வணங்குகிறோம்.

நாங்கள் பிறப்பதற்கு முன்னால் நீங்கள் ஏன் மறைந்தீர்கள்? உங்கள் எழுத்துகளை எல்லாம் படித்தபின் உங்களைச் சந்திக்கவும், உங்களோடு பேசவும் ஆவலாக இருந்தது.

நிற்கின்ற, பறக்கின்ற, ஊர்கின்ற விலங்கினங்களை நேசித்தீர்களாமே? ஒருமுறை புதுச்சேரியில் கடும் சூறாவளிக் காற்று வீசி மரங்களெல்லாம் சாய்ந்தபோது, இறந்த பறவைகளைச் சேகரித்து, அவற்றை அடக்கம் செய்தீர்களாமே? தாழ்த்தப்பட்டவருக்கு முப்புரிநூல் அணிவித்து, 'இனி நீ பிராமணன்' என்றீர்களாமே?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



உங்கள் அன்பு நெஞ்சத்தை எண்ணி வியக்கிறோம்! உம்மைப்போல் ஒருவர் இனிப் பிறப்பாரா என ஏங்குகிறோம் பாரதி! உணவு கிடைக்காமல் துன்பப்பட்டீராமே? நெஞ்சு வலிக்கிறது. இதைப் படித்தபோது என் கண்கள் குளமாயின பாரதி!

முறுக்கு மீசை முண்டாசுக் கவிஞனே! மீண்டும் வா! மீண்டும் ஒரு சுதந்திரப் போர் நடத்து! நம் நாட்டு அரசியல்வாதிகளுக்கு எதிராக – ஊழல் அரசு அதிகாரிகளுக்கு எதிராக – கள்ளச் சந்தையில் விளைபொருள்களைப் பதுக்கும் கொள்ளையர்களுக்கு எதிராக ஒரு சுதந்திரப் போர் நடத்த வா மகாகவியே!

## இனிக்கும் இலக்கணம்

# 5. தமிழாய் எழுதுவோம்

### இலக்கணத் தேர்ச்சிகொள்

1. **பிழையான தொடரைக் கண்டறிக.** (PTA - 2, Sep.-22, Mar.-24)

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**விடை : இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**

2. **பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.** (July - 20, Sep.-20,22)

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

**விடை : அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள்களை அறிந்து தொடர் அமைக்கவும்.** (July -22,23)

**முடிந்தால் தரலாம்** : இயன்றால் தரலாம்

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களை **முடிந்தால் தரலாம்.**

**முடித்தால் தரலாம்** : சொன்ன வேலையைச் செய்து முடித்துவிட்டால் தரலாம்.

முதல்வர் கூறியபடி பணிகளை **முடித்தால் தரலாம்.**

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?** (Mar.-24)

★ எழுத்துகளைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்.

★ ந, ண, ன / ல, ள, ழ / ற, ர ஒலிப்பு வேறுபாடுகள் தெரிந்து ஒலிக்க வேண்டும்.

★ தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.

★ தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதிப்பழகுவது நல்லது.

★ வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும். கெ, கே, கொ, கோ போன்ற கொம்புடைய குறில், நெடில் எழுத்துகளின் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் குறுவினாக்கள்

1. **தமிழை எழுதும்போது ஏற்படும் பிழைகள் யாவை?** (PTA - 1)
   - எழுத்துப் பிழை, சொற்பொருள் பிழை, சொற்றொடர்ப் பிழை, பொதுவான பிழை என்பவை, தமிழை எழுதும்போது ஏற்படும் பிழை வகைகளாகும்.

2. **எழுதும்போது ஏற்படும் பிழைகளை எவ்வகையாகப் பிரிக்கலாம்?** (PTA -1)
   - எழுத்துப் பிழை, சொற்பொருட் பிழை, சொற்றொடர்ப் பிழை, பொதுவான பிழைகள் சில என எழுதும்போது ஏற்படும் **பிழைகளை நான்கு** வகையாகப் பிரிக்கலாம்.

3. **எழுத்துப் பிழையைத் தவிர்க்கப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவை?**
   - எழுத்துப் பிழைகளைத் தவிர்க்க எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும் (முதல், இடை, கடை) தெள்ளத் தெளிவாய் மனத்துள் பதித்துக் கொள்வதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

4. **ந, ண, ன / ற, ர / ல, ள, ழ போன்ற எழுத்துகள் எவ்வெவ்விடங்களில் வரும்? எடுத்துக்காட்டுத் தருக.**
   - நகரம் சொல்லின் தொடக்கமாக வரும்.
   - றகர மெய் சொல்லின் இறுதியில் வராது.
   - மற்றவை சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும்.

| ந, ண, ன, ற, ர, ல, ள, ழ | | |
|---|---|---|
| முதல் | இடை | கடை |
| நண்டு<br>நாடகம் | கண்டு, கன்று, கற்று, பார்த்து<br>கால்கள், கொள்வது, புகழ்வது | கண், அவன், பார்<br>கால், கொள், புகழ் |

5. **ஆய்த எழுத்து வரும் இடங்கள் யாவை?**
   - ஆய்த எழுத்து, சொல்லின் இடையில் மட்டுமே வரும். தமிழ்ச்சொல்லில் தனிக்குறிலை அடுத்தும் வல்லின உயிர்மெய்யை இறுதியில் பெற்றும் வரும்.

   எ – கா : அஃது, எஃகு, கஃசு.

6. **பேச்சுவழக்கில் ஏற்படும் பிழைகள் சிலவற்றை எழுதுக.**
   - தமிழைத் 'தமில்' என்றும், மழையை 'மலை' என்றும், வாழைப்பழத்தை 'வாலப்பலம்', 'வாளப்பலம்', 'வாயப்பயம்' என்றும் பேசுவது, பேச்சுவழக்கில் ஏற்படும் சில பிழைகள்.

7. **ஒரு மொழியின் அடிப்படை அறிவு என்பது யாது?**
   - ஒரு மொழியின் அடிப்படை அறிவு என்பது, அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும், சொற்களையும், அவற்றின் பொருளையும், வாக்கிய அமைப்புகளையும் தெரிந்திருப்பதே ஆகும்.

8. **ஒரு மொழியின் இலக்கணம் எவற்றை உள்ளடக்கியதாய் இருக்கும்?**
   - ஒரு மொழியின் இலக்கணம், அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் வாக்கிய அமைப்புகளையும் உள்ளடக்கியதாய் இருக்கும்.

9. **எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம் யாது?**
   - எல்லா இடங்களிலும் பேச்சுத் தமிழை எழுத முடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே, எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம் எனலாம்.

10. **தனிக்குறிலை அடுத்து ரகரம் வரின் எவ்வாறு எழுத வேண்டும்?**
    - தனிக்குறிலை அடுத்து ரகரம் வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்பத் திருத்தி எழுத வேண்டும்.

    சான்று : நிர்வாகம் – நிருவாகம்<br>
    கர்மம் – கருமம்

11. **எழுதும்போது குறில், நெடில் எழுத்துப்பிழை ஏற்படாமலிருக்க என்ன செய்யலாம்?**
    - எழுதும்போது குறில், நெடில் எழுத்துகளை மனத்தளவிலோ, வாய் விட்டோ உச்சரித்துக்கொண்டே எழுதினால் குறில், நெடில் பிழைகளைத் தவிர்த்து விடலாம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**12. கன்று – கண்று, வண்டி – வன்டி – இவற்றுள் எச்சொற்கள் சரியானவை? எவ்வாறு?**

- கன்று, வண்டி ஆகிய இரண்டும் சரியான சொற்கள்.
- 'ற்', 'ன்' ஆகியன இன எழுத்துகள். எனவே, 'ற'கர ஒற்று எழுத்துக்குமுன் அதன் இன எழுத்தாகிய 'ன'கரத்தை இட்டுக் 'கன்று' என எழுதுவதே சரி.
- 'ட்', 'ண்' ஆகிய இன எழுத்துகள். எனவே, 'ட'கரத்துக்க முன் அதன் இன எழுத்தான 'ண'கரத்தையே இட்டு 'வண்டி' என எழுதுவதே சரி.

**13. சொல்லில் ஈரொற்றாய் வரும் தமிழ் எழுத்துகள் எவை? எடுத்துக்காட்டுத் தருக.**

- சொல்லில் ஈரொற்றாய் வரும் தமிழ் எழுத்துகள் ய், ர், ழ் ஆகிய மூன்று மெய்யெழுத்துகள் மட்டுமே.

எ – கா : பாய்ச்சு, ஈர்க்கும், வாழ்க்கை

**14. 'ஒரு', 'அது' என்னும் சொற்களை அடுத்து உயிரெழுத்தை முதலாய்க் கொண்ட சொற்கள் வந்தால், ஏற்படும் மாற்றம் யாது?**

- 'ஒரு', 'அது' என்னும் சொற்களை அடுத்து உயிரெழுத்தை முதலாய்க் கொண்ட சொற்கள் வந்தால், 'ஒரு' என்பது 'ஓர்' எனவும், 'அது' என்பது 'அஃது' எனவும் மாறும்.

எ – கா : ஓர் அணில், அஃது உரிமையானது

**15. 'இயக்குநர் – இயக்குனர்' இவற்றுள் எது சரியான சொல்? எவ்வாறு?**

- 'இயக்கு' என்னும் வினைச்சொல் 'ந்' என்னும் பெயர் இடைநிலையினையும், 'அர்' என்னும் ஆண்பால் விகுதியையும் பெற்று, 'இயக்குநர்' எனப் பெயர்ச்சொல்லாயிற்று.
- எனவே, 'இயக்குநர்' என்பதே சரி.

**16. 'உறுப்பிநர்' என எழுதலாமா?**

- 'உறுப்பு' என்பது பெயர்ச்சொல். அது 'இன்' என்னும் சாரியையும், 'அர்' என்னும் பலர்பால் விகுதியையும் பெற்று, 'உறுப்பினர்' ஆனது. எனவே, 'உறுப்பிநர்' என எழுதுவது தவறு.

**17. ஓசையில் குறையாது ஒலிக்கும் முற்றாய்தம் எவ்வாறு வரும்?**

- மூன்று புள்ளி (ஃ) வடிவினது முற்றாய்தம். அது குற்றெழுத்துக்குப் பின்னும், உயிரோடு கூடிய வல்லின எழுத்துகள் ஆறனுள் ஒன்றனுக்கு முன்னுமாய் நடுவிலேயே அமையும்.

எ – கா : அஃது, எஃகு, கஃசு, பஃறி

## கூடுதல் சிறுவினாக்கள்

**1. லகர, ளகர விதிகள் சில குறித்து எழுதுக.**

- வேற்றுமைப் புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரியும்.

கல் + சிலை – கற்சிலை, கடல் + கரை – கடற்கரை

- லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரியும்.

பல் + முகம் – பன்முகம்

- ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின், ளகரம் டகரமாய்த் திரியும்.

மக்கள் + பேறு – மக்கட்பேறு

- ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின், ளகரம் ணகரமாய்த் திரியும்.

நாள் + மீன் – நாண்மீன்

- வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு, தகரமும் றகரமாக மாறும்.

சொல் + துணை – சொற்றுணை

- வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் னகரமாக மாறும்.

பல் + நூல் – பன்னூல்

- அல்வழியில், தனிக்குறிலை அடுத்த லகரம், வருமொழியில் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும்; வருமொழி தகரமும் றகரமாகும்.

அல் + திணை – அஃறிணை, பல் + துளி – பஃறுளி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. பிழை தவிர்க்கச் சில குறிப்புகள் தருக.**

- எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன / ல, ள, ழ / ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
- தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ, மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதிப் பழகுவது நல்லது. வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும்.
- கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய, கொம்புடன் கால் உடைய குறில், நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

**3. எழுத்து குறித்த அடிப்படைச் செய்திகள் யாவை?**

- உயிரெழுத்துகள் 12. அவை குறில், நெடில் என இரு வகைப்படும்.

  உயிர்க்குறில் – அ, இ, உ, எ, ஒ

  உயிர் நெடில் – ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ
- மெய்யெழுத்துகள் 18. அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

  வல்லின மெய்கள் – க், ச், ட், த், ப், ற்

  மெல்லின மெய்கள் – ங், ஞ், ண், ந், ம், ன்

  இடையின மெய்கள் – ய், ர், ல், வ், ழ், ள்.

  உயிர்மெய் எழுத்துகள் – 216 (உயிர்மெய்க் குறில் – 90, உயிர்மெய் நெடில் – 126)

  ஆய்தம் – 1.

  தமிழில் உள்ள மொத்த எழுத்துகள் 247.

**4. தொழில் + துறை, பல் + நூல் – எப்படி இணைந்தன?**

- தொழில் + துறை = இதில் வருமொழி முதல் 'த'கரம் இருப்பதால், நிலைமொழி ஈற்று 'ல'கரம் 'ற'கரமானது. (தொழிற் + துறை)

  பின் வருமொழி முதல் 'த'கரமும்' 'ற'கரமாய் மாறி (தொழிற் + றுறை) 'தொழிற்றுறை' ஆனது.
- பல் + நூல் = இதில் வருமொழி முதலில் 'ந'கரம் வந்ததால், நிலைமொழி ஈற்று 'ல'கரம் 'ன'கரமானது (பன் + நூல்).
- பின் வருமொழி முதல் 'ந'கரமும் 'ன'கரமாய் மாறி (பன் + னூல்) 'பன்னூல்' ஆனது.

## கூடுதல் பலவுள் தெரிக

1. உயிரெழுத்துகள் ______ வகைப்படும். **(PTA - 2)**

   அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு

   **விடை : ஈ) இரண்டு**

2. பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க. **(Sep. - 20)**

   அ) உங்களில் யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?

   ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?

   இ) உங்களை யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?

   ஈ) உங்களது யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?

   **விடை : ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?**

3. எவ்வகை வாக்கியம் என்பதைக் கண்டறிக. **(PTA - 3)**

   அ) ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய்?

   **விடை : வினா வாக்கியம்.**

   ஆ) நீச்சல் தன்னம்பிக்கையைத் தரும்.

   **விடை : செய்தி வாக்கியம்.**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. தமிழில் உயிர்மெய் எழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள்: (Mar. - 23)

அ) 136 ஆ) 120 இ) 126 ஈ) 116

**விடை : இ) 126**

5. தமிழில் உயிர்மெய் எழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள் :

அ) 136 ஆ) 120 இ) 126 ஈ) 116

**விடை : இ) 126**

6. நாற்பத்தி மூன்று, முப்பத்தி மூன்று – இவற்றின் உண்மையான வடிவம் ______.

அ) நாற்பத்தி மூணு, முப்பத்து மூணு ஆ) நாற்பத்து மூன்று, முப்பத்து மூன்று

இ) நாப்பத்தின் மூன்று, முப்பதின் மூன்று ஈ) நான்கு பத்து மூன்று, மூன்று பத்து மூன்று

**விடை : ஆ) நாற்பத்து மூன்று, முப்பத்து மூன்று**

7. சரியான சொற்றொடரைக் கண்டறிக.

அ) விருந்தினர்க்குச் சேறு கொடுத்து மகில்வித்தான்.

ஆ) விருந்தனருக்குச் சோறு கொடுத்து மகிழ்வித்தான்.

இ) விருந்தினருக்குச் சோறு கொடுத்து மகிழ்வித்தான்.

ஈ) விருந்தினருக்குச் சோரு குடுத்து மகிழ்வித்தான்.

**விடை : இ) விருந்தினருக்குச் சோறு கொடுத்து மகிழ்வித்தான்.**

8. பிழையில்லாத தொடரைக் கண்டறிக.

அ) அவர் நல்ல மணம் படைத்தவரா? ஆ) அவற் நல்ல மணம் படைத்தவரா?

இ) அவர் நள்ள மனம் படைத்தவரா? ஈ) அவர் நல்ல மனம் படைத்தவரா?

**விடை : ஈ) அவர் நல்ல மனம் படைத்தவரா?**

9. சரியான தொடரைத் தேர்வு செய்க.

அ) மொழியின் இயல்பை உணர்த்தும் இலக்கண விதிகளை அறிந்து, கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.

ஆ) உற்று நோக்கினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.

இ) திரும்பத் திரும்பப் படித்தால் பிழைகளைத் தவிர்க்கலாம்.

ஈ) மனப்பாடம் செய்து எழுதினால் பிழைகளைத் தவிர்க்கலாம்.

**விடை : அ) மொழியின் இயல்பை உணர்த்தும் இலக்கண விதிகளை அறிந்து, கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.**

10. 1. வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா.

2. சான்று = சாட்ச்சி, முயற்ச்சி

அ) 1 தவறு 2 சரி ஆ) 2 சரி, 1 தவறு இ) 1, 2 இரண்டும் சரி ஈ) 1 சரி 2 தவறு

**விடை : ஈ) 1 சரி 2 தவறு**

11. **கூற்று** : ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் க, ச, ப என்னும் வரிசைகளுமே வரும்.

**சான்று** : பாட்டு, வெட்கம், காட்சி, திட்பம்; காற்று, கற்க, கற்சிலை, கற்பவை.

அ) கூற்று சரி, சான்று தவறு ஆ) சான்று சரி, கூற்று தவறு

இ) கூற்று, சான்று இரண்டும் தவறு ஈ) கூற்றும், சான்றும் சரி

**விடை : ஈ) கூற்றும், சான்றும் சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12. தமிழில் சொல்லின் தொடக்கமாக ______ வருவதில்லை.

அ) உயிர் எழுத்துகள் ஆ) மெய்யெழுத்துகள்

இ) உயிர்மெய் எழுத்துகள் ஈ) தனிநிலை மெல்லின எழுத்துகள்

**விடை : ஆ) மெய்யெழுத்துகள்**

13. ஆய்த எழுத்து சொல்லின் ______ மட்டுமே வரும்.

அ) முதலில் ஆ) இடையில் இ) இறுதியில்

**விடை : ஆ) இடையில்**

14. வரும் சொல்லில் முதல் எழுத்து உயிரெழுத்தாயின் அதன்முன் வரும் 'ஒரு' என்பது ______ என மாறும்.

அ) ஒறு ஆ) ஓர் இ) ஒரு ஈ) ஒறு

**விடை : ஆ) ஓர்**

15. அது – அஃது என மாறுவது எப்போதெனில், 'அது' என்பதன் முன் வரும் சொல்லின் முதல் எழுத்து ______ எழுத்தாய் இருக்கும்போது.

அ) மெய் ஆ) உயிர்மெய் இ) உயிர் ஈ) ஆய்த

**விடை : இ) உயிர்**

## கற்பவை கற்றபின்

**மயங்கொலி எழுத்துகள் / ண, ந, ன / ல, ள, ழ / ர, ற அமைந்த சொற்களைத் திரட்டிப் பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

| அ. ரகர–றகர (பொருள்) வேறுபாடு அறிதல் | | |
|---|---|---|
| இரங்கு – இரக்கப்படு<br>இறங்கு – கீழே வா | இரத்தல் – யாசித்தல்<br>இறத்தல் – சாதல் | பரவை – கடல்<br>பறவை – ஓர் உயிரி |
| உரவு – வலிமை<br>உறவு – சொந்தம் | எரி – பற்ற வை<br>எறி – வீசு | பரி – குதிரை<br>பறி – பிடுங்கு |
| குரவர் – பெரியோர்<br>குறவர் – ஓர் இனமக்கள் | கூரிய – கூர்மையான<br>கூறிய – சொல்லிய | பொரி – நெல்பொரி<br>பொறி – இயந்திரம் |
| துரவு – கிணறு<br>துறவு – துறந்துவிடுதல் | துரை – பிரபு<br>துறை – நீர்நிலையின் படித்துறை | பொரு – போர் செய்<br>பொறு – பொறுத்துக்கொள் |
| நிரை – வரிசை, பசுமந்தை<br>நிறை – எடை | பரந்த – பரவிய<br>பறந்த – பறந்துவிட்ட | |

| ஆ. லகர ளகர ழகர (பொருள்) வேறுபாடு அறிதல் | | | |
|---|---|---|---|
| அலை – கடல் அலை<br>அளை – புற்று<br>அழை – கூப்பிடு | இலை – தழை<br>இளை – (உடல்) மெலி<br>இழை – நூல் இழை | கல் – சிறு பாறை<br>கள் – தென்னை, பனைச் சாறுகள் | தால் – நாக்கு<br>தாள் – பாதம்<br>தாழ் – பணி, வணங்கு |
| ஒலி – ஓசை<br>ஒளி – வெளிச்சம், காட்சி<br>ஒழி – நீங்கு (போய்விடு) | கலை – ஆடை, கல்விவகை<br>களை – நீக்கு, அழகு<br>கழை – மூங்கில் | எலும்பு – என்பு<br>எழும்பு – எழுந்திரு | |
| கலம் – தானிய அளவு, கப்பல்<br>களம் – இடம் | கோல் – கம்பு (குடி)<br>கோள் – பழிமொழி, கிரகம் | கிலி – பயம்<br>கிளி – ஒரு பறவை<br>கிழி – கிழித்தல் செய், துண்டாக்குதல் | |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| இ. ணகர னகர (பொருள்) வேறுபாடு அறிதல் | | | |
|---|---|---|---|
| அண்ணம் – மேல்வாய்<br>அன்னம் –ஒரு பறவை,சோறு | ஆண் – ஆடவன்<br>ஆன் – பசு | எண் –நினை, இலக்கம்<br>என் –எனது,என்னுடைய | |
| ஆணை – கட்டளை<br>ஆனை – யானை | ஆணி – இரும்பு ஆணி<br>ஆனி – ஒரு மாதம் | கணம்– கூட்டம்<br>கனம் – சுமை | ஊண்– உணவு<br>ஊன் –இறைச்சி |
| இணை– ஒன்றாகச் சேர்வது<br>இனை – வருந்து | உண் – சாப்பிடு<br>உன் – உன்னுடைய | கண்ணி – தலைமாலை<br>கன்னி – இளம்பெண் | |

## மொழியை ஆள்வோம்

**இலக்கிய நயம் பாராட்டுக.** (PTA -5, 6, Mar.-24)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!

**ஆசிரியர் குறிப்பு** : தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் புகழ் பெற்ற 'கவியரசு' கண்ணதாசன், நாலாயிரம் கவிதைகள், ஐயாயிரம் திரைப்படப் பாடல்கள், கதைகள், கட்டுரைகள் எழுதியவர். "முச்சங்கம் கூட்டி..." எனத் தொடங்கும், அவர் எழுதிய பாடலின் நயத்தை இங்கு ஆராய்வோம்.

**மையக்கருத்து** : கருத்துச் செறிந்த இலக்கியங்களை நாளும் படைத்துப் புதுப்பொலிவுடன் தமிழ்ப் பெருமகள், அன்னையாகத் திகழ்கிறாள்.

**எதுகை** : அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து அளவு (மாத்திரை) ஒத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

முச்சங்க, அச்சங்கம்
சொற்சங்க, அற்புதங்க } அடிஎதுகை

**மோனை** : அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி வருவது மோனை.

**மு**ச்சங்க, **மு**துபுலவர்
**அ**ச்சங்க, **அ**ளப்பரிய
**அ**ற்புதங்கள், **அ**மைத்த } சீர்மோனை

**இயைபு** : அடிதோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வருவது இயைபு.

தமை**க்கூட்டி**
பொருள்**கூட்டி**
கவி**கூட்டி** } அடி இயைபு

**அணி** : செய்யுளுக்குச் சொல்லாலோ, பொருளாலோ மேலும் அழகு சேர்ப்பது அணி. இப்பாடலில் 'கூட்டி' என்னும் சொல், ஒரே பொருளில் பலமுறை பயின்று வந்துள்ளதால், சொற்பொருள் பின்வருநிலையணி இடம் பெற்றுள்ளது எனலாம்.

**சுவை** : பாடலின் உட்கருத்தை நம் மனக் கண்முன்னே காட்சிப்படுத்துவது சுவையாகும். தமிழன்னையின் பெருமையைப் புகழ்ந்து பாடுவதால், இப்பாடலில் 'பெருமிதச் சுவை' பயின்று வந்துள்ளது.

கண்ணதாசனின் "முச்சங்கம் கூட்டி..." எனத் தொடங்கும் பாடல் எதுகை, மோனை, இயைபு, அணி எனப் பல சுவை நயங்களைத் தன்னகத்தே கொண்டு, படிப்போரைப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது எனலாம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere. **(PTA - 2, May - 22)**

கற்றல் என்பது ஒரு செல்வக்குவியல் போன்றது; அது தன் உடைமைதாரரைத் தொடரும்.

2. A new language is new life. **(May-22, July-23, Mar.-24)**

புதிய மொழியை அறிவது, புதிய வாழ்க்கையாக அமையும்.

3. If you want people to understand you, speak their language. **(July-23, Mar.-24)**

மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள விரும்பினால், அவர்கள் மொழியில் பேச வேண்டும்.

4. Knowledge of languages is the doorway to wisdom. **(May-22, July-23, Mar.-24)**

பன்மொழி அறிவு என்பது, மதிநுட்பத்திற்கு வாயிலாகும்.

5. The limits of my language are the limits of my world. **(May-22, July-23, Mar.-24)**

என் மொழியின் எல்லை என்பது, என் உலகின் எல்லையாகும்.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக**

மொழி என்பது, மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே, மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை, தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது, மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது, பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே, பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

– மொழி வரலாறு (மு. வரதராசனார்)

**வினாக்கள் :**

1. மொழி என்பது யாது? அது எத்தகையது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை எது? பெரிய மகிழ்ச்சி எது ?
3. மொழி வளர்ச்சி என்பது, எதனோடு தொடர்புடையது?
4. மொழி எவ்வாறு வளர்ச்சி பெறும்?
5. மொழியை வளர்ப்பவர் யார்? எவ்வெவ்வாறு?

**வினாக்கள் :** **(Sep. -21)**

1. **குழந்தையின் மனவளர்ச்சி எதனுடன் தொடர்புடையது ?**

குழந்தையின் மனவளர்ச்சி மொழி வளர்ச்சியோடு தொடர்புடையது,

2. **மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் ______ ஆகும்.**

அரியதொரு கலை.

3. **தாயின் முதல் வேட்கையாக இருப்பது என்ன?**

தாயின் முதல் வேட்கையாக இருப்பது தன் குழந்தையுடன் பேசுதல்.

4. **மொழி எவ்வாறு வளர்ச்சி பெறும்?**

பேசுவோரின் மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே மொழி வளர்ச்சி பெறும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வினாக்கள் :** (May -22)

1. **மொழி என்பது யாது?**

   மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை.

2. **பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?**

   தன் குழந்தையுடன் பேசுதலே பெற்ற தாயின் முதல் வேட்கையாகும்.

3. **மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது ?**

   மொழி வளர்ச்சி, குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது,

4. **இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.**

   வளர்மொழி.

**உவமைத்தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக**

1. தாமரையிலை நீர்போல : துறவிகள், **தாமரை இலை நீர்போல,** உலகப் பற்று இல்லாமல் வாழ்வார்கள்.
2. கிணற்றுத் தவளைபோல : இன்றும் சில பெண்கள் உரிய கல்வியைப் பெறாததால் **கிணற்றுத்தவளைபோல,** வெளியுலகம் அறியாது வாழ்கின்றனர்.
3. எலியும் பூனையும்போல : அமெரிக்காவும் சீனாவும் **எலியும் பூனையும்போல** கொள்கைகளால் முரண்பட்ட நாடுகளாக இருக்கின்றன.
4. அச்சாணி இல்லாத தேர்போல : குறிக்கோளை முடிவு செய்யாததால் சிலர், **அச்சாணி இல்லாத தேர்போல** வாழ்வில் தள்ளாடுகின்றனர். (Mar.-20,24)
5. உள்ளங்கை நெல்லிக்கனிபோல : நம்பகத்தன்மை இல்லாத நாடு இலங்கை என்பது, நமக்கு இப்போது **உள்ளங்கை நெல்லிக்கனிபோல** விளங்கி இருக்கிறது. (July-20,23)
6. நகமும் சதையும்போல : திருமணத்திற்கு வருகைதந்தோர் அட்சதை தூவி மணமக்களை **நகமும் சதையும்போல்** வாழுமாறு வாழ்த்தினர். (Mar. - 20)

**ஒருபக்க அளவில் கட்டுரை**

## தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்

**எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் – இதனை வலியுறுத்திப் பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் – பயன் – இன்றைய நிலை.**

**முன்னுரை :**

நம் மனத்தில் தோன்றும் எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணை நிற்கும். எனவே, தாய்மொழிவழிக் கல்வி கற்பதே அறிவு வளத்தைப் பெருக்கவும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் துணைபுரியும் என்பதை இங்குக் காண்போம்.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

மனிதனின் சிந்தனையும், கற்பனையும் தாய்மொழியில்தான் உருவாகின்றன. தாய்மொழிக் கல்வியே ஒவ்வொருவருக்கும் அவசியமானது. தாய்மொழி வழிக்கல்வி எளிமையானது; இனிமையானது. மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்குத் தாய்மொழிக் கல்வியே சிறந்தது.

**தாய்மொழிச் சிந்தனை :**

எத்தனை மொழிகள் கற்றாலும் ஒருவனின் சிந்தனை ஊற்றெடுப்பது தாய்மொழியில்தான். மனிதர்களின் மனவெழுச்சி, வாழ்விற்கு அடிப்படை. அத்தகைய மனவளர்ச்சியைத் தாய்மொழியால் மட்டுமே பெற முடியும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அறிஞர்களின் பார்வை :**

“தாய்மொழியில் அறிவியல் கல்வியைக் கொடுப்பதன்மூலம் ஆக்கப்பூர்வ சிந்தனையைக் குழந்தைகள் மத்தியில் கொண்டுவர முடியுமென்று” கூறினார் அப்துல்கலாம். “ஒருவனது இதயத்தைத் தொடுவதற்கு அவனது தாய்மொழியில் பேசவேண்டும் என்றும், பொதுமொழியில் பேசினால் அவனது எண்ணத்தை மட்டுமே அறியமுடியும்” என்றும் கூறினார் நெல்சன் மண்டேலா. “பள்ளிகளில் பயிற்று மொழியாகத் தாய்மொழிதான் இருக்க வேண்டும்” என்றார் மகாத்மா காந்தியடிகள்.

**கற்கும் திறன் :**

தாய்மொழி வாயிலாகக் கற்கும் திறன் மாணவர்களுக்கு இயல்பாகவே இருக்கும். தாய்மொழி மூலமாகவே தான் கூற விரும்பும் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் ஆழமாகவும் ஒருவரால் தெரிவிக்க முடியும். கற்கும் திறன் அதிகரிப்பது தாய்மொழி வழியாகத்தான். தாய்மொழி வழியாகக் கற்கும்போது சிந்தனைத் திறன் அதிகமாகும்.

**தாய்மொழி வழிக் கல்வியின் பயன் :**

கருவிலேயே தாய் பேசும் மொழியோடு குழந்தைக்கு அறிமுகம் ஏற்படுவதால், தாய்மொழி வழிக் கற்றல் என்பது குழந்தைக்கு எளிதாகிறது. தாய்மொழியில் கற்கும் குழந்தைகள் சிறந்த அறிஞர்களாக, மேதைகளாக வளருவார்கள். தரமான கல்வியும் பெறுவார்கள்.

**இன்றைய நிலை :**

தாய்மொழி வழிக் கல்வி கற்போரை இன்று கேவலமாக நினைக்கின்றனர். தாய்மொழிக் கல்வி பயில்வோரைத் தரக்குறைவாக எண்ணுவது, இன்றைய சமுதாயத்தின் அவலங்களில் ஒன்றாக உள்ளது. இது தவறான எண்ணம்.

**முடிவுரை :**

மொழி என்பது ஒரு தகவல் தொடர்புச் சாதனம் மட்டுமன்று; ஒரு பண்பாட்டின் – ஓர் இனத்தின் அடையாளம் என்பதை உணர்ந்தாலே தாய்மொழியையும் தாய்மொழிவழிக் கற்றலையும் அழிவிலிருந்து காக்கலாம்.

## மொழியோடு விளையாடு

**அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக**

**குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்**

**தாயின் குரலில் உயிரின் ஒலி**

உயிரின் ஒலி தரும் ஆனந்த வெள்ளம்

ஆனந்த வெள்ளம் வந்து பாயுமே உலகெங்கும்!

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



ஆதி மனிதன், நாடோடியாக வாழ்ந்தான். இரவு நேரங்களிலும், இயற்கைச் சீற்றங்களிலும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளக் குகைகளில் தங்கினான். கூர்மையான கற்களை வேட்டையாடுவதற்கான கருவிகளாக அவன் பயன்படுத்தினான். வேட்டையாடி உணவுண்டபின் ஓய்வு நேரத்தில் தன் வாழ்வியல் அனுபவங்களைத் தான் தங்கி வாழ்ந்த பாறைக் குகைகளில் சிற்பங்களாகச் செதுக்கி வைத்தான். அவை பெரும்பாலும் அவன் கண்ட, வேட்டையாடிய விலங்குகளைக் குறிப்பனவாக அமைந்திருக்கக் காணலாம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்**

**எ – கா :** கவிஞர்: ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். – கவிமணி

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

1. தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். – மறைமலை அடிகள்
2. தாய்மொழி : ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தருவன. – தமிழ்ஒளி
3. சிறுகதை ஆசிரியர் : முதல்பாதி நவீனம். – புதுமைப்பித்தன்
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். – கோதை

## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி / தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும், தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் ஒப்பிடுக.**

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| **எ – கா :** பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல். | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல். | | தவறு. தூய்மை கெடும்; நோய் பரவும்; கட்டுப் படுத்திக் குறிப்பிட்ட இடத்தில் துப்பப் பழக்க வேண்டும். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல். | | தவறு. வகுப்பறைத் தூய்மை கெடும். குப்பைக் கூடை வைத்துப் போடப் பழக வேண்டும். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல். | | தவறு. பொது உடைமை. நமக்குமுன் பலருக்குப் பயன்பட்டது. நமக்குப்பின் பலருக்கும் பயன்பட வேண்டும். பாதுகாப்பாகக் காப்பாற்றுவது நல்லது. |

## படிப்போம் பயன்படுத்துவோம் (நூலகம்)

**Subscription** – உறுப்பினர் கட்டணம்
**Fiction** – புனைவு
**Biography** – வாழ்க்கை வரலாறு
**Archive** – காப்பகம்
**Manuscript** – கையெழுத்துப் படி
**Bibliography** – நூல் நிரல்

## கூடுதல் பலவுள் தெரிக

Archive – என்பதற்குரிய தமிழ்ச்சொல்லைத் தேர்க. (Sep.-20)

அ) காப்பகம் ஆ) பிரதி இ) புனைவு ஈ) நூல்நிரல்

**விடை : அ) காப்பகம்**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் - 2

## உரைநடை உலகம்

# 1. பெருமழைக்காலம்

### குறுவினாக்கள்

1. **'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

★ மரங்களை வெட்டக்கூடாது; காடுகளை அழிக்கக் கூடாது; புவி வெப்பமாதலால் விளையும் கேடுகள் குறையும்; மரங்களை நட்டால்தான் மழை பெய்யும்.

★ மழை பெய்தால் அனைவரும் வளமுடன் வாழலாம் என்பதை முழக்கத்தொடர் வாயிலாக வலியுறுத்துவேன்.

2. **மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான். - இரு தொடர்களாக்குக.** (Sep.-20)

★ மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.

★ அதன் விளைவால் புவி வெப்பமயமாதலை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

### கூடுதல் வினாக்கள்

3. **பசுமைக்குடில் வாயுக்கள் என்று எவற்றை அழைக்கின்றோம்?** (PTA-3)

➤ கார்பன் – டை – ஆக்ஸைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவற்றைதான் பசுமைக்குடில் வாயுக்கள் என அழைக்கிறோம்.

4. **தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் எப்பொழுது யாரால் உருவாக்கப்பட்டது?** (PTA - 5)

➤ நடுவண் அரசால் 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று, தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் உருவாக்கப்பட்டது.

5. **மழைக்காலங்களில் பெரும்பாதிப்பு ஏற்படக் காரணம் என்ன?**

➤ சரியாகத் திட்டமிடாமல் உருவாக்கப்படும் பெருநகர அமைப்பு, நீர் மேலாண்மையில் கவனம் செலுத்தாமை ஆகியவற்றால் மழைக்காலங்களில் பெரும்பாதிப்பு ஏற்படுகிறது.

6. **புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கல் என்று கூறியவர் யார்?**

➤ இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர் 'டேவிட் கிங்' என்பவர்தாம், "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கல்" என்றார்.

7. **புயல்களுக்குப் பெயர் வைக்கும் நாடுகள் எத்தனை? அவை யாவை?**

➤ புயல்களுக்குப் பெயர் வைக்க உருவாக்கப்பட்ட கூட்டமைப்பில் உள்ள நாடுகள் எட்டு.

➤ அவை, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன், தாய்லாந்து ஆகியன.

8. **புவி வெப்பமாதலுக்குச் சான்று தருக.**

➤ கடந்த முப்பது ஆண்டுகளில் ஆர்டிக் பகுதியில் நான்கு இலட்சம் சதுர மைல்கள் பனிப்பாறை உருகியுள்ளதைச் சான்றாகக் கொள்ளலாம். இதற்குப் புவி வெப்பமாதலே காரணமாகும்.

9. **பெருமழையைத் தாங்கக்கூடிய ஏற்பாடுகளாக இயற்கை எவற்றை வைத்திருக்கிறது?**

➤ குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால், வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள் போன்ற ஏற்பாடுகளைப் பெருமழையைத் தாங்கக்கூடிய ஏற்பாடுகளாக இயற்கை அமைத்து வைத்திருக்கிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**10. ஆற்றங்கரைப் படிவு என்றால் என்ன?**

- ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு வரும் காலங்களில், அடித்து வரப்படும் பொருள்கள் ஆற்றின் ஓரங்களில் படிந்துவிடும். இதுவே ஆற்றங்கரைப் படிவு எனப்படுகிறது.

**11. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான காரணமென்ன?**

- பாறைகள் தெரியுமளவிற்கு ஆற்றில் மணல் அள்ளியதன் விளைவாக வெள்ளச் சமவெளிகள் அழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

**12. பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பணி என்ன?**

- புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது, பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றுவதே, பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பணியாகும்.

**13. இயற்கைச் சமநிலை என்றால் என்ன?**

- மழையினால் நிலத்தில் தாவரங்களும், விலங்கினங்களும், மனித இனமும் தோன்றி உணவால் ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் இந்த உயிரினங்கள், உணவுச் சங்கிலியால் பிணைக்கப்படுகின்றன.
- இந்த இயற்கைச் சுழற்சியையே இயற்கைச் சமநிலை என்பர். அதாவது, தாவர உண்ணிகளை ஊன் உண்ணிகள் உண்டு வாழ்கின்றன.

**14. பேரிடர்களிலிருந்து தற்காத்துக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?**

- பாதுகாப்பாக அமையக்கூடிய புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.
- நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட வேண்டும்.
- நீர்வழிப் பாதைகளைத் தொடர்ந்து பராமரித்து வர வேண்டும்.
- சமூகக் காடுகள் வளர்த்தெடுத்தலைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும்.
- கடற்கரை ஓரங்களில் சதுப்புநிலக் காடுகளை வளர்க்க வேண்டும்.

**15. அளவிற்கு அதிகமாக நம் நாட்டில் மழைப்பொழிவு பதிவாகியுள்ள இடங்களைக் கூறுக.**

- நம் நாட்டில் அதிக மழைப்பொழிவாக மும்பையில் ஒரே நாளில் 2005ஆம் ஆண்டு 994 மி.மீ. மழையளவும், ஜம்மு காஷ்மீரின் ‘லே’ பகுதியில் 2010ஆம் ஆண்டு 30 நிமிடத்தில் 150முதல் 250மி.மீ. வரை மழையளவும் பதிவாகியுள்ளன.

**16. தமிழ்ச் சமூகம் மழையை எவ்வாறு கொண்டாடியது?**

- தமிழ்ச்சமூகம் என்றைக்கும் இயற்கையைப் போற்றும் சமூகமாக இருந்துள்ளது.
- எனவே, “மாமழை போற்றுதும்” என்றும் “நீரின்றி அமையாது உலகு” என்றும் “மாரியல்லது காரியமில்லை” என்றும் மழையைக் கொண்டாடி வந்துள்ளது.

**17. பருவநிலை மாற்றம் எதனால் ஏற்படுகிறது? அதன் விளைவு யாது?**

- இயற்கைச் சமநிலையை இழக்கும்போது பருவநிலைகளின் இயல்பு நிலை மாறுபட்டு நிகழ்வுகள் நடைபெறும். அதன் விளைவாக புவி வெப்பமாதல், பெருமழை, பெருவெள்ளம் முதலான பேரிடர்கள் நிகழும்.

**18. மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கல் யாது? அதன் விளைவைக் கூறுக.**

- மனிதன் பேராசையால் இயற்கை வளங்களை கடுமையாகச் சேதப்படுத்தி புவி வெப்பமடைதல் என்னும் சிக்கலை உருவாக்கிக் கொண்டுள்ளான்.
- அதன் விளைவு கடந்த முப்பது ஆண்டுகளில் ஆர்டிக் பகுதி பனிப்பாறை நான்கு இலட்சம் சதுர மைல்கள் உருகிக் கடல் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## சிறுவினாக்கள்

**1. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.** (PTA - 6)

★ வெள்ளநீர் நிரம்பவும், வழியும்நீர் பெருகவும் உள்ள நீர்வழிகளான **கால்வாய், ஆறு, ஓடைகளை** மண் மேடிடாமல் பராமரிக்க வேண்டும். வெள்ளச் சமவெளிகளையோ, நீர்வழிப் பாதைகளையோ ஆக்கிரமித்துக் குடியிருப்புகளையோ, தொழிலகங்களையோ கட்டுதல் கூடாது.

★ நீர் சேமிக்கும் இடங்களில் குப்பை, கழிவு, நெகிழிப் பொருள்கள், தொழிற்சாலை திட, திரவக் கழிவுகள் முதலானவற்றைக் கொட்டுதல் கூடாது.

★ நீர்நிலைகளின் கரைகளை வலுப்படுத்தப் **பனை, வேம்பு, நாவல்** முதலான **நம் நாட்டு** மரங்களை நடுதல் வேண்டும். **ஆற்றுமணல், சவுடுமண்** என்னும் பெயரில் அளவுக்கு **அதிகமாக** நீர் நிலைகளில் மண் அள்ளக்கூடாது.

★ இயல்பாக ஓடும் நீர்வழிகளைத் திசைதிருப்பக்கூடாது முதலான விழிப்புணர்வுகளை, மழை வெள்ளம் பெருகுவதற்கு முன்பாகவே மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

**2. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.** (PTA -5, Mar - 20,24)

★ நடுவண் அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் தேதியன்று, தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

★ புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது, பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது. இதற்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

★ மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர்க் காலங்களில் செயலாற்றப் பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

## கூடுதல் வினாக்கள்

**3. புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன?** (PTA- 4)

➤ புவி வெப்பமயமாதலைத் தடுக்க ஐக்கிய நாடுகள் அவை, 1992ஆம் ஆண்டு ரியோ – டி – ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கியது.

➤ இந்த அமைப்பில் தொடக்கத்தில் ஐம்பது நாடுகள் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தன. தற்போது 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

➤ இந்த அமைப்பு ஒவ்வோர் ஆண்டும், பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது குறித்துப் பேசி உலக நாடுகளுக்குச் சில செயல்முறைகளைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தி வருகிறது.

**4. உலகில் உணவுச் சங்கிலி எவ்வாறு அமைந்துள்ளது?**

➤ மழை பெய்வதால் நீர் ததும்பி செடி கொடி தாவர வகைகள் மண்ணையும் நீரையும் உண்டு வளர்கின்றன. இத்தாவர வகைகளை ஆடு மாடு மான் போன்ற தாவர உண்ணிகள் உண்டு வளர்கின்றன.

➤ புலி, சிங்கம் போன்ற ஊன் உண்ணிகள் விலங்குகளை உண்டு வாழ்ந்து வளர்கின்றன. மனிதன் காய்கறி, தானியம், விலங்குகளை உண்டு வாழ்கிறான். இவ்வகையில் அமைந்த இயற்கைச் சுழற்சியே உணவுச் சங்கிலியாக அமைந்து இயற்கைச் சமநிலையாக அமைந்துள்ளது.

**5. புயல்களுக்கு எவ்வாறு பெயர்கள் வைக்கப்படுகின்றன?**

➤ கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைப்பதற்குச் சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. அதன்படி வங்கக்கடலிலும், அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கப்படுகின்றன.

➤ இதற்காக இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன், தாய்லாந்து ஆகிய எட்டு நாடுகள் ஒவ்வொன்றும் எட்டுப் பெயர்களைப் பரிந்துரைத்துள்ளன.

➤ அந்தப் பட்டியலிலுள்ள 64 பெயர்கள் வரிசைப்படிதான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6. வெள்ளச் சமவெளி என்பது யாது? அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

- வெள்ளச் சமவெளி என்பது, ஆற்றின் நீரோட்டப் பாதையில் **இயற்கை** உருவாக்கிய ஒரு காப்பரண் ஆகும். ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு வரும் காலங்களில் அடித்து வரப்படும் பொருள்கள் ஆற்றின் ஓரங்களில் படிந்துவிடும். இது **ஆற்றங்கரைப் படிவு** எனப்படும்.
- இந்தப் படிவுப் பொருட்களால் ஆற்றுச்சமவெளியில் அடர்த்தியான மணலாலும் மற்றும் சேற்றினாலும் அடுக்குப் படிவம் உருவாகும். இவ்வாறு உருவாகும் அடுக்குப் படிவம், வெள்ளப்பெருக்குக் காலங்களில் **நீரை உறிஞ்சுவதால்,** வெள்ளப்பெருக்கு ஏற்படுவது குறையும்.
- இவ்வடுக்குப் படிவம் **நீர் மாசடைவதைத்** தடுக்கும். **மண் அரிப்பையும்** தடுக்கும். வறட்சிக் காலங்களில் **நீர்மட்டம் குறைந்து** விடாமல் பாதுகாக்கும்.

**7. பேரிடர்க் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் எவை?**

- பேரிடர் வந்து விட்டால் மக்கள் பதற்றமடைவதைத் தவிர்க்க வேண்டும்.
- வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் புயல் மழை தொடர்பான தகவல் அடிப்படையில் மக்கள் செயல்பட வேண்டும்.
- வதந்திகளை நம்பவோ பரப்பவோ கூடாது. தீயணைப்புத்துறை, காவல்துறை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.
- மீட்புப்பணி, பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட வேண்டும். பாதுகாப்பு மையங்களையும் மருத்துவக் குழுக்களையும் உடன் வைத்திருத்தல் வேண்டும்.
- இவையே, பேரிடரின்போது மேற்கொள்ள வேண்டியவை ஆகும்.

**8. நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கக் காரணம் என்ன?**

- பெருமழையைத் தாங்கக்கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால், வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள் போன்ற ஏற்பாடுகளை **இயற்கை இயல்பாகவே** அமைத்திருக்கிறது.
- இந்த அமைப்பில் நாம் **இடையீடு** செய்து நீர்நிலைகளை அழித்துக் குடியிருப்புகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றை உருவாக்கிவிட்டோம்.
- நெகிழி மற்றும் திடக்கழிவுகளைக் கொட்டி, நீர்வழிப் பாதைகளைச் சுருக்கி வெள்ளச் சமவெளிகளை அழித்து விட்டோம்.
- இதன் விளைவாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு **உயிரிழப்பும், பொருளிழப்பும்** ஏற்படுகின்றன. இதனால், பெருமழைக் காலங்களில் நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

## நெடுவினா

**1. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.** (Mar.-20,23)

**லோகவாணி** : ஐயா, வணக்கம்! தங்களைச் சந்திப்பது மகிழ்ச்சியாக உள்ளது.

**பசுமைதாசனார்** : வா லோகவாணி. தற்போது நீ என்ன வேலையில் இருக்கிறாய்?

**லோகவாணி** : ஐயா, நான் தற்போது பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருகிறேன்.

**பசுமைதாசனார்** : நீ என்னைக் காண வந்த காரணத்தைச் சொல்.

**லோகவாணி** : ஐயா, நெகிழி என்றால் என்ன? விரிவாகச் சொல்லுங்கள்.

**பசுமைதாசனார்** : '**பிளாஸ்டிக்**' என்று நாம் குறிப்பிடும் பொருள்தான் நெகிழி. தன்னிலையிலிருந்து உருமாறி இறுகித் திடநிலையை அடையும் பொருளுக்கு 'நெகிழி' என்று பெயர். 'பிளாஸ்டிக்கோஸ்' என்ற **கிரேக்கச்** சொல்லிலிருந்து 'பிளாஸ்டிக்' என்ற சொல் உருவானது. நெகிழி என்னும் பொருளானது பிசைவுகொள்ளும் பொருள் ஆகும். பிசைவுகொள்ளும் பொருட்களே நெகிழிப் பொருட்கள் ஆகும்.

**லோகவாணி** : ஐயா, மக்கள் எதற்கெடுத்தாலும் அதிக அளவில் நெகிழியைப் பயன்படுத்துகிறார்கள். இது தீமை அன்றோ?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பசுமைதாசனார்** : மிகுந்த தீமைதான். **கால்நடைகள், வனவிலங்குகள்** நெகிழியை உண்பதால், பெரும் உடல் துன்பத்திற்கு ஆளாகி மரணமடைகின்றன. வீட்டிலிருந்து வீசப்படும் நெகிழிகளால் **மண்ணின் தன்மை** கெடுகிறது. நெகிழிப் புட்டிகள் ஆங்காங்கு வீசப்படுவதால், கழிவுநீர்க் கால்வாய்கள் அடைபட்டுச் **சுகாதாரக் கேடு** உண்டாகிறது. **நிலத்தடி நீர்மட்டம்** குறையவும் மண்ணில் வீசப்படும் நெகிழிப் பொருட்களே காரணம்.

**லோகவாணி** : நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்த என்னென்ன செய்யலாம் ?

**பசுமைதாசனார்** : நெகிழிப் பைகளுக்குப் பதிலாக எளிதில் மட்கும் **சணல்** மற்றும் **துணிப்பைகளைப்** பயன்படுத்தலாம். **காகிதப் பைகளைப்** பயன்படுத்தலாம். தண்ணீர் புட்டிகளாக மட்பாண்டங்களைப் பயன்படுத்தலாம். உணவு விடுதிகளில் **பாக்குமரப் பட்டையில்** தயாரித்த தட்டுகள், மூங்கிலால் ஆன கோப்பைகளையும், **வாழைப்பட்டை,** வாழைச்சருகில் தயாரித்த தட்டுகளையும் பயன்படுத்தலாம்.

**லோகவாணி** : இந்த விவகாரத்தில் அரசின் பங்கு என்ன ஐயா?

**பசுமைதாசனார்** : அரசாணை மூலம் தமிழ்நாடு அரசு, நெகிழிப் பயன்பாட்டிற்குத் தடைவிதித்துள்ளது.

**லோகவாணி** : நெகிழி பற்றி விரிவாகவும் புரியும் வண்ணமும் தகவல் கூறியமைக்கு மிக்க நன்றி ஐயா, எனக்கு விடை தாருங்கள், வணக்கம்!

**2. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி, உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.** (PTA - 3)

சார்வாய்,
26.11.2023.

**அனுப்புநர்**

ஊர்ப் பொதுமக்கள்
சார்வாய் – கிராமம்,
வடசென்னிமலை,
ஆத்தூர் வட்டம் – 636102
சேலம் மாவட்டம்.

**பெறுநர்**

உதவிப் பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
ஆத்தூர் – 636102,
சேலம் மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்** : புயல் தாக்கத்தினால் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி வேண்டுதல் விண்ணப்பம் – சார்பு.

வணக்கம்! எங்கள் சார்வாய் கிராமத்தில் சுமார் ஆயிரம் குடியிருப்புகள் உள்ளன. சமீபத்தில் ஏற்பட்ட ‘நிவர்’ புயல் காரணமாக, எங்கள் குடியிருப்புகளின் **மின் இணைப்புகள்** துண்டிக்கப்பட்டும், மின் கம்பிகள் அறுந்தும் கிடக்கின்றன. சார்வாய் கிராமம் முழுவதும் **இருளில் மூழ்கிவிட்டது.** போதிய மின்வசதி இல்லாமல் முதியோர், நோயாளிகள், குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். **தேர்வு நேரமாதலால்,** படிக்க இயலாமல் மாணவ – மாணவிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, நீங்கள் அருள்கூர்ந்து அறுந்து கிடக்கும் மின் கம்பிகளைச் செப்பனிட்டு, மீண்டும் சார்வாய் கிராமம் **மின்ஒளி பெற** உதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,
சார்வாய் கிராமத்தினர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**உறைமேல் முகவரி**

உதவிப் பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
ஆத்தூர் – 636102,
சேலம் மாவட்டம்.

## பலவுள் தெரிக

1. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் ______.

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

**விடை : ஆ) மணல் அள்ளுதல்**

2. உலக நாடுகள், மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே, புவி வெப்பமயமாதலைக் கட்டுப் படுத்த முடியும் – இத்தொடர் உணர்த்துவது. **(PTA-3)**

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.
ஆ) பசுமைக் குடில் வாயுக்கள் அதிகமாகிறது.
இ) காலநிலை மாறுபடுகிறது.
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

**விடை : அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**

## கூடுதல் வினாக்கள்

3. நடுவண் அரசால் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் நிறுவப்பட்ட நாள் **(PTA-4)**

அ) 2005 ஏப்ரல் 22 ஆ) 2010 டிசம்பர் 22
இ) 2005 டிசம்பர் 23 ஈ) 2010 சூன் 5

**விடை : இ) 2005 டிசம்பர் 23**

4. சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகளுக்குத் தொடர்பில்லாதது ______. **(PTA-5)**

அ) புயல் அபாயக் குறியீடுகள் ஆ) உத்தரவுக் குறியீடுகள்
இ) எச்சரிக்கைக் குறியீடுகள் ஈ) தகவல் குறியீடுகள்

**விடை : அ) புயல் அபாயக் குறியீடுகள்**

5. வங்க, அரபிக் கடல்களில் உருவாகும் புயல்களுக்குப் பெயர்களைப் பரிந்துரை செய்துள்ள அமைப்பிலுள்ள நாடுகளின் எண்ணிக்கை ______. **(Mar.-20)**

அ) எட்டு ஆ) நான்கு இ) அறுபத்து நான்கு ஈ) ஏழு

**விடை : அ) எட்டு**

6. நிஷா, தானே, வர்தா, ஒக்கி, கஜா – இப்பெயர்கள், ______ குறிக்கின்றன.

அ) பெண்களை ஆ) குழந்தைகளை
இ) பெரும் புயல்களை ஈ) பெருமழையை

**விடை : இ) பெரும் புயல்களை**

7. இயற்கைச் சமநிலையை நாம் சீர்குலைத்ததன் விளைவே ______ மாற்றம்.

அ) தட்பவெப்ப ஆ) பருவநிலை இ) சமவெளி ஈ) சீதோஷ்ண

**விடை : ஆ) பருவநிலை**

8. 2005ஆம் ஆண்டு ______ ஒரே நாளில் 994 மி. மீ. மழை பெய்தது.

அ) சென்னையில் ஆ) மும்பையில் இ) கல்கத்தாவில் ஈ) உத்தரகாண்டில்

**விடை : ஆ) மும்பையில்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. ஜம்மு காஷ்மீர் மாநிலம் 'லே' பகுதியில் 2010ஆம் ஆண்டு 30 நிமிடங்களில் ______ வரை மழையளவு பதிவானது.

அ) 100முதல் 250 மி. மீ
ஆ) 200 முதல் 250 மி. மீ
இ) 150 முதல் 250 மி.மீ
ஈ) 300முதல் 350 மி. மீ

**விடை : இ) 150 முதல் 250 மி.மீ**

10. கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைப்பதற்கு ______ நிறுவனம், கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.

அ) பன்னாட்டு வானிலைமையம்
ஆ) வானிலை ஆய்வுமையம்
இ) சர்வதேச வானிலை ஆய்வு
ஈ) கல்வி நிறுவன மையம்

**விடை : இ) சர்வதேச வானிலை ஆய்வு**

11. தாவரங்களை உண்ணும் விலங்கினங்களை ஊன் உண்ணிகள் பிடித்து உண்கின்றன. இந்தச் சார்ந்து வாழ்கின்ற இயற்கைச் சுழற்சியான உணவுச் சங்கிலியே ______.

அ) பொருளாதாரச் சமநிலை
ஆ) வேளாண் சமநிலை
இ) இயற்கைச் சமநிலை
ஈ) செயற்கைச் சமநிலை

**விடை : இ) இயற்கைச் சமநிலை**

12. புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட 'சிக்கலே' என்று திட்டவட்டமாகக் கூறியவர் ______.

அ) டேவிட் கிங்
ஆ) ஸ்டீபன் ஹாக்கிங்
இ) ஜோசப் ஜாக்சன்
ஈ) மார்க்ஸ் முல்லர்

**விடை : அ) டேவிட் கிங்**

13. இந்தியாவில் கடந்த நாற்பது ஆண்டுகளில் ஏற்பட்ட பேரிடர்களில், ______ வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்டவை.

அ) 85%
ஆ) 100%
இ) 75%
ஈ) 55%

**விடை : அ) 85%**

14. புவியின் வெப்பம் ஆண்டிற்கு ஆண்டு ______ ஆண்டிற்குப் பிறகு உயர்ந்து கொண்டே போகிறது.

அ) 2000ஆம்
ஆ) 2001ஆம்
இ) 2003ஆம்
ஈ) 2004ஆம்

**விடை : ஆ) 2001ஆம்**

15. பசுமைக்குடில் வாயுக்களில் பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

அ) மீத்தேன்
ஆ) ஓசோன்
இ) நீர்வாயு
ஈ) காற்று ஆற்றல்

**விடை : ஈ) காற்று ஆற்றல்**

16. காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவை தொடங்கப்பட்ட ஆண்டு ______; தொடங்கப்பட்ட நகரம் ______.

அ) 1992 – ரியோ டி ஜெனிரோ
ஆ) 1993 – நியூயார்க்
இ) 1966 – பிரிட்டன்
ஈ) 1995 – மும்பாய்

**விடை : அ) 1992 – ரியோ டி ஜெனிரோ**

17. கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக இந்திய வானிலை ஆய்வுத்துறை அறிவித்த ஆண்டு ______.

அ) 2009
ஆ) 2006
இ) 2008
ஈ) 2007

**விடை : அ) 2009**

18. 'நீரின்றி அமையாது உலகு' என்றவர் ______.

அ) கம்பர்
ஆ) திருவள்ளுவர்
இ) நக்கீரர்
ஈ) ஔவையார்

**விடை : ஆ) திருவள்ளுவர்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



19. நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்க வைப்பதில் இதன் பங்கு இன்றியமையாதது.

அ) கிணறு ஆ) ஊற்று இ) மணல் ஈ) பாறை

**விடை : இ) மணல்**

20. உலகச் சுற்றுச்சூழல் நாள் ______.

அ) ஜூன், 5 ஆ) ஜூலை, 5 இ) ஏப்ரல், 14 ஈ) மே, 5

விடை : அ) ஜூன், 5

21. **கூற்று 1** : வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் இயற்கை அமைப்புகளை அழித்துக் குடியிருப்புகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்களை மனிதன் அமைத்துள்ளான்.

**கூற்று 2** : நெகிழியையும் திடக் கழிவுகளையும் கொட்டுவதன் விளைவாக வெள்ளச் சமவெளிகள் அழிகின்றன.

அ) கூற்று 1 தவறு, 2 சரி ஆ) கூற்று இரண்டும் தவறு

இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி

**விடை : ஈ) கூற்று இரண்டும் சரி**

22. **கூற்று 1** : வெள்ளப் பெருக்குக் காலங்களில் மட்டுமே, நம் நாட்டில் மாற்று ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

**கூற்று 2** : வெள்ளம் வடிந்த பிறகு வெள்ளப் பெருக்கை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளைத் திட்டமிடவும் தவறுகின்றோம்.

அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1 சரி, 2 தவறு

இ) கூற்று 1 தவறு, 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு

**விடை : அ) கூற்று இரண்டும் சரி**

23. வங்கக் கடலிலும் அரபிக் கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்க, எட்டு நாடுகளில் வழங்கியுள்ள பட்டியலில் உள்ள பெயர்களின் எண்ணிக்கை ______

அ) முப்பத்தாறு ஆ) அறுபத்து நான்கு இ) தொண்ணூற்றாறு ஈ) நூற்றெட்டு

**விடை : ஆ) அறுபத்து நான்கு**

24. சரியான விடையைக் கண்டறிக.

i) ஐ. நா. அவை 1992ஆம் ஆண்டு உருவாக்கிய காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கியபோது, தொடக்கத்தில் 50 நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன.

ii) பின்னர் இந்த எண்ணிக்கை 193 நாடுகளாக உயர்ந்தது.

அ) i சரி ஆ) ii சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

**விடை : இ) இரண்டும் சரி**

25. பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளைக் கண்டறிக.

(i) சீனா (ii) இரஷ்யா (iii) அமெரிக்கா (iv) ஜப்பான்

அ) ii, i சரி ஆ) iii, iv சரி இ) iii மட்டும் தவறு ஈ) நான்கும் சரி

**விடை : ஈ) நான்கும் சரி**

26. சரியான கூற்றுகளைக் கண்டறிக.

i) தமிழக நிலப்பரப்பில், விடுதலைக்கு முன்பு, ஏறத்தாழ ஐம்பதாயிரம் நீர்நிலைகள் இருந்தன.

ii) தற்போது தமிழகத்தில் நீர்நிலைகள் இருபதாயிரமாகக் குறைந்துள்ளன.

iii) சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களைச் சுற்றி மட்டுமே, ஏறத்தாழ ஐந்நூறு ஏரிகள், குளங்கள் காணாமல் போய்விட்டன.

அ) ii, i சரி ஆ) iii, ii சரி இ) iii மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி

**விடை : ஈ) மூன்றும் சரி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27. **செய்தி** : காலநிலை மாறுதல்கள் ஏற்பட்டுப் புவியின் இயக்கம் குறைந்து வருகிறது.

**காரணம்** : பசுமைக்குடில் வாயுக்களின் அளவு அதிகமாகி புவிவெப்பமடைகிறது.

அ) செய்தி சரி, காரணம் தவறு ஆ) செய்தி தவறு, காரணம் சரி

இ) செய்தியும் காரணமும் சரி ஈ) செய்தியும் காரணமும் தவறு

**விடை : இ) செய்தியும் காரணமும் சரி**

28. உலகில் இயற்கைச் சமநிலை குலைந்து பேரிடர் ஏற்படுவதற்கு அடிப்படை ______.

அ) பருவநிலை மாற்றம் ஆ) கடல்நீர் மட்டம் உயர்தல்

இ) புவி வெப்பமடைதல்

ஈ) இயற்கை வளங்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தல்

**விடை : ஈ) இயற்கை வளங்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தல்**

29. புவி வெப்பமயமாதல் காரணமாக உலகில் ______ பாதிக்கப்பட்டுள்ளது.

அ) மழைப் பொழிவு ஆ) இயற்கைச் சமநிலை

இ) எதிர்கால வாழ்வு ஈ) தொழிற்சாலை உற்பத்தி

**விடை : ஆ) இயற்கைச் சமநிலை**

30. ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய காப்பரண் ______.

அ) வடிகால் வாய்க்கால் ஆ) குளம் குட்டை

இ) வெள்ளச் சமவெளி ஈ) ஏரி, ஆறு

**விடை : இ) வெள்ளச் சமவெளி**

31. **செய்தி** : ஆண்டுதோறும் பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது குறித்து காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவை விவாதம் மேற்கொள்கிறது.

**கூற்று** : புவி வெப்பமாதலால் ஏற்படும் கேடுகள் நம் எதிர்கால வாழ்வையும் வரும் தலைமுறையையும் அச்சுறுத்துவதை எச்சரிக்கையாகத் தெரிவிக்க.

அ) செய்தி கூற்று தவறு ஆ) செய்தி தவறு, கூற்று சரி

இ) செய்தி சரி, கூற்று தவறு ஈ) செய்தி கூற்று இரண்டும் சரி

**விடை : ஈ) செய்தி கூற்று இரண்டும் சரி**

## கற்பவை கற்றபின்

1. **வெள்ளப் பேரழிவு குறித்த நாளிதழ்ச் செய்திகளைத் தொகுக்க.**

**மாலை முரசு**

ஜூன் 6, 2015

சென்னையில் பெருமழை. சாலைகள் வெள்ளத்தில் மூழ்கின. செம்பரம்பாக்கம் ஏரி உடைந்தது. 500 வீடுகளில் வெள்ளம் சூழ்ந்தது.

**காலைக் கதிர் :**

ஜூலை 8

சேலத்தில் கனமழை. கடும் சூறாவளிக் காற்றினால் வாழை மரங்கள் சாய்ந்தன. பத்து ஏக்கர் வாழை மரங்கள் சேதம். விவசாயிகளுக்குப் பல லட்சம் ரூபாய் இழப்பு.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தினமலர் :**

செப்டம்பர் 9

திருச்சி காவிரியில் வெள்ளப்பெருக்கு. கரையோரக் கிராமங்களில் வசிப்போர், மேடான பகுதிகளுக்குச் செல்ல, மாவட்ட ஆட்சியர் உத்தரவு.

**தினமணி அக்டோபர் 31**

தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள புயல் வலுவாகி, அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும். நவம்பர் 1ஆம் தேதிமுதல் 3ஆம் தேதிவரை தொடர்ந்து மூன்று நாட்களுக்குத் தொடர்மழை பொழிய வாய்ப்புள்ளது. மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என, வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

**தினத்தந்தி நவம்பர் 3**

வெள்ளப் பாதிப்பால் அவதிப்படுகின்ற பொதுமக்களை மீட்கப் பேரிடர் மீட்புக்குழு தயார் நிலையில் உள்ளது. புயல் காரணமாகப் புதுக்கோட்டை மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளிலும், பிற பகுதிகளிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கியுள்ளன. கடைகள் அனைத்தும் இரவு ஏழு மணிக்கே மூடப்பட்டன.

**2. ஜூன் 5 உலகச் சுற்றுச்சூழல் நாள். இந்நாளில் பள்ளியின் கூட்டத்தில் ஏற்க வேண்டிய உறுதிமொழிகளை உருவாக்குக.**

**உறுதிமொழிகள்**

1. இயற்கையைக் காப்போம்.
2. நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்ப்போம்.
3. மாதம் ஒரு மரக்கன்று நடுவோம்.
4. இயற்கை வேளாண்மை செய்வோம்.
5. ஓசோன் படலத்தைக் காத்திடுவோம்.
6. காடுகளின் பரப்பளவைப் பெருக்குவோம்.
7. மூலிகைச் செடிகளை வளர்ப்போம்.
8. இயற்கை உரங்களை இட்டு, மண்வளம் காப்போம்.
9. குளத்தை, ஆற்றைத் தூர் வாருவோம்.
10. நீர் வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடுவோம்.
11. பார்த்தீனியச் செடிகளை அழிப்போம்.
12. சீமைக் கருவேல மரங்களை அழிப்போம்.
13. பட்டாசு வெடிப்பதைத் தவிர்ப்போம்.
14. மழைநீரைச் சேகரிப்போம்.
15. பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோம்.
16. மரங்களை வெட்டமாட்டோம் என உறுதி எடுப்போம்.
17. பறவைகள், விலங்குகளைக் காப்போம்.
18. காற்று மாசுபாட்டினைக் குறைப்போம்.
19. நீர் மாசுபடுவதைத் தடை செய்வோம்.
20. சூழல் பேணிச் சுகம் பெறுவோம்!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## கவிதைப்பேழை

# 2. பிறகொரு நாள் கோடை

(அய்யப்ப மாதவன்)

### குறுவினாக்கள்

1. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக. (Sep.-21,22, Mar.-23)

★ மழைக்காலத்தில் வானம் இருண்டு நகரமே கருமையாகக் காட்சியளிக்கின்றது.
★ அந்தச் சமயத்தில் திடீரெனச் சூரியன் தோன்றுகிறான்.
★ சூரியக்கதிர்களின் வெண்ணிற ஒளி எங்கும் பரவி ஒளிரத் தொடங்குகிறது.
★ இருண்டிருந்த நகரம், பட்டை தீட்டப்பட்ட வெள்ளை வைரமாகக் காட்சியளிக்கின்றது.

### கூடுதல் வினாக்கள்

2. சூரிய ஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்? (May -22)

➤ மழைக்கால முடிவில் கதிரவன் திடீரெனப் பயணப்பட்டது.
➤ கதிரவனின் ஒளி பட்டவுடன் நகரம் வைரமாகப் பளபளத்தது.
➤ மரங்கள், எஞ்சிய நீர்த்துளிகளை உதிர்த்தன.
➤ பறவைகள், உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன.
➤ இவ்வாறு, மழைக் கனவிலிருந்து நகரம் விடுபடுகிறது என அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்.

3. ஈரமான மரங்கள் மீதமிருந்த மழைநீர்ச் சொட்டுகளை எவ்வாறு உதறின?

➤ தம்மீது பட்ட மழைத்துளிகளை வழியவிட்ட மரங்கள், தம் இலைகளில் தேங்கிய சில சொட்டு களையும் காற்று வீசியதால், தம் கிளைகளை அசைத்து நீர்ச் சொட்டுகளாகத் தூவி வடியச் செய்தன.

4. வெயில் கண்ட பறவைகள் கொண்ட மகிழ்ச்சியினைக் கூறுக.

➤ தொடர்ந்து பெய்த மழையால் நனைந்து, குளிரால் வாடி, குரலை ஒடுக்கி நடுங்கின பறவைகள்.
➤ வெளிப்பட்ட சூரியனின் கதகதப்பான கதிர்களால், அவை உற்சாகம் பொங்கியெழக் **'கலகல'**வென ஒலிக்கத் தொடங்கிச் **சங்கீதம் இசைப்பதுபோல்** மகிழ்ச்சிக்குரல் எழுப்பின.

5. தம் நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கின்றன எனக் கவிஞர் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

➤ மழை பொழியும்போது கையை நீட்டிப் பெற்ற குளிர்ச்சி பொருந்திய மழைத்துளிகள், தம் நரம்புகள் என்னும் வீணையை மீட்டி இனிமை தோன்றச் செய்கின்றன என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

6. பார்க்கத் திகட்டாத அழகுகள் எவை?

➤ பகலும் இரவும் சந்திக்கும் அந்தி, கரையும் கடலும் சேரும் ஓரம், மழையினூடே வெயில் வரும் வேளை ஆகிய அழகுகள் பார்க்கத் திகட்டாதவை.

### சிறுவினாக்கள்

1. "நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து

உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்" – இக்கவிதையின் அடி "தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.

★ நீர்நிலைகளில் உள்ள நீரானது சூரியனின் கதிர்களால் ஈர்க்கப்படுகிறது. இதனையே சூரியன் தன் உதடுகளைக் குவித்து நீரை உறிஞ்சுகிறது எனப் பாடியுள்ளார் கவிஞர்.

'மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே
தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே'

என்று நாட்டுப்புறப் பாடல் என்ன கூறுகிறது?



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



★ இப்பாடலடியில், "அதிகாலையில் மூங்கில் இலையின் நுனியில் பனித்துளிகள் இருக்கின்றன. அப்பனித்துளிகள் எல்லாம் சூரியனின் கதிர்கள் வெளிப்பட்டதும் நீராவியாக மாற்றம் பெறுகிறது" என்பதையே உணர்த்துகின்றது.

★ எனவே, நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள கவிதையின் அடியானது, அந்த நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைந்துள்ளது எனலாம்.

## கூடுதல் வினாக்கள்

**2. கவிஞர் அய்யப்ப மாதவன் – குறிப்பு எழுதுக.**

**பெயர்** : அய்யப்ப மாதவன்

**ஊர்** : சிவகங்கை – நாட்டரசன் கோட்டை

**பணிகள்** : திரைத்துறை, இதழியல் துறை

**நூல்கள்** : மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி.

**3. மழையிலிருந்து விடுபடும் ஊரின் தூய்மையைக் கவிஞர் அய்யப்ப மாதவன் எக்குறியீடுகளின்மூலம் வெளிப்படுத்துகிறார்?**

➤ மழை நின்றதால், சுவர்கள்மீது வழிந்தோடிய மழைநீர் நின்றது. மீதம் இருந்த நீர்ச் சுவடுகளையும் சுவர் வேகமாகத் தன் வசப்படுத்திக் கொண்டது.

➤ ஈரமான மரங்கள் தங்கள் கிளைகளை அசைத்துத் தம்மீது படிந்திருந்ததில் மீதமிருந்த நீர்த்துளிகளை உதறின. வெயிலைக் கண்டதால், மழைநீருக்கு அஞ்சியிருந்த பறவைகள், உற்சாகம் மேலிடக் குரலெழுப்பி இசைத்தன. இவையே, ஊர் மழையிலிருந்து விடுபடுவதையும் தூய்மை பெற்றதையும் காட்டும் குறியீடுகளாக அய்யப்ப மாதவன் வெளிப்படுத்தி இருக்கிறார்.

**4. "வெயில் கண்ட பறவைகள் உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : அய்யப்ப மாதவன் எழுதிய 'பிறகொருநாள் கோடை' என்னும் கவிதையில் இவ்வடிகள் இடம்பெற்றுள்ளன.

**பொருள்** : குளிரால் நடுங்கிய பறவைகள், வெளிப்பட்ட சூரியனின் கதகதப்பான கதிர்களால் உற்சாகம் பொங்கியெழக் 'கலகல'வெனக் கூவி ஒலிக்கத் தொடங்கின.

**விளக்கம்** : சூரியன் திடீரெனத் தோன்றியதும் நீர்த்துளிகள் மறைந்தன. வானம் வெளிச்சம் பெற்றது. அதனால் சூரியனின் கதிர்கள் கண்டு மகிழ்ந்த பறவைகள், தங்கள் துயர் நீங்கியதால் உற்சாகம் மேலிட ஒலி எழுப்புகின்றன. இதையே கவிஞர், 'பறவைகள் உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன' என்கிறார்.

**5. "மேகங்களை வெறித்துக்கொண்டு அலைகிறேன்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : அய்யப்ப மாதவன் எழுதிய 'பிறகொருநாள் கோடை' என்னும் கவிதையில் இவ்வடி இடம் பெற்றுள்ளது.

**பொருள்** : முடிவுற்ற மழை மீண்டும் பெய்யுமா என வானிலுள்ள மேகங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

**விளக்கம்** : சூரியக் கதிர்களால் நகரம் பட்டை தீட்டிய வைரமானது. மரங்கள் தலையசைத்து நீர்த்துளிகளை உதறுகின்றன. பறவைகள் உற்சாகத்தில் ஒலிக்கின்றன. ஆனால், மழையின் தாக்கத்திலிருந்து மனம் விலகாத கவிஞர், மேகங்களை வெறித்துப் பார்த்தபடி போன மழை திரும்பவும் வரும் என்கிற நம்பிக்கை ஏக்கத்தில் அலைகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. "பிறகொருள் நாள் கோடை வந்துவிட்டது" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**இடம்** : அய்யப்ப மாதவன் எழுதிய 'பிறகொருநாள் கோடை' என்னும் கவிதையில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : முடிவுற்ற மழை மீண்டும் பெய்யுமா என வானிலுள்ள மேகங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், கோடைகாலம் தொடங்கிவிட்டது.

**விளக்கம்** : மழை மேகங்கள் விலகிக் கதிரவன் காட்சியளிக்க, நகரம் வைரமாய்ப் பளபளத்தது. மரங்கள் நீர்த்திவலைகளை உதிர்த்தன. பறவைகள் கீச்சிட்டன. மழை நினைவிலிருந்து ஊர் விடுபட்டாலும், சுவரில் வழிந்த நீரை மனத்தில் வழியவிட்டனர். கையில் ஏந்திய துளிகளால் நரம்புகளை வீணையாக மீட்டினர். மழை திரும்ப வரும் என வானத்தை வெறித்தனர். ஆனால், வந்ததோ கோடை!

## பலவுள் தெரிக

1. 'நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது' என்று, அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது ______. (Sep. - 20, 21,22)

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

**விடை : இ) மழைத்துளிகள்**

## கூடுதல் வினாக்கள்

2. **கூற்று 1** : வெயில் கண்ட பறவைகள் மகிழ்ச்சியால் இரை தேடின.

**கூற்று 2** : நகரம், பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது.

அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி

இ) கூற்று 1 தவறு, 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு

**விடை : இ) கூற்று 1 தவறு, 2 சரி**

3. பொருத்தமான நிறுத்தற்குறியுடைய தொடரைக் கண்டுபிடி.

அ) 'நகரம்', பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது.

ஆ) நகரம், பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது.

இ) நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது.

ஈ) "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது."

**விடை : ஆ) நகரம், பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது.**

4. **கூற்று 1** : மீதமான சொட்டுக்களை, ஈரமான மரங்கள் தலையசைத்து உதறுகின்றன.

**கூற்று 2** : வெயில் கண்ட பறவைகள் வெயில் தாங்காமல் வீழ்கின்றன.

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று இரண்டும் சரி

இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, 2 சரி

**விடை : இ) கூற்று 1 சரி, 2 தவறு**

5. தலையசைத்து உதறுகிறது மீதமான சொட்டுக்களை ______.

அ) ஆடு ஆ) மாடு இ) மரம் ஈ) குருவி

**விடை : இ) மரம்**

6. ______ கண்ட பறவைகள் உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன.

அ) வெயில் ஆ) மழை இ) குளிர் ஈ) உணவு

**விடை : அ) வெயில்**

7. ______, பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது.

அ) வீடு ஆ) காடு இ) நாடு ஈ) நகரம்

**விடை : ஈ) நகரம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இலக்கணக்குறிப்பு

**காய்கிறது, உறிஞ்சுகிறது, உதறுகிறது, தோய்கிறது** – படர்க்கை ஒன்றன்பால் நிகழ்கால வினைமுற்றுகள்.

**இசைக்கின்றன** – படர்க்கைப் பலவின்பால் நிகழ்கால வினைமுற்று.

**இருக்கிறேன், அலைகிறேன்** – தன்மை ஒருமை நிகழ்கால வினைமுற்றுகள்.

**நனைந்து, குவித்து, அசைத்து, ஏந்தி** – வினையெச்சங்கள்.

**இருந்த, தீட்டிய, அழிந்த, கண்ட, இறங்கிய, வாங்கிய, போன** – இறந்தகாலப் பெயரெச்சங்கள்.

## உறுப்பிலக்கணம்

1. **அசைத்து – அசை + த் + த் + உ**

**அசை** – பகுதி

**த்** – சந்தி

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி.

2. **உதறுகிறது – உதறு + கிறு + அ + து**

**உதறு** – பகுதி

**கிறு** – நிகழ்கால இடைநிலை

**அ** – சாரியை

**து** – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

3. **இசைக்கின்றன – இசை + க் + கின்று + அன் + அ**

**இசை** – பகுதி

**க்** – சந்தி

**கின்று** – நிகழ்கால இடைநிலை

**அன்** – சாரியை

**அ** – பலவின்பால் வினைமுற்று விகுதி.

4. **இறங்கிய – இறங்கு + இ (ன்) + ய் + அ**

**இறங்கு** – பகுதி

**இ (ன்)** – இறந்தகால இடைநிலை, ‘ன்’ புணர்ந்து கெட்டது விகாரம்

**ய்** – (உடம்படுமெய்) சந்தி

**அ** – பெயரெச்ச விகுதி.

5. **அலைகிறேன் – அலை + கிறு + ஏன்**

**அலை** – பகுதி

**கிறு** – நிகழ்கால இடைநிலை

**ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

1. **தலையசைத்து – தலை + அசைத்து**

“இ, ஈ, ஐ வழி யவ்வும்” – தலைய் + அசைத்து

“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” – தலையசைத்து.

2. **வீட்டுச்சுவர் – வீடு + சுவர்**

“நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் டறஒற்று இரட்டும்” – வீட்டு + சுவர்

“வன்றொடர்க் குற்றிய லுகரத்தின்முன் வலிமிகும்” – வீட்டுச் + சுவர் – வீட்டுச்சுவர்.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# கவிதைப்பேழை

# 3. நெடுநல்வாடை

(நக்கீரர்)

## குறுவினா

1. **'இனநிரை' – பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.**

இனநிரை – இனம் + நிரை

★ 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்றிலுள்ள மகர ஒற்று (ம்) அழிந்து, 'இனநிரை' எனப் புணர்ந்தது.

### கூடுதல் வினாக்கள்

2. **'கூதிர்ப்பாசறை' என்றால் என்ன?** (PTA - 1, 3)

➤ கூதிர்ப்பாசறை என்பது வாகைத் திணையின் உட்பிரிவாகும்.

➤ கூதிர்ப்பாசறை என்பது போர்மேற் சென்ற அரசன், குளிர்காலத்தில் தங்கும் படைவீடாகும்.

3. **வாகைத்திணை – விளக்குக.** (PTA - 1, 3)

➤ வெற்றிபெற்ற அரசனும் அவனுடைய வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடித் தாங்கள் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணையாகும்.

4. **'நெடுநல்வாடை' – பெயர்க்காரணம் தருக.** (Mar.-24)

நெடுநல்வாடை – நெடுமை + நன்மை + வாடை.

➤ போருக்குச் சென்றிருக்கும் தலைவனைப் பிரிந்து உள்ள தலைவிக்கு, வாடைக்காற்று துன்ப மிகுதியைக் கொடுத்ததால் 'நெடுவாடை'யாக இருந்தது. போர்ப்பாசறையில் இருந்த தலைவனுக்கு, வெற்றிபெற ஏதுவான வாடையாக இருந்ததால் 'நல்வாடை'யாக இருந்தது.

➤ எனவே, 'நெடுநல்வாடை' ஆயிற்று.

5. **புதிய மழை பொழிந்ததன் காரணமாய்க் கோவலர்கள் செய்த செயல் யாது?**

➤ உலகம் குளிருமாறு புதியமழை பொழிந்ததன் காரணமாகக் கோவலர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேயவிட்டனர்.

6. **"கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க" – இவ்வடியின் பதவுரையை எழுதுக.**

➤ "பலரும் கூடிக் கையை நெருப்பிலே காய்ச்சி, அக்கையிடத்தினில் கொண்ட வெம்மையைக் கன்னத்திலே சேர்த்தனர்; பல் பறை கொட்ட நடுங்கினர்" என்பது இவ்வடியின் பொருள்.

## சிறுவினா

1. **வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?** (July-20,23, Mar.-23)

★ தாழ்வான பகுதிகளில் பெருகிய மழைவெள்ளத்தை வெறுத்த கோவலர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை, வேறு **மேடான நிலங்களில்** மேயவிட்டனர்.

★ உடலில் பட்ட குளிரைப்போக்கக் கோவலர் பலர் கைகளுக்குக் கொள்ளி **நெருப்பினால்** சூடேற்றினர். சூடேறிய கைகளில் உள்ள அந்த வெம்மையை **கன்னத்தில்** வைத்துக் கொண்டனர்.

★ இவ்வாறாகக் கோவலர்கள் வாடைக் காலத்தில், பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர்.

### கூடுதல் வினாக்கள்

2. **குளிர்காலத்தில் பறவைகளும் விலங்குகளும் எவ்வாறு நடுங்கியதாக நெடுநல்வாடை கூறுகிறது?** (Mar.-20, PTA - 6)

➤ மிகுந்த குளிரால் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன.

➤ பெண் குரங்குகளின் உடல்கள், குளிரால் நடுங்கிக் கூனிப் போயின.

➤ பறவைகள், குளிரால் மரத்தின் மீதிருந்து கீழே விழுந்தன.

➤ கன்றுகளுக்குப் பால் கொடுக்கும் பசுக்கள், கன்றுகளைத் தவிர்த்தன.

➤ குன்றையே குளிர்விப்பதுபோலக் குளிர்க்காலத்து நள்ளிரவு இருந்தது.

➤ இதுவே, குளிர்க்காலத்தின் தன்மையால் நிகழ்ந்தனவாக, நெடுநல்வாடை கூறுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3. வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.** (Mar.-24)

- போர்க்களத்தில் எதிர்நின்ற பகைவரை வென்று அழித்துப் பெற்ற வெற்றியை அரசனும் அவன் வீரர்களும் அவ்வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியை விழாவாகக் கொண்டாடுவர். இதனை '**வாகைத் திணை**' எனக் கூறுவர்.
- பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய **"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ"** எனத் தொடங்கும் 'நெடுநல்வாடை' வாகைத் திணைக்குச் சிறந்த சான்றாகும்.
- பத்துப்பாட்டுள் நெடுநல்வாடை என்பது, தலைவனைப் பிரிந்த தலைவிக்குப் பிரிவுத் துன்ப மிகுதியால் 'நெடுவாடை'யாகவும், போர்ப் பாசறையில் தங்கி இருந்த தலைவனுக்கு (நெடுஞ்செழியனுக்கு) வெற்றி பெறுவதற்கு ஏதுவான 'நல்வாடை'யாகவும் இருந்தமையை விளக்குவதாகும். இது பாண்டியன் நெடுஞ்செழியனின் வெற்றி குறித்துப் பேசுவதனால் வாகைத் திணைக்குச் சிறந்த சான்றாகும்.

**4. கூதிர்ப்பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக.**

**துறை** : கூதிர்ப்பாசறை

**துறை விளக்கம்** : போர்மேற் சென்ற அரசன், குளிர்காலத்தில் தங்கும் படைவீடு.

**சான்று** : "வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென" எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடல்.

**சான்று விளக்கம்** : மேகமானது புதுமழையைப் பொழிந்தது. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்ததால், ஆயர் விலங்குகளை மேடான நிலத்தில் மேயவிட்டனர். குளிர் காய்வதற்காகக் கொள்ளி நெருப்பின் அருகில் அமர்ந்து வெப்பம் பெற்றனர். விலங்குகள் மேய்ச்சலை மறந்தன; குரங்குகள் நடுங்கின; பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன; பசுக்கள் கன்றுகளைத் தவிர்த்தன.

**துறைப் பொருத்தம்** : வாடைக்காலத்தில் மேகங்கள் மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழையைப் பொழிந்தது. வாடைக்காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்றப் பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். இவ்வாறாக மலையையே குளிரச் செய்வது போன்றிருந்த குளிர்காலத்தில் போர்மேற் சென்ற அரசன் தங்கும் படைவீடுதான் கூதிர்ப்பாசறை.

**5. 'நெடுநல்வாடை' – குறிப்புத் தருக.**

- நெடுநல்வாடை, சங்க இலக்கியம் சார்ந்த 'பத்துப்பாட்டு' நூல்களுள் ஒன்று. இப்பாடலின் பாட்டுடைத் தலைவன், பாண்டியன் நெடுஞ்செழியன். இப்பாடலை இயற்றியவர், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்.
- நெடுநல்வாடை 188 அடிகளையுடையது. இப்பாடல் 'நெடுவாடை' எனவும், 'நல்வாடை' எனவும் அமைத்துப் பொருள் கொள்வர். இப்பாடலில் வரும் தலைவி, தன் தலைவனைப் பிரிந்து மிகுதியாகத் துன்புற்றதனால், 'நீண்டவாடை' (நெடுவாடை) ஆயிற்று.
- தலைவியைப் பிரிந்து போர்ப்பாசறையில் தங்கியிருந்த தலைவனுக்கு வெற்றிபெற ஏதுவாக இருந்ததால், 'நல்வாடை' ஆயிற்று. எனவே, இந்நூலுக்கு 'நெடுநல்வாடை' என்ற பெயர் அமைந்தது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நெடுவினா

1. **நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.** (PTA -2,5)

**முன்னுரை :**

நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் கூதிர்க்காலத்து மழைப் பின்னணியையும், முல்லைநில மக்கள், பறவைகள், விலங்குகள் ஆகியன குளிரால் அடைந்த துன்பத்தையும் குறித்து இக்கட்டுரையில் ஆராய்வோம்.

**புதுமழை :**

தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது, உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலை உடைய ஆயர், எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேயவிட்டனர். தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையைக் கண்டு ஆயர்கள் வருத்தம் அடைந்தனர்.

**விலங்குகளின் துன்பம் :**

பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடு ஏற்றிய போதிலும், அவர்களின் பற்கள் குளிரால் நடுங்கின. விலங்குகள், குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் குளிரால் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள், நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. மலையையே குளிரச் செய்வது போலிருந்தது அக்குளிர்கால இரவு.

**முடிவுரை :**

ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் குளிர்காலம் என்று அழைத்தனர். முல்லைநில மக்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் வாழ்வில் மழையும் குளிரும் உண்டாக்கிய மாற்றங்களை, இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொண்டோம்.

## பலவுள் தெரிக

1. பொருத்துக. (Mar.-24)

அ. குரங்குகள் – 1. கன்றுகளைத் தவிர்த்தன

ஆ. விலங்குகள் – 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ. பறவைகள் – 3. குளிரால் நடுங்கின

ஈ. பசுக்கள் – 4. மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

**விடை : ஆ) 3, 4, 2, 1**

2. **பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென – தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு _______. (Mar.-20, July - 20,23)

அ) வினைத்தொகை. ஆ) உரிச்சொல் தொடர்.

இ) இடைச்சொடல் தொடர். ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**விடை : ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.**

## கூடுதல் வினாக்கள்

3. பொருத்துக. (Mar.-24)

அ. குரங்குகள் – 1) கன்றுகளைத் தவிர்த்தன

ஆ. விலங்குகள் – 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ. பறவைகள் – 3) குளிரால் நடுங்கின

ஈ. பசுக்கள் – 4) மேய்ச்சலை மறந்தன

அ) (1) - (iii), (2) - (ii), (3) - (i), (4) - (iv) ஆ) (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)

இ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv) ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

**விடை : ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. பழந்தமிழர், ஓராண்டை ______ பருவங்களாக வகைப்படுத்தினர். (PTA - 2)
அ) பன்னிரண்டு ஆ) மூன்று இ) ஆறு ஈ) நான்கு
விடை : இ) ஆறு

5. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று ______. (PTA - 4)
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நெடுநல்வாடை ஈ) நற்றிணை
விடை : இ) நெடுநல்வாடை

6. நெடுநல்வாடை, ______ அடிகளைக் கொண்டது. (PTA - 2)
அ) 202 ஆ) 185 இ) 188 ஈ) 306
விடை : இ) 188

7. 'ஐப்பசி அடைமழை! கார்த்திகை கனமழை!' என்பது ______
அ) சொலவடை ஆ) விடுகதை இ) முதுமொழி ஈ) பழமொழி
விடை : அ) சொலவடை

8. ஐப்பசி கார்த்திகை மாதங்களை ______ என்றழைத்தனர்.
அ) கூதிர்ப்பருவம் ஆ) இளவேனிற் பருவம்
இ) முதுவேனிற் பருவம் ஈ) குளிர் பருவம்
விடை : அ) கூதிர்ப்பருவம்

9. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் ______.
அ) குலோத்துங்கன் ஆ) கரிகாலன்
இ) விக்கிரமாதித்தன் ஈ) பாண்டியன் நெடுஞ்செழியன்
விடை : ஈ) பாண்டியன் நெடுஞ்செழியன்

10. நெடுநல்வாடை, ______ இயற்றப்பட்டது.
அ) வெண்பாவால் ஆ) ஆசிரியப்பாவால் இ) கலிப்பாவால் ஈ) வஞ்சிப்பாவால்
விடை : ஆ) ஆசிரியப்பாவால்

11. புதுப்பெயல் என்பதன் பொருள் ______.
அ) அடைமழை ஆ) கனமழை இ) புதுமழை ஈ) குளிர்மழை
விடை : இ) புதுமழை

12. 'கண்ணி' என்பதன் பொருள் ______.
அ) தலையில் சூடும் மாலை ஆ) கழுத்தில் அணியும் மாலை
இ) தார் மாலை ஈ) மாலை
விடை : அ) தலையில் சூடும் மாலை

13. 'வளைஇ' என்பதன் இலக்கணக்குறிப்பு ______.
அ) செய்யுளிசை அளபெடை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம்
இ) சொல்லிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை
விடை : இ) சொல்லிசை அளபெடை

14. 'கொடுங்கோல்' என்பதன் இலக்கணக்குறிப்பு ______.
அ) உம்மைத்தொகை ஆ) வினைத்தொகை இ) வினையெச்சம் ஈ) பண்புத்தொகை
விடை : ஈ) பண்புத்தொகை

15. 'புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்' – தம் நிலத்தை விட்டுப் பெயரும் நிலையில் வருத்தம் அடைந்தவர்கள் ______.
அ) பசுக்கள் ஆ) ஆயர்கள் இ) குரங்குகள் ஈ) பறவைகள்
விடை : ஆ) ஆயர்கள்

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

16. 'ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்' – இவ்வடியில் பண்புத்தொகை இடம்பெற்றுள்ள சொல் ______.

அ) ஆர்கலி ஆ) முனைஇய இ) கொடுங்கோல் ஈ) கோவலர்

**விடை : இ) கொடுங்கோல்**

17. போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடு ______.

அ) போர்ப்பாசறை ஆ) கூதிர்ப்பாசறை இ) முன்பனிப் பாசறை ஈ) வாகைப் பாசறை

**விடை : ஆ) கூதிர்ப்பாசறை**

18. வெற்றிபெற்ற அரசனும் அவனுடைய வீரர்களும் வெற்றியைக் கொண்டாடுவது ______.

அ) வாகை ஆ) பொதுவியல் இ) பாடாண் ஈ) பெருந்திணை

**விடை : அ) வாகை**

19. ஆயர்கள் தலையில் அணிந்திருந்த மாலை, ______.

அ) குறிஞ்சி மாலை ஆ) காந்தள் மாலை இ) தும்பை மாலை ஈ) காஞ்சி மாலை

**விடை : ஆ) காந்தள் மாலை**

20. 'கொடுங்கோல்' என்ற சொல் உணர்த்தும் பொருள் ______.

அ) கொடுமையான கொம்பு ஆ) நீளமான கோல்

இ) ஆயர்களின் கையில் இருக்கும் கோல் ஈ) வளைந்த கோல்

**விடை : ஈ) வளைந்த கோல்**

21. **கூற்று 1** : கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர்.

**கூற்று 2** : மேகம் வலப்பக்கமாகச் சூழ்ந்து புதிய மழையைப் பொழிந்தது.

அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, 2 சரி

இ) இரண்டும் தவறு ஈ) இரண்டும் சரி

**விடை : ஈ) இரண்டும் சரி**

22. **கூற்று 1** : வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளைத் தாழ்வான பகுதியிலேயே விட்டுவிட்டனர்.

**கூற்று 2** : உலகமே குளிரும்படி பெய்த மழையால், தாழ்வான பகுதியில் வெள்ளம் பெருகியது.

அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, 2 சரி

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

**விடை : ஆ) கூற்று 1 தவறு, 2 சரி**

23. சரியானதைத் தேர்வு செய்.

அ) புதுப்பெயல் – வினைத்தொகை ஆ) கொடுங்கோல் – பண்புத்தொகை

இ) பொய்யா – பெயரெச்சம் ஈ) வளைஇ – இன்னிசை அளபெடை

**விடை : ஆ) கொடுங்கோல் – பண்புத்தொகை**

24. சரியான நிறுத்தற்குறி உடைய தொடரைத் தெரிவு செய்.

அ) நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்றவர் நக்கீரர்!

ஆ) "நெற்றிக்கண் திறப்பினும், குற்றம் குற்றமே" என்றவர் நக்கீரர்.

இ) 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்றவர் நக்கீரர்.

ஈ) நெற்றிக்கண் திறப்பினும், குற்றம் குற்றமே! என்றவர் நக்கீரர்.

**விடை : இ) 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்றவர் நக்கீரர்.**

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



25. **கூற்று 1** : அரசனும் போர்வீரர்களும் வெற்றிக்கு அடையாளமாய் வாகைப்பூவைச் சூடி, வெற்றியைக் கொண்டாடுவது காஞ்சித் திணையாகும்.

**கூற்று 2** : போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீட்டைக் கூதிர்ப்பாசறை என்பர்.

அ) கூற்று 1, 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி

இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, 2 சரி

**விடை : ஈ) கூற்று 1 தவறு, 2 சரி**

26. 'மாமேயல் மறப்ப மந்தி கூரப் பறவை படிவன வீழ கறவை' – இவ்வடியில் 'மந்தி' என்ற சொல்லின் பொருள் ______.

அ) பெண்குரங்கு ஆ) ஆண்குரங்கு இ) நாய் ஈ) பறவை

**விடை : அ) பெண்குரங்கு**

## இலக்கணக்குறிப்பு

**வளைஇ, முனைஇய** – சொல்லிசை அளபெடைகள்.

**புடையூஉ** – இன்னிசையளபெடை.

**பொய்யா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**பனிப்ப, பரப்பி, கலங்கி, நலிய, மறப்ப, வீழ** – வினையெச்சங்கள்.

**புதுப்பெயல், கொடுங்கோல், பெரும்பனி** – பண்புத்தொகைகள்.

## உறுப்பிலக்கணம்

1. **கலங்கி – கலங்கு + இ**

**கலங்கு** – பகுதி

**இ** – வினையெச்ச விகுதி.

2. **படிவன – படி + வ் + அன் + அ**

**படி** – பகுதி

**வ்** – எதிர்கால இடைநிலை

**அன்** – சாரியை

**அ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **இனநிரை – இனம் + நிரை**

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்' – இனநிரை.

2. **புதுப்பெயல் – புதுமை + பெயல்**

'ஈறுபோதல்' – புது + பெயல்

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' – புதுப்பெயல்.

3. **பெரும்பனி – பெருமை + பனி**

'ஈறுபோதல்' – பெரு + பனி

'இனமிகல்' – பெரும் + பனி – பெரும்பனி.

4. **கொடுங்கோல் – கொடுமை + கோல்**

'ஈறுபோதல்' – கொடு + கோல்

'இனமிகல்' – கொடுங் + கோல் – கொடுங்கோல்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### கற்பவை கற்றபின்

**தற்கால வாழ்க்கைமுறையில் மழை, குளிர் காலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**லதா** : திடீரெனத் தொடர்ந்து மழை பொழிவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் படுகிறது.

**வாசுகி** : ஆமாம் லதா! மாணவர்கள் மழையில் நனைந்தபடியே பள்ளிக்குச் செல்கின்றனர்.

**ஆனந்த்** : அளவுக்கு அதிகமாக, எதிர்பாராத அளவுக்கு மழை பொழிவதால், மக்கள் வெளியே வர முடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர்.

**பைரவன்** : சாலைகளில் மழைநீர் குளம்போல் தேங்கி நிற்பதால், வாகன ஓட்டிகள் வாகனங்களை ஓட்ட முடியாமல் சிரமப்படுகின்றனர்.

**வாசுகி** : பல இடங்களில் பேருந்துக்காகக் காத்திருக்கும் பயணிகள், நிழற்குடை இல்லாததால் மழையில் நனைந்தபடி காத்திருக்கின்றனர்.

**ஆனந்த்** : மழையின் காரணமாகக் கடும் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, காலரா, டைபாய்டு போன்ற நோய்கள், மக்களைத் துன்பத்திற்கு உள்ளாக்குகின்றன.

**பைரவன்** : நடைபாதையில் வியாபாரம் செய்யும் சிறுவியாபாரிகள், மழையின் காரணமாக மிகவும் அல்லல் படுகிறார்கள்.

**லதா** : வீதிகளில் காய்கறி விற்கும் வியாபாரிகளும், மழையால் தங்கள் வருமானத்தை இழக்கின்றனர்.

**வாசுகி** : எப்பொழுதும் இல்லாத அளவுக்குத் தற்போது கடும்குளிர் நிலவுகிறது. இதனால், சாலையோரத்தில் வாழும் ஏழைகள், மிகுந்த துன்பப்படுகிறார்கள்.

**ஆனந்த்** : ஆமாம் வாசுகி. கடும் குளிரால் இரயில் மற்றும் விமானச் சேவைகளும் பாதிப்படைகின்றன. பயணிகள் சிரமப்படுகிறார்கள்.

**பைரவன்** : குளிர்காலத்தில் பால், கேஸ் சிலிண்டர் போன்ற அத்தியாவசியப் பொருள்களும் உடனே கிடைப்பதில்லை.

**லதா** : கடும்குளிரால் ஆஸ்த்துமா நோயாளிகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது.

**வாசுகி** : மனிதர்கள் மட்டுமல்லர்; பறவைகள், விலங்குகள்கூட மழை மற்றும் குளிரால் பாதிப்படை கின்றன.

# துணைப்பாடம்

# முதல்கல்

(உத்தமச்சோழன்)

## நெடுவினா

1. **பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.** (PTA - 1, 4, 6, July-23, Mar.-24)

**முன்னுரை :**

நமக்குப் பாடமாக அமைந்துள்ளது உத்தமசோழன் எழுதிய ‘முதல்கல்’ சிறுகதை. இக்கதையின் வாயிலாகப் பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்ச்சியால் மாற்றிய மருதனின் பண்புநலத்தைக் குறித்து நாம் ஆராய்வோம்.

**வெள்ளம் சூழ்ந்த பசும்பயிர் வயல்வெளி :**

வளவனாற்றின் வடகரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை, **பச்சைப் பசேல்** என்று விரிந்து கிடந்தது **வயல்வெளி.** அடர்ப் பச்சையில் தீவுபோல ஊர்க்குடியிருப்பும், மரங்களுக்கிடையில் வயல்வெளி எங்கும் நடவு முடிந்து ஒரு வாரம் பத்து நாளான பச்சை பிடிக்கத் தொடங்கியிருந்த **இளம்பயிரும்,** வெளிர் பச்சையில்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இப்போதோ சற்றுப் பொறுத்தோ நீருக்குள் மூழ்கிவிடும் ஆபத்தில் இருந்தது. '**சக்கரக்குழி**' அளவுகூட நிலம் இல்லாத மருதன் அந்தப் **பயிரைக் காப்பாற்றத்** திட்டமிடுவதும் **ஊரையே திரளச்** செய்வதும் இக்கதையின் உன்னத உச்சமாகும்.

**பயிர்காக்க யோசனை :**

வயல்வெளி வெள்ளக்காடானது மட்டுமன்றி, "வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மேலும் வலுவடைந்து மேற்கு வடமேற்காக நகரக்கூடும். இதன் விளைவாக அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு நாகப்பட்டினம், கடலூர் உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் பலத்தமழை பெய்யக்கூடும்" என்பது போன்ற செய்திகளைக் கேட்ட மருதன், "எந்த மழையின் உதவியில் நட்டார்களோ, அதே மழையின் '**அபரிமித அன்பினால்**' இப்போது பயிர் தெப்பலாடுகிறது. ஒருநாள் நீரில் மூழ்கினால் போதும், முழுவதும் அழுகிவிடும். மறுபடி புதிதாக நாற்றுவிட்டுப் புதிய சாகுபடிதான். அதற்கு யாரால் முடியும்**?** என்ன செய்யலாம்**?**" என்று, முணுமுணுத்த மருதனுக்குள் ஆயிரம் யோசனைகள்.

**வழி தெரிந்தது மருதனுக்கு :**

ஊரைச் சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்று மைல் நீள வடிவாய்க்கால். அது முழுவதுமே, சுவர் வைத்துத் தடுத்ததைப் போல் காடாய் மண்டிக் கிடக்கும் **காட்டாமணக்குச் செடிகள்.** அந்தச் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் போதும் ஒரே நாளில் **உபரிநீர் முழுவதும்** வடிந்துவிடுமே! பயிர்கள் வெள்ளநீரில் மூழ்காமல் மொத்தக் கிராமமும் தப்பித்துக்கொள்ள, வழி கண்டுபிடித்துவிட்ட மகிழ்ச்சியில் மருதன் பரவசமானான்.

**ஊரும் உதவிக்கு வந்தது :**

தன்னம்பிக்கையோடு, வடிவாய்க்காலின் ஜில்லென்ற இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியனாய் நின்றபடி, மண்டிக் கிடந்த காட்டாமணக்குச் செடிகளைப் பிய்த்து எறிந்து கொண்டிருந்தான் மருதன். மருதனுக்கு அவன் மனைவி உதவக் கைநீட்டினாள். பின்னர், ஊரே திரண்டு வந்து காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்தது. வேலை இருக்கிறது என ஒதுங்கியவர்கள்கூட, மருதனுக்கு உதவி செய்ய முன்வந்தனர். **ஊரே ஒன்றிணைந்ததால்,** வெள்ளம் குறைந்து காணாமல் போனது; பயிர்கள் பிழைத்தன.

**முடிவுரை :**

ஊரில் எவருக்கும் இல்லாத அக்கறை மருதனுக்கு இருந்ததைப் பார்க்கும்போது, பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊர்மக்களைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய **மருதனின் பண்புநலம்** தெளிவாகத் தெரிகிறது. **ஊர்கூடித் தேர் இழுத்தால்,** தானாக அது சேர வேண்டிய இடத்தில் வந்து நிற்கும் அல்லவா!

## கூடுதல் பலவுள் தெரிக

1. 'முதல்கல்' சிறுகதை உணர்த்தும் கருத்து, ______. **(Sep.-20)**

அ) ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

ஆ) தனிமரம் தோப்பாகாது

இ) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் ஈ) மாற்றம் ஒன்றே மாறாதது

**விடை : ஆ) தனிமரம் தோப்பாகாது**

2. 'முதல்கல்' சிறுகதையின் ஆசிரியர் ______. **(PTA -2,6, Mar. - 20)**

அ) புதுமைப்பித்தன் ஆ) உத்தமசோழன் இ) ஜானகிராமன் ஈ) சுஜாதா

**விடை : ஆ) உத்தமசோழன்**

3. 'தஞ்சைச் சிறுகதைகள்' என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது ______.

அ) மனிதத்தீவுகள் ஆ) முதல்கல்

இ) கனல் பூக்கள் ஈ) தொலைதூர வெளிச்சம்

**விடை : ஆ) முதல்கல்**

4. மனிதத் தீவுகள், குருவி மறந்த வீடு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளின் ஆசிரியர் ______.

அ) சோலை சுந்தரப் பெருமாள் ஆ) உத்தமசோழன்

இ) மேலாண்மை பொன்னுசாமி ஈ) ஜெயகாந்தன்

**விடை : ஆ) உத்தமசோழன்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. ஒரு வேலி என்பது ______ ஏக்கர் நிலம்.

அ) 6.17 ஏக்கர் ஆ) 6.71 ஏக்கர் இ) 6.01 ஏக்கர் ஈ) 6.08 ஏக்கர்

**விடை : அ) 6.17 ஏக்கர்**

6. உத்தமசோழனின் புதினம் ______ ஆகும்.

அ) கசக்கும் இனிமை ஆ) கிழக்கு வாசல் உதயம்

இ) குருவி மறந்த வீடு ஈ) மனிதத் தீவுகள்

**விடை : அ) கசக்கும் இனிமை**

7. ‘தொலைதூர வெளிச்சம்’ என்ற புதினத்தின் ஆசிரியர் ______.

அ) வண்ணதாசன் ஆ) புதுமைப்பித்தன் இ) டாக்டர் மு. வ. ஈ) உத்தமசோழன்

**விடை : ஈ) உத்தமசோழன்**

## கற்பவை கற்றபின்

**உங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமண விழாவுக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு, மரக்கன்று ஒன்று தருவதாக முடிவு செய்துள்ளீர்கள். மரக்கன்று வழங்கும் நோக்கங்களையும், அதனைப் பயிரிடுவதால் ஏற்படும் பொது நன்மைகளையும் கொண்ட இருபக்கச் சிற்றேட்டை உருவாக்குக.**

**மரக்கன்று வழங்குவதற்கான நோக்கங்கள் :**

மாறிவரும் தட்பவெப்பச் சூழ்நிலையில், இயற்கைச் சமநிலை சீர்குலைவதைத் தடுக்க வேண்டும். பருவநிலை மாற்றத்தின் விளைவுகளை அறிய வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மரங்களே முதலிடம் வகிக்கின்றன என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நகரமயமாக்குதல், சாலை விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், நாள்தோறும் மரங்கள் வெட்டி அழிக்கப்படுகின்றன. அவற்றை ஈடுகட்டும் நோக்கில் வனத்துறை, வேளாண்துறை, தனியார் நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் என, அனைத்துத் தரப்பினரும் சமூகக் காடுகளை மரக்கன்றுகள் நடுவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். இதற்கான விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்க வேண்டும்.

இதற்கான பணியில் ஈடுபடும்போது முதலில் மண்ணுக்கேற்ற மரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும், அவற்றை வளர்க்கும் முறை பற்றிய கையேடு ஒன்றையும் வழங்க வேண்டும். நன்றாகப் பராமரித்தால் விரைவில் பயன் தரும். மரக்கன்றுகளை நல்ல முறையில் வளர்த்துத் தமிழகத்தைப் பசுஞ்சோலை ஆக்குவதே, இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**பொது நன்மை :**

பூமியில் மூன்றில் ஒருபங்கு காடுகள் இருக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. காடுகள் மழையைத் தருவதுடன், நிலச்சரிவையும் கட்டுப்படுத்துகிறது; வேர்கள்மூலம் நிலத்தடி நீரைச் சேமிக்கிறது; மண்ணரிப்பைத் தடுக்கிறது; பகலில் கரியமில வாயுவை உட்கொண்டு, உயிர்வளியை வெளியிடும் தன்மை மரங்களுக்கு உள்ளது.

காடுகள் அழிக்கப்படுவதால், புவி வெப்பம் அதிகரித்துச் சில பகுதிகளில் அதிக மழை பொழிகிறது. கடலோரப் பகுதிகளில் மரங்கள் வளர்க்கப்படும்போது கடல் சீற்றத்தால் உருவாகும் ஆழிப்பேரலைகளைக் கட்டுப்படுத்தும் சக்தி, மரங்களுக்கு உண்டாகிறது. புவியைக் காத்தால்தான் உயிரினங்களைக் காக்கமுடியும்.

முறையாக நடப்பட்டு வளர்ந்த மரம், அதன் சுற்றுப்புறத்தில் ஏற்படும் 40% ஒலிமாசைக் குறைக்கின்றது. நன்மைகள் பல தந்து நம்மைக் காக்கும் மரங்களை வளர்ப்பதால், புவி அதிக மழையைப் பெற முடியும்.

கரியமில வாயுவை உறிஞ்சும் தன்மை மரங்களுக்கும், காடுகளுக்கும் மட்டுமே உண்டு. அதனால் மரம் வளர்ப்போம். மரம் செழித்து, பூமியிலுள்ள உயிரினங்கள் மகிழக் கைகோப்போம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## இனிக்கும் இலக்கணம்

# 5. நால்வகைப் பொருத்தங்கள்

### இலக்கணத் தேர்ச்சி கொள்

1. தமிழில் திணைப்பாகுபாடு, ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது. (PTA - 4, May-22, Sep.-21)

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

**விடை : அ) பொருட்குறிப்பு**

2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ______.

அ) நன்னூல் ஆ) அகத்தியம்
இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

**விடை : இ) தொல்காப்பியம்**

3. 'யார்?', 'எது' ஆகிய வினாச்சொற்கள், பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ______. (Sep.-22)

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத் திணை, அஃறிணை ஈ) விரவுத் திணை, உயர்திணை

**விடை : ஆ) உயர்திணை, அஃறிணை**

4. பொருத்தி விடை தேர்க.

| | | |
|---|---|---|
| அ. அவன் அவள் அவர் | – | 1. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை |
| ஆ. நாங்கள் முயற்சி செய்வோம் | – | 2. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை |
| இ. நாம் முயற்சி செய்வோம் | – | 3. தன்மைப் பன்மைப் பெயர்கள் |
| ஈ. நாங்கள், நாம் | – | 4. பதிலிடு பெயர்கள் |

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

**விடை : அ) 4, 1, 2, 3**

**5. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?**

★ திணை, பால், எண், இடம் ஆகியன, மொழியின் அடிப்படைப் பண்புகள்.
★ இவை, சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவும்.

**6. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.** (Sep.-22)

★ இரண்டு மனிதர்கள், மாணவர்கள் வந்தனர்.

### கூடுதல் குறுவினாக்கள்

**1. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை – விளக்குக.** (Sep.-20)

➤ பேசுபவர், முன்னிலையில் உள்ளவரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு, இருவரையும் உள்ளடக்கியதாகப் பேசுவது உளப்பாட்டுத் தன்மை எனப்படும்.

**எ – கா :** நாம் முயற்சி செய்வோம்.

**2. தமிழ்மொழியில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் எவற்றை உணர்த்துகின்றன?**

➤ தமிழ்மொழியில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. **பயனிலை விகுதிகளில் எவையெல்லாம் பால் பகுப்பைக் காட்டுகின்றன?**
   - பயனிலை விகுதிகளில் ஆன், ஆள், ஆர், அது, அன் ஆகியவை, பால் பகுப்பைக் காட்டுகின்றன.
4. **இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்களின் வினைமுடிவு, இருதிணை பெற்று வருவதற்குச் சான்று தருக.**
   1. குழந்தை சிரித்தான்; குழந்தை சிரித்தது.
   2. கதிரவன் உதித்தான்; கதிரவன் உதித்தது.
5. **பால்காட்டும் விகுதிகள் இன்றியும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் தத்தம் பால் உணர்த்துவதற்கான சான்று தருக.**
   - அப்பா, அண்ணன், தம்பி, தந்தை – ஆண்பால் பெயர்ச்சொற்கள்
   - அம்மா, அக்கா, தாய், தங்கை – பெண்பால் பெயர்ச்சொற்கள்
6. **தமிழில் திணைப் பாகுபாடு எதனை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது?**
   - தமிழில் பொருட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு, இருதிணைப் பாகுபாடு அமைக்கப் பட்டுள்ளது.
7. **வினைச்சொற்களைப் பயனிலையாக அமைத்துத் திணை வேறுபாடு எவ்வாறு அறியப்படுகிறது?**
   - ‘அங்கே நடப்பது யார்?’, ‘அங்கே நடப்பது எது?’ இவற்றில் பொருட்குறிப்பின் அடிப்படையில் ‘யார்’ என்ற பயனிலை உயர்திணையையும், ‘எது’ என்ற பயனிலை அஃறிணையையும் உணர்த்துகின்றன.
8. **படர்க்கை இடத்தில் வரும் பால் பகுப்பைக் காட்டும் பயனிலை விகுதிகள் யாவை?**
   - ஆன், ஆள், ஆர், அ, து, அன் முதலியவை, படர்க்கை இடத்தில் வரும் பால் பகுப்பைக் காட்டும் பயனிலை விகுதிகள் ஆகும்.
9. **‘ஒவ்வொரு’ என்ற சொல்லை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் – சான்று தந்து விளக்குக.**
   - ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.
   - ஒவ்வொரு பள்ளியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.
   - இவ்வாறு ‘ஒவ்வொரு’ என்ற சொல்லை ஒருமையை மட்டுமே காட்டுகிற வகையில் பேசவும் எழுதவும் பயன்படுத்த வேண்டும்.
10. **தன்மைப் பெயர் என்றால் என்ன?**
    - பேசுபவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் குறிக்கும் பெயர் தன்மைப்பெயர் எனப்படும்.

    எ – கா : நான், யான் – தன்மை ஒருமைப்பெயர்கள்

    நாம், நாங்கள், யாம், யாங்கள் – தன்மைப் பன்மைப்பெயர்கள்.
11. **தன்மைப் பன்மை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
    - தன்மைப் பன்மை இரண்டு வகைப்படும்.
    - **அவை** : உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை.
12. **உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என்றால் என்ன? சான்று தருக.**
    - பேசுபவர், முன்னிலையாரைத் தவிர்த்துவிட்டுத் தன்மைப் பன்மையில் பேசுவது, உளப்படுத்தாத தன்மைப் பன்மை எனப்படும்.

    எ – கா : நாங்கள் முயற்சி செய்வோம்.
13. **பதிலிடு பெயர்கள் அல்லது மாற்றுப் பெயர்கள் என்றால் என்ன?**
    - ஒரு பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக – மாற்றாகப் பயன்படும் பெயர், பதிலிடு பெயர் (அ) மாற்றுப் பெயர் எனப்படும்.

    எ – கா : கலையரசன் இங்கு வந்தான். அவன் தன் வீட்டிற்குச் சென்றான்.
    - இதில் ‘அவன்’ என்பது, கலையரசனுக்குப் பதிலிடு பெயராக வந்த பெயர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**14. மொழியின் அடிப்படைப் பண்புகள் யாவை? அவை எவ்வாறு பயன்படுகின்றன?**

- மொழியின் அடிப்படைப் பண்புகள் திணை, பால், எண், இடம் ஆகும்.
- இவை, சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுகின்றன.

**15. இன்று வினைச்சொற்களைப் பயனிலைகளாய் அமைத்து, பொருட்குறிப்பு அடிப்படையில் திணை வேறுபாடு அறிய முடிகிறது. – சான்று தந்து விளக்குக.**

**சான்று :** அங்கே நிற்பது யார்? அங்கே நிற்பது எது?

- "அங்கே நிற்பது யார்?" சொற்றொடரிலுள்ள 'யார்' என்னும் பயனிலைமூலம், 'நிற்பது' என்பது உயர்திணை என அறிகிறோம்.
- "அங்கே நிற்பது எது?" என்ற சொற்றொடரில் 'எது' என்னும் பயனிலைமூலம், 'நிற்பது' என்பது அஃறிணை என அறிகிறோம்.

**16. தமிழில் பால் பகுப்பு எவ்வாறு அமைந்துள்ளது?**

- பால் பகுப்பு, தமிழில் இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது. தன்மை, முன்னிலை ஆகிய இடத்தைத் தவிர, தமிழில் உள்ள பெயர்கள் படர்க்கை இடத்தில் வரும்.
- பயனிலை விகுதிகளான ஆன், ஆள், அது ஆகியவை, பால் பகுப்பைக் காட்டுகின்றன.

**17. இடப்பாகுபாடு எவற்றில் வெளிப்படாது, எவற்றில் வெளிப்படும்?**

- பெயர்ச்சொற்களில் இடப்பாகுபாடு, வெளிப்படாது. அவன், அவள், அவர், அ, து, அவை முதலான பதிலிடு பெயர்களிலும், வினைமுற்றுகளிலுமே வெளிப்படும்.

**18. 'தாங்கள்' என்னும் சொல், பால் பகுப்பில் எப்பிரிவைச் சேர்ந்தது? அச்சொல் இன்று எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?**

- 'தாங்கள்' என்பது, பால் பகுப்பில் படர்க்கைப் பலர்பால் சொல்லாகும்.
- அச்சொல் இன்று, முன்னிலை இடத்தில் பயன்படுத்தப்படுகிறது.

**19. மொழியின் இலக்கணம் குறித்துத் தமிழ்நடைக் கையேட்டின் கூற்று யாது?**

- ஒரு மொழியின் அடிப்படை அறிவு என்பது, அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருளையும், வாக்கிய அமைப்புகளையும் தெரிந்திருப்பதே.
- மேலே குறிப்பிட்ட நான்கையும் உள்ளடக்கியது, ஒரு மொழியின் இலக்கணம் குறித்த தமிழ்நடைக் கையேட்டின் கூற்றாகும்.

## கூடுதல் சிறுவினாக்கள்

**1. தமிழில் பால் பகுப்பு எவ்வாறு அமைந்துள்ளது?**

- தமிழில் பால் பகுப்பு, இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது.
- தன்மை, முன்னிலை இடத்தைத் தவிர, தமிழில் உள்ள பெயர்கள் படர்க்கை இடத்திலும் வரும்.
- பயனிலை விகுதிகளான ஆன், ஆள், ஆர், அ, து ஆகியன, பால் பகுப்பைக் காட்டுகின்றன.

**2. எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருக்கும் – விளக்குக.**

**வள்ளி பாடம் படித்தாள்.**

- இவ்வாக்கியத்தில் 'வள்ளி' என்பது உயர்திணை. 'வள்ளி' என்பது பெண்பால் பெயர்.
- வள்ளி என ஒரு பெண்ணைக் குறித்ததால் ஒருமை. 'வள்ளி' என்ற பெயர் படர்க்கை இடப்பெயர்.
- இதுபோலவே, 'படித்தாள்' என்பது உயர்திணை, பெண்பால், ஒருமை, மேலும் படர்க்கை.
- இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாயும், பயனிலையும் ஒன்றாகவே திணை, எண், இடம், பால் காட்டுகின்றன. எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு உண்டு என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

**3. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் எழுவாயாக அமையும்போது வினைமுடிவு எவ்வாறு வரும் என்பதைச் சான்றுடன் தருக.**

- குழந்தை, கதிரவன் போன்ற சொற்கள் இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள்.
- இப்பெயர்கள் எழுவாயாக அமையும்போது அவற்றின் வினைமுடிவு இருதிணை பெற்று வருகிறது.
- குழந்தை சிரித்தான் – குழந்தை சிரித்தது. கதிரவன் உதித்தான் – கதிரவன் உதித்தது.
- பேச்சு வழக்கில் அஃறிணை முடிவைப் பெற்று வருவதே பெருவழக்காக உள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. அஃறிணை எழுவாயில் ஒன்றன்பால், பலவின்பால் எவ்வாறு அறியப்படுகின்றன?**

➤ அஃறிணை எழுவாயில் ஆண், பெண் பகுப்புமுறை மரபில் இருந்தாலும், வினைமுற்றில் அவற்றை வேறுபடுத்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லை. எனவே, ஒருமை, பன்மை அடிப்படையிலேயே ஒன்றன்பால், பலவின்பால் என அறியப்படுகின்றன.

**சான்று :** காளை உழுதது; பசு பால் தந்தது.

➤ காளை ஆண்பாலாகவும், பசு பெண்பாலாகவும் உள்ளன. ஆனால் வினைமுற்று, பால் பாகுபாட்டிற்குரிய விகுதிகளைப் பெறாமல், ஒன்றன்பால் விகுதி பெற்று முடிந்துள்ளது.

## கூடுதல் பலவுள் தெரிக

1. இருதிணைக்கும் பொதுவாக வரும் சொற்கள் ______. (PTA - 5)

அ) குழந்தை, கதிரவன் ஆ) மரம், மனிதர்கள் இ) சீதா, இராமன் ஈ) நாம், நாங்கள்

**விடை : அ) குழந்தை, கதிரவன்**

2. தமிழில் பொருட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு, _____பாகுபாடு அமைந்துள்ளது. (PTA - 4)

அ) இட ஆ) பால் இ) இருதிணை ஈ) எண்

**விடை : இ) இருதிணை**

3. திணை, பால், எண், இடம் ஆகியவை, ______ அடிப்படைப் பண்புகள்.

அ) மொழியின் ஆ) நாட்டின் இ) கலாச்சாரத்தின் ஈ) பண்பாட்டின்

**விடை : அ) மொழியின்**

4. உலக மொழிகள் அனைத்திலும் ______ மிகுதி என்பர்.

அ) வினைச்சொற்கள் ஆ) இடைச்சொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) பெயர்ச்சொற்கள்

**விடை : ஈ) பெயர்ச்சொற்கள்**

5. இக்காலத் தமிழில் படர்க்கைப் பலர்பால் சொல்லாகிய ‘தாங்கள்’ என்பது, ____ இடத்தில் வருகிறது.

அ) தன்மை ஆ) முன்னிலை இ) படர்க்கை ஈ) மூவிடத்தில்

**விடை : ஆ) முன்னிலை**

6. எழுத்துகள், சொற்கள், அவற்றின் பொருள், வாக்கிய அமைப்பு நான்கையும் உள்ளடக்கியது, ஒரு மொழியின் இலக்கணம் எனக் கூறுவது ______.

அ) தமிழ்நடைக் கையேடு ஆ) பதிவேடு

இ) கையேடு ஈ) கணக்கு ஏடு

**விடை : அ) தமிழ்நடைக் கையேடு**

7. சரியான தொடரைக் கண்டறிக.

அ) ஒவ்வொரு பள்ளிகளிலும் நூலகம் உள்ளது. ஆ) ஒவ்வொரு பள்ளிகளிலும் நூலகம் உள்ளன.

இ) ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் உள்ளன. ஈ) ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் உள்ளது.

**விடை : ஈ) ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் உள்ளது.**

## கற்பவை கற்றபின்

**‘இடப்பாகுபாடு’ தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப்பகுதியிலிருந்து சான்று காட்டுக.**

தன்மை, முன்னிலைகளில் ஒருமை பன்மை என்னும் எண் பாகுபாடு உண்டு. ஆனால், ஆண்பால் பெண்பால் பாகுபாடு இல்லை. ‘நான் புத்தகம் கொடுத்தேன்’ என்னும் தொடரில் பேசியவர் (தன்மையில்) ஒருவர் எனக் கூறமுடியும். ஆனால், ஆணா, பெண்ணா என அறிய முடியாது.

முன்னிலையிலும் பால் பாகுபாட்டை அறிய இயலாது. இக்காலத் தமிழில் படர்க்கைப் பலர்பால் சொல்லாகிய ‘தாங்கள்’ என்பது, முன்னிலை இடத்தில் பயன்படுத்தப்படுகிறது.

**சான்று :** ‘தாங்கள் எப்போது அலுவலகம் வருவீர்கள்?’

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



தன்மைப்பன்மையில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப்பன்மை என இருவகைகள் உண்டு. பேசுபவர் முன்னிலையாளரையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு பேசுவது, உளப்பாட்டுத் தன்மைப்பன்மை ஆகும்.

**சான்று :** 'நாம் முயற்சி செய்வோம்'

இத்தொடரில் 'நாம்' என்பது, தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது. பேசுபவர், முன்னிலையாளரைத் தவிர்த்துவிட்டுத் தன்மைப்பன்மையில் பேசுவது, உளப்படுத்தாத் தன்மைப்பன்மை ஆகும்.

**சான்று :** 'நாங்கள் முயற்சி செய்வோம்'

நாம் தமிழ்மொழியைப் பல்வேறு நிலைகளிலும், பல்வேறு நோக்குகளிலும் பயன்படுத்துகிறோம். பழையனவற்றைக் கழிப்பதற்கும், புதியனவற்றைப் புகுத்துவதற்கும் நாம் தயங்குவதே இல்லை. கால ஓட்டத்தில் இலக்கணங்களும் இலக்கணக் கூறுகளும், தம்மைத் தாமே புதுப்பித்துக் கொள்கின்றன.

## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்ப்புப் பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கங்களையும் எடுத்து எழுதுக.**

In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya's first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She was transformed the lives of tens of thousands of women through sustainable social forestry schemes.

1977ஆம் ஆண்டில் தனது உயிரினும் இனிய கென்யா நாட்டில், காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி 'வங்காரி மத்தாய்', பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதைத் தொடர்ந்து முப்பது ஆண்டுகள், இந்த இயக்கத்தால் பல ஆப்பிரிக்கப் பெண்கள், தமது பகுதிகளில் மரங்களை நட்டு, அதன் வழியாகத் தங்களுக்குத் தேவையான உணவையும் எரிபொருளையும் தாமே ஈட்டியதோடு நில்லாமல், ஆப்பிரிக்காவில் நிலவிய மண் அரிப்பால் நிலம் பாலைவனமாவதையும் தடுத்து நிறுத்தினர். அவர் இந்த இயக்கத்தின் வழியாக மக்களாட்சியின் பயன்களை அறியச் செய்தார். இது அத்தலைமுறையினர் அனைவருக்கும் முதல்முறையாகத் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தேர்தலில் 'வங்காரி மத்தாய்' நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுப் பிறகு சுற்றுச்சூழல் அமைச்சரானார். கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி, மூன்றுகோடி மரங்களை நட்டு வளர்த்ததால், அவரது தன்னலமற்ற பணியைப் பாராட்டி, 2004ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்மூலம், பல்லாயிரக்கணக்கான பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

**எ – கா : Green Belt Movement – பசுமைவளாக இயக்கம்**

1. Social forests – சமூகக் காடுகள்
2. desertification – பாலைவனமாவதை / பாலைவனமாக்கல் / பாலைவனமாதல்
3. regions – பகுதிகளில்
4. shocked – மனம் வெதும்பி
5. sustainable – நிலையான
6. elected – தேர்வு செய்யப்பட்டு
7. Plant trees – மரங்களை நடு
8. food, fuel – உணவு, எரிபொருள்
9. deforestation – காடுகள் அழிப்பு
10. halting – தடுத்தல்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. for thirty years – முப்பது ஆண்டுகளாக
12. movement – இயக்கம்
13. parliament – நாடாளுமன்றம்
14. democracy – மக்களாட்சி
15. generation – தலைமுறையினர்
16. Minister – அமைச்சர்
17. thirty millions trees – மூன்று கோடி மரங்கள்
18. out standing success – தன்னலமற்ற பணி
19. schemes – திட்டங்கள்
20. transformed – மறுமலர்ச்சி ஏற்படுத்தல்

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

**எ – கா : விலை, விளை, விழை –**

கார்ப் பருவத்தில் நன்றாக **விளை**ந்ததால், தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க, ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள **விழை**வதாக அரசு அறிவித்தது. (PTA -3, July-21,23)

1. **தலை, தளை, தழை** (PTA -1, Mar.-23)

**தழை**களைத் திரட்டிக் கயிற்றால் **தளை** இட்டுத் **தலை**யில் சுமந்து சென்றான்.

2. **கலை, களை, கழை**

சிலம்பக் **கலை** கற்றவன், தன் கையில் ஏந்திய **கழை**யால், தன் பகை **களை**ந்து வெற்றிபெற்றான்.

3. **அலை, அளை, அழை** (PTA -6)

**அளை**யுள் இருந்த பாம்பைப் பிடிக்க, **அலை**ந்து திரிந்து பாம்பாட்டியை **அழை**த்து வந்தான்.

4. **தின்மை – திண்மை**

அவன் தன் உடல் **தின்மை**யைப் பொருட்படுத்தாமல் மனத்**திண்மை**யால் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றான்.

**இலக்கிய நயம் பாராட்டுக.** (PTA -2, Sep.-21,22, Mar.-23)

வெட்டி யடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று;
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்;
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

**ஆசிரியர் குறிப்பு** : கவிஞர், எழுத்தாளர், இதழாளர், விடுதலைப் போராட்ட வீரர், சமூகச் சீர்திருத்தவாதி என்னும் பன்முகத் தன்மை கொண்டவர் பாரதியார். அவர் கவிதையாக எழுதி வடித்த "வெட்டி அடிக்குது மின்னல்..." எனத் தொடங்கும் பாடலில் அமைந்துள்ள நயத்தைச் சற்றே ஆராய்வோம்.

**மையக்கருத்து** : எட்டுத் திசைகளும் இடிந்து விழுவதுபோல் மழை கொட்டித் திகைப்பூட்டுகிறது என்பது இப்பாடலின் மையக் கருத்தாகும்.

**எதுகை** : செய்யுள் அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து மாத்திரை அளவு ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகையாகும்.

வெட்டி, கொட்டி, சட்ட, எட்டு – அடிஎதுகை

சட்டச்சட, சட்டச்சட டட்டா – சீர்எதுகை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மோனை** : அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி வருவது மோனையாகும்.

**வெ**ட்டி, **வீ**ரத்
**எ**ட்டு, **எ**ங்கனம் } சீர்மோனை
**ச**ட்டச்சட, **ச**ட்டச்சட

**முரண்** : செய்யுள் அடிகளிலோ சீர்களிலோ தொடர்கள் சொல்லாலோ, பொருளாலோ முரண்பட்டு வருவது முரண்.

வெட்டி, கொட்டி – அடிமுரண்

**சந்தம்** : இசையுடன் பாடும் வகையில் ஓசைநயம் அமைந்த பாடலைச் சந்தப் பாடல் என்பர். **சிந்துப்பா வடிவில்** அமைந்த இப்பாடல், பாடி மகிழ்வதற்கு ஏற்ற ஓசை நயத்தைப் பெற்றுள்ளதைக் கற்பார் அறிவர்.

**சுவை** : நம் அகக் கண்முன்னே கருத்தைக் காட்சிப்படுத்தும் இப்பாடலில், மருட்சியுடன் அச்சத்தை உணர்த்தும் '**வீரச்சுவை**' பயின்று வந்துள்ளது எனலாம். "சட்டச்சட சட்டச்சட டட்டடா" என்னும் சொற்களின் தொகுப்பு, வானம் எட்டுத் திசைகளில் இடிப்பதையும் மழை கொட்டுவதையும் உணர்த்தும் ஒலிக் குறிப்புச் சொற்கள் அல்லவா?

முறுக்கு மீசை முண்டாசுக் கவிஞரின், "வெட்டி அடிக்குது மின்னல்...." எனத் தொடங்கும் பாடலில் அமைந்த எதுகை, மோனை, முரண், சந்தம், சுவை என்னும் பல நயங்கள் படிப்போரையும் பாடுவோரையும் மெய்மறக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

### கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக

### பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

**நாள் :** அக்டோபர் 2 **நேரம் :** காலை 10 மணி

**இடம் :** கலைவாணர் அரங்கம், சென்னை.

**நிகழ்ச்சி நிரல்**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

**வரவேற்புரை** : திருமதி அரசி, செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

**முன்னிலை** : திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்

**தலைமையுரை** : திரு. இமயவரம்பன், பேரிடர் மேலாண்மை இயக்குநர்

**கருத்தரங்கத் தலைப்புகள்**

இயற்கைச் சீற்றங்களும் – பருவகால மாற்றங்களும் – முனைவர் செங்குட்டுவன்

பேரிடர்களை எதிர்கொள்ளுதலும், தீர்வுகளும் – திரு. முகிலன்

நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல் – திருமதி. பாத்திமா

பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும் – திரு. வின்சென்ட்

**நன்றியுரை :** பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்

நாட்டுப்பண்

### பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம் அக்டோபர் மாதம் 2ஆம் நாள், காலை பத்து மணிக்குச் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் கருத்தரங்கம் தொடங்கும். செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளரான திருமதி. அரசி அவர்கள் வரவேற்புரை வழங்குவார். இயற்கை வேளாண்மை உழவரான திரு. அமுதன் அவர்கள் முன்னிலை வகிப்பார். பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு. இமயவரம்பன் அவர்கள் தலைமையுரையாற்றுவார்.

'இயற்கைச் சீற்றங்களும் – பருவகால மாற்றங்களும்' என்ற தலைப்பில் முனைவர் செங்குட்டுவன் அவர்களும், 'பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் திரு. முகிலன் அவர்களும், 'நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல்' என்ற தலைப்பில் திருமதி. பாத்திமா அவர்களும், பேரிடர்க் காலங்களில் செய்யக் கூடியதும் செய்யக் கூடாததும்' என்ற தலைப்பில் திரு. வின்சென்ட் அவர்களும் உரையாற்றவிருக்கிறார்கள். பசுமைப்படை மாணவர் தலைவர் பர்வீன் நன்றியுரையாற்றுவார். நாட்டுப் பண்ணுடன் விழா நிறைவுறும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## மொழியோடு விளையாடு

**புதிர்க்கேற்ற விடையை அறிக.**

அ) அடைமழை பெய்த அடுத்த நாள்
படைபடையாய் வந்ததாம்
பரங்கி நாட்டு விமானம்;
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம் – எது?
**விடை :** ஈசல்

ஆ) தண்ணீரும் மழையும் இல்லாமல்
பயிர் பச்சையாய் இருக்கிறது;
பாக்கு வெற்றிலை போடாமலே,
வாய் சிவப்பாய் இருக்கிறது? – எது?
**விடை :** பச்சைக்கிளி

**எண்ணங்களை எழுத்தாக்குக.**

| | |
|---|---|
|  | மெல்ல உருகும் பூமி!<br>பனிப்பாறையைக் கரைக்கிறது வெப்பம்!<br>அதீதமாய் புகை கக்கும் வாகனங்கள்<br>ஓசோனைத் துளைக்கும் மாசுக்காற்று<br>வெப்பத்தைத் தூண்டும் மனிதன்<br>மரத்தை வெட்டி அழிவைத் தேடுகிறான்<br>இடைவிடாது வெட்டுகிறான் மரங்களை<br>எப்போது தெளிவான் மனிதன்?<br>மெல்ல உருகுது பூமி! |

**மழை பெய்யும்போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு உங்கள் பள்ளித் தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**வழங்குதல்**

அ. பவன்குமார்,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு மேனிலைப்பள்ளி,
திருச்சி.

**பெறுதல்**

தலைமையாசிரியர்,
அரசு மேனிலைப்பள்ளி,
திருச்சி.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** மழைக்காலத்திற்கான விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்துதல் – தொடர்பாக.

வணக்கம்! நமது பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு 'இ' பிரிவில் பயிலும் மாணவன் நான். பள்ளியின் மாணவர் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். இனி மழைக்காலம் தொடங்க உள்ளது. மழையின் பொழிவைப் பொறுத்துப் பள்ளியின் விடுமுறை அமையும். மாணவச் சகோதரர்கள் எதிர்வரும் மழைக்காலத்தில் வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் எப்படி முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதை அறிய அறிவுறுத்த விரும்புகிறோம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



மழைப்பொழிவின்போது மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், சூடான நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளை உற்றுநோக்கி அறிந்து பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து, மாணவ நண்பர்களுக்கு ஒரு விழிப்புணர்வுக் கூட்டம் நடத்த ஆவன செய்யும்படி தங்களைப் பணிந்து கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

நாள் : 27.11.2023, தங்கள் உண்மையுள்ள,

இடம் : திருச்சி. அ. பவன்குமார்,

பன்னிரண்டாம் வகுப்பு.

## நிற்க அதற்குத் தக

**அது ஒரு மழைக்காலம். அதிகளவு மழையினால் வெள்ளம் வரக்கூடிய நிலை குறித்து அரசு அறிவிப்பு வெளியாகிறது. அரசின் துண்டறிக்கை உங்கள் கைகளில்.....**

**அ) எச்சரிக்கை நடவடிக்கைகள் :**

★ வெள்ள நீருக்கு அருகே வரவோ, வெள்ளநீரில் விளையாடவோ கூடாது.

★ ஏரிக்கரை மற்றும் ஆற்றோரச் சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும்.

★ வடிகால்கள், வாய்க்கால்கள், கழிவுநீர்த் தொட்டிகள் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

★ வெள்ளநீரில் பாம்புகள் மிதந்து வரும் அபாயம் இருப்பதால், முன்னெச்சரிக்கையாய்க் கைகளில் கொம்புடன் (தடி) இருங்கள்.

★ உங்கள் வீட்டில் உள்ள கழிப்பிடத் துளை மற்றும் குளியலறைத் துளைமீது மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து, தெருவில் ஓடும் வெள்ள நீர் மற்றும் கழிவுநீர் வீட்டிற்குள் புகாதபடி செய்யுங்கள்.

★ அறுந்த மின்கம்பிகள்மீது காலை வைக்காதீர்கள்.

★ மின் சாதனங்கள், எரிவாயுப் பொருள்கள் பழுதுபட்டிருந்தால், அவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.

★ ஏனெனில் அவற்றின் வழியாக மின்சாரம் தாக்கி, மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**ஆ) சுகாதார நடவடிக்கைகள் :**

★ கொதிக்க வைத்த நீரையே அருந்துங்கள்.

★ மூடிவைக்கப்பட்டுள்ள, சமைத்த சூடான உணவுகளையே உண்ணுங்கள்.

★ வயிற்றுப்போக்கு இருந்தால், அரிசிக்கஞ்சி, இளநீர், பால் கலக்காத தேநீர், மோர் பருகலாம்.

★ அங்கன்வாடி, சுகாதாரப் பணியாளர்களை அணுகி, உப்பு, சர்க்கரைக் கரைசல் பொட்டலங்களை வாங்கி அதைக் குடிக்கலாம்.

★ சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க, பிளீச்சிங்பவுடர், சுண்ணாம்புத்தூளைப் பயன்படுத்தவும்.

**குறிப்புகளைப் படித்த நீங்கள் உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?**

★ குறிப்புகளைப் படித்துள்ள காரணத்தால், விழிப்புணர்வோடு நடந்துகொள்வேன்.

★ அத்துடன் இவற்றை அறியாதவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறி, வழிகாட்டியும் உதவுவேன்.

## படிப்போம் பயன்படுத்துவோம் (தொடர்வண்டி நிலையம்)

| | | |
|---|---|---|
| Platform | – | நடைமேடை |
| Ticket Inspector | – | பயணச்சீட்டு ஆய்வர் (ஆய்வாளர்) |
| Train Track | – | இருப்புப் பாதை |
| Level Crossing | – | இருப்புப்பாதையைக் கடக்குமிடம் |
| Railway Signal | – | தொடர்வண்டி வழிக்குறி |
| Metro Train | – | மாநகரத் தொடர்வண்டி (Sep.-20) |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் - 3

## உரைநடை உலகம்

# 1. தமிழர் குடும்ப முறை

(பக்தவத்சல பாரதி)

### குறுவினாக்கள்

1. **புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு எழுதுக.** (PTA - 6, Mar.-20,24, Sep.-22)

★ சங்க காலத்தில் தற்காலிகத் தங்குமிடம் '**புக்கில்**' எனவும், திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம், '**தன்மனை**' எனவும் வழங்கப் பட்டுள்ளன.

2. **சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?** (Sep.-21)

★ சங்ககாலத்தில் கணசமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். பெண் திருமணம் செய்த பின்னரும், தன் இல்லத்திலேயே **தாயமுறைப்படி** தொடர்ந்து வாழ்ந்துள்ளாள்.

★ குடும்பத்தின் சொத்தும் வளங்களும் தாய்வழிச் **செல்வங்களும் பெண்களுக்கே** சென்று சேர்ந்தன.

### கூடுதல் வினாக்கள்

3. **குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது? எவ்வாறு?** (May - 22)

➤ குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே.

➤ ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப்போலக் குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன.

4. **மனித சமூகத்தின் அடிப்படை அலகாகக் குடும்பம் உள்ளது. ஏன்?**

➤ குடும்பம் எனும் அமைப்பில் இருந்து 'மனித சமூகம்' எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.

➤ குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்புவரை இது விரிவடைகிறது. எனவே, குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது புலப்படும்.

5. **சங்ககால மக்கள் இல்வாழ்வின் பயன்களாகக் கருதியவை எவை?**

➤ இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமை மிகுந்த மக்களுடன் வாழ்வது.

➤ அறத்தினை விரும்பிய சுற்றத்தாரோடு சேர்ந்து வாழ்வது.

➤ தலைவனும், தலைவியும் மனையறம் காத்து வாழ்வது.

➤ இவற்றையே சங்ககால மக்கள் இல்வாழ்வின் பயன்களாகக் கருதினர்.

6. **'விரிந்த குடும்ப முறை' என்றால் என்ன?**

➤ தலைவன், தலைவி, குழந்தைகள் எனத் தனியாக வாழும் தனிக்குடும்ப அமைப்பில் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழ்வது, 'விரிந்த குடும்ப முறை' என அழைக்கப்படுகிறது.

7. **மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடலால் அறியப்படும் குடும்ப முறை யாது?**

➤ சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு, விரிவு பெற்ற முறைமையும் காணமுடிகிறது.

➤ கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையை ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடலால் அறியமுடிகிறது.

8. **தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பெருமிதத்தை விவரி.**

➤ இன்றைய சமூக அமைப்பும், கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்ட தந்தை வழிக் குடும்ப அமைப்பைக் கொண்டதாக இருக்கிறது. **தொன்மை மிக்க** இந்தக் குடும்ப அமைப்பு முறை என்பது **தமிழ்ச் சமூகத்தின்** அடையாளப் பெருமிதமாகத் திகழ்கிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**9. ‘குடும்பம்’ சொல் குறித்து எழுதுக.**

- குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் பயின்று வருகிறது.
- ‘குடும்பு’ என்னும் சொல்லுடன் ‘அம்’ விகுதி சேர்ந்து பொருண்மை விரிவாக்கமாகக் ‘குடும்பம்’ என்னும் சொல் அமைந்தது.

## சிறுவினாக்கள்

**1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் எழுதுக.**
(PTA - 1,5, May - 22, Sep.-21, 22)

- ★ தனிக்குடும்ப அமைப்பில் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழ்வது **விரிந்த குடும்ப அமைப்பு** முறையாகும். இந்த விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே **கூட்டுக் குடும்பமாக,** இன்றைய சமூகத்தில் மாற்றம் பெற்றுள்ளது.
- ★ பண்டைய விரிந்த குடும்பம் என்பதன் தொடர்ச்சியாக, விளங்கும் இன்றைய கூட்டுக் குடும்பம் என்பது பெற்றோர், அவர்களது மணமாகாத பிள்ளைகள், மணம் முடித்த பிள்ளைகள், அவர்களின் துணைவர், அவர்களின் பிள்ளைகள் **இணைந்து வாழ்வதாக** உள்ளது.
- ★ சில நேரங்களில் கூட்டுக் குடும்பங்களில் பெற்றோரின் உடன்பிறந்தவர்கள், பெற்றோர்களின் தாய், தந்தை, இரத்த உறவால் பிணைக்கப்பட்ட நேர்வழி, கிளைவழி உறவினர்கள் என அனைவரும், ஒரே வீட்டில் **ஒரே குடும்பமாக** வாழ்வது **கூட்டுக்குடும்பமாக** விளங்குகிறது.

**2. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?** (July-23)

- ★ என் பெற்றோருக்கு உதவியாகப் பல வேலைகள் செய்வேன்.
- ★ என்னுடைய உடைகளை நானே துவைத்துக் கொள்வேன்.
- ★ வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வேன்.
- ★ என்னுடைய தேவைகளை நானே பூர்த்தி செய்து கொள்வேன்.
- ★ வீட்டிற்குத் தேவையான பொருட்களை அருகிலுள்ள கடைக்குச் சென்று வாங்கி வருவேன்.

## கூடுதல் வினாக்கள்

**3. தாய்வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகளை விவரிக்கவும்.** (Mar.-23)

- சங்ககாலத்தில் தாயே கண சமூகத்துக்குத் தலைமை ஏற்றிருந்தாள். குலத் தொடர்ச்சியும் தாய் வழியாகவே குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேர நாட்டு மருமக்கள் தாயமுறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். சங்கப்பாடல் தொடர்களில் ‘இவளது மகன்’ என்றே கூறப்பட்டதும் தாய்வழிச் சமூகத்தின் நிலையை உறுதிப்படுத்துகின்றன.
- திருமணம் செய்த பின்னரும், பெண் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை சங்ககாலத்தில் இருந்துள்ளது.
- திருமணத்திற்குப்பின்னர், கணவன் மனைவியின் இல்லத்தில் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது. குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் தாய்வழி முறையில் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என்னும் இவையே தாய்வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகளாகும்.

**4. ‘மனை’ என்ற சொல்லே வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக இருந்திருக்க வேண்டும் என்பதனை நிறுவுக.**

- வாழிடங்களை ‘இல்’, ‘மனை’ என்ற சொற்களால் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். வாழ்விடங்களின் தன்மைக்கு ஏற்பப் பெயரிட்டு அழைக்கும் முறைகள் வேறுபட்டிருக்கின்றன. எனினும், சங்க இலக்கியங்களில் தம்மனை, எம்மனை, இம்மனை, உம்மனை, நின்மனை, நுந்தைமனை, நன்மனை, வறுமனை, வளமனை, கடிமனை, தாய்மனை என்ற சொற்கள், இடம்பெற்றுள்ளன.
- ‘மனையோள்’ என்ற சொல்லும், பல இடங்களில் பயின்று வருகின்றது. வாழிடங்களின் பெயர்களைச் சுட்டும் பல்வேறு பெயர்கள் இருந்தாலும், ‘மனை’ என்ற சொல்லுடன் பல்வேறு வாழிடப் பெயர்கள் இணைந்து வருவதால், ‘மனை’ என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக அமைந்திருப்பதை அறியலாம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5. இன்றைய தனிக்குடும்ப முறை சங்க காலத்தில் இருந்த குடும்ப அமைப்பு முறையே என்பதனைப் பாடவழி நிறுவுக.**

- இன்றைய தொழிற்சமூகத்தில் தனிக்குடும்ப அமைப்பு முறையே பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. இது தொல்வடிவ முறையே ஆகும். பல ஆதிக்குடிகளிடம் தனிக்குடும்ப அமைப்பு முறை முக்கியக் குடும்ப முறையாக இருந்தது.
- சங்க இலக்கியம் இளமகவு நிலைக் குடும்பங்களின் காட்சிகளை அதிகமாகப் பேசுகின்றன. தலைவனும் தலைவியும் தற்காலிகமாகத் தங்கும் மனையைப் 'புக்கில்' என்கிறது.
- திருமணத்திற்குப்பின் தலைவனும் தலைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடத்தைத் 'தன்மனை' என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.
- தாய், தந்தை, குழந்தை மூவருமான தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால், இது தொடக்கநிலைக் குடும்பம் என அழைக்கப்படுகிறது. இத்தகைய தனிக்குடும்ப அமைப்பு முறை, சங்க காலத்திலேயே இருந்தது என்பதனை இச்சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தலாம்.

**6. 'மணந்தகம் என்பது குறித்துப் பெறப்படும் செய்திகள் யாவை?**

- 'குடும்பம்' என்பதும் உயிரினங்களைப் போலவே தோன்றுகிறது; வளர்கிறது. பல கட்டங்களைக் கடக்கிறது. வாழ்க்கைச் சுழற்சியில் குடும்பம் பல வடிவங்களில் நிலைமாற்றம் பெறுகிறது. இந்த நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் என்பது திருமணமே.
- மணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக் கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' எனப்படுகிறது. தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக அமையும் இது, முதல் குழந்தை பிறக்கும்வரை உள்ள காலக்கட்டத்தைக் குறிக்கிறது.
- இளந்தம்பதியருக்கு நல்லறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்கு உரியது என்று கூறும் தொல்காப்பியச் செய்தியால், 'மணந்தகம்' என்னும் குடும்ப அமைப்பு முதன்மை பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

**7. ஆண்மையச் சமூகம் சங்ககாலத்திலேயே வலுவாக வேர் ஊன்றி இருந்ததை விளக்குக.**

- சங்க இலக்கியங்களின் வழித் தமிழர்களிடம், மனிதகுலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழிமுறை இருந்ததை அறியமுடிந்தாலும், சங்க காலத்திலேயே ஆண்மையச் சமூகமுறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகி விட்டதையும் காணமுடிகிறது.
- ஆண் மையச் சமூகத்தில் திருமணத்திற்குப்பின் கணவனுடைய தந்தையின் இல்லத்தில் வாழ வேண்டும். தலைவன் திருமணத்திற்குப்பின் தலைவியைத் தன் இல்லத்திற்கு அழைத்து வந்தபோது, தலைவனின் தாய் தலைவிக்கு சிலம்புகழி நோன்பு செய்ததை ஐங்குறுநூறு காட்டுகிறது. இதனால் மணமக்களின் வாழ்விடம் கணவன் அகம் என்பது உறுதிப்படுகிறது.
- பெண்ணானவள் தன் கணவனையே சார்ந்திருந்த நிலையை "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்னும் குறுந்தொகை அடியால் தெளியலாம். பொருள்வயிற்பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் என்னும் பல்வேறு சமூகக் களங்களால், சங்ககாலத்தில் தந்தைவழிக் குடும்பமுறை மிக வலுவான, பரவலான முறையாக இருந்ததைத் தெளியமுடிகிறது.

**8. தனிக்குடும்பம் குறித்த வாதங்களை விவரி.**

- தாய், தந்தை, குழந்தை என மூவருமுள்ள நெருக்கமான, தொடக்கநிலைக் குடும்பம், சங்க இலக்கியங்களில் பேசப்பட்ட தனிக் குடும்பமாகும். சமூகப்படி மலர்ச்சியில் தனிக்குடும்பவகை இறுதியாக ஏற்பட்ட ஒன்று. இத் தனிக்குடும்பம் இன்றைய தொழிற் சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது என்பது ஒரு வாதம்.
- எனினும், ஆதிக்குடிகள் பலவற்றில் தனிக் குடும்பமுறை முக்கியமான குடும்ப முறையாக இருப்பதையும் இன வரைவியல் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இது ஒரு தொல்வடிவமாகவே இருந்து வருகிறது என்பது இன்னொரு வாதமாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நெடுவினா

**1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.** (July-21,23, May - 22)

**முன்னுரை :**

குடும்பம் தொடங்கிக் **குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம்** என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது. குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. மனிதனைச் சமூக வயப்படுத்தும் பணியைக் குடும்ப அமைப்பே சிறப்பாகக் கட்டமைக்கிறது.

**குடும்பம் :**

குடும்பம் என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே. நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போலக் குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன. சங்க இலக்கியத்தில் குடும்பை, குடும்பு ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. ‘குடும்பு’ என்னும் சொல் ‘**கூடிவாழுதல்**’ என்று பொருள்படுகிறது. குடும்பு எனும் சொல்லுடன் ‘அம்’ விகுதி சேர்ந்து, குடும்பம் எனும் சொல் உருவானது.

**மணந்தகம் :**

குடும்பமும் உயிரிகளைப் போன்றே தோன்றுகிறது; வளர்கிறது; பல கட்டங்களைக் கடக்கிறது. அதன் வாழ்க்கைச் சுழற்சியால், பல வடிவங்களில் நிலைமாற்றம் பெறுகிறது. இத்தகைய நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் திருமணமே. மணம்புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே ‘**மணந்தகம்**’ எனப்படுகிறது.

**தாய்வழிக் குடும்பம் :**

சங்ககாலத்தில் பெண் திருமணம் முடித்த பின்னரும் தன் தாய் வீட்டிலேயே வாழும் முறை இருந்துள்ளது. மனைவியின் இல்லத்தில் கணவன் வாழ்ந்தான். தாய்வழிக் குடும்ப முறையில் வளங்களும் செல்வங்களும் சொத்தும் பெண்களுக்கே போய்ச் சேர்ந்தன.

**தந்தைவழிக் குடும்பம் :**

ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப்பின் தன் கணவனுடைய தந்தை வீட்டில் வாழ வேண்டும். மணமானபின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தபோது, தலைவனுடைய தாய் தலைவிக்குச் ‘**சிலம்புகழி நோன்பு**’ செய்தாள். இதன்வழி சங்ககாலத்தில் தந்தைவழிக் குடும்பமுறை வலுவாக இருந்தமை தெளிவு.

**தனிக்குடும்பம் :**

தாய், தந்தை, குழந்தை மூவருள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது. தனிக்குடும்ப வகை, சமூகப் படிமலர்ச்சியால் இறுதியாக ஏற்பட்ட ஒன்று, இன்றைய தொழிற் சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. **பல ஆதிக்குடிகளிடமும் தனிக்குடும்பமுறை**, முக்கியமான குடும்பமுறையாக இருந்தது.

**விரிந்த குடும்பம் :**

கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த **நேர்வழி விரிந்த குடும்பமுறை** இருந்துள்ளது. இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைவாக வாழ்ந்தனர். **அறத்தினை விரும்பிய சுற்றத்துடன் சேர்ந்து வாழ்ந்தனர்.** தலைவனும் தலைவியும் மகிழ்வுடன் மனையகம் காத்தலே, இல்வாழ்வின் பயனாகும் எனச் **சங்ககால மக்கள்** எண்ணினர்.

**முடிவுரை :**

சங்கச் சமூகம், குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாகவும், தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டதாகவும் இருக்கிறது. இந்தக் குடும்ப அமைப்பு முறை, **தொன்மை மிக்கத் தமிழ் மனித சமூகத்தின்** பரந்த அடையாளக் கட்டமைப்பாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பலவுள் தெரிக

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ______. (Sep.-21)

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

**விடை : ஆ) திருமணமும் குடும்பமும்**

2. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது (Sep.-22, Mar.-23)

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூக முறை

**விடை : ஈ) தந்தைவழிச் சமூக முறை**

## கூடுதல் வினாக்கள்

3. மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது ______. (PTA -2,6)

அ) கணவனே ஆ) மனைவியே இ) திருமணமே ஈ) குடும்பமே

**விடை : ஈ) குடும்பமே**

4. சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தலைமை ஏற்றவர் ______. (Sep. -20)

அ) தாயே ஆ) தந்தையே இ) தலைவியே ஈ) தலைவனே

**விடை : அ) தாயே**

5. 'தம்மனை' என்பது ______ இல்லம். (Mar. -23)

அ) தந்தையின் ஆ) மனைவியின்

இ) உடன்பிறந்தானின் ஈ) கணவனின்

**விடை : ஆ) மனைவியின்**

6. 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுவது

அ) தொல்காப்பியம் ஆ) நளவெண்பா இ) நன்னூல் ஈ) சதுரகராதி

**விடை : அ) தொல்காப்பியம்**

7. தமிழ்ப் பண்பாட்டின் செழுமை, ______ வாயிலாக வெளிப்படுகிறது.

அ) பக்தி இலக்கியங்கள் ஆ) சங்க இலக்கியங்கள்

இ) சிற்றிலக்கியங்கள் ஈ) பேரிலக்கியங்கள்

**விடை : ஆ) சங்க இலக்கியங்கள்**

8. குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே, ______ என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.

அ) உலகச் சமூகம் ஆ) கிராமியச் சமூகம்

இ) நாட்டுப்புறச் சமூகம் ஈ) மனித சமூகம்

**விடை : ஈ) மனித சமூகம்**

9. 'குடும்பம்' எனும் சொல், முதன்முதலில் இடம்பெற்ற நூல்

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) திருக்குறள் ஈ) சங்க இலக்கியம்

**விடை : இ) திருக்குறள்**

10. தற்காலிகத் தங்குமிடம் ______ எனப்படும்.

அ) தன்மனை ஆ) நும்மனை இ) புக்கில் ஈ) வாழிடம்

**விடை : இ) புக்கில்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் ______ எனப்படும்.

அ) நம்மனை ஆ) வளமனை இ) கடிமனை ஈ) தன்மனை

**விடை : ஈ) தன்மனை**

12. தலைவியைத் தலைவன் மணந்தவுடன் இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அவனுடைய தாய் அவளுக்குச் ______ செய்திருக்கிறாள்.

அ) சிலம்புகழி நோன்பு ஆ) பாவை நோன்பு இ) மார்கழி நோன்பு ஈ) கௌரி நோன்பு

**விடை : அ) சிலம்புகழி நோன்பு**

13. 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே' என்பது ______ பாடல்.

அ) அகநானூற்று ஆ) நற்றிணை இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை

**விடை : இ) குறுந்தொகை**

14. "மறியிடைப் படுத்த மான்பிணை போல்" மகனை நடுவணாகக் கொண்டு, தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர் என்று கூறும் நூல் ______.

அ) குறுந்தொகை ஆ) ஐங்குறுநூறு இ) நற்றிணை ஈ) நெடுநல்வாடை

**விடை : ஆ) ஐங்குறுநூறு**

15. அகநானூற்று 346ஆவது பாடலில் வரும் 'நும்மனை' என்பது ______.

அ) கணவனின் இல்லம் ஆ) மனைவியின் இல்லம்

இ) நற்றாய் இல்லம் ஈ) செவிலியின் இல்லம்

**விடை : அ) கணவனின் இல்லம்**

16. பல ஆதிக்குடிகளிடம் இருந்த முக்கியமான குடும்பமுறை ______.

அ) தந்தைவழிக் குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தனிக்குடும்ப முறை ஈ) பிரிந்த வழிக் குடும்ப முறை

**விடை : இ) தனிக்குடும்ப முறை**

17. சங்ககால மக்கள் தலைவனும் தலைவியும் ______ காத்தலே இல்வாழ்வின் பயன் என எண்ணினர்.

அ) குழந்தை நலம் ஆ) மனைநலம் இ) தன்னறம் ஈ) மனையறம்

**விடை : ஈ) மனையறம்**

18. **கூற்று 1 :** திருமணத்திற்குப் பிறகு பெற்றோரிடமிருந்து பிரிந்து கணவனும் மனைவியும் தனியாக வாழுமிடம் 'தன்மனை' என்று அழைக்கப்பட்டது.

**கூற்று 2 :** 'குடும்பு' என்னும் சொல் தனியாக வாழ்தல் என்ற பொருளை உணர்த்துகிறது.

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி, 2 தவறு

இ) கூற்று 1 தவறு, 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி

**விடை : ஆ) கூற்று 1 சரி, 2 தவறு**

19. திருமணத்திற்குப்பின் ஆண் மையச் சமூகத்தில் பெண் தன் கணவனுடைய ______ வாழ வேண்டும்.

அ) தனிக்குடும்பமாக ஆ) கூட்டுக்குடும்பமாக

இ) தாயகத்தில் ஈ) தந்தையகத்தில்

**விடை : ஈ) தந்தையகத்தில்**

20. சங்க இலக்கியங்கள் ______ தோன்றுவதற்கான தொடக்க நிலைக் குடும்பங்கள் பற்றி மிகுதியாகப் பேசியிருக்கின்றன.

அ) கூட்டுக்குடும்பம் ஆ) தந்தைவழிக் குடும்பம்

இ) தாய்வழிக் குடும்பம் ஈ) தனிக்குடும்பம்

**விடை : ஈ) தனிக்குடும்பம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



21. 'புக்கில்' என்று தற்காலிகத் தங்குமிடத்தைக் கூறும் நூல் ______.
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) குறுந்தொகை
**விடை : ஆ) புறநானூறு**

22. 'செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்' என்று குறிப்பிடும் நூல் ______.
அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை
**விடை : அ) புறநானூறு**

23. திருமணத்திற்குப் பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது என்பதைக் குறிப்பிடும் நூல் ______.
அ) ஐங்குறுநூறு ஆ) புறநானூறு இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து
**விடை : இ) அகநானூறு**

24. 'நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மணம் கழிக' – என்று குறிப்பிடும் நூல் ______.
அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை
**விடை : இ) ஐங்குறுநூறு**

25. 'குடும்பு' எனும் சொல் உணர்த்தும் பொருள் ______.
அ) தனியாக வாழுதல் ஆ) பிரிந்து வாழ்முல் இ) கூடி வாழுதல் ஈ) எதுவுமில்லை
**விடை : இ) கூடி வாழ்தல்**

26. ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த ______ முறையைப் பற்றிக் கூறுகிறது.
அ) தந்தைவழிக் குடும்பம் ஆ) தாய்வழிக் குடும்பம்
இ) தொடக்கநிலைக் குடும்பம் ஈ) நேர்வழி விரிந்த குடும்பம்
**விடை : ஈ) நேர்வழி விரிந்த குடும்பம்**

27. குடும்ப அமைப்போடு தொடர்புடைய 'கடும்பு' எனும் சொல் உணர்த்தும் பொருள் ______.
அ) கூடி வாழ்தல் ஆ) கூடு இ) சுற்றம் ஈ) பிரிதல்
**விடை : அ) கூடி வாழ்தல்**

28. அகநானூற்று மருதத்திணைப் பாடல் குறிப்பிடும் 'தம்மனை' என்பது ______ ஆகும்.
அ) கணவரின் இல்லம் ஆ) செவிலியின் இல்லம்
இ) மனைவியின் இல்லம் ஈ) பரத்தையின் இல்லம்
**விடை : இ) மனைவியின் இல்லம்**

## கற்பவை கற்றபின்

1. **கூட்டுக் குடும்பம் – தனிக் குடும்பம் குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்து உரை நிகழ்த்துக.**

**கூட்டுக்குடும்பம் :**

நாகரிக வாழ்வில், இன்று நாம் இழந்து வரும் பண்பாடுகளில் மிக முக்கியமானது கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையாகும். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால், 'இன்றோ கூடிவாழ்ந்தால் கோடி இன்னல்' என்று மக்கள் நினைக்கிறார்கள். கூட்டுக் குடும்பம் என்பது, இக்காலத்தில் அரிதினும் அரிதாகி விட்டது. பலதரப்பட்ட உறவுகளோடு அவ்வப்போது ஏற்படும் பிணக்குகளைப் பிரச்சினைகளாக்காது, அனைவரின் நலன் கருதி, விட்டுக் கொடுத்துப் போகும் தன்மையைக் கூட்டுக் குடும்பங்களில் அன்று கண்டனர்.

குடும்பம் பெரியதாக இருந்தாலும், குடும்ப வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் எவ்விதப் பங்கமும் வந்திடாத வகையில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கவனத்துடன் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து இணைந்த வாழ்வுக்கு வழிகண்டனர். ஒரு குடும்பத்தைத் திறம்படக் கட்டிக்காக்கும் நிர்வாகவியலைக் குடும்பத் தலைவியர் அன்று பல்கலைக்கழகம் போகாமலே கற்றுத் தேர்ந்திருந்தனர். கூட்டுக் குடும்பங்களில் சிறுசிறு பிரச்சினைகள் வரத்தான் செய்யும். இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், பெரிய அளவில் பாதிப்புகள் வராது. வந்தாலும் நொடியில் மறையும் பிரச்சினைகளே அவை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கூட்டுக் குடும்பமாய் வாழ்வதனால், நம் உடைமைக்கும் பொருளுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு கிடைத்தது. வீட்டு வேலைகளைப் பகிர்ந்து அனைவரும் செய்தனர். இல்ல நிகழ்ச்சிகளைக் கலந்து ஆலோசித்து நன்கு சிறப்பாக நடத்தினர். அனைவருக்கும் ஒரே சமையல் என்பதால் பொருள்கள் அதிகம் வீண் செலவு ஆகவில்லை. ஆபத்துக் காலங்களில் உதவி செய்யவும் பாதுகாக்கவும் ஆட்கள் இருந்தனர். குழந்தைகளுக்குக் கதை சொல்லத் தாத்தா, பாட்டி இருப்பார்கள். கொஞ்சிப் பேசி மகிழ்ந்து விளையாடத் தாய் மாமன், அத்தை என்ற உறவுகள் இருந்தன. ஒரு குழந்தை, கூட்டுக் குடும்பத்தில்தான் பாசத்துடனும், பாதுகாப்புடனும் வளரும்.

**தனிக் குடும்பம் :**

இன்றைய இளைய தலைமுறையினர், தனிக்குடும்பத்தையே விரும்புகின்றனர். அதனால், அன்பு, பாசம், நேசம் எவற்றையும் அறியாமல் குழந்தைகள் வளரும். தனிக்குடும்பத்தில் வெறுப்பு, தாழ்வு மனப்பான்மை, பகை, காழ்ப்புணர்ச்சி, பொறாமை ஆகியவையே புரையோடிக் கிடக்கின்றன. தனிக்குடும்பத்தில் இன்னல்கள் பல உள்ளன. குழந்தைகளைக் காப்பகத்தில் விட்டுச்செல்லும் அவலநிலை, தனிக்குடும்பத்தின் பெரிய அவலம். வீட்டிற்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பில்லை.

கணவன் இல்லாத நேரத்தில் பெண்ணுக்குப் பல கொடுமைகள் நடக்கும். கொலை, கொள்ளை நடப்பது தனிக்குடும்பத்தில்தான். தனிக்குடும்பத்தில்தான் மணமுறிவுகள் அரங்கேறுகின்றன. பிரச்சினைகளைத் தீர்க்க ஆளில்லாததால், கணவன் மனைவி விரைவில் பிரிந்து விடுகின்றனர். தனிக்குடும்பத்தால் வந்த பெரிய அவல நிலைதான் முதியோர் இல்லங்கள்.

**2. குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| **எள்ளுத் தாத்தா** | – எள்ளுப் பாட்டி | **கொள்ளுத் தாத்தா** | – கொள்ளுப் பாட்டி |
| **தாத்தா** | – பாட்டி | **அப்பா** | – அம்மா |
| **பெரியப்பா** | – பெரியம்மா | **சிற்றப்பா** | – சிற்றன்னை |
| **கணவன்** | – மனைவி | **மாமா** | – அத்தை |
| **அண்ணன்** | – அண்ணி | **தம்பி** | – தம்பியின் மனைவி |
| **தங்கை** | – தங்கையின் கணவர் | **பெயரன்** | – பெயர்த்தி |
| **கொள்ளுப் பெயரன்** | – கொள்ளுப் பெயர்த்தி | **எள்ளுப் பெயரன்** | – எள்ளுப் பெயர்த்தி |

## கவிதைப்பேழை

# 2. விருந்தினர் இல்லம்

### (ஜலாலுத்தீன் ரூமி)

### குறுவினா

**1. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

★ மனித வாழ்க்கை ஒரு விருந்தினர் இல்லம் போன்றது.

★ மனிதனுக்கு ஏற்படும் ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு போன்றவற்றை வீட்டிற்கு எதிர்பாராமல் அவ்வப்போது வந்து செல்லும் விருந்தாளிகள் என்று, ஜலாலுத்தீன் ரூமி உருவகப் படுத்துகிறார்.

### கூடுதல் வினாக்கள்

**2. எவற்றையெல்லாம் வாசலுக்குச் சென்று வரவேற்க வேண்டுமென ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகிறார்?** **(PTA - 1,4)**

➤ வக்கிரம், வஞ்சனை, அவமானம் ஆகியவற்றை வாசலுக்கே சென்று வரவேற்க வேண்டுமென ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகிறார்.

**3. எதிர்பாராத விருந்தினராக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாரை?** **(May - 22)**

➤ ஆனந்தம் (மகிழ்ச்சி), மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு ஆகியவற்றை எதிர்பாராத விருந்தினராக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. வருபவர் எவராயினும் நன்றி செலுத்த வேண்டும் என ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது எதற்காக?**

➤ ஒவ்வொருவரும் தொலைதூரத்திற்கு அப்பாலிலிருந்து ஒரு வழிகாட்டியாக அனுப்பப்பட்டவர்கள் என்பதால், வருபவர் எவராயினும் நன்றி செலுத்த வேண்டும் என, ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகிறார்.

**5. விருந்தினரை எவ்வாறு நடத்த வேண்டும் என ரூமி குறிப்பிடுகிறார்?**

➤ காலி வீட்டுக்குள் தாறுமாறாக வந்த துயரங்களின் கூட்டமாக இருப்பினும், ஒவ்வொரு விருந்தினரையும் மரியாதையுடன் நடத்த வேண்டும் என, ரூமி குறிப்பிடுகிறார்.

**6. 'தாகங்கொண்ட மீனொன்று' – விளக்குக.**

➤ ஜலாலுத்தீன் ரூமியின் தேர்ந்தெடுத்த சில கவிதைகளை **'கோல்மன் பார்க்ஸ்'** என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அதை **என். சத்தியமூர்த்தி** என்பார், **'தாகங்கொண்ட மீனொன்று'** என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்துள்ளார்.

## சிறுவினா

**1. 'வருபவர் எவராயினும் நன்றி செலுத்து' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** (Sep.-20)

**இடம்** : பாரசீகக் கவிஞர் ஜலாலுத்தீன் ரூமி எழுதிய **'விருந்தினர் இல்லம்'** கவிதையில் இடம்பெற்ற வரி இது.

**பொருள்** : உன் விருந்தினர் இல்லத்திற்கு வருபவர் எவராக இருந்தாலும், அவருக்கு நன்றி செலுத்து.

**விளக்கம்** : மனித இருப்பு ஒரு **விருந்தினர் இல்லம்.** ஒவ்வொரு காலையும் ஒரு புதுவரவு. அதில், எதிர்பாராத விருந்தாளிகளாக வந்து செல்லும் **ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு** ஆகியவற்றை வரவேற்று விருந்தோம்பு! புதியதோர் மகிழ்ச்சிக்காக அவை உன்னைத் தூசிதட்டித் தயார்படுத்தலாம். **வக்கிரம், அவமானம், வஞ்சனை** ஆகியவற்றை வாயிலுக்கே சென்று வரவேற்பாயாக! ஏனெனில், ஒவ்வொருவரும் ஒரு வழிகாட்டியாக அனுப்பப்படுவதால், வருபவர் எவராயினும் நன்றி செலுத்து என்கிறார் ரூமி.

## கூடுதல் வினாக்கள்

**2. மனித வாழ்க்கையில் சந்திக்கும் விருந்தினர்கள் அனைவரையும் ஏன் கௌரவமாக நடத்த வேண்டும்?**

➤ மனித வாழ்க்கை விருந்தினர் இல்லம் போன்றது. மனித வாழ்வில் சந்திக்கும் அனைத்து அனுபவங்களையும் விருந்தினர்களைப்போல மனமகிழ்வுடன் சந்திக்க வேண்டும்.

➤ இன்பம், துன்பம், ஆனந்தம், மனச்சோர்வு, விழிப்புணர்வு, அற்பத்தனம், வக்கிரம், அவமானம், வஞ்சனை, துக்கம் போன்ற வாழ்வியல் வடிவங்களை மனித வாழ்வும் விருந்தினர்களாகச் சந்திக்கின்றது.

➤ அவை மனித வாழ்விற்குத் தேவையான புதிய உவகைகளையும், புதிய வழிகாட்டுதல்களையும் கற்றுத்தரும். எனவே, வாழ்வில் சந்திக்கும் விருந்தினர்களைக் கௌரவமாக நடத்த வேண்டும்.

**3. ஜலாலுத்தீன் ரூமி – குறிப்பு வரைக.**

➤ ஜலாலுத்தீன் ரூமி **பாரசீகக்** கவிஞர்களில் மிகச் சிறந்தவர். இவரது **'மஸ்னவி'** என்னும் படைப்பு, **'சூஃபி'** தத்துவம் சார்ந்த 25,600 பாடல்களைக் கொண்டது.

➤ 'மஸ்னவி', ஆழமான ஆன்மிகக் கருத்துகள் நிரம்பிய இசைக்கவிதைகளின் தொகுப்பு.

➤ **'திவான் – ஈ – ஷம்ஸ் – ஈ – தப்ரீஸி'** எனும் மற்றொரு புகழ்பெற்ற நூலையும் இவர் எழுதியுள்ளார்.

## பலவுள் தெரிக

1. 'இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக' என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது (Sep.-21,22)

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

**விடை : ஈ) இவை அனைத்தும்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### கூடுதல் வினாக்கள்

2. ‘தாகங்கொண்ட மீனொன்று’ என்ற தலைப்பில், ______ தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன் இ) சுரதா ஈ) என். சத்தியமூர்த்தி

**விடை : ஈ) என். சத்தியமூர்த்தி**

3. பாரசீகத்தின் மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவர் ______.

அ) கோல்மான் பார்க்ஸ் ஆ) வால்ட் விட்மன்

இ) ஜலாலுத்தீன் ரூமி ஈ) என். சத்தியமூர்த்தி

**விடை : இ) ஜலாலுத்தீன் ரூமி**

4. ஒவ்வொரு விருந்தினரையும் நடத்தும் முறையாக ‘விருந்தினர் இல்லம்’ குறிப்பிடுவது ______.

அ) அன்பாக ஆ) பாசமாக இ) உறவாக ஈ) கௌரவமாக

**விடை : ஈ) கௌரவமாக**

5. வருபவர் எவராயினும் செலுத்த வேண்டியதாக ‘விருந்தினர் இல்லம்’ கூறுவது ______.

அ) காணிக்கை ஆ) நன்கொடை இ) நன்றி ஈ) அன்பளிப்பு

**விடை : இ) நன்றி**

6. ‘விருந்தினர் இல்லம்’ என்னும் கவிதையை வடித்தவர் ______.

அ) ஜலாலுத்தீன் ரூமி ஆ) கால்டுவெல் இ) ஜி. யு. போப் ஈ) என். சத்தியமூர்த்தி

**விடை : அ) ஜலாலுத்தீன் ரூமி**

## கவிதைப்பேழை

# 3. கம்பராமாயணம்

### குறுவினாக்கள்

1. **நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?** (July-21, 23)

★ சவரி, இராமனைக் கண்டதால் அன்பின் கனிவினால், கண்ணீர் வடித்தாள்.

★ **“என் பொய்யான உலகப்பற்று அழிந்தது.** அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது.

★ **என் பிறவி ஒழிந்தது”** என்று, நிலையாமை குறித்துக் கூறினாள்.

2. **‘துன்பு உளதுஎனின் அன்றோ சுகம் உளது’ என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?** (Sep.-20)

அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

ஆ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்.

‘நிழலின் அருமை வெயிலில் தெரியும்’ என்ற பழமொழிக்குப் பொருந்தும்.

### கூடுதல் வினாக்கள்

3. **இராமன் குகனிடம் கூறியவை யாவை?**

➤ இராமன் குகனிடம், “நீ என் தம்பி; இலக்குவன் உனக்குத் தம்பி; என் மனைவி சீதை உன் அண்ணி உறவினள்; கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகம் முழுவதும் உனக்கு உரியது.

➤ நான் உன்னுடைய கட்டளைக்கு ஏற்பப் பணிபுரியும் பணியாளனாவேன்” என்று கூறினான்.

4. **தமிழர் நற்பண்பின் வளர்ச்சி, மலர்ச்சி, முதிர்ச்சி, தொடர்ச்சி எனப் பாடப்பகுதி குறிப்பிடுபவை எவை?**

➤ ‘யாவரும் கேளிர்’ என்பது, தமிழர் நற்பண்பின் வளர்ச்சி.

➤ ‘சிறியோரை இகழ்தல் இலமே’ என்பது, தமிழர் நற்பண்பின் மலர்ச்சி.

➤ ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பது, தமிழர் நற்பண்பின் முதிர்ச்சி.

➤ ‘காக்கை குருவி எங்கள் ஜாதி’ என்பது, தமிழர் நற்பண்பின் தொடர்ச்சி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. இராமனிடம் அடைக்கலமானவன் யார்? அடைக்கலமாகக் காரணம் என்ன?

- இராமனிடம் அடைக்கலமானவன் வீடணன். தன் அண்ணனாகிய இராவணன் சீதையைக் கவர்ந்து வந்தது தவறென எடுத்துக் கூறினான். இராவணன் கோபப்பட்டு வீடணனைக் கடிந்தான். பின்னர், வீடணன் இலங்கையை விட்டு வெளியேறி, இராமனிடம் அடைக்கலமானான்.

6. இராமனும் சுக்ரீவனும் ஒருங்கே தோன்றிய காட்சியைக் கம்பர் எங்ஙனம் வருணிக்கிறார்?

- ஆசையை முற்றிலும் அழித்த இராமனும், வானரத் தலைவனான சுக்ரீவனும் பகைவரை அழித்து அறங்களை நிலைபெறச் செய்ய ஒருங்கே தோன்றிய காட்சியானது, அமாவாசைக் காலத்தில் வந்து ஒன்றாகக் கூடும் சந்திரனையும் கதிரவனையும் ஒத்து இருந்ததாகக் கம்பர் வருணிக்கின்றார்.

7. குகன் யார்? எத்தகைய குணம் கொண்டவன்? முகிழ்ந்த உறவு யாது?

- குகன், வேடுவர் தலைவனாவான். **பாறைபோன்ற** உடலுக்குள் **பஞ்சுபோன்ற** உள்ளம் கொண்டவன். கங்கையைக் கடக்க உதவிய குகனுக்கும் இராமனுக்கும் இடையே நட்பு முகிழ்த்தது. அதனால் குகனை இராமன் உடன்பிறந்தானாக ஏற்றான்.

8. சுக்ரீவனை உயிர்த் துணையாய் ஏற்ற இராமன் கூறியது என்ன?

- சுக்ரீவனை உயிர்த் துணையாய் ஏற்ற இராமன், "இனி விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர், என் பகைவர்.
- தீயராய் இருப்பினும் உன் நண்பர் என் நண்பர். உன் உறவினர், என் உறவினர். என் சுற்றம், உன் சுற்றம். நீ என் உயிர்த் துணை" என்று கூறிச் சுக்ரீவனின் நட்பை உறுதி செய்தான்.

9. கம்பர் – சிறு குறிப்பு வரைக.

- கம்பர் சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவர். இவர் தந்தை ஆதித்தர். இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல். இவர் 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
- கம்பராமாயணம் என்ற அற்புதப் படைப்பை இயற்றியுள்ளார்.

## சிறுவினாக்கள்

1. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக. (PTA -1,4,6)

- ★ குகனது அளவற்ற அன்பை உணர்ந்த இராமன், "உன்னை என் தம்பியாக ஏற்றுக் கொண்டேன். நால்வர் உடன்பிறந்தவராக இருந்த நாம் இனி, ஓர் ஐவர்கள் உளரானோம்" என்றான்.
- ★ இலங்கையில் இராவணனுடன் போர் புரிந்து திரும்பிய **சுக்ரீவனைப் பார்த்து**, "இனி நீ வேறு; நான் வேறு அல்ல" என்று இராமன் கூறினான். "உன் பகைவர், என் பகைவர். தீயவராயினும் உன் நண்பர் என் நண்பர். "நீ என் உயிர் நண்பன்" என்று கூறி, அவனைச் சகோதரனாக ஏற்றுக் கொண்டான்.
- ★ சீதையைக் கவர்ந்து வந்த செயல் தவறு என்று கூறியதற்காக இராவணன் உடன்பிறந்த வீடணனைக் கடிந்து கொண்டான். அதனால், **வீடணன்** இலங்கையை விட்டு வெளியேறி இராமனிடம் அடைக்கலம் வேண்டினான்.
- ★ அடைக்கலம் கொடுத்த இராமன் அவனுக்கு இலங்கை அரசை ஆளும் உரிமையைக் கொடுத்து, அவனையும் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டு, **"நின்னொடும் எழுவர் ஆனோம்"** என்றான்.

2. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.(Sep.-21, May-22,24 Mar.-22)

- ★ சீதையைச் சிறை எடுத்த இராவணனுடன் போரிட்டுக் காயப்பட்ட கழுகு வேந்தன் சடாயு இராமனிடம் நடந்ததைக் கூறி உயிர்விட்டான். தன் **தந்தையின் நண்பனான கழுகுவேந்தன் சடாயுவை இராமன்**, தன் தந்தையாகவே கருதி, **மகன் நிலையில்** அவருக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்தான்.
- ★ கரிய அகில் கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டு வந்து வைத்தான். **தருப்பைப் புற்களையும்** ஒழுங்குபட அடுக்கினான். **பூக்களையும்** கொண்டுவந்து தூவினான்.
- ★ மணலினால் **தகன** மேடையைத் **திருத்தமாக** அமைத்தான். **நன்னீரை** எடுத்து வந்தான். இறுதிச் சடங்கு செய்யக்கூடிய தகன மேடைக்குத் தன் தந்தையைப் போன்ற **சடாயுவைப்** பெரிய கைகளில் **தூக்கிக்கொண்டு** வந்தான். இவ்வாறு, சடாயுவைத் தன் தந்தையாக ஏற்று, இராமன் கடமைகளை ஆற்றினான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

**3. வேடுவன் குகனிடம் இராமன் கொண்ட உறவை விளக்குக.**

- பாறை உடலும் பஞ்சு உள்ளமும் கொண்ட குகன் கூறிய அன்புரை கேட்ட இராமன் நெகிழ்ந்து, **"என் உயிர்போன்ற நீ என் தம்பி!** இலக்குவன் உனக்குத் தம்பி! சீதை உன் அண்ணி! குளிர் கடலும் நிலமும் உனதே! இனி நான் **உன் ஏவல்வழி பணிபுரிவேன்**" என்றான்.
- காட்டில் இராமன் துன்புறக் கூடுமெனக் குகன் வருந்தியபோது, "துன்பம் என ஒன்று இருந்தால்தானே இன்பம் புலப்படும்! துன்பத்திற்குப் பின்னர் இன்பம் உளதாகும்! இதைப் பிரிவு என எண்ணாதே! இதுவரை உடன்பிறந்தார் நால்வராக இருந்தோம்! **இனி நாம் ஐவரானோம்**" எனக் கூறி இராமன் குகனை உடன்பிறந்தானாக ஏற்றதை உறுதிப்படுத்தினான்.

**4. சவரி பிறப்பு நீங்கி சிறப்பு பெற்றதை விவரி.**

- இராமனிடம் பக்தி கொண்ட சவரி, சீதையைத் தேடி வந்தபோது அவனைச் சந்தித்து மகிழ்ந்தாள். சுக்ரீவனுடன் நட்பு கொள்ளுமாறு கூறிய சவரியிடம் இராமன் தாயன்பு காட்டினான்.
- தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம் இராமன் இனிமையாகப் பேசி, **"இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?"** எனப் பரிவுடன் வினவினான்.
- அன்பின் கனிவினால் கண்கள் அருவிபோல் நீர்பெருக சவரி இராமனை நோக்கி, "என் பொய்யான உலகப் பற்று ஒழிந்தது. எண்ணற்ற காலம் நான் மேற்கொண்ட தவம் பலித்தது. என் பிறவி ஒழிந்தது" என்றாள். மேலும், இராம இலக்குவருக்குத் தேவையானவற்றை எல்லாம் கொண்டுவந்து விருந்து படைத்துத் தன் விருப்பத்தை நிறைவேற்றினாள்.

**5. சுக்ரீவனுடன் இராமன் கொண்ட நட்பை விவரி.**

- சீதையைத் தேடிவந்த இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். குறையா வலிமை உடையவர்களும் விரும்பத் தகாத இருள் போன்றவர்க்குமான பகைவர்களை அழித்து அறங்களை நிலைபெறச் செய்வதற்கு ஏற்ற காலம் போன்று இராமனும் சுக்ரீவனும் இணைந்தனர்.
- ஆசையை அறவே அழித்த சிந்தையனாகிய இராமனும் வானரத்தலைவன் சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றிணையும் சந்திரனையும் சூரியனையும் போன்று தோன்றினர். தொடர்ந்து **சுக்ரீவனிடம்,** "இனி நான் உரைப்பதற்கு ஏதுமில்லை!
- விண்ணிலும் மண்ணிலும் உன் பகைவர், என் பகைவராவர். தீயவராக இருப்பினும் **உன் நண்பர் என் நண்பராவர்! உன் உறவினர், என் உறவினராவர்!** அன்பு மிகுந்த என் சுற்றம், உன் சுற்றமாகும்! நீ, என் **இன்னுயிர்த் துணைவனாவாய்**" என்று இராமன் கூறி நட்புக் கொண்டான்.

**6. அடைக்கலம் புகுந்த வீடணனை இராமன் எவ்வாறு ஏற்றான்?**

- சீதையைக் கவர்ந்தது தவறெனச் சுட்டிக் காட்டியதால் வீடணனை இராவணன் கடிந்து கொண்டான். அதனால் வெளியேறிய வீடணன், இராமனைத் தேடிச் சென்று அடைக்கலம் வேண்டினான்.
- கருணை பொங்கும் உள்ளம் படைத்த இராமன் "அரக்கர்கள் வாழ்வதும் ஆழ்கடல் நடுவே உள்ளதுமான **இலங்கையின் ஆட்சியைப்** பதினான்கு உலகங்களும் என் பெயரும் உள்ள காலம் வரை **உனக்கே உரிமையாகக் கொடுத்தேன்**" என்று கூறினான்.
- அடைக்கலம் அளித்ததோடு, "குகனுடன் சேர்ந்து நால்வர் உடன்பிறந்தாராக இருந்த நாங்கள் ஐவரானோம்! கதிரவன் மகன் சுக்ரீவனுடன் சேர்ந்து அறுவரானோம்! மனம் நிறை அன்புடையவனே, உன்னொடு சேர்ந்து எழுவரானோம்.
- என்னைக் கானக வாழ்வுக்கு அனுப்பிய தந்தை தயரதன், அச்செயலால் கூடுதலாகப் புதல்வர்களைப் பெற்று பெருமை அடைந்தான்" என்று கூறி வீடணனையும் உடன்பிறந்தானாக ஏற்றான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. "மாண்டது என் மாயப் பாசம்;
வந்தது, வரம்பு இல் காலம்
பூண்ட மா தவத்தின் செல்வம்;
போயது, பிறவி, என்பாள்" – இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம் : இவ்வடிகள், கம்பராமாயணத்தில் '**ஆரண்ய காண்டம்**' என்னும் பிரிவில், '**சவரி பிறப்பு நீங்குப் படலத்தில்**' இடம்பெற்றுள்ளது.

பொருள் : இராமனைக் கண்டதால், "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் நிறைவேறியது; என் பிறவி ஒழிந்தது" என்று, சவரி கூறினாள்.

விளக்கம் : இராமனிடம் மிகுந்த அன்பையும் பக்தியையும் கொண்டவள் சவரி. சீதையைத் தேடி வரும் இராமனைக் கண்டு, பெருமகிழ்ச்சி கொண்டாள். இராம இலக்குவரிடம் தாயன்பைக் காட்டிய சவரி, இந்த உலகில் வாழும் வாழ்வின் முழுமையை அடைந்தவளாய், நிலையற்ற இவ்வுலக வாழ்வை விரும்பாதவளாய் விளங்கினாள். "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் நிறைவேறியது; என் பிறவியும் ஒழிந்தது" என்று மகிழ்ந்தாள்.

8. "அவா முதல் அறுத்த சிந்தை
அனகனும், அரியும் வேந்தும்
உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்." – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் : இவ்வடிகள், கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டத்தில் '**நட்பு கோட்படலத்தில்**' இடம் பெற்றுள்ளது.

பொருள் : பகைவர்களை அழித்து **அறங்களை நிலைபெறச் செய்வதற்கு** உரியவர்களாக இராமனும் சுக்ரீவனும் ஒருங்கே இருந்தார்கள். **ஆசையை முற்றிலும் அழித்த** அறிவுடையவனான இராமனும், **வானரத் தலைவனான** சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் வந்து ஒன்றாகக் கூடும் சந்திரனையும் கதிரவனையும் ஒத்து இருந்தார்கள்.

விளக்கம் : இந்நிலவுலகில் குறையாத வலிமை உடையவர்களும் வேண்டாத இருள்போன்ற பகைவர்களும் நிலைபெறக்கூடாது என்ற ஒருமித்த சிந்தனையில் அவர்களை அழித்த **இராமனும், சுக்ரீவனும்** ஒருங்கே தோன்றிய காட்சியானது, அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கின்ற சந்திரனையும் கதிரவனையும் ஒத்து இருந்ததாகக் கம்பர் கூறுகிறார்.

9. "குன்று சூழ்வான் மக னொடும் அறுவர் ஆனேம்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம் : இவ்வடிகள் கம்பராமாயணம் யுத்த காண்டத்தில் ' வீடணன் அடைக்கலப் படலத்தில்' இடம்பெற்றுள்ளது.

பொருள் : "கதிரவனின் மகனான **சுக்ரீவனுடன்** சேர்ந்து நாங்கள் **அறுவர் ஆனோம்**" என்று, இராமன் வீடணனிடம் கூறினான்.

விளக்கம் : இராவணன் செய்த செயல் தவறு என்று சுட்டிக் காட்டினான் வீடணன். இராவணன் அதை ஏற்காமல் வீடணனைக் கடிந்தான். அதனால் இலங்கையை விட்டு வெளியேறிய வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். வீடணனிடம் இராமன், "நாங்கள் நான்கு சகோதரர்கள்; குகனோடு சேர்ந்து ஐந்து பேர் ஆனோம்; மேருமலையைச் சுற்றிவரும் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் சேர்ந்து, நாங்கள் அறுவரானோம்" என்று கூறுகிறான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. கம்பராமாயணம் – குறிப்பு வரைக.

- தாம் இயற்றிய நூலுக்குக் கம்பர் '**இராமாவதாரம்**' என்றே பெயரிட்டார். அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம் ஆகியவற்றிலிருந்து **குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன்** ஆகியோருடன், இராமன் கொண்ட உறவு பற்றிய பாடல்கள் பாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. **பல்வேறு விதமான பண்புகளை** அடிப்படையாகக் கொண்ட பாத்திரங்களால் கம்பராமாயணம், படைக்கப்பட்டிருக்கிறது.
- கீழ் மேல் எனக் கருதாது, அனைத்து உயிர்களையும் சமமாக **அன்பு காட்டும்** பாத்திரமாக இந்நூலில் **இராமன்** படைக்கப்பட்டிருக்கிறான். இந்நூல் எழுதப்பட்ட காலந்தொட்டு **மக்கள் இலக்கியமாகப்** போற்றப்படுவதற்குக் காரணம், கவிச்சக்கரவர்த்தி **கம்பனின் கவிநலமே** காரணம் ஆகும்.

11. "நின்னொடும் எழுவர் ஆனேம்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம் : இவ்வடி, கம்பராமாயணத்தில் உள்ள யுத்த காண்டம் பகுதியில், '**வீடணன்** அடைக்கலப் படலத்தில்' இடம்பெற்றுள்ளது.

பொருள் : தன்னிடம் அடைக்கலமாக வந்த வீடணனிடம் இராமன், "**இப்பொழுது** உன்னையும் உடன் பிறப்பாகச் சேர்த்து, **நாங்கள் எழுவர்** ஆனோம்" என்றான்.

விளக்கம் : இராவணன் சீதையைக் கவர்ந்து வந்த செயல் தவறு என்று சுட்டிக் காட்டினான் வீடணன். இதனால் வீடணனை இராவணன் கடிந்தான். எனவே, வீடணன் இலங்கையைவிட்டு வெளியேறி இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். வீடணனின் இச்செயலால் இலங்கையை ஆளும் உரிமையை அவனுக்குக் கொடுத்ததோடு, தன் உடன்பிறப்பாகவும் ஏற்றுக் கொண்டு, "குகனோடும் ஐவர் ஆனோம்! குன்றுசூழ் வான் மகனொடும் அறுவர் ஆனோம்! **உன்னுடன்** உடன்பிறந்தார் **எழுவராக** இருக்கின்றோம்" என்று இராமன் கூறினான்.

12. "என் உயிர் அணையாய் நீ
இளவல் உன் இளையான்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம் : இவ்வடிகள் கம்பராமாயணத்தில் '**அயோத்தியா காண்டம் – குகப் படலம்**' என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொருள் : குகன் கூறிய மொழிகளைக் கேட்ட இராமன், "**என் உயிர் போன்றவன் நீ!** என் இளையான் இலக்குவன் உனக்குத் தம்பி" என்று கூறினான்.

விளக்கம் : குகன் கொண்டுவந்த படகுகளில் கங்கை ஆற்றைக் கடந்த இராமன் குகன் கூறிய மொழிகளைக் கேட்டபின், "என் உயிர் போன்றவன் நீ! என் தம்பி இலக்குவன் உன் தம்பி! சீதை உனக்கு அண்ணி! குளிர்கடலும் இந்த நிலமும் உனதேயாகும். **நான் உன் ஏவல்படி பணிபுரிவேன்**" என்று கூறிக் குகனிடம் கொண்ட பரிவை வெளிப்படுத்தினான்.

13. "துன்பு உளது எனின்அன்றோ சுகம் உளது" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம் : இவ்வடி கம்பராமாயணத்தின் 'அயோத்தியா காண்டம் குகப் படலம்' என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொருள் : இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவானே எனக் குகன் வருந்தியபோது இராமன், "துன்பம் என்பது ஒன்று இருந்தால்தானே இன்பம் என்பது புலப்படும்" என்று கூறினான்.

விளக்கம் : கங்கை ஆற்றைக் கடந்தபின் குகன் **இராமன்** காட்டிற்குச் சென்று துன்புறுவானே என வருந்தினான். அதனை உணர்ந்த இராமன், குகனை நோக்கி "துன்பம் என்று ஒன்று இருந்தால்தானே இன்பம் என்பது புலப்படும். நம்மிடையே பிரிவு ஏற்படுகிறதே என எண்ணாதே! இதுவரை நாங்கள் உடன்பிறந்தார் நால்வராக இருந்தோம். உறவு அதோடு முடியவில்லை. இப்போது உன்னையும் சேர்ந்து **நாம் ஐவர் ஆகிவிட்டோம்**" என்று கூறித் தோழமை பூண்டான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14. "தீது இன்றி இருந்தனை போலும்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**இடம்** : இவ்வடி கம்பராமாயணத்தின் '**ஆரணிய காண்டம் சவரி பிறப்பு நீங்கு படலம்**' என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டிய இராமன், "இவ்வளவு காலம் நீ **துன்பம் ஏதுமின்றி** நலமுடன் இருந்தாய் அல்லவா?" என்று பரிவுடன் கேட்டான்.

**விளக்கம்** : சீதையைத் தேடிவந்த இராமனைச் சுக்ரீவனுடன் நட்பு கொள்ளுமாறு கூறி மகிழ்ந்த சவரியிடம், தன்னையே நினைத்துத் தவமிருந்த மனத்தில் கொண்டு, "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?" எனப் பரிவுடன் கேட்டான்.

15. "நீ என் இன்னுயிர்த் துணைவன்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**இடம்** : இவ்வடி கம்பராமாயணத்தின் "**கிட்கிந்தா காண்டம் – நட்பு கோட்படலம்**" பகுதியில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : கிட்கிந்தையில் **சுக்ரீவனைக் கண்டு** நண்பனாக ஏற்றபோது இராமன், "நீ என் **இனிய உயிர் நண்பன்**" என்று கூறினான்.

**விளக்கம்** : கிட்கிந்தையில் சுக்ரீவனைக் கண்ட இராமன் மகிழ்ந்து அவனை நண்பனாக ஏற்று, "இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? **விண்ணிலும் மண்ணிலும்** உன் பகைவர் என் பகைவர்! தீயவராயினும் உன் நண்பர், எனக்கு நண்பர்! என் உறவினர், உன் உறவினர். **நீ என் இனிய உயிர் நண்பன்**" எனச் சுக்ரீவனிடம் கூறினார்.

16. "தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே" – இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**இடம்** : இந்த அடி கம்பராமாயணத்தின் "யுத்த காண்டம் – வீடணன் அடைக்கலப் படலம்" பகுதியில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : ஆழமான கடல் நடுவே உள்ள இலங்கை அரசாட்சி உன்னுடையதே.

**விளக்கம்** : தன்னைச் சரணடைந்த வீடணனிடம் கருணை பொங்கிய உள்ளத்தோடு இராமன், "அரக்கர்கள் வாழ்வதும் ஆழ்கடல் நடுவே உள்ளதுமான இலங்கையின் அரசாட்சியை, பதினான்கு உலகங்களும் எனது பெயரும் இருக்கும் காலம் வரை உனக்கே உரிமையாகக் கொடுத்தேன்" என்று கூறினான். பின்னர் உடன்பிறந்தானாகவும் ஏற்று அருளினான்.

## நெடுவினா

1. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. (PTA - 3, Sep.-20, Mar.-24)

**முன்னுரை :**

குகன் வேடுவன், சடாயு பறவை, சவரி எளிய முதியவள், சுக்ரீவன் வானரம், வீடணன் எதிரியின் தம்பி என்ற பேதம் பார்க்காமல் அனைவரையும் தன் குடும்பமாகக் காணும் பண்பின் படிமமாக இராமன் திகழ்ந்தான். இது குறித்து இனி ஆராய்வோம்.

**குகன் உயிர் :**

பேரரசன் தயரதன் மகனாக இருந்தாலும், வேடுவர் தலைவனான குகனைத் தன் உடன்பிறந்தானாக ஏற்றுக்கொள்கிறான் இராமன். பாறை போன்ற உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்ட குகனை நோக்கி, "**நீ என் உயிர் போன்றவன்;** தம்பி இலக்குவன், உன் தம்பி; சீதை, உனக்கு அண்ணி. குளிர்கடலும் இந்நிலமும் எல்லாம் உனதே ஆகும். **நான் உன்னுடைய ஏவலுக்கேற்ப பணிபுரிபவன்**" என்று கூறி, அணைத்துக் கொண்ட இராமன் பின்னர், "**குகனோடும் ஐவர் ஆனோம்**" என்று உடன்பிறந்தானாக ஏற்றான்.

**சடாயு காதை :**

கழுகு வேந்தன் சடாயு, சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது தடுத்துப் போர் புரிந்து காயப்படுகிறான். நடந்தவற்றை இராமனிடம் கூறியபின் சடாயு உயிர் துறக்கிறான். தயரதனின் நண்பனாகிய சடாயுவிற்கு இறுதிச் சடங்குகளை இராமன் செய்கிறான். **சந்தனக் கட்டைகளையும், அகில் கட்டைகளையும்** எடுத்துவந்து வைக்கிறான். தருப்பைப் புற்களை ஒழுங்குபட அடுக்கிப் பூக்களைத் தூவி மணலினால் தகன மேடை அமைத்தான். **நன்னீர்** கொண்டு வந்தான். தன் **பெரிய கைகளால்** சடாயுவை, **சுமந்து வந்து**, ஈமக் கடன்களைச் செய்தான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**சவரியின் அன்பு :**

இவனுக்குமுன் இப்படியொருவர் இருந்தாரெனப் பிறிதொருவரைக் காட்ட இயலாத முதற்பொருளாகிய இராமன், சவரியிடம் இனிதாகப் பேசினான். தன்னையே நினைத்துத் தவம் இருந்த சவரியிடம், "**இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?**" என்று, பரிவுடன் கேட்டான். தன் தவம் பலித்ததை எண்ணி **ஆனந்தக் கண்ணீர்** சிந்திய சவரி, அன்புடன் அளித்த விருந்தை இராமன் ஏற்றான்.

**சுக்ரீவனுடன் உறவு :**

அனுமன் அழைத்து வந்த வானரத் தலைவனான சுக்ரீவனிடம் இராமன், "இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? விண்ணிலும் மண்ணிலும் உள்ள **உன் பகைவர் என் பகைவர்; தீயவராயினும் உன் நண்பர்கள் என் நண்பர்கள்; உன் உறவினர் என் உறவினர்; அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர்; நீ என் இனிய உயிர் நண்பன்**" என்று கூறி உறவு பாராட்டினான்.

**வீடணனிடம் உறவு :**

உடன்பிறந்த இராவணன் கடிந்ததால், தன்னைத் தேடிவந்து அடைக்கலமான **அரக்கர்குல வீடணனைத்** தன் உடன் பிறந்தவனாக ஏற்ற இராமன் இலங்கை அரசை அவனுக்கு உடைமையாக்கினான். மேலும், "குகனுடன் சேர்ந்து நாங்கள் ஐவர் ஆனோம்; பின்னாளில் கதிரவன் மகனான சுக்ரீவனுடன் சேர்ந்து அறுவர் ஆனோம்; உள்ளத்தில் அன்புடன் வந்த அன்பனே! **உன்னோடு சேர்ந்து நாம் எழுவரானோம்**" என்று உறவை நிலைநாட்டினான்.

**முடிவுரை :**

தன்னை ஒத்த **மனிதர்களிடம் மட்டுமன்றிப்** பறவை, அணில், அரக்கர், விலங்கு, வானரம், வேடுவர் என **அனைத்து உயிரினங்களிடத்தும்** அன்பு செலுத்தி ஆதரவு காட்டும் **பண்பின் படிமமாக** இராமன் விளங்கியமையை இதன்வழி அறிந்து தெளியலாம்.

## கூடுதல் வினா

**2. இராமனிடம் வெளிப்படும் உடன்பிறப்பியல் பண்பினைக் கம்பராமாயணம் வழிநின்று விளக்குக (Sep.-20)**

**முன்னுரை :**

குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் அனைவரிடத்திலும் அன்பு காட்டி உறவு பாராட்டும் **பண்பின் சிகரமாக** கம்பன் படைத்த இராமனிடம் சிறப்பான இடத்தைப் பெற்று, "**தன்னைப்போலப் பிறரை நினை**" என்னும் கூற்றை மெய்ப்பிப்பதுபோல் அமைந்த வாழ்க்கையைப் பாடப்பகுதி தெளிவாக எடுத்துரைக்கிறது.

**இராமனின் உயிர் குகன் :**

வேடுவர் தலைவன் குகன், பாறை உடலையும் பஞ்சு உள்ளத்தையும் கொண்டவன். காட்டிற்குச் சென்ற இராமன் கங்கை நதியைக் கடக்க உதவுகிறான். குகனுக்கும் இராமனுக்கும் இங்கு நட்புறவு உருவாகிறது. அதனால், இராமன், "**நீ என் உயிர் போன்றவன்.** என் தம்பி இலக்குவன் உன் தம்பி. சீதை உன் அண்ணி. நான் உன் ஏவல் வழி நடப்பவன். ஒரு நால்வேம் **இனி ஐவர் உளரானோம்**" என்று கூறி வேடனான குகனைத் தன் உடன்பிறந்தவனாக ஏற்றுக்கொள்கிறான்.

**இராமனை மகனாக்கிய சடாயு :**

சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது, **கழுகுகளின் அரசன் சடாயு** தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமன் சந்தித்தபோது, நடந்தவற்றைக் கூறியபின் **உயிர்விட்டான்.** தன் தந்தைக்கு நண்பனான சடாயுவைத் தன் தந்தையாகவே கருதினான். தன்னை மகன் நிலையில் நிறுத்தி, மணலினால் மேடை அமைத்து **அகில், சந்தனக் கட்டைகளை** அடுக்கி, தேவையான தருப்பைப் புற்களை விரித்து, சடாயுவைக் கைகளால் தூக்கி வைத்து, **நன்னீர்** கொண்டுவந்து சடாயுவுக்குரிய **இறுதிச் சடங்குகளைச் செய்தான்** இராமன்.

**பிறவி ஒழிந்த சவரி :**

இராமனிடம் மிகுதியான அன்பும், பக்தியும் கொண்ட சவரி, சீதையைத் தேடி வந்தபோது நேரில் கண்டு சுக்ரீவனுடன் நட்புக்கொள்ளச் செய்தாள். இவ்வகையில் **காப்பியத்தின் போக்கில், நல்ல திருப்பத்தை உருவாக்கியவள் சவரி.** சவரியிடம் தாயன்பு காட்டிய இராமன், "இவ்வளவு காலம், நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?" எனப் பரிவுடன் கேட்டான். தன் உலகப் பற்றும் பிறவித்துயரும் அழிந்ததாக எண்ணிய சவரி, **வேண்டிய எல்லாம் கொண்டு** வந்து **விருந்து** செய்வித்தாள்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**உயிர்த்துணைவனான சுக்ரீவன் :**

சீதையைத் தேடி வந்த இராமஇலக்குவரைச் சந்தித்த அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். வானரன் சுக்ரீவனிடம் இராமன், "மண்ணுலகில் உன் பகைவர் என் பகைவர். தீயராயினும் உன் சுற்றம் என் சுற்றம். இனி நீ என் உயிர்த் துணைவன்" என்று கூறி, அவனைத் தன் உறவாக ஏற்றுக் கொள்கிறான்.

**ஏழாமவனான வீடணன் :**

சீதையைக் கவர்ந்தது தவறெனத் தன் அண்ணன் இராவணனிடம் கூறி, அவன் கடிந்து உரைத்ததால், பிரிந்த **வீடணன்**, இராமனிடம் வந்து அடைக்கலம் வேண்டினான். உள்ளத்தில் கருணை பொங்கிய இராமன் "உன்னுடன் எழுவர் ஆனோம். என்னைக் **கானக வாழ்வை** மேற்கொள்ள அனுப்பின உன் **தந்தை தயரதன்,** புதல்வர்களால் பெருமை பெற்றார்" என்று கூறி அவனையும் தன் உடன்பிறந்தவனாக ஏற்று, **இலங்கை அரசை** அவனுக்கு உரிமையாக்கினான்.

**முடிவுரை :**

அனைத்து உயிர்களையும் நேசிக்கும் பண்புடைய **இராமன்**, வேடுவன் குகனைத் தன் உடன்பிறப்பாகவும், சடாயுவைத் தன் தந்தையாகவும், சவரியைத் தன் தாயாகவும், சுக்ரீவனைத் தன் உறவினனாகவும், வீடணனைச் சகோதரனாகவும் ஏற்றுக்கொண்டு **பண்பின் சிகரமாக** விளங்குகிறான்.

## பலவுள் தெரிக

1. "உவாஉற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்? **(July -20,23)**
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
**விடை : இ) இராமன், சுக்ரீவன்**

## கூடுதல் வினாக்கள்

2. சரியானதைத் தேர்க. (PTA - 5)
அ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) பணிவிடை செய்ய, இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
ஈ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் புறப்பட்டான்.
**விடை : இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.**

3. 'குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம்' இங்கு குறிப்பிடப்படுபவர் ______. **(PTA - 5)**
அ) வாலி ஆ) சுக்ரீவன் இ) வீடணன் ஈ) குகன்
**விடை : ஆ) சுக்ரீவன்**

4. 'அருங்கானம்' – புணர்ச்சிவிதி தருக. **(Mar.-20)**
அ) ஈறுபோதல் ஆ) இனமிகல்
இ) ஈறுபோதல், இனமிகல் ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல்
**விடை : இ) ஈறுபோதல், இனமிகல்**

5. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" – 'உவா' என்பதன் பொருள் ______. **(Dept., Sep. - 20)**
அ) சந்திரன் ஆ) சூரியன் இ) பௌர்ணமி ஈ) அமாவாசை
**விடை : ஈ) அமாவாசை**

6. வேடுவர் தலைவன் ______ ஆவான். **(May-22)**
அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) இராமன் ஈ) வீடணன்
**விடை : ஆ) குகன்**

7. அனைத்து உயிர்களையும் சமமாகக் கருதும் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளான் ______.
அ) சடாயு ஆ) சவரி இ) இராமன் ஈ) குகன்
**விடை : இ) இராமன்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



8. சுக்ரீவனுடன் இராமன் நட்பு கொள்ளும் படலம், ______ காண்டத்தில் உள்ளது.
அ) ஆரணிய ஆ) கிட்கிந்தா இ) சுந்தர ஈ) அயோத்தியா
**விடை : ஆ) கிட்கிந்தா**

9. வீடணன் அடைக்கலமாகும் படலம் ______ காண்டத்தில் உள்ளது.
அ) ஆரணிய ஆ) கிட்கிந்தா இ) சுந்தர ஈ) யுத்த
**விடை : ஈ) யுத்த**

10. 'குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்' – எனும் அடியில் 'குன்று சூழ்வான்' ______.
அ) கதிரவன் ஆ) சுக்ரீவன் இ) வாலி ஈ) இராவணன்
**விடை : அ) கதிரவன்**

11. ஆழியான் அவனை நோக்கி
அருள்சுரந்து, உவகை கூர' – எனும் அடியில் 'ஆழியான்' ______.
அ) கம்பர் ஆ) இராமன் இ) குகன் ஈ) சிவன்
**விடை : ஆ) இராமன்**

12. 'துன்பு உளதுஎனின் அன்றோ' – 'உளது' இலக்கணக்குறிப்பு ______.
அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம் இ) மரூஉ ஈ) இடைக்குறை
**விடை : ஈ) இடைக்குறை**

13. 'சவரி பிறப்பு நீங்கு படலம்' இடம் பெற்றுள்ள காண்டம் ______.
அ) அயோத்தியா காண்டம் ஆ) சுந்தர காண்டம்
இ) யுத்த காண்டம் ஈ) ஆரணிய காண்டம்
**விடை : ஈ) ஆரணிய காண்டம்**

14. 'இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' என்று, யார் யாரிடம் கூறியது?
அ) இலக்குவன் குகனிடம் ஆ) இராமன் குகனிடம்
இ) குகன் பரதனிடம் ஈ) பரதன் குகனிடம்
**விடை : ஆ) இராமன் குகனிடம்**

15. குகப்படலம் இடம் பெற்றுள்ள காண்டம் ______.
அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரணிய காண்டம்
இ) கிட்கிந்தா காண்டம் ஈ) சுந்தர காண்டம்
**விடை : அ) அயோத்தியா காண்டம்**

16. 'மாண்டது என் மாயப் பாசம்' என்று யார் யாரிடம் கூறியது?
அ) கைகேயி இராமனிடம் ஆ) குகன் இராமனிடம்
இ) சவரி இராமனிடம் ஈ) இராமன் அனுமனிடம்
**விடை : இ) சவரி இராமனிடம்**

17. 'நின்னொடும் எழுவர் ஆனேம்' என்று, யார் யாரிடம் கூறியது?
அ) இராமன் சுக்ரீவனிடம் ஆ) இராமன் குகனிடம்
இ) இராமன் வீடணனிடம் ஈ) இலக்குவன் குகனிடம்
**விடை : இ) இராமன் வீடணனிடம்**

18. 'என் காதல் சுற்றம் உன் சுற்றம்' என்று, யார் யாரிடம் கூறியது?
அ) இராமன் குகனிடம் ஆ) இராமன் சுக்ரீவனிடம்
இ) சுக்ரீவன் இராமனிடம் ஈ) வீடணன் இராவணனிடம்
**விடை : ஆ) இராமன் சுக்ரீவனிடம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### இலக்கணக்குறிப்பு

**உளது** – ('உள்ளது' என்பதன்) இடைக்குறை விகாரம்
**மாதவம், தடக்கை** – உரிச்சொற்றொடர்கள்
**தாழ்கடல், நளிர்கடல், இழிஅருவி** – வினைத்தொகைகள்
**செற்றவர்** – வினையாலணையும் பெயர்
**நுந்தை** – 'நும் தந்தை' என்பதன் மரூஉ மொழி
**நோற்கும்** சவரி – பெயரெச்சம்
**தாவா** வலி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**பொலிந்தான்** – படர்க்கை ஆண்பால் இறந்தகால வினைமுற்று
**வலிஅரக்கர்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை
**நன்னுதல், இன்னுரை, அருங்கானம்** – பண்புத்தொகைகள்

### உறுப்பிலக்கணம்

1. **தந்தனன் – தா (த) + த் (ந்) + த் + அன் + அன்**
**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்;
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்;
**த்** – இறந்தகால இடைநிலை;
**அன்** – சாரியை;
**அன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

2. **பொலிந்தான் – பொலி + த் (ந்) + த் + ஆன்**
**பொலி** – பகுதி;
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்,
**த்** – இறந்தகால இடைநிலை;
**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

3. **தந்து – தா (த) + த் (ந்) + த் + உ**
**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்;
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்;
**த்** – இறந்தகால இடைநிலை;
**உ** – வினையெச்ச விகுதி.

4. **தந்தேன் – தா (த) + த் (ந்) + த் + ஏன்**
**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்;
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்;
**த்** – இறந்தகால இடைநிலை;
**ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

### புணர்ச்சிவிதிகள்

1. **அருங்கானம் – அருமை + கானம்**
"ஈறுபோதல்" – (அரு + கானம்); "இனம்மிகல்" – அருங்கானம்

2. **இன்னுரை – இனிமை + உரை**
"ஈறுபோதல்" (இனி + உரை); "இனையவும் பண்பிற்கு இயல்பே" (இன் + உரை)
"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (இன்ன் + உரை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" இன்னுரை

3. **நன்னுதல் – நன்மை + நுதல்**
"ஈறுபோதல்" (நன் + நுதல்); "ணலமுன் றனவும் ஆகும் தநக்கள்" நன்னுதல்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### கற்பவை கற்றபின்

**உங்கள் மனம் கவர்ந்த கம்பராமாயணப் பாத்திரம் எது? ஏன்? வகுப்பறையில் உரையாடுக.**

கம்பராமாயணத்தில் என் மனம் கவர்ந்த கதாபாத்திரம் இலக்குவன். இராமபிரானின் தம்பி இலக்குவன். இலக்குவனுடைய தாயார் சுமித்திரை; மனைவி ஊர்மிளா. கைகேயி, இராமனைப் பதினான்கு ஆண்டுகள் கானகத்திற்கு ஏவியபோது, இலக்குவன் கொதித்து எழுகிறான். கானகத்திற்குச் சீதையோடு இராமன் புறப்பட்டதும், தானும் பிடிவாதமாகச் செல்கிறான் இலக்குவன்.

கானகத்தில் அண்ணனுக்கும் அண்ணிக்கும் பலவாறாகத் தொண்டுகள் செய்கிறான். கானகத்தில் பாதையில் கிடக்கும் முட்களையும் கற்களையும் அப்புறப்படுத்துகிறான். ஆங்காங்கே புற்களால் ஆன குடில்களை அமைத்துத் தருகிறான். அண்ணனும் அண்ணியும் தூங்க, இரவு முழுவதும் கண்விழித்துக் காவல் புரிகிறான். தொண்டு செய்யவே பிறந்தவன்போலப் பாடுபடுகிறான்.

இராமன் மனைவியோடு கானகம் வந்தான். ஆனால், இலக்குவனோ, மனைவி ஊர்மிளாவை அயோத்தியிலேயே விட்டுவிட்டு வந்தான். அண்ணன் அண்ணிக்குத் தொண்டு செய்வதில், மனைவியால் இடையூறு வருமோ என எண்ணி அழைத்து வரவில்லை.

யுத்த காண்டத்தில் இந்திரஜித்தை அழிக்கிறான். இலக்குவன் பெரும் சேவைகளைச் செய்கிறான். இத்தகைய செயல்பாடுகளாலேயே, இலக்குவனை நான் பெரிதும் விரும்புகிறேன்.

## விரிவானம்

# 4. உரிமைத்தாகம்

(பூமணி)

### நெடுவினா

1. **‘உரிமைத்தாகம்’ கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... – கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

**முன்னுரை :**

பூமணி அவர்கள் இயற்றிய ‘உரிமைத்தாகம்’ என்னும் கதையில், **வெள்ளைச்சாமி** தன் அண்ணன் **முத்தையனுக்குத்** தெரியாமல் தன் வேளாண் நிலத்தைப் **பங்காருசாமி** என்பவரிடம் **இருநூறு ரூபாய்க்கு** அடகு வைக்கிறான். அதை **முத்தையனிடம்** அவன் **மனைவி மூக்கம்மா** கூறுகிறாள். மனவருத்தத்தால் தம்பியிடம் பேசாமல் இருந்தாலும், அவனது நிலத்தை மீட்கப் பங்காருசாமியிடம் சென்று இருநூறு ரூபாயைக் கொடுக்கும்போது, **அவர் நானூறு ரூபாய் என்று பொய் சொல்கிறார்.** எனவே, சகோதரர்கள் இருவரும் இணைந்து, பங்காருசாமியிடம் சண்டையிடுகின்றனர்.

**இரு சகோதரர்களும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்... : கதை தொடர்கிறது.**

‘என்னத்த சொல்ல... உங்க தம்பி நிலத்த அடகு வச்சிருக்காராம். வீட்ல ஒரே சண்டை...’ என்ற மூக்கம்மாவின் பேச்சுக்கு முத்தையன் காது கொடுக்கவில்லை. தனது வேலையில் முத்தையன் மும்முரமாய் இருந்தான். ‘என்ன... நான் சொல்லுறது காதுல விழுதா?’ என்ற மனைவியின் பேச்சுக்கு, ‘இப்ப என்ன கொறைஞ்சு போச்சு? நாம சொல்றத கேட்காமப் போனவன்தானே. அவன் என்ன ஆனா நமக்கென்ன? நமக்கு இருக்குற தொல்லையில இது வேறையா?’’

‘‘அந்த **பங்காருசாமி** வேற **பொல்லாத மனுஷன்.** கிரயம் வாங்கிட்டுத்தான் ரூபா கொடுத்திருப்பான். நான் கேட்கப் போனா அவர் கோர்ட்டு கேஸுன்னு நம்மளப் போட்டு அலைப்பான். இது நமக்குத் தேவையா?’’ ‘இந்த **வெள்ளைச்சாமி** பையன் கொஞ்சமாவது பொறுப்போட நடக்க வேணாமா? அவன் **நம்மளப் பத்தி** ஊருல **தாறுமாறா** பேசிகிட்டுத் திரியறான். பட்டு அனுபவிச்சாதான் தெரியும். நிலத்த இழந்திட்டு வந்தாத்தான் நம்ம அருமை தெரியும்’’ எனப் பேசிய தன் கணவனை மூக்கம்மா பார்த்துக் கொண்டிருந்தாள். பதில் பேசவில்லை.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



எதிர் வீட்டிலிருந்து வந்த சத்தத்தைக் கேட்டு முத்தையன் துண்டை எடுத்துப் போட்டுகிட்டு வயலுக்குத் திரும்பினான். பங்காருசாமி வெள்ளைச்சாமிகிட்ட பேசியது அவன் காதில் ஒலித்தது. 'டே.... **வெள்ளச்சாமி** நீ **கிரயம் எழுதிக்கொடுத்த நாள் முடிஞ்சாச்சி.** என்ன பண்ணப் போற? **ரூவா கொடு.** இல்லேன்னா **நிலத்தக் கொடு**' என்ற வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

இரண்டு வாரம் கழித்து மூக்கம்மா முத்தையனிடம் கூறினாள், '**பங்காருசாமி நிலத்த எழுதி வாங்கிட்டாராம்.** அதனால் **வெள்ளச்சாமி பொண்டாட்டி** அவங்க **அப்பா வூட்டுக்குப்** போய்ட்டாளாம். வெள்ளச்சாமி இப்ப கூலி வேலைக்குப் போறாராம். இதைக் கேட்ட முத்தையன், மனம் கலங்கினான். மேற்கூரையைப் பார்த்தபடி முத்தையன் தனது வீட்டில் படுத்திருந்தான்.

## கூடுதல் வினா

2. 'உரிமைத் தாகம்' கதையைக் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக. (Sep. - 20)

**முன்னுரை :**

ஆசிரியர் பூமணி எழுதிய 'உரிமைத்தாகம்' என்னும் சிறுகதையில் அண்ணன், தம்பியின் மன விரிசலால், தம்பி படும் துன்பத்தையும், அதை அண்ணன் போக்கிய முறையையும் எழுத்தோவியமாக்கித் தந்திருக்கிறார். கதையில் இடம்பெறும் அண்ணன் முத்தையன்; தம்பி வெள்ளைச்சாமி.

**கதைமாந்தர்கள் :**

வெள்ளைச்சாமி, பங்காருசாமி, முத்தையாவின் மனைவி, மூக்கம்மாள்.

**தம்பி வெள்ளைச்சாமி கடன்வாங்குதல் :**

தம்பி வெள்ளைச்சாமி, தனக்குத் திருமணம் நடைபெற்ற பிறகு அண்ணனை விட்டுப் பிரிந்து தனிக்குடித்தனம் சென்று விடுகிறான். இந்நிலையில், தன் பங்கு நிலத்தின்மீது பங்காருசாமியிடம் ரூ. 200 கடனாகப் பெறுகிறான். வெள்ளைச்சாமியால் கடனை அடைக்க முடியவில்லை. இது முத்தையனுக்குத் தெரியாது. ஆனால், முத்தையனின் மனைவி இதைத் தெரிந்துகொண்டு, முத்தையனிடம் கூறுகிறாள். அத்துடன், முத்தையனின் மனைவி மூக்கம்மாளே, தன் நகைகளை அடகு வைத்து, அந்தக் கடனை அடைக்கச் சொல்கிறாள்.

**முத்தையன் பங்காருசாமியின் வீட்டிற்குச் செல்லுதல் :**

முத்தையன் தம்பி கடன் பெற்ற ரூ. 200ஐ எடுத்துக்கொண்டு, பங்காருசாமி வீட்டிற்குச் செல்கிறான். தம்பியின் கடனை அடைக்க அண்ணன் முத்தையன் வந்திருப்பதை அறிந்த பங்காருசாமி, ரூ. 400 தந்தால், நிலத்திற்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தைத் தருவதாகக் கூறுகிறார். முத்தையனுக்கு உடம்பு கொதித்தது. நான் இருநூறு ரூபாய் வைத்துள்ளேன். கணக்கு முடிந்து நோட்டை கொடுத்தால் கொடுங்கள். அதற்குமேல் அவரவருக்குத் தெரிந்ததைப் பார்த்துக் கொள்ள வேண்டியதான். வீடு திரும்பிய அண்ணன் முத்தையன், பணத்தைக் கொடுத்துவிட்டதால், தம்பியோடு சென்று நிலத்தை உழுகிறான். செய்தியறிந்த பங்காருசாமி, முத்தையன் மற்றும் வெள்ளைச்சாமியுடன் சண்டைபுரிகிறார். கடைசியில் பங்காருசாமி நீதி மன்றத்திற்குப் போவேன் என்று மிரட்டுகிறார். அதை ஏற்காத அண்ணன் தம்பி இருவரும் பங்காருவை விரட்டியடிக்கின்றனர்.

**முடிவுரை :**

தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பது, பழமொழி. இதனை உண்மையாக்கும் வகையில் இக்கதை புனையப்பட்டுள்ளது. அண்ணன் தம்பிக்குள் எத்தனை பிரச்சினைகள், மனமாற்றங்கள் இருந்தாலும், தீர்வுகாண வேண்டிய ஒரு பிரச்சினை வந்துவிட்டால், உடன்பிறப்புதான் உதவும் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

## பலவுள் தெரிக

1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க. (PTA - 1, July-23)

அ) உரிமைத்தாகம் – 1. பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி – 2. பூமணி
இ) ஜலாலுத்தீன் ரூமி – 3. பக்தவத்சல பாரதி
ஈ) தமிழர் குடும்பமுறை – 4. சாகித்திய அகாதெமி

அ) 2 4 3 1 ஆ) 3 4 1 2 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

**விடை : இ) 2 4 1 3**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் பலவுள் தெரிக

2. 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்னும் கருத்தை உணர்த்தும் கதை ______. (PTA - 4)

அ) முதல்கல் ஆ) தலைக்குளம் இ) உரிமைத்தாகம் ஈ) கோடைமழை

**விடை : இ) உரிமைத்தாகம்**

3. உரிமைத்தாகம் என்னும் கதையை எழுதியவர் ______. (May - 22)

அ) உத்தம சோழன் ஆ) பூமணி

இ) ஐராவதம் மகாதேவன் ஈ) முகமது மீரான்

**விடை : ஆ) பூமணி**

4. பூமணி, ______ எழுத்தாளர்களில் ஒருவர்.

அ) நெய்தல் ஆ) கரிசல் இ) தஞ்சை ஈ) கொங்கு

**விடை : ஆ) கரிசல்**

5. 'கடகம்' என்ற பேச்சு வழக்குச் சொல்லின் எழுத்து வழக்குச் சொல் ______.

அ) கடவம் ஆ) பெட்டி இ) ஓலைப்பெட்டி ஈ) ஈக்கம்பெட்டி

**விடை : இ) ஓலைப்பெட்டி**

6. 'அஞ்ஞாடி' என்னும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் ______.

அ) ரா. கி. ரங்கராஜன் ஆ) புதுமைப்பித்தன் இ) பூமணி ஈ) உத்தமசோழன்

**விடை : இ) பூமணி**

7. 'உரிமைத்தாகம்' என்னும் சிறுகதை எடுத்துரைப்பது ______.

அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை

ஆ) வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகளை

இ) முதலாளித்துவம் தொழிலாளிகளை நசுக்குவதை ஈ) எதுவுமில்லை

**விடை : அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை**

## கற்பவை கற்றபின்

**1. 'நமது நிலமே நமது அடையாளம்' – இக்கூற்றை விவாதிக்க.**

உலகில் ஒவ்வொருவருக்கும் ஓர் அடையாளம் உண்டு, தமிழர்களாகிய நமக்கு, நமது நிலமே அடையாளமாகும். எனினும், நமது அடையாளம், நமது மொழியை அடிப்படையாகக் கொண்டது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நம் அனைவருக்குமே, தமிழர் என்பதும் அடையாளத்தின் அடிப்படை வரையறையாகும். நம் மண்ணும் தமிழ்நாடு என்றே வழங்கப்பெறுகிறது. தமிழ்நாட்டு நிலப்பரப்பில் குறிஞ்சியும் முல்லையும் கோடையில் திரிந்துபட்ட நிலையே, 'பாலை' என ஐந்தாவது நிலப் பிரிவாகக் கொள்ளப்பட்டது. எனவே, அது நமது மண்ணின் நிரந்தர நிலப் பிரிவில்லை.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகத் தமிழ் நாட்டு நிலம் பிரிக்கப்பட்டுள்ளது. அவை நான்கும் மக்கள் வாழ்வியலோடு பிணைந்துள்ளன. எனவேதான் உலகிற்கு 'நானிலம்' என்னும் பெயர் ஏற்பட்டது.உலகிலேயே தமிழர்கள்தாம் தங்கள் வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்து, அகம், புறம் என இரண்டாகப் பிரித்து வாழ்ந்தனர். அந்த அக வாழ்க்கையையும் களவியல், கற்பியல் எனப் பிரித்து வாழ்ந்தார்கள். களவியல் வாழ்க்கையையும் அலர், ஆம்பல் என இரண்டாகப் பிரித்தனர். இவை தமிழர்கள் வாழும் தமிழ் நிலத்தின் அடையாளங்கள்.

துக்கத்தில் கண்ணீர் சிந்தி அழுவதில்கூட ஒரு முறையைத் தமிழர்கள் வகுத்தனர். பிள்ளை இறந்தால் பெண்கள் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதனர். ஏனெனில், வயிற்றில் வளர்ந்ததே பிள்ளை. கணவன் இறந்தால் மார்பில் அடித்துக்கொண்டு அழுதனர். ஏனெனில், கணவனை நெஞ்சில் வைத்துப் போற்றிக் காத்தவர்கள் பெண்கள். பொருளை இழந்துவிட்டால், தலையில் அடித்துக்கொண்டு அழுதனர். ஏனெனில், பொருள் பற்றிய சிந்தனை தோன்றிய இடம் அது. இப்படிப் பெண்கள் அழுவதில்கூடத் தங்களுக்கெனத் தமிழர்கள் ஓர் அடையாளத்தை வகுத்திருந்தனர்.

பண்பாடு, நாகரிகம், ஒழுக்கம், பக்தி எனத் தமிழ்நிலம், தனி அடையாளங்களோடு விளங்கி வருகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறவினர்களின் பங்கு முக்கியமானது என்பதைக் குறித்துப் பேசுக.

கிளை என்றால் உறவு என்பது பொருள். நமது வாழ்க்கை முன்னேற்றத்தில் உறவினர் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

**பெற்றோர் :**

ஈன்று புறந்தரும் தாயும், சான்றோனாக்கும் தந்தையுமான பெற்றோர்கள்தாம் நமது வாழ்க்கைத் தரம் உயரப் பாடுபடுகின்றனர். நமது கல்வித்தகுதியின் தரத்தை உயர்த்தவும், தகுதியான கல்வியில் முன்னேற்றம் அடையவும் பெரிதும் துணைபுரிகின்றனர்.

**தாத்தா – பாட்டி :**

இக்கட்டான கால கட்டங்களில், தாங்கள் வாழ்ந்த வாழ்வால் பெற்ற அனுபவத்தை நெறி காட்டு வழியாகக் கொண்டு, நமக்கு உதவி புரிகின்றவர்கள் தாத்தாவும் பாட்டியும். நல்லதைச் செய்யச் சொல்லி நம்மைத் தூண்டுபவர்களும் அவர்களே. நமது வழி தீயது எனில், திருத்தி நல்வழிப் படுத்த முன்வருகின்றனர்.

**பெரியப்பா – சிற்றப்பா :**

அப்பாவின் உடன் பிறந்த அண்ணன், தம்பிகள். வீட்டில் உள்ளோருக்கு வெளியில் ஏற்படும் பல சிக்கல்களைத் தீர்த்து உதவுபவர்கள். அப்பாவின் வலிமையே அவர்கள்தாம்.

**உடன்பிறந்தோர் :**

நமக்குப் பணமுடை, மனக்கவலை ஏற்படும்போது, நம்முடன் இருந்து அவற்றைப் போக்குபவர்கள் உடன்பிறந்தோராவர். 'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்பதற்கு இணங்க, நம் பிரச்சினைகளைத் தீர்ப்பவர்கள் நம் உடன் பிறந்தவர்களே.

**தாய்வழி உறவு :**

தாய்வழி உறவினர்கள், நம்மீது செலுத்தும் அன்பு அலாதியானது. நம்மைச் சீராட்டி உறவாடி அன்பு காட்டுபவர்கள். நமது இல்லத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும் முன்னின்று நடத்துபவர்.

நாம் பிறரைச் சார்ந்தே வாழ்கிறோம். அதற்கு உதவுபவர்கள் நம் உறவினர்களே. சுற்றத்தார் இல்லையெனில், வாழ்க்கையே இல்லை எனலாம்.

## இனிக்கும் இலக்கணம்

# 5. பொருள் மயக்கம்

### இலக்கணத் தேர்ச்சிகொள்

1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் இருத்தல்.

**விடை : இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.**

2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) பாலை பாடினான் | – | 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான் |
| ஆ) பாலைப் பாடினான் | – | 2. தேரினைப் பார்த்தான் |
| இ) தேரை பார்த்தான் | – | 3. பாலினைப் பாடினான் |
| ஈ) தேரைப் பார்த்தான் | – | 4. பாலைத் திணை பாடினான் |

அ) 4 1 3 2 ஆ) 2 3 1 4 இ) 4 3 1 2 ஈ) 2 4 1 3

**விடை : இ) 4 3 1 2**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.
மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.
விடை : அறிவியல் மாணவர்கள் வரிசையில் நின்று, கண்காட்சியைக் கண்டனர்.

4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.
முன் – அவன் **முன்**வந்து கூறினான்; **அவன்முன்** வந்து கூறினான். (Mar.-20, May-22)
தானே – அவன் **தானே** செய்தது; **அவன்தானே** செய்தது! (Mar.-22)
கொண்டு – அவன்பால் **கொண்டு** சென்றான்; அவன் **பால்கொண்டு** சென்றான்.
விட்டான் – அவன் அடித்து **விட்டான்;** அவன் **அடித்துவிட்டான்.**

5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.
அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.
அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.

6. சலசல, வந்துவந்து, கலகல, விம்மிவிம்மி – இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.
இரட்டைக்கிளவிச் சொற்கள் : சலசல, கலகல
எழுதும் முறை : இரட்டைக் கிளவிச் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.
எ – கா : அருவி **சலசல**வெனப் பாய்ந்தது. குழவி **கலகல**வெனச் சிரித்தது.

7. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான வல்லின விதி யாது? (PTA -1, July -21, 23)
★ திருவளர் செல்வன் என்பதே சரி.
★ ஏனெனில், வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.

## கூடுதல் குறுவினாக்கள்

1. பொருள் குழப்பம் எதனால் ஏற்படுகின்றது?
➤ எழுதும்போதோ, பேசும்போதோ தேவையான இடங்களில் இடைவெளி விடாததும், தேவையற்ற இடங்களில் இடைவெளி விடுவதும் பொருள் குழப்பம் ஏற்படக் காரணங்களாகும்.

2. தொடர்களில் சொற்களை இடம்விட்டு எழுதும்போது பொருள் மாறுபடுவதற்கு இரண்டு சான்றுகள் தருக.
1. எம் மொழி யார்க்கும் எளிது. – எமது மொழி எல்லாருக்கும் எளிமையானது.
எம்மொழி யார்க்கும் எளிது? – எந்த மொழி எல்லார்க்கும் எளிமையானது?
2. அன்றுமுதல் பாடம் கற்றோம். – அன்றிலிருந்து பாடம் கற்றோம்.
அன்று முதல் பாடம் கற்றோம். – அன்றைக்கு முதலாம் பாடத்தைக் கற்றோம்.

3. இடைச் சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதினால் ஏற்படும் பொருள் மாற்றத்திற்குச் சான்றுகள் தருக.
முதல் : அன்று முதலமைச்சர் வந்தார்.
அன்றுமுதல் அமைச்சர் வந்தார்.
கண் : அவன் கண்பெற்று மகிழ்ந்தான்.
அவன்கண் பெற்று மகிழ்ந்தான்.

4. தொடரமைப்பை மாற்றினால் பொருள் மாறிவிடும் என்பதற்கு உரிய சான்று தருக.
➤ "ஆண்டுதோறும் மறைந்த தி. ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்." – இவ்வாறு எழுதுவது தவறான பொருள் தருகிறது.
➤ "மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்" என்பதே, சரியான தொடராகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. **இரட்டைக்கிளவிச் சொற்களை எவ்வாறு எழுத வேண்டும்?**

➤ இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

**சான்று :** படபடவெனச் சிறகை அடித்தது. (சரி)

படபட எனச் சிறகை அடித்தது. (தவறு)

6. **வல்லின மெய்களால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**

1. பிட்டுத் தின்றான் – தின்பண்டத்தைக் கையால் பிட்டுத் தின்றான்.
   பிட்டு தின்றான் – பிட்டு எனும் தின்பண்டத்தைத் தின்றான்.
2. உள்ளக் கருத்து – உள்ளத்தில் எழுந்த கருத்து.
   உள்ள கருத்து – இருக்கும் கருத்து.

7. **காற்புள்ளியால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**

1. "அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்."
   – 'அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள்' எனப் பொருள்படுகிறது.
2. "அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.
   – 'அந்தப் பெண்ணின் அக்காள், அவளது வீட்டிற்குச் சென்றாள்' எனப் பொருள்படுகிறது.

8. **முறையின்றிப் பிரித்தும் சேர்த்தும் எழுதுவதால் ஏற்படுகின்ற பொருள் மாறுபாட்டிற்கு எடுத்துக்காட்டுத் தருக.**

நம்பியார்கூடச் சென்றார்; நம்பி யார்கூடச் சென்றார்.

9. **உரையாடும்போது பொருள் குழப்பம் ஏற்படாமைக்குக் காரணம் என்ன?**

➤ இயல்பாக உரையாடும்போது குரலின் ஏற்ற இறக்கம், சொற்களின் அழுத்தம் அல்லது குழைவு, இறுதிச் சொல்லின் உணர்ச்சி ஆகியவற்றால், பொருள் உணர்வில் எந்தக் குழப்பமும் ஏற்படுவதில்லை.

10. **இடைச்சொற்கள் எவை? எவ்வாறு எழுத வேண்டும்?**

➤ பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்பவை இடைச்சொற்கள். இவற்றைப் பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சேர்த்தே எழுத வேண்டும்.

**எ–கா :** இராமன்பால் (இராமனிடம்), இராமன்கண் (இராமனிடம்)

11. **உரிச்சொற்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும்?**

➤ உரிச்சொற்களைப் பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும்போது சேர்த்தே எழுத வேண்டும்.

**சான்று :** கடிமனம் (சரி), கடி மனம் (தவறு)

12. **துணைவினையுடன் கூடிய சொற்களை எவ்வாறு எழுத வேண்டும்? விளக்குக.**

➤ துணைவினையுடன் கூடிய சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

**சான்று :** பேசியபடி பணம் கொடுத்தான். (பேசியவாறு)

பேசிய படிபணம் கொடுத்தான். (படியளவு)

13. **உடம்படும்மெய்களை எவ்வாறு எழுத வேண்டும்? சான்று தருக.**

➤ உடம்படுமெய்களைச் சொற்களில் சேர்த்தே எழுத வேண்டும்.

**சான்று :** மணியடித்துச் சொன்னான். (மணி எழுப்புதல்)

மணி அடித்துச் சொன்னான். (மணி என்பவன் யாரையோ அடித்தான்.)

14. **பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதி சேர்ந்த சொற்களை எவ்வாறு எழுத வேண்டும்?**

➤ பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.

**எ–கா :** ஈக்கள் மொய்த்தன. (சரி), ஈ கள் மொய்த்தன. (தவறு)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கூடுதல் சிறுவினாக்கள்

**1. சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் ஏற்படும் பொருள் வேறுபாடுகள் குறித்து எழுதுக.**

| | |
|---|---|
| எம் மொழி யார்க்கும் எளிது | எம்மொழியார்க்கும் எளிது |
| அப் பாவின் நலங் காண்க | அப்பாவின் நலங்காண்க |
| ஐந்து மாடிவீடு | ஐந்துமாடி வீடு |
| அன்றுமுதல் பாடம் கற்றோம் | அன்று முதல்பாடம் கற்றோம் |

இவ்வாறு சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

**2. காற்புள்ளியும் பொருள் மயக்கமும் பற்றிச் சான்றுடன் விளக்குக.**

➤ எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ, இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறு பொருளைத் தந்துவிடும்.

**சான்று :**

i. அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.

இப்படி காற்புள்ளியிட்டு எழுதும்போது, ‘அந்தப் பெண்’ தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது.

ii. அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.

இத்தொடரில், ‘அந்தப் பெண்ணின் அக்காள்’, தனது வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள் வேறுபடுவதை அறியலாம்.

## கூடுதல் பலவுள் தெரிக

1. சரியானதைத் தேர்க. **(PTA - 5)**

அ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) பணிவிடை செய்ய, இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
ஈ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.

**விடை : இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.**

2. பிழையற்ற தொடரைக் கண்டறிக. **(Mar. - 20)**

அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.
ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது.
இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.
ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.

**விடை : அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.**

3. பொருத்தமில்லாததை எழுதுக.

அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான். ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றான்.
இ) அவள் வெண்மதியிடம் பேசினாள். ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.

**விடை : ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.**

4. சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் ______ ஏற்படுகின்றன.

அ) பிழைகள் ஆ) பொருள்
இ) இலக்கணப்பிழை ஈ) பொருள் மாறுபாடுகள்

**விடை : ஈ) பொருள் மாறுபாடுகள்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. இடைச் சொற்களை ______ எழுத வேண்டும்.

அ) பிரித்து ஆ) வாக்கியமாக இ) சேர்த்து ஈ) ஒன்றுபோல்

**விடை : இ) சேர்த்து**

6. ______ பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும்போது சேர்த்தே எழுத வேண்டும்.

அ) இடைச்சொற்களை ஆ) வினைச்சொற்களை

இ) உரிச்சொற்களை ஈ) திசைச்சொற்களை

**விடை : இ) உரிச்சொற்களை**

7. தமிழில் படர்க்கைப் பலர்பால் சொல்லாகிய 'தாங்கள்' என்பது தற்போது _____இடத்திலும் வருகிறது.

அ) படர்க்கை ஆ) தன்மை இ) எதுவுமில்லை ஈ) முன்னிலை

**விடை : ஈ) முன்னிலை**

8. 'அது' என்னும் வேற்றுமை உருபு ______ உரியது.

அ) அஃறிணைக்கு ஆ) உயர்திணைக்கு இ) ஐந்திணைக்கு ஈ) எதுவுமில்லை

**விடை : அ) அஃறிணைக்கு**

## கற்பவை கற்றபின்

**தொடர்களைப் பொருள் மயக்கமின்றி எழுத, வழிகாட்டும் உரைநடை நெறிகளைப் பின்பற்றி ஐந்து தொடர்களை எழுதுக.**

மிதிவண்டியில் சென்றவர் பேருந்து மோதிக் காயம்.

கோவலன் மதுரைக்குச் சென்றான்.

மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்.

அவன் வெண்மதியிடம் பேசினான்.

சென்னையிலிருந்து நேற்று வந்தான்.

பறவைகள், நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றன.

குதிரையும் யானையும் வேகமாக ஓடின.

பறவை, படபடவெனச் சிறகை அடித்தது.

குரங்குகள், பழங்களைப் பறித்து உண்டன.

மணமகள், உற்றார் உறவினர் புடைசூழ மணமேடைக்கு வந்தாள்.

## மொழியை ஆள்வோம்

**தமிழாக்கம் தருக.** (PTA - 6)

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life - and that is the main theme of this chapter - let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

மனித வளர்ச்சி நோக்கத்தின் அடிப்படையில், கல்வி என்பது தன்னிறைவு அளிக்கக்கூடியதே தவிர, முற்றுப் பெறக்கூடிய ஒன்றன்று. கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை. அதுமட்டுமன்றிக் கல்வியே மக்களின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வாயிலைத் திறக்கும் திறவுகோலாகவும் இருக்கின்றது. கல்வியே பலவிதமான வேலைவாய்ப்புகளையும் உருவாக்கி, வருவாயையும் அதிகரிக்கச் செய்கிறது. வாழ்வில் சிறந்த வாய்ப்புகளை உருவாக்குவதே கல்வியின் பொதுவான நோக்கமாக இருக்கிறது என்று, பொருளியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். என்றாலும், எந்தப் பொருளாதாரப் பிரதிபயனும் எதிர்பார்க்காமல் கல்வியைப் பொதுவாக எல்லாருக்கும் புகட்டுவதன்மூலம், ஒரு நாட்டின் வசதிகளையும் வாய்ப்புகளையும் வருவாய்களையும் அதிகரிக்கச் செய்ய முடியும் என்பதே, கல்வியை ஆராய்ந்த பொருளாதார வல்லுநர்களின் பொதுவான கருத்தாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இலக்கிய நயம் பாராட்டுக.** (PTA - 3)

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி,
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க,
ஊற்றெடுத்த அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று,
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

**– நாமக்கல் கவிஞர்.**

**ஆசிரியர் குறிப்பு** : நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை எழுச்சியூட்டும் தேசபக்திப் பாடல்கள் பல பாடி, தேசியத்தையும் காந்தியத்தையும் போற்றினார். "பெற்றெடுத்த தமிழ்த்தாயை..." எனத் தொடங்கும் அவரது பாடலில் அமைந்துள்ள நயங்களை இங்கு ஆராய்வோம்.

**மையக்கருத்து** : உறக்கத்திலிருந்த தமிழரின் அகக் கண்களைத் திறந்துவிட்ட பாரதியார், உண்மையில் ஓர் ஆசான் ஆவான் என்பது இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**எதுகை** : அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து அளவு ஒத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.

பெற்றெடுத்த, ஊற்றெடுத்தே
கற்றுணர்ந்தே, தெற்றெனநம் } அடிஎதுகை

**மோனை** : அடிகளிலோ சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றிவருவதுமோனை.

**க**ற்றுணர்ந்தே, **க**ம்பனோடு
**தெ**ற்றெனநம், **தெ**ய்வக்கவி } சீர்மோனை

**அணி** : செய்யுளில் அழகு ஊட்டும் சொற்களோ, தொடர்களோ அமைவதனை அணி என்பர். தமிழ்த்தாய், பாரதி ஓர் ஆசான் ஆகிய தொடர்களில் உருவகங்கள் அமைந்துள்ளன. எனவே, இப்பாடலில் 'உருவக அணி' அமைந்துள்ளது எனலாம்.

**சந்தம்** : இசையுடன் பாடத்தக்க ஓசை நயத்தைப் பெற்றுச் சந்த நயத்துடன் இப்பாடல் **எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாக** அமைந்து, பாடி மகிழ்வதற்கு ஏற்ற சந்த நயத்தோடு பொருள் நிறைவையும் பெற்றுள்ளது.

**சுவை** : பாரதி குறித்த பெருமையைப் பாடல் காட்சிப்படுத்துவதனால், '**பெருமிதச்சுவை**' புலனாகிறது.

நாமக்கல் கவிஞரின் "பெற்றெடுத்த தமிழ்த்தாயை..." எனத் தொடங்கும் பாடலானது எதுகை, மோனை, அணி, சந்தம், சுவை என்னும் பல நயங்களைக் கொண்டதாகவும் படிப்போரைச் சிந்திக்கச் செய்வதாகவும் விளங்குவதைக் கற்றோர் அறிவர்.

**கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக**

எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
வெறுமணல் பரப்பாய் விரிந்துகிடக்க
ஓணான்கள் முட்டையிட
கள்ளிகள் பிழைத்திருக்க
பிள்ளைகள் விளையாட
பன்றிகள் மேய்ந்திருக்க
வானத்தில் மேகமுண்டு
சூரியனில் மழையுண்டு
காகமோ குருவியோ
நிழல் ஒதுங்க
ஆறெங்கும் முள்மரமுண்டு
எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
ஆற்றுக்கோர் ஊருண்டு
ஊருக்கோர் சனமுண்டு
வாழ்வைப்போல் ஒன்றுண்டு.

**– இளங்கோ கிருஷ்ணன்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### விழிப்புணர்வு உரை

அனைவருக்கும் வணக்கம்!

எங்கள் ஊரில் எங்களுக்கும் ஓர் ஆறு உண்டு. பொதுஉடைமை கொள்கையைச் சொல்லாமல் சொல்லும் எங்கள் ஊர் ஆறு, வெளிப்படுத்தும் செய்திகளோ ஆயிரம். வெள்ளம் கரைபுரண்டு ஓடாத நேரத்திலே வெற்று மணல் பரப்பாய் விரிந்து கிடக்கும் எங்கள் ஆற்றின் ஓரத்திலும் நடுவிலும் உயர்திணை, அஃறிணை என்னும் வேறுபாடுகளைக் காண்பது அரிதாகும். இருதிணை சார்ந்த உயிரினங்களும் அதற்கு ஒன்றுதான்.

ஓணான்கள் முட்டையிட, கள்ளிகள் பிழைத்திருக்க, எங்கள் வீட்டுப் பிள்ளைகள் விளையாட, பன்றிகளும் மேய்ந்திருக்கும் வெற்று மணலாய்ப் பரந்து விரிந்து கிடக்கும் எங்கள் ஊர் ஆறானது உணர்த்தும் பொதுவுடைமைச் சித்தாந்தம் புதுமையிலும் புதுமை என்றே கூறலாம்.

இடம் விரிந்த வானம் மேகத்தை ஏற்றுக் கொள்ளும். சூரியன், மழைநீரை ஆவியாக்கி ஏற்றுக்கொள்ளும். ஆற்றங்கரை யோரம் வளர்ந்திருக்கும் முள்மரம்கூடக் காகம், குருவிகளுக்கு இடம் கொடுக்கும். எங்கள் ஊரில் ஓடும் ஆறானது உணர்த்தும் சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடைமை, பொதுநலன் போன்றவை, எங்கள் ஊரில் வாழும் அத்தனை மக்களுக்கும் ஏனோ புரிவதில்லை?

ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஓடினாலும் ஆறானது எவரையும் எதையும் ஒதுக்குவதில்லை. எங்களை அதன் நீரற்ற மேனிமீது விளையாடி மகிழ அனுமதிக்கிறது. ஆனால், நாங்கள் ஆற்றின் ஓரத்தில் ஒதுங்கி வாழ்கிறோம் என்பதற்காக, எங்கள் ஊரின் நடுவிலே கொடிகட்டி வாழ்கின்றவர்கள், அவர்களின் வாழ்வைப்போல எங்களுக்கும் ஒரு வாழ்வு உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ள ஏன் மறுக்கின்றனர்?

ஒன்றே குலமாக வாழ்ந்திட, எங்கள் ஊர் ஆறு உணர்த்தும் பாடத்தை, இவர்கள் என்று கற்றிட கற்ற வழி ஒழுகிடப் போகிறார்களோ?

### வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினை களையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள். **(PTA - 4)**

   **விடை:** என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கை யின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

   **விடை:** எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறிச் செல்வதனைக் கண்டு, ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றித் துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

3. நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

   **விடை:** நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்த கவனம், அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும். **(PTA - 3, Mar.-20)**

4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும். **(Sep.-20 Mar.-24)**

   **விடை :** மாணவர்கள், பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமை யினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும். **(Sep.-22, Mar.-23)**

   **விடை :** ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்துகொண்டு, அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக**

வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே – 5, 2019

திருச்சிராப்பள்ளி

வேலை காரணமாக வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

திருச்சி உறையூர் அன்பு நகரில் வசிக்கும் தங்கவேல் – பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு மே – 5ஆம் தேதி இனிதே நடைபெற உள்ளது.

உறவினர் கூட்டத்தில் தங்கவேல் – பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள் சந்தித்துப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள். இந்நிகழ்ச்சியைத் தங்கவேல் அவர்களின் கொள்ளுப் பேத்தி செல்வி கண்மணி அவர்கள் ஒருங்கிணைக்கிறார்.

**அறிவிப்புப் பலகை**

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா**

**நாள்** : 05.05.2021

**இடம்** : அன்புநகர்,
உறையூர், திருச்சிராப்பள்ளி.

**வாழ்த்துபவர்கள்** : தங்கவேல் – பொன்னம்மாள் இணையர்

**வாழ்த்து பெறுபவர்கள்** : இணையரின் வழித்தோன்றல்கள்
மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள்

**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்** : செல்வி. கண்மணி (கொள்ளுப் பேத்தி).

## மொழியோடு விளையாடு

**பட்டிமன்றம்**

**தலைப்பு : தனி மனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களா? நண்பர்களா?**

**தலைவர் :**

அன்பிற்குரியவர்களே! இன்று நம்மிடையே இரு அணியினர் மிகச் சிறந்தவொரு சிந்தனைக்குரிய, சிந்திப்பதற்குரிய கருத்தைப் பற்றி விவாதிக்கப் போகிறார்கள். ஒருவனுக்கு, வளர்ச்சி என்பது எவ்வாறு அமையும் என்பது குறித்து இவர்கள் விவாதிக்கப் போகிறார்கள். நம்மில் சிலர் உறவினர்களின் துணையோடு வளர்ந்திருப்போம்; சிலர் நண்பர்களின் உதவியால் வளர்ச்சி பெற்று வாழ்வில் சாதித்து இருப்பார்கள். இனி, இவர்களின் சொல்வழி அரிய கருத்துகளைச் சுவைத்து மகிழ்வோமா? முதலில் செல்லையா பேச வருகிறார். செல்லையா கருத்துகளை எடுத்துரைக்கலாம்.

**செல்லையா :**

எல்லாருக்கும் வணக்கம். தனிமனித வளர்ச்சிக்கு உதவுபவர்கள் உறவினர்களே என நான் பேசவுள்ளேன். என் அனுபவம் இதுதான். ஏழ்மை நிலையில் வாடிய எங்கள் குடும்பத்தைப் பார்த்து, எங்கள் உறவினர்களில் சிலர் பலவகையிலும் உதவி செய்தனர். என் தந்தைக்கும் தாய்க்கும் வேலை இல்லாதபோது வேலை கொடுத்து உரிய ஊதியத்தையும் அளித்தனர். அதனால் நான் படிக்க முடிந்தது. என் வளர்ச்சி கண்டு என் உறவினர் மகிழ்ந்து பாராட்டியது உண்டு. அதனால் தனிமனித வளர்ச்சிக்கு உறவினர்களே பெரிதும் உதவுகின்றனர் எனக் கூறி என் உரையை முடிக்கிறேன்.

**முத்துச்சாமி :**

ஐயா, உங்கள் எல்லாருக்கும் வணக்கம். எனக்கு முன் பேசியவர் அவர் அனுபவத்தைச் சொன்னார். நான், என் அனுபவத்தில் பெற்ற கருத்தைக் கூறுகிறேன். எங்கள் ஊரில் அண்மையில் ஒரு விபத்தில் பெற்றோர் இறந்தனர். அவர்களின் இரண்டு பிள்ளைகள் துணை இன்றி நின்றனர். அப்போது உறவு என்று கூறி ஒருவர் முன்வந்து அந்த இருவரையும் அழைத்துச் சென்றார். அவர்கள் இருவரும் எனக்குத் தெரிந்து பள்ளியில் நன்றாகப் படித்துக்கொண்டுதான் இருந்தனர். அழைத்துச் சென்ற உறவினர் அவர்களைப் படிக்க

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அனுப்பாமல், தம் வீட்டு வேலைகளைச் செய்ய வைத்துக் கொண்டனர். அதைத் தட்டிக் கேட்க எவருக்கும் துணிவு இல்லை. இந்த நிலையில் அந்தப் பையன்களின் நண்பன் செய்தியைக் குழந்தைகள் நலத்துறைக்குத் தெரிவித்துக் காப்பாற்றி, காப்பகத்தில் சேர்த்துப் படிக்க வழிசெய்தான். இங்கே உதவியது நட்பா, உறவா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

**எழிலி :**

நண்பர்களே, வணக்கம். எல்லா வேளைகளிலும் நண்பர்கள் உதவுவதில்லை. பெரும்பாலும் உறவுகளே அதிகம் உதவுகின்றனர். பெரியப்பா, சித்தப்பா, மாமா , பெரியம்மா, சின்னம்மா, அத்தை இன்றும் எத்தனை எத்தனை உறவுகள் உள்ளனர். அவர்கள் அரவணைப்பில் வளர்ந்து வாழ்வு பெற்றவர்கள்தான் அதிகமாக இருக்க முடியும். என் தாத்தா, பெற்றோரை இழந்து அநாதையாக நின்றபோது, அவரது தூரத்து உறவினரான மாமாவும் மாமியும்தான் அவரைத் தங்கள் பிள்ளைகளோடு ஒரு பிள்ளையாக வளர்த்து ஆளாக்கியதை அவர் சாகும்வரை சொல்லிக் கொண்டிருந்தார். அந்தக் குடும்பத்தின் உறவும் ஆதரவும் இன்றும் என்வரை தொடர்கிறது. எனவே, உறவுகளே உதவும் என முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.


**மலர்விழி :**

வணக்கம். எனக்குமுன் பேசியவர் உறவை ஆதரித்தார். இதிகாச காலம்முதல் இன்றுவரை உறவுகள், சொந்தங்களைப் போட்டு மிதிப்பதைத்தான் காணமுடிகிறது. பாண்டவர்களைத் துரியோதனன் கூட்டம் என்ன பாடு படுத்தியது! சகுனி தன் சகோதரியின் பிள்ளைகளை உறவாடியே அழித்தான் அல்லவா? நண்பனான கண்ணனால்தானே பாண்டவர் பிழைக்க முடிந்தது. இன்று பத்திரிகையைத் திறந்தால் உறவினர்களுக்குள் சொத்துத் தகராறால் வெட்டுக் குத்தைத்தானே பார்க்கிறோம். இதுதான் உறவுகளால் கிடைக்கும் நன்மை. பொதுவாக நண்பர்களே பலவகையிலும் துணை நிற்கிறார்கள் எனக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**தலைவர் :**

உங்கள் உரைகளைக் கேட்டு எல்லாரும் மகிழ்ந்தோம். உண்மையான பல செய்திகளைச் சொல்லி, அனுபவங்களைக் கூறி அவரவர் நிலைக்கு ஆதரவு தேடினீர்கள். நான் ஒன்று சொல்கிறேன். கவனியுங்கள்! நம் நாட்டில், "கொண்டு வந்தால் தந்தை! கொண்டு வந்தாலும் கொண்டு வராவிட்டாலும் தாய்! சீர் கொண்டு வந்தால் சகோதரி! கொலையும் செய்வாள் பத்தினி! உயிர்காப்பான் தோழன்!" என்னும் கதைச் சொலவடை வழக்கு ஒன்று உண்டு. இதில் இருந்தே உறவுகளும், நட்பும் எத்தகையன என்பதை அறிந்து கொள்ளலாம். பொருள் கொண்டு வந்தால் ஆதரவு உண்டு. "இல்லானை இல்லாளும் வேண்டாள்! ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்" என்பது ஒரு பழம்பாடல் வரி. உலகில் எல்லாவகை மக்களும் உள்ளனர். உறவுகளை உறவுகள் ஆதரிப்பதும் உண்டு; வெறுத்து நசுக்குவதும் உண்டு! நண்பர்களை நண்பர்கள் ஆதரிப்பதும் உண்டு; உறவாடி வஞ்சகமாகக் கெடுப்பதும் உண்டு! இது உலகத்து இயற்கை. உறவோ நட்போ இல்லாத மிகச் சிலர் இந்தச் சமுதாயத்தில் இன்னார் இனியர் என்னாது தேவைப்பட்டபோது உதவிக்கரம் நீட்டுவதும் உண்டு. அத்தகைய நல்லோர்களால்தான் உலகம் வாழ்கிறது என்பதை "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்று வள்ளுவர் கூறுவார். நீங்கள் எல்லாரும் பண்புடை மக்களாக வாழ்ந்து, பயன்பட வாழுமாறு கூறி வாழ்த்தி அமர்கிறேன். வணக்கம்.

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



குறைந்த பொருள்களும் நிறைந்த மனிதர்களும்
உடையது பண்டைய குடும்பம்! குறைவான மனிதர்களும்
நிறைய பொருள்களும் இருப்பது நவீன குடும்பம்!
சேர்ந்து வாழ்ந்ததும் சேர்ந்து உண்டதும்
அன்றைய குடும்பம்! தனித்தே வாழ்வதும்
தனித்தே உண்பதும் இன்றைய குடும்பம்!
மணவிழா ஊர்விழா போன்றவற்றில்
ஊரே திரண்டிருக்கும் பழங்காலக் குடும்பம்!
பக்கத்து வீட்டில் கொலை நடந்தாலும்
காணாமலிருப்பது புதிய குடும்பம்!
எங்கே போகிறோம், நாமும் நமது குடும்பமும்?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக

எ – கா : குமரன் வீடு பார்த்தேன். – குமரனை வீட்டில் பார்த்தேன். (Sep-21)

1. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.

விடை : மாறனைப் பேச்சுத்திறனில் யார் வெல்ல முடியும். / மாறனின் பேச்சுத் திறனை யாரால் வெல்ல முடியும்.

2. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.

விடை : போட்டியில் வெற்றி பெற்றதால், கலைச்செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.

3. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

விடை : காலையில் எழுந்து படித்தால், நமக்கு நன்மை ஏற்படும்.

4. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.

விடை : அனைவரையும் அன்புடன் அழைத்தவனுக்குத் துன்பம் தர யாருக்கு மனம் வரும்?

5. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம். (Sep-21)

விடை : சான்றோருக்கு மதிப்புக் கொடுத்தால், வாழ்வில் உயரலாம்.

## நிற்க அதற்குத் தக

| சூழல் | தவிர்க்க வேண்டிய ஆடம்பரச் செலவுகள் என நீவிர் கருதுவனவற்றைப் பட்டியலிடுக | பொறுப்புள்ள மகனாக / மகளாக உங்கள் பெற்றோர்க்கு என்னென்ன உதவிகள் செய்வீர்கள் |
|---|---|---|
| உங்கள் பெற்றோர், வேலைக்குச் செல்பவர்கள். அவர்களின் மாத ஊதியம், குடும்பச் செலவிற்கும் படிப்புச் செலவிற்கும், தாத்தா பாட்டியைக் கவனித்துக் கொள்வதற்கும் மட்டும் போதுமானதாக உள்ளது. இச்சூழலில் பொறுப்புள்ள ஒரு மகனாக / மகளாகப் பெற்றோர்க்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? | ஆடம்பரப் பொருள்களை வாங்க மாட்டேன். பள்ளிக்குச் செல்ல, இருசக்கர வண்டி வாங்கித் தருமாறு வற்புறுத்த மாட்டேன். குளிர்பானம் முதலானவற்றை வாங்கிப் பருகமாட்டேன். | பள்ளி செல்ல, அரசுப் பேருந்தை மட்டுமே பயன்படுத்துவேன். போட்டித் தேர்வுகள் எழுதிப் பரிசு பெற்று என் செலவுகளை ஈடுகட்டப் பெற்றோருக்கு உதவுவேன். |

## படிப்போம் பயன்படுத்துவோம் (உணவகம்)

**Lobby** – ஓய்வறை
**Tips** – சிற்றீகை
**Checkout** – வெளியேறுதல்
**Mini meals** – சிற்றுணவு

குடும்பம் குறித்த கலைச்சொற்கள் அறிக.

பொருண்மை விரிவாக்கம் (Semantic extension)
தன்மனை (neolocal)
மணந்தகம் (Family of Procreation)
தாய முறை (Matrilocal)
தந்தையகம் (Patrilocal)
தனிக்குடும்பம் (Nuclear Family)
தொடக்கநிலை குடும்பம் (Elementary Family)
எளிய நெருக்கமான குடும்பம் (Simple Immediate Family)
விரிந்த குடும்பம் (Extended Family)
நேர்வழி விரிந்த குடும்பம் (Lineally extended Family)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# வாழ்வியல்

# திருக்குறள்

## குறுவினாக்கள்

**1. 'முயல்வாருள் எல்லாம் தலை' என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

★ அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவரே, முயல்வாருள் எல்லாம் தலையாவர் என வள்ளுவர் சுட்டுகிறார்.

**2. ஞாலத்தின் பெரியது எது?** (Mar.-24)

★ உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது ஞாலத்தின் மிகப் பெரியதாகும்.

**3. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?** (Mar.-23)

★ ஒருவர் செய்த நன்மையை மறக்கக்கூடாது. அவர் செய்த தீமையை அப்போதே மறக்க வேண்டும்.

**4. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?**

★ பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலே, செல்வம் குறையாது இருப்பதற்கான வழி என, வள்ளுவம் உரைக்கிறது.

**5. சினத்தை ஏன் காக்க வேண்டும்?** (May - 22)

★ ஒருவர் தன்னைத்தானே காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்தல் வேண்டும். காக்காவிட்டால், அச்சினமே அவரை அழித்துவிடும்.

## கூடுதல் வினாக்கள்

**6. இல்வாழ்வின் பயன் எது?** (PTA - 3)

➤ அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே, பண்பும் பயனுமாகும். அதாவது, இல்வாழ்வின் பயன் அறம் செய்தலாகும்.

**7. திருக்குறளின் பெருமையை விளக்கும் பழமொழிகள் யாவை?**

➤ 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி'.

➤ 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்!'

**8. யார் தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுவார் என முப்பால் கூறுகின்றது?**

➤ வாழவேண்டிய அறநெறியில் நின்று உலகில் வாழ்கின்றவரே, தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுவார் என முப்பால் கூறுகின்றது.

**9. வையகமும் வானகமும் எதற்கு ஈடாகாது எனக் குறள் கூறுகிறது?**

➤ தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும், தனக்கு உதவி செய்த ஒருவருக்கு, மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது எனக் குறள் கூறுகிறது.

**10. பயன்தூக்கார் செய்த உதவி குறித்து வாயுறை வாழ்த்துக் கூறும் செய்தி யாது?**

➤ எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் ஒருவர் செய்த உதவியின் சிறப்பை ஆராய்ந்து பார்த்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும் என்கிறது வாயுறை வாழ்த்து.

**11. பயன் தெரிவார் செயல் யாது?**

➤ செய்த உதவி தினை அளவினதாக இருந்தாலும், அந்த உதவியின் பயனை ஆராய்ந்து தெரிந்தவர், அதனைப் பனையளவாகக் கொண்டு போற்றுவார்.

**12. யாருக்கு உய்வில்லை எனத் திருக்குறள் கூறுகிறது?**

➤ அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பு இருக்கும்.

➤ ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு உய்வே இல்லை என்கிறது திருக்குறள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**13. பழியான செயல்களை எவர் செய்யார்?**

- நடுவுநிலையைக் கைவிட நாணம் கொள்ளும் பண்பாளர், பெரும்பயன் கிடைப்பினும், பிறர் பொருளைக் கவரும் பழியான செயல்களைச் செய்யார்.

**14. ஐம்புலன்களையும் வென்றவரின் செயல்பாடு யாது?**

- தாம் வறியர் என்ற காரணத்தை முன்வைத்துப் பிறர் பொருளை விரும்புதலை, ஐம்புலன்களையும் வென்ற தெளிவுடையோர் செய்ய மாட்டார்.

**15. ஊன் தருவார் எப்போது இல்லாவர்? / ஊன் தருவார் இல் – எப்போது?**

- 'புலால்' என்னும் ஊனைத் தின்னும் பொருட்டு உயிர்களைக் கொல்பவர்கள் இல்லை என்றால், வருவாய்க்காக ஊனை விற்பவர் எவரும் இருக்க மாட்டார்கள்.

**16. எதனைக் 'காவாக்கால் ஏன்?' என்கிறார்?**

- சினம் செல்லுபடி ஆகாத வலியவரிடத்தில், "அந்தச் சினத்தைக் காத்தால் என்ன, காவாவிட்டால் என்ன?" என்கிறார்.

**17. வெகுளியை ஏன் மறத்தல் வேண்டும்?**

- தீமையான விளைவுகள் சினத்தினாலேயே ஏற்படுகின்றன. ஆதலால், எவரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதனை மறத்தல் வேண்டும்.

**18. சினம் கொடிய பகை – ஏன்?**

- சினமானது முகத்தின் மலர்ச்சியையும் அகத்தின் மகிழ்ச்சியையும் ஒரே சமயத்தில் அழிக்க வல்லதாகும். அதனால், சினத்தைவிட வேறு பகை இல்லை என்கிறார்.

**19. சேர்ந்தாரைக் கொல்லி எது? எவ்வாறு?**

- 'சினம்' என்பது தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பாகும். அத்துடன் அந்தச் சினமாகிய நெருப்பு, ஒருவருக்குப் பாதுகாப்பான தெப்பமாக இருக்கும் சுற்றத்தையும் அழிக்கும்!

**20. நூல் பல கற்பினும் மிகுவது எது?**

- நுட்பமான நூல்கள் பலவற்றை ஒருவர் கற்றிருந்தாலும், அவருக்கு இயல்பாக உளதாகும் அறிவே மேலோங்கித் தோன்றும்.

**21. சினத்தைக் காப்பவர் யார்?**

- தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் சினம் கொள்ளாமல் காப்பவரே, உண்மையில் சினத்தைக் காப்பவர் ஆவார்.

**22. சுற்றம் பேணச் செய்ய வேண்டுவனவாகக் குறள் கூறும் கருத்து யாது? ஏன்?**

- தன்னைச் சார்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு சினம்.
- ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் அது சுட்டழிக்கும்.
- எனவே, சுற்றத்தைப் பேணிப் பாதுகாக்கச் சினத்தை விடவேண்டும் என்கிறது குறள்.

**23. இருவேறு ஊழ்நிலை குறித்து வள்ளுவர் உரைப்பது யாது?**

- உலக இயல்பு, இருவேறு வகைப்படும். அவ் வூழ்நிலை,
- செல்வம் உடையவர், அறிவுடையவராக இருப்பதில்லை;
- தெளிந்த அறிவுடையோர், செல்வமுடையவராக இருப்பதில்லை என்பதாகும்.

**24. தன்னைத்தான் காக்க விரும்புபவன் என்ன செய்ய வேண்டும்? ஏன்?**

- துன்பம் நேராமல் ஒருவன் தன்னைத்தானே காக்கக் கருதுவானாயின், தன் மனத்தில் கோபம் உண்டாகாதவாறு அதனை அடக்கி ஆளல் வேண்டும்.
- அங்ஙனம் கோபத்தை அடக்கி ஆளாவிட்டால், அக்கோபமே அவனை அழித்துவிடும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## சிறுவினாக்கள்

1. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (PTA - 6, May - 22, Sep.-20, 22)

**அணிச்சுட்டல்** : இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி, நிரல்நிறை அணியாகும்.

**அணியிலக்கணம்** : சில சொற்களை முதலில் ஒரு வரிசையில் வைத்து, அச்சொற்களோடு தொடர்புடைய சொற்களை அடுத்த வரிசையில் முறைமாறாமல் சொல்வது, நிரல்நிறை அணியாகும்.

**சான்று விளக்கம்** : இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால், அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்.

**அணிப்பொருத்தம்** : இக்குறட்பாவில் அன்பு, அறன் என்ற சொற்களை முதலில் ஒரு வரிசையில் நிறுத்திய திருவள்ளுவர், அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்து, '**அன்பே பண்பு, அறமே பயன்**' எனப் பொருள் கொள்ளுமாறு அமைத்துள்ளார். எனவே, இக்குறட்பா, '**நிரல்நிறை அணி**'க்குப் பொருத்தமாயிற்று.

2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

★ அறச்செயல்கள் செய்து வாழுகின்ற இல்லற வாழ்க்கையானது, அன்பினால் உருவாகும் பண்பினையும், அறச்செயலினால் உருவாகின்ற புகழாகிய பயனையும் உடையதாகும். அறத்தின் இயல்போடு இல்லற வாழ்க்கை வாழ்பவர்களே மேன்மைப்பட்ட மனிதர்களாவர்.

★ அறநெறிகளின்படி வாழ்கிறவன் தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுவான். இல்வாழ்க்கை சிறப்புற, அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் இவ்வாறு விளக்குகிறார்.

3. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? – குறள்வழி விளக்குக. (PTA - 5, Sep.-22)

★ ஓர் உதவியும் தான் செய்யாதிருந்தும், தனக்கு உதவி செய்த ஒருவருக்கு, மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

★ உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகின் அளவைவிட மிகப் பெரியதாகும். பயன் கிடைக்குமா என்று ஆராயாமல், ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

★ தினையளவே உதவியை ஒருவர் செய்தபோதிலும், அதன் பயனைத் தெரிந்தவர், அதனைப் பனையளவாகக் கொண்டு போற்றுவர். நன்றி உயர்ந்தது என்பதை இவ்வகைகளில் குறள் விளக்குகிறது.

4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக. (PTA - 1, 4, Sep.-20)

★ தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும் என்பதால், சினத்தை எவரிடத்தும் வெளிப்படுத்தாமல் மறந்துவிட வேண்டும். முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட, நமக்கு வேறு பகை இல்லை.

★ ஒருவன் தன்னைத்தானே காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். காக்காவிட்டால், சினம் அவனை அழித்துவிடும்.

★ சினம், என்பது தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு போன்றது. அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

★ இச்செய்திகளால், சினத்தால் வரும் கேட்டினை வள்ளுவப் பெருந்தகை குறளில் விளக்குகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. **கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.**
**சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்** (PTA - 5)
**ஏமப் புணையைச் சுடும்.**

**அணிச்சுட்டல்** : இக்குறட்பாவில், '**ஏகதேச உருவக அணி**' பயின்று வந்துள்ளது.

**அணி விளக்கம்** : கவிஞர் செய்யுளில் இரு பொருள்களைக் கூறி, அவற்றில் ஒன்றைமட்டும் உருவகப்படுத்தி, இன்னொரு பொருளை உருவகம் செய்யாது விட்டு விடுவது, '**ஏகதேச உருவக அணி**' ஆகும்.

**அணிப்பொருத்தம்** : இக்குறட்பாவில் 'இனம்' என்பதைத் தெப்பமாக உருவகப்படுத்திய வள்ளுவர், சினம் என்பதை (நெருப்பாக) உருவகப்படுத்தவில்லை. எனவே, இக்குறட்பா, '**ஏகதேச உருவக அணி**' ஆயிற்று.

## கூடுதல் வினாக்கள்

6. **நிரல் நிறை அணியை விளக்கிச் சான்று தருக.** (Sep.-20,23)

**அணி இலக்கணம்** : ஒரு செய்யுளின் முதலில் சொன்னவற்றோடு தொடர்புடைய பொருளை வரிசையாக (நிரலாக) நிறுத்தி, அவ்வரிசைப்படியே பொருள் கொள்ளும் முறை **நிரல்நிறை அணி**யாகும்.

**சான்று** : அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**விளக்கம்** : இல்லற வாழ்வை நடத்துவோர் அன்பையும் அறத்தையும் கடைப்பிடித்து ஒழுகினால், அதுவே வாழ்க்கைக்கு உரிய பண்பினையும் பயனையும் முழுமையாகத் தரும்.

**அணிப்பொருத்தம்** : இக்குறட்பாவில் 'அன்பு, அறன்' என்ற சொற்களை முதலில் ஒரு வரிசையில் கூறிய திருவள்ளுவர், அவற்றோடு தொடர்புடைய 'பண்பு, பயன்' என்பனவற்றை அடுத்த வரிசையில் அதே முறையில் ('அன்பு – பண்பு; அறன் – பயன்' என) இணைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைத்துள்ளார். எனவே, இக்குறள் **நிரல் நிறை அணிக்குப்** பொருத்தமானதாயிற்று.

9. **'ஊழ்' குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.**

- நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்று அறிந்திருந்தபோதிலும், ஒருவருக்கு இயல்பிலே இருக்கும் அறிவுதான் எப்போதும் மேலோங்கி இருக்கும்.
- உலக இயல்பு இருவேறு வகைப்படும். ஒருவர் அறிவுடையவராவதற்கு ஆகும் ஊழினால், செல்வம் உடையவராக முடியாது. செல்வமுடையவராவதற்கு ஆகும் ஊழினால், அறிவுடையவராக முடியாது என்பது, இருவேறு ஊழ்நிலை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளாகும்.

8. **சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்** (Mar.-24)
**ஏமப் புணையைச் சுடும். – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**பயின்று வந்துள்ள அணி** : இக்குறளில் **ஏகதேச உருவக அணி** அமைந்துள்ளது.

**அணி இலக்கணம்** : "ஒரு செய்யுளில், ஒன்றுக்கொன்று தொடர்பு உடைய பொருள்களை உருவகம் செய்யும்பொழுது, ஒன்றை உருவகம் செய்து, பிறவற்றை உருவகம் செய்யாமல் கூறுவது **ஏகதேச உருவக அணி** எனப்படும்.

**அணி விளக்கம்** : 'இனம்' என்பது 'ஏமப்புணை'யாக உருவகம் செய்யப்பட்டுள்ளது; 'சினம்' நெருப்பாகவும், 'பிறவி' கடலாகவும் உருவகம் செய்யப்படவில்லை. எனவே, இது ஏகதேச உருவக அணி அமைந்த செய்யுளாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**7. ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.** (Mar.-23)

**அணி** : ஏகதேச உருவக அணி

**அணிவிளக்கம்** : செய்யுளில் கூறப்பட்டுள்ளவற்றுள் ஒரு பொருளை மட்டும் உருவகப்படுத்திவிட்டு, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**சான்று** : "சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**சான்று விளக்கம்** : சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அஃது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டு அழிக்கும்.

**அணிப்பொருத்தம்** : சினத்தை நெருப்பாகவும், இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யவில்லை. இப்படி, குறளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டதால், இக்குறள் ஏகதேச உருவக அணிக்குப் பொருத்தமாயிற்று.

**8. 'வெஃகாமை' குறித்துக் குறள் கூறும் செய்தியை எழுதுக.**

- வெஃகாமை என்பதற்கு விரும்பாமை என்பது பொருள். அதாவது பிறருக்கு உரிய பொருளை விரும்பாமை என்பதாகும்.

**வெஃகுதலால் விளையும் குற்றம் :**

- பெரும்பயன் விளைவதாயினும், பிறர் பொருளைக் கவரும் பழியான செயல்களை, நடுவு நிலையை விட்டுவிட நாணம் கொள்ளும் பண்புடையவர்கள் ஒருபோதும் செய்யார்.
- தாம் வறியவர் என்னும் காரணத்தைக் காட்டிலும், ஐம்புலனை வென்ற தெளிவுடையோர் பிறர் விரும்பாத செயலைச் செய்யமாட்டார்.

**வெஃகாமையின் பண்பு :**

- தன்னிடம் உள்ள செல்வம் குறையாமலிருக்க வழி என்னவென்றால், பிறருடைய கைப்பொருளை விரும்பாது இருத்தலேயாகும். இவ்வகையில் வெஃகாமையின் சிறப்பை வள்ளுவர் விளக்கியுள்ளார்.

**10. திருக்குறள் – நூல் குறிப்புத் தருக.**

- திரு + குறள் – திருக்குறள்.
- இந்நூல் சிறந்த குறள் வெண்பாக்களால் ஆனதால் இப்பெயர் பெற்றது.
- இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று.
- திரு – சிறப்பு அடைமொழி. குறள் இரண்டடி வெண்பா.
- திருக்குறள் என்பது, அடையடுத்த கருவி ஆகுபெயர்.
- திருக்குறள் ஓர் உலகப்பொதுமறை நூல்; அறவிலக்கியம்; தமிழர் திருமறை.
- மனித நாகரிகம் பிற நாடுகளில் தோன்றும் முன்னரே மனித வாழ்வின் மேன்மைகளையும், வாழ்வியல் நெறிகளையும் இந்நூல் வகுத்துக் காட்டியுள்ளது.
- இது, ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் முதலிய உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## நெடுவினாக்கள்

**1. 'செய்ந்நன்றியறிதலே அறம்' என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.**

**முன்னுரை :** (PTA - 2,6, Mar.-20)

உலக மொழிகள் போற்றும் பெருமையுடைய திருக்குறள், மனித வாழ்க்கையின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வளிக்க வல்லது. அப்படிப்பட்ட பெருமையுடைய திருக்குறள்வழி 'செய்ந்நன்றியறிதலே அறம்' என்பதற்குரிய சில கருத்துகளை நாம் ஆராய்வோம்.

**செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் ஈடு ஆகாது :**

ஓர் உதவியும் தான் செய்யாதிருந்தும், தனக்கு உதவி செய்த ஒருவருக்கு, மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**செய்ந்நன்றி ஞாலத்தினும் மிகப் பெரிது :**

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவைவிட மிகப்பெரியதாகும்.

**செய்த உதவி கடலினும் பெரிது :**

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

**தினை அன்று பனை :**

ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்தபோதிலும், அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவார்கள்.

**மறப்பதும் மறவாததும் :**

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது.

**உய்வும் உய்வின்மையும் :**

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும்; செய்த உதவியை மறந்தவருக்கு உய்வு என்பதே இல்லை.

**முடிவுரை :**

பிறர் நலம் பேணி வாழ்பவர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் அழியாமல் நிலைபெற்றிருக்கிறது. பிறருக்கு உதவி செய்து வாழ்வதே உயர்ந்த வாழ்க்கை. இந்த அறங்களைச் செய்ந்நன்றியறிதல் வாயிலாக, வள்ளுவர் விரிவாகக் கூறுகிறார்.

**2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க. (அல்லது) வெகுளாமை குறித்து திருவள்ளுவர் உரைப்பன யாவை?** (PTA - 1, Sep.-22)

**முன்னுரை :**

எல்லாக் கேடுகளும் சினத்தால் (வெகுளியால்) விளைகின்றன என்பதால், வாழ்வை மேன்மைப்படுத்தச் சினத்தை விட்டொழியுங்கள் என வள்ளுவர் கூறும் கருத்துகளைக் காண்போம்.

**சினம் கொள்ளக்கூடாத இடம் :**

சினம் (வெகுளி) செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் அதனைச் செலுத்தாமல் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர் ஆவார்; அந்தச் சினம் செல்லுபடியாகாத வலியவரிடத்தில் காத்தால் என்ன? காக்காவிட்டால்தான் என்ன?

**சினத்தை மறத்தல் நல்லது :**

சினத்தால் தீமையான விளைவுகளே ஏற்படும் என்பதால், எவரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்துவிட வேண்டும்.

**சினம் கொல்லும் :**

முகத்தின் மலர்ச்சியையும் அகத்தின் மகிழ்ச்சியையும் கொன்று அழிக்கும் சினத்தைவிட, நமக்குப் பகை வேறு இல்லை.

**சினம் கொண்டவர்க்கு விளையும் தீங்கு :**

ஒருவர் தன்னைத்தானே காத்துக்கொள்ள விரும்பினால், சினம் தோன்றாமல் காத்தல் வேண்டும்; அவ்வாறு காக்காவிட்டால் அந்தச் சினமே அவரை அழித்துவிடும்.

**சினம் என்பது கொல்லி :**

சினம், தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு; அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

**முடிவுரை :**

ஒருவரைக் குற்றவாளி ஆக்குவதும், கெட்டவராக்குவதும் சினமே; வெறுப்பை வளர்த்து உடைமைகளை அழித்து மதிப்பிழக்கச் செய்வதும் சினமே! அதனால், நம் வாழ்க்கையை மேம்படுத்தச் சினத்தைத் தவிர்க்க வேண்டும் என முப்பால்வழி அறிவுறுத்துகிறார் திருவள்ளுவர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

1. **படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.** (July-23)

| | |
|---|---|
|  | அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.<br>ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.<br>இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்.<br>**விடை: இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்.** |

2. **கடலின் பெரியது ______.** (July-23)

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி

**விடை : ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

3. **பின்வரும் நாலடியார்ப் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

| | |
|---|---|
| நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்<br>கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை<br>வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்<br>நினைப்ப வருவதொன் றில். | அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு.<br>ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு.<br>இ) ஊழில் பெருவலி யாஉள மற்றுஒன்று சூழினும் தான்முந்(து) உறும்.<br>**விடை : இ) ஊழில் பெருவலி யாஉள மற்றுஒன்று சூழினும் தான்முந்(து) உறும்.** |

4. **கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை எழுதுக.**

| | |
|---|---|
| உயர் அலுவலரின் வருகை<br>அலுவலகமே அல்லாடும்<br>அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே<br>கோப்புகளை விரைந்து முடிக்க<br>ஒழுங்கு செய்ய<br>நேரத்தில் இருக்க வேண்டும்<br>விரைகிறது மனம்<br>பரபரப்பும் மனவழுத்தமுமாய்<br>வண்டியை எடுக்கிறேன்<br>காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை<br>'போ அந்தப் பக்கம்'<br>உதறிச் செல்கிறேன் குழந்தையை. | **விடை :**<br>**"செல்இடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்இடத்துக் காக்கினென் காவாக்கால் என்."** |

5. **இலக்கணக்குறிப்புத் தருக.**

அன்பும் அறனும், பண்பும் பயனும், வையகமும் வானகமும், நகையும் உவகையும் – எண்ணும்மைகள்

நன்கலம் – பண்புத்தொகை

மறத்தல், பிறத்தல், வெஃகுதல் – தொழிற்பெயர்கள்

உலகு – இடவாகுபெயர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. பொருள் கூறுக.

வெகுளி – சினம் புணை – தெப்பம்

ஏமம் – பாதுகாப்பு திரு – செல்வம்

7. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

விடை : அ) செய்யாமல் செய்த உதவிக்கு

8. பகையும் உளவோ பிற? – பொருள் கூறுக.

(முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட, நமக்கு) வேறு பகைஉண்டோ?

9. செல்லிடத்து – புணர்ச்சிவிதி கூறுக.

செல்லிடத்து – செல் + இடத்து

“தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்” – (செல்ல் + இடத்து)

“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” – (செல் + (ல் + இ) + டத்து) (செல்லிடத்து)

10. பொருத்துக. (PTA - 3,5)

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – 1. சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன்தூக்கார் செய்த உதவி – 2. ஞாலத்தின் மாணப் பெரிது

இ) சினம் – 3. தெய்வத்துள் வைக்கப்படும்

ஈ) காலத்தினாற் செய்த நன்றி – 4. நன்மை கடலின் பெரிது

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

விடை : ஆ) 3, 4, 1, 2

## கூடுதல் பலவுள் தெரிக

1. ஞாலத்தின் மாணப்பெரிது எது? (PTA - 3)

அ) செய்யாமற் செய்த உதவி ஆ) காலத்தினால் செய்த உதவி

இ) பயன்தூக்கார் செய்த உதவி ஈ) தினையளவு உதவி

விடை : ஆ) காலத்தினால் செய்த உதவி

2. திருக்குறளில் அமைந்த இயல்களின் மொத்த எண்ணிக்கை ______. (May-22)

அ) ஒன்பது ஆ) ஏழு இ) மூன்று ஈ) ஐந்து

விடை : அ) ஒன்பது

3. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு : (Mar.-23)

அ) 1816 ஆ) 1812 இ) 1815 ஈ) 1824

விடை : ஆ) 1812

4. ‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’ – இதில் குறிப்பிடப்படும் ‘நால்’, ‘இரண்டு’ என்ற சொற்கள் குறிப்பது ______, ______.

அ) நாற்பால், இருபால் ஆ) நாற்பால், முப்பால்

இ) நானூறு, வாயுறைவாழ்த்து ஈ) நாலடியார், திருக்குறள்

விடை : ஈ) நாலடியார், திருக்குறள்

5. “வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே” எனக் கூறியவர் ______.

அ) கவிமணி ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) நாமக்கல் கவிஞர்

விடை : இ) பாரதிதாசன்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ எனப் போற்றியவர் ______.
அ) பாரதிதாசன் ஆ) கவிமணி இ) பாரதியார் ஈ) சுரதா
**விடை : இ) பாரதியார்**

7. பயன்தெரிவார் பனைத்துணையாக் கொள்வது ______.
அ) செய்யாமல் செய்த உதவியை ஆ) காலத்தினால் செய்த நன்றியை
இ) பயன்தூக்கார் செய்த உதவியை ஈ) தினைத்துணை நன்றியை
**விடை : ஈ) தினைத்துணை நன்றியை**

8. எதை அன்றே மறப்பது நன்று?
அ) தினைத்துணை நன்றியை ஆ) பனைத்துணை நன்றியை
இ) நன்றல்லதை ஈ) காலத்தினால் செய்த நன்றியை
**விடை : இ) நன்றல்லதை**

9. உய்வு இல்லை – யாருக்கு
அ) எந்நன்றி கொன்றார்க்கும்? ஆ) நடுவன்மை நாணுபவர்க்கு
இ) இலமென்று வெஃகுதல் செய்வார்க்கு ஈ) செய்ந்நன்றி கொன்ற மகற்கு
**விடை : ஈ) செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

10. சினத்தைக் காக்காவிட்டால் அது ______.
அ) நகைப்பைக் கொல்லும் ஆ) உவகையைக் கொல்லும்
இ) காவாதவனைக் கொல்லும் ஈ) சேர்ந்தாரைக் கொல்லும்
**விடை : இ) காவாதவனைக் கொல்லும்**

11. “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது” – என்னும் குறட்பாவியல் பயின்றுவரும் அணி ______.
அ) நிரல்நிறை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
இ) பிறிது மொழிதலணி ஈ) வேற்றுமை அணி
**விடை : அ) நிரல்நிறை அணி**

12. ‘ஞாலம்’ என்பதன் பொருள் ______.
அ) முகமலர்ச்சி ஆ) ஆகாயம் இ) உலகம் ஈ) அறம்
**விடை : இ) உலகம்**

13. செல்வம் குறையாமலிருக்க வழி ______.
அ) உரிய காலத்தில் உதவி செய்ய வேண்டும் ஆ) பிறர் செய்ததை ஆராயக் கூடாது
இ) பிறர் கைப்பொருளை விரும்பக்கூடாது ஈ) அறஇயல்போடு இல்லறம் நடத்த வேண்டும்
**விடை : இ) பிறர் கைப்பொருளை விரும்பக்கூடாது**

14. சினம் காப்பவன் என்பவன் யார்?
அ) அல்லிடத்துக் காப்பவன் ஆ) செல்லிடத்துக் காப்பவன்
இ) இல்லிடத்துக் காப்பவன் ஈ) நல்லிடத்துக் காப்பவன்
**விடை : ஆ) செல்லிடத்துக் காப்பவன்**

15. ஒருவருக்கு ஏமப்புணையாக இருப்பது ______.
அ) உணவு ஆ) நட்பு இ) சினம் ஈ) இனம்
**விடை : ஈ) இனம்**

16. நுண்ணிய நூல்பல கற்றாலும் மிகுவது ______.
அ) பகுத்தறிவே ஆ) கற்ற அறிவே இ) உண்மை அறிவே ஈ) எதுவுமில்லை
**விடை : இ) உண்மை அறிவே**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# காலாண்டுத்தேர்வு வினாத்தாள்

## பகுதி – I பொதுத்தமிழ்

காலஅளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

குறிப்பு : 1. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய வினையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "உவாஉற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

2. திருக்குறள், அறத்துப்பாலில் அமைந்துள்ள இயல்களின் எண்ணிக்கை
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 9

3. கடலின் பெரியது
அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி ஈ) செய்யாமல் செய்த உதவி

4. காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை – இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

5. ஐப்பசி மாதம் நடைபெறும் விழாவாக மயிலைப் பதிகம் குறிப்பிடுவது
அ) கலடாட்டுவிழா ஆ) திருவாதிரை விழா
இ) தைப்பூச விழா ஈ) ஓணவிழா

6. கவிதையின் இயங்காற்றல்தான் ______.
அ) நடை ஆ) படை இ) மடை ஈ) கிடை

7. "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கலே" என்று திட்டவட்டமாகக் கூறியவர்
அ) மைக்கேல் ஆ) கெப்ளர் இ) டேவிட் கிங் ஈ) ஆர்க்கர் டேவிட்

8. 'குடும்பு' எனும் சொல்லின் பொருள்
அ) தனித்து வாழுதல் ஆ) பிரிந்து வாழுதல்
இ) அருகில் வாழுதல் ஈ) கூடி வாழுதல்

9. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

10. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம்
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ அனைத்தும்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. "வெரீஇய" இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) ஒற்றளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை

இ) இன்னிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

12. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

13. "உரிமைத்தாகம்" இச்சிறுகதையின் ஆசிரியர்

அ) பாரதியார் ஆ) உத்தம சோழன் இ) பூமணி ஈ) சுரதா

14. ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு ______ என்றெழுது

அ) கண்கள் ஆ) கைகள் இ) காதுகள் ஈ) தலைகள்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

16. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

17. வசனம், கவிதை வேறுபாடு தருக.

18. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. 'ஒலிப்பின்னல்' என்றால் என்ன?

20. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

21. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

கிணற்றுத்தவளை போல

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

கலை, களை, கழை

24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

ஆ) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

வெங்காயம்

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) வியந்து ஆ) கலங்கி

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) தனியாழி ஆ) எத்திசை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



28. தமிழாக்கம் செய்க.
அ) RAILWAY SIGNAL
ஆ) DOMESTIC FLIGHT

29. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

30. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

31. "வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? – குறள் வழி விளக்குக.

33. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

34. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

35. பெருமழைக் காலங்களில் நகரங்கள் வெள்ளத்தில் மிதப்பதற்கான காரணங்களை எழுதுக.

36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37. மையாடல் விழா – குறிப்பு வரைக.

38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்திருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 × 4 = 12

39. பொருள் வேற்றுமையணி (அல்லது) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

வெட்டியடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று;
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்;
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

(அல்லது)

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?

43. தமிழாக்கம் தருக.

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. The limits of my language are the limits of my world.

43. **காது கேளாதவர்களுக்கான மாற்று வினா :**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிக்கு நேர்காணலுக்குச் சென்றார் முருகன். அந்தக் கல்லூரியின் பேராசிரியர் பரிதிமாற்கலைஞர், "குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுச் சொல்லுங்கள்" என்றார். அவர் "அஃது எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். 'நீங்கள் தேர்வு செய்யப்பட்டு விட்டீர்கள்' என்றார் பரிதிமாற்கலைஞர். 'தெரியாது' என்று சொன்னவரை 'எப்படித் தேர்வு செய்யலாம்?' என்று பிறர் கேட்டபோது, 'அஃது' என்பது ஆய்தத்தொடர் குற்றியலுகரம், 'எனக்கு' என்பது வன்தொடர்க் குற்றியலுகரம், 'தெரியாது' என்பது உயிர்த்தொடர் குற்றியலுகரம் என்று விளக்கினார். இந்நிகழ்வில் பரிதிமாற்கலைஞரையே வியக்க வைத்தவர் மறைமலையடிகள்.

**வினாக்கள் :**

1. எந்தக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிக்கு நேர்காணல் நடைபெற்றது?
2. இப்பத்தியில் அமைந்துள்ள குற்றியலுகரச் சொற்களை எழுதுக.
3. 'எனக்கு' என்பது எத்தொடர்க் குற்றியலுகரம்?
4. பரிதிமாற்கலைஞரையே வியக்க வைத்தவர் யார்?

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** $3 \times 6 = 18$

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**(அல்லது)**

ஆ) குடும்பம் – தாய்வழிக்குடும்பம் – தந்தைவழிக் குடும்பம் – விரிந்த குடும்பம் இவற்றின் வாயிலாகவே மனித சமூகம் கட்டமைக்கப்படுகிறது என்பதை நிறுவுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** $4 + 2 = 6$

47. அ) "வையகம் பனிப்ப...." எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'மிகும்' என முடியும் 'ஊழ்' என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குறட்பாவை அடிபிறழாமல் எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# அரையாண்டுத்தேர்வு வினாத்தாள்

## பகுதி – I பொதுத்தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

குறிப்பு : 1. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய வினையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. 'மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

2. "கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்

குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்!" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

3. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை

இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

4. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

5. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்

கடாஅ யானைக் கலிமான் பேக" – இச்சங்கக் கவிதையின் அடிகளில் உள்ள விளிச்சொல்

அ) ஈத்த ஆ) பேக இ) கடாஅ ஈ) நல்லிசை

6. "இரவுக் குறியே இல்லகத் துள்ளும்

மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே" என்னும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடும் இரண்டு வாழிடங்கள்

அ) இல், மனை ஆ) இல், குடில் இ) மனை, மாடம் ஈ) நகர், கூரை

7. நாவலர் சோமசுந்தர பாரதியார் படித்த திண்ணைப் பள்ளிக்கூடம்

அ) கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடம்

ஆ) கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடம்

இ) எட்டயபுரம் திண்ணைப் பள்ளிக்கூடம்

ஈ) நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடம்

8. வேறுபட்டதைக் குறிப்பிடு.

அ) அண்மைக் காட்சித்துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித்துணிப்பு

இ) நடுக் காட்சித்துணிப்பு ஈ) காட்சி மறைவு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. தவறான இணையைத் தேர்க.

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | – | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | – | அகநானூறு |
| இ) கலிவெண்பா | – | தூது |
| ஈ) குறள் வெண்பா | – | திருக்குறள் |

10. ஈற்று அயற்சீர், மாச்சீர் என்றால் ______ வரும்.

அ) மலர் (அல்லது) பிறப்பு ஆ) நாள் (அல்லது) காசு
இ) மலர் (அல்லது) காசு ஈ) நாள் (அல்லது) பிறப்பு

11. 'வியர்வை வெள்ளம்' – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) உருவகம் ஆ) வினையெச்சம்
இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

12. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர்
இ) தீக்காய்வர் ஈ) அறிவிலார்

13. சரியான நிறுத்தற்குறியுள்ள தொடரைத் தேர்க.

அ) பெரியார்! வி. சி. கணேசனுக்கு 'சிவாஜிகணேசன்' என்று பெயரிட்டார்
ஆ) பெரியார், வி. சி. கணேசனுக்கு 'சிவாஜிகணேசன்' என்று பெயரிட்டார்
இ) பெரியார், வி. சி. கணேசனுக்கு "சிவாஜிகணேசன்" என்று பெயரிட்டார்
ஈ) பெரியார், வி. சி. கணேசனுக்கு 'சிவாஜிகணேசன்' என்று பெயரிட்டார்!

14. பாரதி தன்னுடைய அருமைத் தம்பியாகவே கருதி அன்புகாட்டி வந்தவர்

அ) பரலி சு. நெல்லையப்பர் ஆ) வ. உ. சிதம்பரனார்
இ) அ. பத்மநாபன் ஈ) இளசை மணி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?
16. 'வையகமும் வானகமும் ஆற்றலரிது' – எப்போது?
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை ?
20. மீ சேய்மை காட்சித்துணிப்பு என்றால் என்ன?
21. பருவத்தே பயிர்செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$

22. பொருள் வேறுபாடு அறிந்து தொடராக்குக.

களம், கலம் (அல்லது) புல் – புள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.
   அ) காலை எழுந்து படித்த நமக்கு நன்மை ஏற்படும்.
   ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்
24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
   அ) விடிஞ்சதும் வீட்டுக்கொரு ஆள் அரிவாள், மம்பட்டியோடு வடிவாய்க்காக்கரைக்கு வந்தடணும்.
   ஆ) அத வித்துத் தள்ளுங்க வாப்பா. இந்த நாகரிக காலத்திலே ஓடு போட்ட மரவூட்டுல ஆரு தங்குவா?
25. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
   அ) கண்டான் ஆ) பகைத்த
26. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
   அ) நன்மொழி ஆ) வானமெல்லாம்
27. தமிழாக்கம் தருக.
   அ) SUBSCRIPTION ஆ) FOLDER
28. சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.
29. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.
30. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
   அ) அகலக்கால் ஆ) வழிவழியாக

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

31. ‘ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்’ – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.
33. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.
34. ‘நெல்லின் நேரே வெண்கல் உப்பு’ – இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.
36. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
37. சென்னை நகர உருவாக்கம் – குறித்து எழுதுக.
38. மயிலை சீனி வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

39. நிரல்நிறையணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. பாடாண்திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

கூதிர்ப்பாசறை துறையைச் சான்றுடன் விளக்குக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன், திசைகள் கண்டேன்!
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்?
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்,
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி,
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்,
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

– பாரதிதாசன்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும் (அல்லது)

ஆ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

43. விடைக்கேற்ற வினா அமைத்து எழுதுக.

அ) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

ஆ) சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

இ) 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

ஈ) "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார், கிரியோர்சன்.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** $3 \times 6 = 18$

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன – நிறுவுக.

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மை குறித்த வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

(அல்லது)

ஆ) 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** $4 + 2 = 6$

47. அ) "அறிவும் புகழும்...." எனத் தொடங்கும் புறநானூறுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) '....சினம்' – என முடியும் 'வெகுளாமை' என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குறட்பாவை அடிபிறழாமல் எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பொதுத்தேர்வு வினாத்தாள்

## மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

## மார்ச் – 2024

கால அளவு : 3 மணிநேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

: (2) நீலம் அல்லது கறுப்பு மையினைமட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்தநடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 × 1 = 14

1. “மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்கி!”
– இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிஎதுகை, சீர்மோனை ஆ) அடிமோனை, அடிஎதுகை
இ) சீர்எதுகை, அடிமோனை ஈ) சீர்மோனை, சீர்எதுகை

விடை : அ) அடி எதுகை, சீர் மோனை

2. பொருத்தி விடை தேர்க.

(1) குரங்குகள் – (i) கன்றுகளைத் தவிர்த்தன
(2) விலங்குகள் – (ii) மரங்களிலிருந்து வீழ்ந்தன
(3) பறவைகள் – (iii) குளிரால் நடுங்கின
(4) பசுக்கள் – (iv) மேய்ச்சலை மறந்தன

அ) (1) - (iii), (2) - (ii), (3) - (i), (4) - (iv) ஆ) (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)
இ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv) ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

விடை : ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

3. ‘பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்’ – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும் :

அ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்
ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்
இ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

விடை : ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

4. ‘விளியறி ஞமலி’ – இதில் குறிப்பிடப்படும் விலங்கு யாது?

அ) நாய் ஆ) எருது இ) யாளி ஈ) குதிரை

விடை : அ) நாய்

5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) கடுக்காய் ஆ) வசம்பு
இ) மாவிலைக்கரி ஈ) மணத்தக்காளிச்சாறு

விடை : அ) கடுக்காய்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. சென்னை, வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம் :

அ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

ஆ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

இ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம் ஈ) (அ), (ஆ), (இ) அனைத்தும்

**விடை : ஈ) அ, ஆ, இ – அனைத்தும்.**

7. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| 1) | காதை | – i. | கந்தபுராணம் |
| 2) | சருக்கம் | – ii. | சீவகசிந்தாமணி |
| 3) | இலம்பகம் | – iii. | சூளாமணி |
| 4) | படலம் | – iv. | சிலப்பதிகாரம் |

அ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i) ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii) ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

**விடை : ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)**

8. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்...

– தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.

அ) மாதவி ஏழு ஆண்டுகள்வரை நாட்டியம் பயின்றாள்.

ஆ) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) (1) தவறு; (2) தவறு ஆ) (1) சரி; (2) தவறு இ) (1) சரி; (2) சரி ஈ) (1) தவறு; (2) சரி

**விடை : இ) (1) சரி; (2) சரி**

9. எளியது, அரியது என்பன :

அ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு

ஆ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை

இ) மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது

ஈ) சொல்வது – சொல்லியபடி செய்வது

**விடை : ஈ) சொல்வது – சொல்லியபடி செய்வது**

10. ‘உண்டு பிறந்து வளர்ந்த இடங்களில் – இத்தொடரில் பெயரெச்சம்_.

அ) வளர்ந்த ஆ) உண்டு இ) இடந்தனில் ஈ) பிறந்து

**விடை : அ) வளர்ந்த**

11. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் :

அ) சமணமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும்

இ) கிறித்துவமும் தமிழும் ஈ) இசுலாமும் தமிழும்

**விடை : இ) கிறித்துவமும் தமிழும்**

12. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி :

அ) அங்கதம் ஆ) குறியீடு இ) தொன்மம் ஈ) படிமம்

**விடை : ஆ) குறியீடு**

13. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளையில் பூத்த மல்லிகை, மனம் வீசியது.

ஆ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

இ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

ஈ) மலைமீது ஏறி கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

**விடை : அ) காளையில் பூத்த மல்லிகை, மனம் வீசியது.**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14. தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் :

அ) கூனன் தோப்பு ஆ) துறைமுகம்

இ) சாய்வு நாற்காலி ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்

**விடை : இ) சாய்வு நாற்காலி**

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

**15. ஞாலத்தின் பெரியது எது?**

- உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது ஞாலத்தின் (உலகின் அளவைவிட) மிகப் பெரியதாகும்.

**16. நெடுநல்வாடை – பெயர்க்காரணம் தருக.**

நெடுநல்வாடை – நெடுமை + நன்மை + வாடை.

- போருக்குச் சென்றிருக்கும் தலைவனைப் பிரிந்து உள்ள தலைவிக்கு, வாடைக்காற்று துன்ப மிகுதியைக் கொடுத்ததால் 'நெடுவாடை'யாக இருந்தது. போர்ப்பாசறையில் இருந்த தலைவனுக்கு, வெற்றிபெற ஏதுவான வாடையாக இருந்ததால் 'நல்வாடை'யாக இருந்தது.
- எனவே, 'நெடுநல்வாடை' ஆயிற்று.

**17. வசனம், கவிதை – வேறுபாடு தருக.**

- சொற்களைச் சேர்க்கும்போது எதுகை, மோனை அமையாமல் அடியளவை அறிந்திடாமல் அமைக்கின்ற இலக்கிய வடிவம்தான் வசனம்.
- சொற்களைச் சேர்க்கும்போது யாப்பு முறைப்படி எதுகை, மோனை போன்ற தொடைநயங்களைச் சேர்த்து, அடியளவை அறிந்து வார்த்தைகளை யாப்பில் அமைப்பதே கவிதையாகும்.

**18. முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.**

- இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட பின்பு தங்களையே தொலைத்தவர்களாக, தங்களது சுயம் இழந்தவர்களாக, தங்களது விருப்பு, வெறுப்புகளை மறந்தவர்களாகப் பெண்கள் மாறிவிடுவதால், தங்களது முகம் முகவரியற்றுத் தங்களது அடையாளத்தைத் தேடுகிறார்கள் எனச் சுகந்தி சுப்பிரமணியன் கூறுகிறார்.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

**19. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு வரைக.**

- சங்க காலத்தில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' எனவும், திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம், '**தன்மனை**' எனவும் வழங்கப் பட்டுள்ளன.

**20. முறை வைப்பு என்றால் என்ன?**

- உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க, மாணாக்கர் அதைப் பின்பற்றிச் சொல்லுவர். இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல, அதை மாணாக்கர் பலரும் சேர்ந்து சொல்வதை, 'முறை வைப்பது' என்பர்.

**21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.**

- காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869இல் உருவாக்கப்பட்டது கீழ்திசைச் சுவடிகள் நூலகம்.
- இது அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெருந்தொகுப்புகளைக் கொண்டது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 × 2 = 14

**22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

- எழுத்துகளைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்.
- ந, ண, ன / ல, ள, ழ / ற, ர ஒலிப்பு வேறுபாடுகள் தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
- தொடக்கத்தில் வாய்விட்டோ மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதிப்பழகுவது நல்லது.
- வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும்.
- குறில், நெடில் எழுத்துகளின் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

**23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

மாணவர்கள், பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

**விடை :** மாணவர்கள், பெற்றோர்களை**த்** தமது நண்பர்களாக**ப்** பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை**ப்** பெற்றோர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

ரங்கன், வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

**விடை :** **அரங்கன், வெண்கலப்** பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

**25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

**விடை :** நிலத்தைக் கிளர வேண்டுமடா! அப்பொழுதுதான் வயிறு நிறையும்.

**26. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்.**

தின்மை – திண்மை

**தின்மை** – தீமை

**திண்மை** – வலிமை, உறுதி

**விடை :** **திண்மை**யுடையோர், மெலியாருக்குத் **தின்மை** செய்யக்கூடாது.

**27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) செய்த ஆ) கலங்கி

**அ) செய்த – செய் + த் + அ**

**செய்** – பகுதி

**த்** – இறந்தகால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

**ஆ) கலங்கி – கலங்கு + இ**

**கலங்கு** – பகுதி

**இ** – வினையெச்ச விகுதி.

28. கலைச் சொல்லாக்கம் தருக.

(அ) Stapler (ஆ) Teller

**Stapler** – கம்பி தைப்புக் கருவி

**Teller** – விரைவுக் காசாளர்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற் வினா.

பின்வரும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்திடுக.

அச்சாணி இல்லாத தேர்போல : குறிக்கோளை முடிவு செய்யாததால் சிலர், **அச்சாணி இல்லாத தேர்போல** வாழ்வில் தள்ளாடுகின்றனர்.

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

(அ) உரனுடை (ஆ) தலைக்கோல்

அ) உரனுடை – உரன் + உடை

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – உரனுடை

ஆ) தலைக்கோல் – தலை + கோல்

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" – தலைக்கோல்.

30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.

(அ) கோவில் (ஆ) தாமரை

அ) கோவில் : இறைவன் உறையும் **ஆலயம்.**

பல சிவன் **கோவில்**களை இராசராச சோழன் கட்டினான்.

கோவில் : கோ + வில் – அரசனின் வில்

கோ வில்லால் மானை வீழ்த்தினார்.

ஆ) தாமரை : மலர்

**தாமரை மலர்** நம்நாட்டின் தேசிய மலராகும்.

தாமரை : தா + மரை – தாவுகின்ற மான்

**தா மரையின்** ஓட்டம் படுவேகமாக இருக்கும்.

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2 \times 4 = 8$

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் : இப்பாடல் வரி, 'தண்டியலங்காரம்' என்னும் அணி இலக்கண நூலின் பொருளணியியலில் இடம் பெற்றுள்ள **உரைமேற்கோள் பாடல்** அடியாகும்.

பொருள் : ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட இவ்வுலகின் **இருளை அகற்றும்** என்பதே இத்தொடரின் பொருளாகும்.

விளக்கம் : எப்போதும் ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும் கடல் சூழ்ந்த இந்த உலகின் இருளை அகற்றும் கதிரவன், **மக்களால் போற்றப்பட்டு**, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, **சான்றோரால் தொழப்படுகின்ற** ஒன்றாகும். தமிழோ, பொதிகை மலையில் தோன்றினாலும் மக்களின் **அறியாமை இருளை** அகற்றும் சிறப்புடையது.

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

- தன் **தந்தையின் நண்பனான கழுகுவேந்தன் சடாயுவை இராமன்**, தன் தந்தையாகவே கருதி, **மகன் நிலையில்** அவருக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்தான்.
- கரிய அகில் கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டு வந்து வைத்தான். **தருப்பைப் புற்களையும்** ஒழுங்குபட அடுக்கினான். **பூக்களையும்** கொண்டுவந்து தூவினான்.
- மணலினால் **தகன** மேடையைத் **திருத்தமாக** அமைத்தான். **நன்னீரை** எடுத்து வந்தான்.
- இறுதிச் சடங்கு செய்யக்கூடிய மேடைக்குத் தன் தந்தையைப் போன்ற **சடாயுவைப்** பெரிய கைகளில் **தூக்கிக்கொண்டு** வந்தான்.
- இவ்வாறு, சடாயுவைத் தன் தந்தையாக ஏற்று, இராமன் கடமைகளை ஆற்றினான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

- சிற்ப நூலில் சொல்லப்பட்ட சிறந்த நன்னிலத்தை, ஆடல் அரங்கத்திற்காகத் தேர்ந்தெடுத்தனர்.
- மலைகளில் நீண்டு வளர்ந்த மூங்கில்களில், ஒருசாண் அளவு கணுக்களைக் கொண்ட மூங்கிலைக் கொண்டுவந்து, தம் கைப்பெரு விரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாக **மூங்கிலை வெட்டினர்.** அரங்கத்தின் **நீளம் எட்டுக்கோல், அகலம் ஏழுகோல், உயரம் ஒருகோல்** அளவுமுடையதாக அரங்கம் அமைத்தனர்.
- அரங்கின் தூண்கள் மேல் வைத்த உத்திரப் பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடைவெளி **நான்குகோல் அளவு.** அரங்கத்தின் உள்ளே செல்லவும் வெளியே வரவும் இரு வாயில்கள். தூண்களின் நிழலானது, அவையிலும் நாடக அரங்கிலும் விழாதபடி, நல்ல அழகான நிலை விளக்குகள் என அமைந்திருந்தன.
- **ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினிகளுடன்** மேல்விதானம் ஓவிய வேலைப்பாடு மிக்கதாக அமைக்கப்பட்டிருந்தது.
- சிறந்த முத்துகளால் இயன்ற மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கவிட்டனர். ஆட்ட அரங்கு, ஆட்டத்தைக் கண்டு சுவைப்பவர் அமரும் அவையைவிட **உயரமாக இருக்க வேண்டும்** என்பதும், தெளிவுபடக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதுவே, இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் நாட்டிய அரங்கின் அமைப்பு ஆகும்.

34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

| வ.எண் | கடையெழு வள்ளல்கள் | செய்த செயல்கள் |
|---|---|---|
| 1 | பேகன் | வளமலையில் குளிரால் நடுங்கும் மயிலுக்குத் தன்னுடைய போர்வையைக் கொடுத்தான். |
| 2 | பாரி | கொழுகொம்பின்றித் தவித்துக் கொண்டிருந்த முல்லைக்கொடி பற்றிப் படரத் தனது தேரினையே ஈந்தான். |
| 3 | காரி | குதிரைகளையும், ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் இரவலர்க்கு இல்லையென்னாமல் கொடுத்தான். |
| 4 | ஆய் | ஒளிமிக்க நீலவண்ணக் கல்லையும், நாகம் கொடுத்த ஆடையினையும் ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தான். |
| 5 | அதிகன் | தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு வழங்கினான். |
| 6 | நள்ளி | தன்னிடம் உள்ள பொருட்செல்வத்தை இல்லையென்னாது நட்புக் கொண்டவர்களின் குறிப்பறிந்து வழங்கினான். |
| 7 | ஓரி | வளங்கள் நிறைந்த அரிய மலைநாட்டைக் கூத்தர்க்குப் பரிசாய் வழங்கினான். |

## பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. $2 \times 4 = 8$

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.

- நடுவண் அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் தேதியன்று, தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
- புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது, பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது. இதற்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.
- மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர்க் காலங்களில் செயலாற்றப் பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**36. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்கவும்.**

- பண்டைய காலத்தில் பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துகள், வரிசையாகவும், நன்றாகவும் இருந்தன. உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். பிறகு தாமே எழுதிப் பழகுவார்கள்.
- எழுத்துகள் ஒன்றோடொன்று படாமலும் வரிகோணாமலும் பழைய காலத்தில் எழுதினார்கள். எழுத்துகளின் உருவங்கள், பல காலமாக மாறாமல் இருந்து வருகின்றன.
- தற்காலத்தில் மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக அமைய வேண்டுமென்று, ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாமே எழுதி, அதைப்போல் எழுதிவரச் செய்வார்கள்.
- மாணாக்கர்களின் கையெழுத்து தெளிவாக இருக்க, ஏடுகளில் ஆசிரியர்கள் எழுதித் தர, அதைத் தொடர்ந்து எழுதும் முறையை மாணவர்கள் தற்காலத்தில் பின்பற்றுகின்றனர்.
- திறன்பேசியின் தொடுதிரையில் பேனா பென்சில் என எதுவும் இல்லாமலே விரல் கொண்டு எழுதும் முறை தற்போது உள்ளது.

**37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

- தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
- சேப்பாக்கம் அரண்மனை
- பொது அஞ்சல் அலுவலகம்
- எழும்பூர் அருங்காட்சியகம்
- உயர்நீதி மன்றம்
- சென்னைத் திரைப்படத்துறை சார்ந்த இடங்கள்
- கோட்டை அருங்காட்சியகம்
- தென்னகத் தொடர்வண்டி நிலையம்
- சென்னைப் பல்கலைக்கழகம்
- கன்னிமாரா நூலகம்
- ரிப்பன் கட்டடம்
- திரை அரங்குகள்

ஆகிய இந்திய சராசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள், சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக, இன்றும் நிலைத்து நிற்கின்றன.

**38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

**வேளாண் மேலாண்மை பற்றிப் பரிந்துரைக்கும் கருத்துகள்**

- சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் **விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப் படுத்துதல்**, அறுவடைக்குப்பின் **பாதுகாத்தல்**, உரிய விலை வரும்வரை **இருப்பு வைத்தல்** என்று, ஒவ்வொரு கட்டத்திலும் **விழிப்புணர்வும், பொறுப்புணர்வும், நிருவாக நெறியும்** இணைந்தால்தான் வேளாண்மை செழித்து, மேலாண்மை பெறும்.
- மனமே ஒரு வேளாண்மைக்கு உட்பட்ட மேலாண்மை உடையதாகும். எச்செயலுக்கும் **உரிய நேரத்தைத்** தேர்ந்தெடுக்கவில்லையானால் வெற்றி கிடைக்காமல் போய்விடும். பொறுப்புணர்வோடு நிருவாக நெறியைச் செயல்படுத்துபவர்களே சிறந்த மேலாளர்களாகவும் நிருவாகிகளாகவும் இருப்பார்கள். அவர்களிடம் பணிபுரிபவர்கள் பணியைப் பாரமாக்காமல் **சாரமாக்குவார்கள்.**

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

**39. அ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும். – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**பயின்று வந்துள்ள அணி** : இக்குறளில் **ஏகதேச உருவக அணி** அமைந்துள்ளது.

**அணி இலக்கணம்** : "ஒரு செய்யுளில், ஒன்றுக்கொன்று தொடர்பு உடைய பொருள்களை உருவகம் செய்யும்பொழுது, ஒன்றை உருவகம் செய்து, பிறவற்றை உருவகம் செய்யாமல் கூறுவது **ஏகதேச உருவக அணி** எனப்படும்.

**அணி விளக்கம்** : 'இனம்' என்பது 'ஏமப்புணை'யாக உருவகம் செய்யப்பட்டுள்ளது; 'சினம்' நெருப்பாகவும், 'பிறவி' கடலாகவும் உருவகம் செய்யப்படவில்லை. எனவே, இது ஏகதேச உருவக அணி அமைந்த செய்யுளாகும்.

(அல்லது)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஆ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.**

**இலக்கணம்** : உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய, இடையில் உவம உருபு வெளிப்பட்டு வருவது உவமை அணியாகும்.

**சான்று** : "உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று"

**விளக்கம்** : 'குடங்கருள் பாம்போடு உடன்உறைதல்' (ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது) – உவமானம். 'உடம்பாடு இலாதவர் வாழ்க்கை' (மனத்தில் உடன்பாடு இல்லாதவருடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை) – உவமேயம். அற்று (போல, போன்றது) – உவம உருபு. எனவே, உவமை அணி ஆயிற்று.

**40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி !

**– கண்ணதாசன்**

**ஆசிரியர் குறிப்பு** : தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் புகழ் பெற்ற 'கவியரசு' கண்ணதாசன், நாலாயிரம் கவிதைகள், ஐயாயிரம் திரைப்படப் பாடல்கள், கதைகள், கட்டுரைகள் எழுதியவர். "முச்சங்கம் கூட்டி..." எனத் தொடங்கும், அவர் எழுதிய பாடலின் நயத்தை இங்கு ஆராய்வோம்.

**மையக்கருத்து** : கருத்துச் செறிந்த இலக்கியங்களை நாளும் படைத்துப் புதுப்பொலிவுடன் தமிழ்ப் பெருமகள், அன்னையாகத் திகழ்கிறாள்.

**எதுகை** : அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து அளவு (மாத்திரை) ஒத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

முச்சங்க, அச்சங்கம்
சொற்சங்க, அற்புதங்க } அடிஎதுகை

**மோனை** : அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி வருவது மோனை.

**மு**ச்சங்க, **மு**துபுலவர்
**அ**ச்சங்க, **அ**ளப்பரிய
**அ**ற்புதங்கள், **அ**மைத்த } சீர்மோனை

**இயைபு** : அடிதோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வருவது இயைபு.

தமைக்**கூட்டி**
பொருள்**கூட்டி**
கவி**கூட்டி** } அடி இயைபு

**அணி** : செய்யுளுக்குச் சொல்லாலோ, பொருளாலோ மேலும் அழகு சேர்ப்பது அணி. இப்பாடலில் 'கூட்டி' என்னும் சொல், ஒரே பொருளில் பலமுறை பயின்று வந்துள்ளதால், **சொற்பொருள் பின்வருநிலையணி** இடம் பெற்றுள்ளது எனலாம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**சுவை** : பாடலின் உட்கருத்தை நம் மனக் கண்முன்னே காட்சிப்படுத்துவது சுவையாகும். தமிழன்னையின் பெருமையைப் புகழ்ந்து பாடுவதால், இப்பாடலில் '**பெருமிதச் சுவை**' பயின்று வந்துள்ளது.

கண்ணதாசனின் "முச்சங்கம் கூட்டி..." எனத் தொடங்கும் பாடல் எதுகை, மோனை, இயைபு, அணி எனப் பல சுவை நயங்களைத் தன்னகத்தே கொண்டு, படிப்போரைப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது எனலாம்.

**41. அ) வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.**

- போர்க்களத்தில் எதிர்நின்ற பகைவரை வென்று அழித்துப் பெற்ற வெற்றியை அரசனும் அவன் வீரர்களும் அவ்வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியை விழாவாகக் கொண்டாடுவர். இதனை 'வாகைத் திணை' எனக் கூறுவர்.
- பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய "வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ" எனத் தொடங்கும் 'நெடுநல்வாடை' வாகைத் திணைக்குச் சிறந்த சான்றாகும்.
- பத்துப்பாட்டுள் நெடுநல்வாடை என்பது, தலைவனைப் பிரிந்த தலைவிக்குப் பிரிவுத் துன்ப மிகுதியால் 'நெடுவாடை'யாகவும், போர்ப் பாசறையில் தங்கி இருந்த தலைவனுக்கு (நெடுஞ்செழியனுக்கு) வெற்றி பெறுவதற்கு ஏதுவான 'நல்வாடை'யாகவும் இருந்தமையை விளக்குவதாகும். இது பாண்டியன் நெடுஞ்செழியனின் வெற்றி குறித்துப் பேசுவதனால் வாகைத் திணைக்குச் சிறந்த சான்றாகும்.

(அல்லது)

**ஆ) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.**

**துறை** : செவியறிவுஉறூத் துறை

**துறை விளக்கம்** : அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.

**சான்று** : "காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே" எனத் தொடங்கும் பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடல்.

**சான்று விளக்கம்** : பெரிய வயலில் யானையை மேயவிடுவதைவிட, அந்த உணவைக் கவளமாக்கிக் கொடுத்தால், யானைக்குப் பலநாட்களுக்கு உணவு தரலாம். இல்லையெனில், யானையின் காலில் பட்டு வீணாகும். அதுபோல் அரசன் மக்களின் நிலை உணர்ந்து வரி ஈட்டவேண்டும். இல்லையெனில் அரசுக்கும் பயனில்லை; மக்களுக்கும் பயனில்லை.

**துறைப் பொருத்தம்** : 'மக்களின் நிலையை உணர்ந்து சிறுகச்சிறுக வரியைப் பெற்றுக்கொள். அவ்வாறு பெற்றால் மக்களுக்கும் வேதனை இல்லை; உனக்கும் பெருந்தொகை கிடைக்கும். அதைவிடுத்து மக்களை வருத்தி வரி வசூலித்தால், அது மக்களுக்கும் சிரமம், உனக்கும் புகழ் இல்லை' என அரசனுக்குப் பிசிராந்தையார் அறிவுரை நல்கி யிருப்பதால், இப்பாடல், **செவியறிவுறூஉத் துறை**க்குப் பொருத்தமாயிற்று.

**42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.**

**அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.**

**பழமொழி விளக்கம்** : சுற்றமாகிய உறவுகளிடமும் நட்புகளிடமும் குறைகளை மட்டுமே சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தால், உறவுகளும் நட்புகளும் நம்மைவிட்டு விலகி விடுவர்.

**வாழ்க்கை நிகழ்வு** : கதிரவனின் அப்பா கண்டிப்பானவர். கதிரவனிடமும் அவனுடைய அம்மாவிடமும் வீட்டில் மிகக் கண்டிப்புடன் நடந்து கொள்வார். அவருக்கு அனைத்தும் சரியாக இருக்க வேண்டும். ஒரு தாளின் முனையில் குண்டூசி குத்தினாலும் தாள் கசங்காமல் குத்த வேண்டும். வீட்டிற்குள் ஒரு குப்பைகூட இருக்கக்கூடாது. யாரும் சத்தமாகப் பேசக்கூடாது. அவரது விருப்பத்திற்கு

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



மாறாக நடந்தால் கூச்சலிடுவார். வீட்டிற்கு வரும் உறவினர்களிடமும் கண்டிப்பாக நடந்துகொள்வார். செருப்பை வரிசையாகக் கழட்டிவிடுங்கள்; கால் கழுவிக்கொண்டு உள்ளே வாருங்கள்; டி. வி. பார்க்கக்கூடாது; சினிமாவிற்குப் போகக்கூடாது; சிரித்துப் பேசக்கூடாது; காலையில் 5 மணிக்கு எல்லோரும் எழுந்துவிட வேண்டும்; குளிக்காமல் சாப்பிடக்கூடாது எனப் பல கட்டுப்பாடுகளை விதித்ததால், உறவினர்கள் யாரும் அவர் வீட்டிற்கு வருவதில்லை. அவர் வீட்டில் திருமணம் நடந்தபோதும், புதுமனை புகுவிழா நடந்தபோதும் ஓர் உறவினர்கூட வரவில்லை. அனைவரிடமும் குற்றங்குறைகளைக் கண்டுபிடித்துப் பேசியதால், நண்பர்களோ சுற்றத்தவர்களோ எவரும் வரவில்லை என்பதை அப்போதுதான் அவர் உணர்ந்தார்.

**பழமொழிப் பொருத்தம்** : கதிரவனின் அப்பா மற்றவர்களைத் திருத்துவதாக நினைத்து, குறைகூறிக் கொண்டே இருந்ததால் உறவுகளையும் நட்புகளையும் இழந்தார்.

**(அல்லது)**

**ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்.**

**பழமொழி விளக்கம்** : உலகமே அழியும்நிலை ஏற்பட்டாலும், தம் நிலையிலிருந்து சிலர் மாற மாட்டார்கள்.

**வாழ்க்கை நிகழ்வு** : அவர் ஒரு வட்டாட்சியர். அவர் பெயர் பரமசிவம். ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு பெரும் அரசியல்வாதி அவரிடம் வந்து அந்த ஊரில் உள்ள குன்றை அவர் பெயரில் பட்டா செய்து தருமாறு வற்புறுத்தினார். "ஒரு குன்றை எப்படித் தனியாருக்குப் பட்டா செய்யமுடியும்?" என்று மறுத்தார் தாசில்தார். தமக்குப் பட்டா செய்து கொடுத்தால், ஒரு கோடி ரூபாய் தருவதாகக் கூறினார் வந்தவர். வட்டாட்சியர் இசையவில்லை. அக்குன்று பற்றி விசாரித்தார் வட்டாட்சியர். அக்குன்று முழுவதும் கிரானைட் கற்களால் ஆனது என்ற விவரத்தை அறிந்தார். மீண்டும் அந்தப் பணக்காரர் வட்டாட்சியரைச் சந்தித்துப் பெருந்தொகையை அவரிடம் கொடுக்க முன்வந்தார். வட்டாட்சியர் மனம் மாறவில்லை. அரசியல்வாதி ஊராட்சித் தலைவரிடம் சொல்லி வீட்டுக்குடிநீர் இணைப்பைத் துண்டித்தார். மின்வாரியத்திலும் கூறி, மின்வெட்டு செய்தார். சிலரை ஏவி வீட்டின்முன் தகராறு செய்யச் சொன்னார். அலுவலகம் போகும்போது அவரது வாகனத்தை மோதித்தள்ள வேறு வாகனத்தை இயக்கினார். குடித்துவிட்டு அலுவலகத்தில் வந்து தாறுமாறாகப் பேச ஆட்களை ஏவினார். கடைக்குச் செல்லும் வட்டாட்சியரின் துணைவியாரிடம் தகராறு செய்தார். **ஊழி பெயரினும் தாம் பெயரார்** என்பதற்கு ஏற்ப, அரசியல்வாதியின் எந்தத் தொல்லைக்கும் அவர் அடிபணியவில்லை; உறுதி குலையாது செயல்பட்டார்.

**பழமொழிப் பொருத்தம்** : பணக்காரர் பெரும் இன்னல்களை விளைவித்தாலும், வட்டாட்சியர் மனம் மாறவில்லை. தம் பதவிக்குப் பொருந்தாததைச் செய்யவில்லை. ஊழி பெயரினும் தாம் பெயரார் என்பதற்குப் பொருத்தமானவர் அவர்.

**43. தமிழாக்கம் தருக.**

1. If you want people to understand you, speak their language.

   மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள விரும்பினால், அவர்கள் மொழியில் பேச வேண்டும்.

2. A new language is a new life.

   புதிய மொழியை அறிவது, புதிய வாழ்க்கையாக அமையும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. The limits of my language are the limits of my world.
என் மொழியின் எல்லை என்பது, என் உலகின் எல்லையாகும்.ழீனீ

4. Knowledge of languages is the doorway to wisdom.
பன்மொழி அறிவு என்பது, மதிநுட்பத்திற்கு வாயிலாகும்.

**43. செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்திய போது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை. மு. கோ. ('வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி') ஆவார்.

**வினாக்கள் :**

1. **ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் யார் ?**
வைத்தமாதிநி முடும்பை கோதைநாயகி.

2. **வை. மு. கோதைநாயகியின் படைப்பாற்றலை ஊக்குவித்தவர் யார் ?**
(வை. மு. கோதைநாயகியின்) கணவர்

3. **வை. மு. கோதைநாயகி அவர்கள் எழுதிய முதல் நாடக நூல் எது ?**
இந்திர மோகனா.

4. **"கதா மோகினி" என்று அழைக்கப்பட்ட பெண் எழுத்தாளர் யாரிடம் கல்வி கற்றார் ?**
தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3 × 6 = 18**

**44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.**

**முன்னுரை :**

குகன் வேடுவன், சடாயு பறவை, சவரி எளிய முதியவள், சுக்ரீவன் வானரம், வீடணன் எதிரியின் தம்பி என்ற பேதம் பார்க்காமல் அனைவரையும் தன் குடும்பமாகக் காணும் பண்பின் படிமமாக இராமன் திகழ்ந்தான். இது குறித்து இனி ஆராய்வோம்.

**குகன் உயிர் :**

பேரரசன் தயரதன் மகனாக இருந்தாலும், வேடுவர் தலைவனான குகனைத் தன் உடன்பிறந்தானாக ஏற்றுக்கொள்கிறான் இராமன். பாறை போன்ற உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்ட குகனை நோக்கி, "**நீ என் உயிர் போன்றவன்;** தம்பி இலக்குவன், உன் தம்பி; சீதை, உனக்கு அண்ணி. குளிர்கடலும் இந்நிலமும் எல்லாம் உனதே ஆகும். **நான் உன்னுடைய ஏவலுக்கேற்ப பணிபுரிபவன்**" என்று கூறி, அணைத்துக் கொண்ட இராமன் பின்னர், "**குகனோடும் ஐவர் ஆனோம்**" என்று உடன்பிறந்தானாக ஏற்றான்.

**சடாயுதாதை :**

கழுகு வேந்தன் சடாயு, சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது தடுத்துப் போர் புரிந்து காயப்படுகிறான். நடந்தவற்றை இராமனிடம் கூறியபின் சடாயு உயிர் துறக்கிறான். தயரதனின் நண்பனாகிய சடாயுவிற்கு இறுதிச் சடங்குகளை இராமன் செய்கிறான். **சந்தனக் கட்டைகளையும், அகில் கட்டைகளையும்** எடுத்துவந்து வைக்கிறான். தருப்பைப் புற்களை ஒழுங்குபட அடுக்கிப் பூக்களைத் தூவி மணலினால் தகன மேடை அமைத்தான். **நன்னீர்** கொண்டு வந்தான். தன் **பெரிய கைகளால்** சடாயுவை, **சுமந்து வந்து,** ஈமக் கடன்களைச் செய்தான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**சவரியின் அன்பு :**

இவனுக்குமுன் இப்படியொருவர் இருந்தாரெனப் பிறிதொருவரைக் காட்ட இயலாத முதற்பொருளாகிய இராமன், சவரியிடம் இனிதாகப் பேசினான். தன்னையே நினைத்துத் தவம் இருந்த சவரியிடம், **"இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?"** என்று, பரிவுடன் கேட்டான். தன் தவம் பலித்ததை எண்ணி **ஆனந்தக் கண்ணீர்** சிந்திய சவரி, அன்புடன் அளித்த விருந்தை இராமன் ஏற்றான்.

**சுக்ரீவனுடன் உறவு :**

அனுமன் அழைத்து வந்த வானரத் தலைவனான சுக்ரீவனிடம் இராமன், "இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் என் பகைவர்; தீயவராயினும் உன் நண்பர்கள் என் நண்பர்கள்; உன் உறவினர் என் உறவினர்; அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர்; **நீ என் இனிய உயிர் நண்பன்**" என்று கூறி உறவு பாராட்டினான்.

**வீடணனிடம் உறவு :**

உடன்பிறந்த இராவணன் கடிந்ததால், தன்னைத் தேடிவந்து அடைக்கலமான **அரக்கர்குல வீடணனைத்** தன் உடன் பிறந்தவனாக ஏற்ற இராமன் இலங்கை அரசை அவனுக்கு உடைமையாக்கினான். மேலும், "குகனுடன் சேர்ந்து நாங்கள் ஐவர் ஆனோம்; பின்னாளில் கதிரவன் மகனான சுக்ரீவனுடன் சேர்ந்து அறுவர் ஆனோம்; உள்ளத்தில் அன்புடன் வந்த அன்பனே! **உன்னோடு சேர்ந்து நாம் எழுவரானோம்**" என்று உறவை நிலைநாட்டினான்.

**முடிவுரை :**

தன்னை ஒத்த **மனிதர்களிடம் மட்டுமன்றிப்** பறவை, அணில், அரக்கர், விலங்கு, வானரம், வேடுவர் என **அனைத்து உயிரினங்களிடத்தும்** அன்பு செலுத்தி ஆதரவு காட்டும் **பண்பின் படிமமாக** இராமன் விளங்கியமையை இதன்வழி அறிந்து தெளியலாம்.

**(அல்லது)**

**ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.**

**முன்னுரை :**

கல்வி கற்பதனாலும் கேட்டு அறிவதனாலும் ஒருவன் பெற்ற கருத்துகளைச் சிந்தித்து, ஆராய்ந்து பெறும் உண்மையைத் தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வதே அறிவுடைமை ஆகும்.

**வாழ்க்கைப் பாதுகாப்புக்கு அரண் :**

அறிவு ஒன்றே, ஒருவனுக்கு அழிவு வராமல் பாதுகாக்கும் கருவியாகும். அது மட்டும் அன்றிப் பகைவராலும் அழிக்க முடியாத **பாதுகாப்பு அரணும்** ஆகும். அதாவது, வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்பது அறிவு ஒன்றே ஆகும் என்பதாம்.

**அறிவே நல்வழியில் செலுத்தும் :**

மனத்தை அதன் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்துவதே அறிவு என வள்ளுவர் கூறுகிறார். **வாழ்வில் உயர மனஅடக்கம் தேவை** என்பது இதனால் வெளிப்படுகிறது.

**மெய்ப்பொருள் காண்பதே அறிவு :**

எப்பொருளைப் பற்றி எவர் சொன்னாலும், அவற்றைக் கேட்கும் நாம் அப்பொருளின் உண்மைப் பொருளைக் கண்டறிவதே அறிவாகும் என்பார் வள்ளுவர். இதனால் வாழ்வில் உயர்வதற்கு உண்மை அறிவைப் பெறவேண்டும் என்பது புலப்படுகிறது.

**உலகத்தோடு ஒட்டி வாழவேண்டும் :**

உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும். அதாவது, உலகில் உயர்ந்தோர் கடைப்பிடித்த **நன்னெறியைத் தெளிந்து** வாழ்ந்தால் உயர்வு பெறலாம் என்பதாம்.

**மனம் நடுங்கும்படியான துன்பம் இராது :**

பின்னர் வரப்போவதை **முன்னரே அறிந்து** பாதுகாத்துக்கொள்ளும் வல்லமை பெற்ற அறிவுடையவர்க்கு, அவர் மனம் நடுங்கும்படியாக வரக்கூடிய **துன்பம் எதுவும்** இருக்கமுடியாது. வாழ்வின் உயர்வுக்கு இன்றியமையாத துணை இதுவேயாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**முடிவுரை :**

கைப்பொருள் எதுவும் இல்லாவிட்டாலும் **அறிவுடையவர்**, எல்லாம் உடையவராகவே **மதிக்கப்படுவார்.** எல்லாவகைச் செல்வங்களையும் பெற்றவராக இருந்தாலும், **அறிவு இல்லாதவர் ஒன்றும் இல்லாதவராகவே** கருதப்படுவர். ஆகவே, நாம் வாழ்வில் உயர்வுபெற அறிவுடையவராகத் திகழ்வது இன்றியமையாததாகும் என வள்ளுவர் விளக்குகிறார்.

**45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.**

**முன்னுரை :**

பண்டைக்காலம் முதலே, கல்வியும் அதன் நோக்கமும், கல்விக்கூட அமைப்பும் கற்பிக்கும் முறைகளும் காலந்தோறும் இலக்கியங்களில் தடங்களாகப் பதிவு பெற்றுள்ளன.

**வித்தியாரம்பம் அல்லது கல்வித்தொடக்கம் :**

பண்டைய காலத்தில் ஊர்தோறும் மன்றங்கள் பள்ளிகளாகத் திகழ்ந்தன. பண்டைக்காலத்தில் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் காலம் ஒரு பெரிய சிறப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது. உபாத்தியாயர், ஏட்டின்மீது மஞ்சள் பூசி, பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் சொல்வர். தொடர்ந்து நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க, மாணாக்கன் அதைப் பின்பற்றிச் சொல்வான்.

**எழுத்துப் பயிற்சி :**

உபாத்தியாயர் வழிகாட்டலில் குழந்தைகள் முதலில் மணலில் எழுதப் பழகுவார்கள். அதனால், அவர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்தன. உபாத்தியாயர், முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் எழுதப் பழக்கி வந்தார்கள். ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் குழந்தைகளின் ஏடுகளில் மேலே எழுதி, அதைப்பார்த்து அதுபோல் எழுதிவரச் சொல்வார்கள்.

**மனனப் பயிற்சி :**

தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன, பாடமாக இருந்தன. அவற்றை அக்கால மாணவர்கள் மனனமாகப் பயின்றனர். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயமாக மனனம் செய்தனர்.

**சாந்துணையும் கற்றல் :**

பள்ளிக்கூடத்தில் பல நூல்களையும் பயின்றதோடு நில்லாமல், வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து படித்து வந்துள்ளனர். பள்ளியில் கற்ற பின்னரும் சிலர், சிறந்த கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் இருப்பிடம் அறிந்து, தேடித் தேடிக் கற்றுள்ளனர்.

**ஓதற்பிரிவு :**

இல்லறம் நடத்தும் காலத்தில்கூட, வேற்று நாட்டுக்குச் சென்றும், கடல்கடந்தும் ஆங்காங்கே உள்ளோருக்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும், வாதம் புரிந்தும், வென்றும் வந்ததோடு, தாம் முன்பு கற்று அறியாதவற்றைக் கற்றும் வந்துள்ளனர்.

**முடிவுரை :**

அந்தப் பழைய காலத்துப் பள்ளிக்கூடங்களைக் காலத்தின் வேகம் மாற்றி அமைத்துவிட்டாலும், அக்காலத்தில் நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளால் விளைத்தவற்றை உள்ளடக்கிய இலக்கியங்கள் வாயிலாகவும் அவற்றால் விளைந்த நற்பயன்களையும், அவற்றில் படித்த பேறறிஞர்கள் நமக்கு ஈட்டி வைத்துள்ள நூற்செல்வத்தையும் நினைக்கும்போது, அந்த நினைவே நம்முள் பெருமிதத்தை வளர்க்கிறது.

**(அல்லது)**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை :**

'கல்வி நகரம்' என்றும் 'முட்டை நகரம்' என்றும் மக்களால் பேசப்படும் நாமக்கல் நகரின் சிறப்பையும் வரலாற்றையும் இந்தக் கட்டுரையில் ஆராய்வோம்.

**முட்டை நகரம் :**

நாட்டின் பெரும்பாலான பகுதிகளுக்கு அனுப்பப்படும் முட்டைகள், நாமக்கல் பகுதியில் உற்பத்தி செய்யப்படுவதால், இது 'முட்டை நகரம்' என்றும், 'கோழிகள் நகரம்' என்றும் அழைக்கப்படுகிறது.

**நாமக்கல் கோட்டை :**

நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மலைக்கோட்டை, இந்நகரின் சிறப்பம்சமாகும். இக்கோட்டை, ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள குறுகலான படிகளின்மூலம் இக்கோட்டையைச் சென்றடைய முடியும்.

**மன்னராட்சியில் நாமக்கல் :**

ஒரு காலத்தில் நாமக்கல், பல்லவ வம்சத்தில் மணம் புரிந்திருந்த அட்டிக்குல மன்னன் குணசீலா என்பவரின் ஆட்சியில் இருந்தது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர்கள் ஆட்சியிலும், பின்னர் விஜயநகரப் பேரரசின் ஆளுகையிலும் இருந்தது. அதன் பின்னர் ஹைதர் அலியின் படைத்தலைவர்களில் ஒருவரால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு, 1768ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது.

**நீர் ஆதாரங்கள் :**

நாமக்கல் மாவட்டத்தின் வட பகுதிகள் மலைப்பிரதேசமாகவும், தென் பகுதிகள் சமவெளிகளாகவும் உள்ளன. இம்மாவட்டத்தின் பிரதான அருவிகளான காவிரி, ஐயாறு, கரிப்பொட்டான் ஆறு மற்றும் திருமணிமுத்தாறு ஆகியன, மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரங்களாகும்.

**கொல்லிமலை :**

நாமக்கல் மாவட்டத்தின் தோட்டம் எனப்படுவது கொல்லிமலை. இது, 'நாடு' என்றழைக்கப்படும் 16 கிராமப் பஞ்சாயத்துகளை உள்ளடக்கியுள்ள ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் நிர்வகிக்கப்படுகிறது. கொல்லி மலை, 371.03 சதுர கி.மீ. பரப்பளவு உடையது. கடல் மட்டத்திலிருந்து 1300 மீட்டர் உயரத்தில் உள்ளது.

இங்குள்ள பழங்குடிகள், 'மலையாளிகள்' ஆவர். வல்வில் ஓரி என்னும் சிற்றரசனால் ஆளப்பட்ட மலை இது. இங்குள்ள பிரசித்தி பெற்ற 'அறப்பளீஸ்வரர்' ஆலயம் தற்போது இந்துக் கோவிலாக இருந்தாலும், முற்காலத்தில் ஜைன மதத் துறவிகளின் இருப்பிடமாக இருந்துள்ளது. இம்மலையில், 'ஆகாய கங்கை' என்னும் புகழ்மிக்க அருவி அமைந்துள்ளது.

**லாரிகள் நகரம் :**

லாரிகளுக்குக் கூடு கட்டும் தொழில் இங்குப் பிரபலம். எனவே, நாமக்கல் இந்தியத் தொழில் நகரங்கள் வரிசையில் இடம்பெற்றுள்ளது. இத்தொழில், நாமக்கல்லின் தனிச்சிறப்பு. 1960ஆம் ஆண்டிலிருந்து இத்தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. 150க்கும் மேற்பட்ட லாரிப் பட்டறைகள் இங்குள்ளன.

லாரிகள், இழுவை இணைப்பு வண்டிகள், சமையல் எரிவாயு கொண்டுசெல்லும் டேங்கர் லாரிகள் போன்ற பலவகை லாரிகள், நாமக்கல் மாவட்டத்தில் உள்ளன. எனவே, நாமக்கல் 'லாரிகள் நகரம்' என்றும் அழைக்கப்படுகிறது.

**கல்வி நகரம் :**

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பிறந்த மாவட்டம் இது. எனவே, இவர் பெயரில் ஒரு அரசுக் கலைக்கல்லூரி இயங்கி வருகிறது. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இம்மாவட்டத்தில் உள்ளது. நாமக்கல் நகரிலும் சுற்று வட்டாரத்திலும் புகழ்மிக்க தனியார் பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

**கோவில் நகரம் :**

புகழ்மிக்க குடைவரைக் கோவிலான நரசிம்மர் கோவிலும், நாமகிரித் தாயார் கோவிலும், உயரமான ஆஞ்சநேயர் கோவிலும் நாமக்கல் நகரின் அடையாளங்கள் எனலாம். 6.7மீ உயரமுள்ள ஆஞ்சநேயர் சிற்பம், கி. பி. 966இல் உருவாக்கப்பட்டது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தொழில் நகரம் :**

இம்மாவட்டத்தில் முக்கியத் தொழில் ஆடை நெய்தல். அது மட்டுமன்றி ஜவ்வரிசி ஆலைகளும், நெய் தயாரிப்பும், நூற்பாலைகளும், விசைத்தறிகளும், கைத்தறிகளும், தனியார் சர்க்கரை ஆலையொன்றும், தனியார் காகித ஆலையும் இம்மாவட்டத்தில் உள்ளன.

**முடிவுரை :**

முட்டை நகரம், லாரிகள் நகரம், கல்வி நகரம், கோவில் நகரம் எனப் பல்வேறு விதமான வளர்ச்சிகளைக் கொண்ட அற்புத நகரமாக நாமக்கல் நகரம் விளங்கி வருகிறது.

**46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்கவும்.**

**முன்னுரை :**

நமக்குப் பாடமாக அமைந்துள்ளது உத்தமசோழன் எழுதிய ‘முதல்கல்’ சிறுகதை. இக்கதையின் வாயிலாகப் பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்ச்சியால் மாற்றிய மருதனின் பண்புநலத்தைக் குறித்து நாம் ஆராய்வோம்.

**வெள்ளம் சூழ்ந்த பசும்பயிர் வயல்வெளி :**

வளவனாற்றின் வடகரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை, **பச்சைப் பசேல்** என்று விரிந்து கிடந்தது **வயல்வெளி.** அடர்ப் பச்சையில் தீவுபோல ஊர்க்குடியிருப்பும், மரங்களுக்கிடையில் வயல்வெளி எங்கும் நடவு முடிந்து ஒரு வாரம் பத்து நாளான பச்சை பிடிக்கத் தொடங்கியிருந்த **இளம்பயிரும்,** வெளிர் பச்சையில் இப்போதோ சற்றுப் பொறுத்தோ நீருக்குள் மூழ்கிவிடும் ஆபத்தில் இருந்தது. ‘**சக்கரக்குழி**’ அளவுகூட நிலம் இல்லாத மருதன் அந்தப் **பயிரைக் காப்பாற்றத்** திட்டமிடுவதும் **ஊரையே திரளச்** செய்வதும் இக்கதையின் உன்னத உச்சமாகும்.

**பயிர்காக்க யோசனை :**

வயல்வெளி வெள்ளக்காடானது மட்டுமன்றி, “வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மேலும் வலுவடைந்து மேற்கு வடமேற்காக நகரக்கூடும். இதன் விளைவாக அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு நாகப்பட்டினம், கடலூர் உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் பலத்தமழை பெய்யக்கூடும்” என்பது போன்ற செய்திகளைக் கேட்ட மருதன், “எந்த மழையின் உதவியில் நட்டார்களோ, அதே மழையின் ‘**அபரிமித அன்பினால்**’ இப்போது பயிர் தெப்பலாடுகிறது. ஒருநாள் நீரில் மூழ்கினால் போதும், முழுவதும் அழுகிவிடும். மறுபடி புதிதாக நாற்றுவிட்டுப் புதிய சாகுபடிதான். அதற்கு யாரால் முடியும்? என்ன செய்யலாம்?” என்று, முணுமுணுத்த மருதனுக்குள் ஆயிரம் யோசனைகள்.

**வழி தெரிந்தது மருதனுக்கு :**

ஊரைச் சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்று மைல் நீள வடிவாய்க்கால். அது முழுவதுமே, சுவர் வைத்துத் தடுத்ததைப் போல் காடாய் மண்டிக் கிடக்கும் **காட்டாமணக்குச் செடிகள்.** அந்தச் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் போதும் ஒரே நாளில் **உபரிநீர் முழுவதும்** வடிந்துவிடுமே! பயிர்கள் வெள்ளநீரில் மூழ்காமல் மொத்தக் கிராமமும் தப்பித்துக்கொள்ள, வழி கண்டுபிடித்துவிட்ட மகிழ்ச்சியில் மருதன் பரவசமானான்.

**ஊரும் உதவிக்கு வந்தது :**

தன்னம்பிக்கையோடு, வடிவாய்க்காலின் ஜில்லென்ற இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியனாய் நின்றபடி, மண்டிக் கிடந்த காட்டாமணக்குச் செடிகளைப் பிய்த்து எறிந்து கொண்டிருந்தான் மருதன். மருதனுக்கு அவன் மனைவி உதவக் கைநீட்டினாள். பின்னர், ஊரே திரண்டு வந்து காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்தது. வேலை இருக்கிறது என ஒதுங்கியவர்கள்கூட, மருதனுக்கு உதவி செய்ய முன்வந்தனர். **ஊரே ஒன்றிணைந்ததால்,** வெள்ளம் குறைந்து காணாமல் போனது; பயிர்கள் பிழைத்தன.

**முடிவுரை :**

ஊரில் எவருக்கும் இல்லாத அக்கறை மருதனுக்கு இருந்ததைப் பார்க்கும்போது, பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊர்மக்களைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய **மருதனின் பண்புநலம்** தெளிவாகத் தெரிகிறது. **ஊர்கூடித் தேர் இழுத்தால்**, தானாக அது சேர வேண்டிய இடத்தில் வந்து நிற்கும் அல்லவா!

(அல்லது)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு'– இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

முன்னுரை :

'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக, நாம் செய்ய வேண்டியன எவை என்பதனை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

சாலை விபத்துகள் :

நம் நாடுதான் உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு. ஏறக்குறைய **55 இலட்சம் கிலோ மீட்டர் சாலைகள்** நம் நாட்டில் உள்ளன. 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் நம் நாட்டில் உள்ளன. ஓர் ஆண்டில் ஏறக்குறைய 5 இலட்சம் விபத்துகள் நடக்கின்றன. தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே அதிக சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக உள்ளது.

சாலை விபத்தைத் தடுக்கும் முறைகள் :

சாலைகளின் வகைகள், மைல் கற்களின் விவரங்கள் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும். போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும், போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்பச் சாலையைப் பயன்படுத்த வேண்டும். நடைமேடை, நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும், சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக்கூடாது.

சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. தேவையான இடங்களில் சரியான சைகையைச் செய்ய வேண்டும். எதிரில் வருகிற, கடந்து செல்ல முற்படுகிற ஊர்திகளுக்கு வழிவிட வேண்டும். தேவையெனில், வேகம் குறைத்து **இதர வாகனங்களுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும்.** பிற ஊர்தி ஓட்டிகளுக்கு விட்டுக் கொடுப்பது சிறந்தது. இதர சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ண வேண்டும்.

குறியீடுகள் :

பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சாலைகளில் இடம்பெற்றிருக்கும் **குறியீடுகள்**, போக்குவரத்தினைச் சீர் செய்யவும் **பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.** குறியீடுகளை மூன்றாகப் பிரித்து அறியலாம்.

அவையானவன : உத்தரவுக் குறியீடுகள், எச்சரிக்கைக் குறியீடுகள், தகவல் குறியீடுகள்.

முடிவுரை :

சாலை விதிகளைப் பின்பற்றிப் பயணங்களை மேற்கொள்ளும்போது, விபத்தில்லாத் தமிழ்நாடு உருவாகும்.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4 + 2 = 6

அ) "அறிவும்" எனத் தொடங்குங் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே,
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே

ஆ) "பொருள்" என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# மனப்பாடப்பகுதி

## தண்டியலங்காரம்

(Mar.-20, July-23)

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

– தண்டி

## நெடுநல்வாடை

(PTA - 3)

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென,
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர்அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க.

– நக்கீரர்

## கம்பராமாயணம்

(Mar.-20)

'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

– கம்பர்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## திருக்குறள்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் (Aug. - 21)
தெய்வத்துள் வைக்கப் படும்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது (PTA - 2)
அன்றே மறப்பது நன்று.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை (PTA - 4, 6)
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை (Mar.-24)
வேண்டும் பிறன்கைப் பொருள்.

மறத்தல் வெகுளியை யார்மட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால் (Mar.-23)
தன்னையே கொல்லும் சினம்.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் (Sep.-22)
ஏமப் புணையைச் சுடும்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன் (PTA - 5)
உண்மை அறிவே மிகும்.

– திருவள்ளுவர்

## இதில் வெற்றி பெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற (May-22)
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

– சுரதா

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென, (Mar.-24)
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே,
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

– ஔவையார்

## தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற (Aug.-21, PTA - 2, Mar.-23)
உத்தமர்தம் உறவுவேண்டும்!
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்!
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்ம்மை
பேசா திருக்கவேண்டும்!
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்; மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

– இராமலிங்க அடிகள்

## சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித் (PTA - 5, Sep.-22)
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை.

– இளங்கோவடிகள்

## திருக்குறள்

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் (PTA - 1, May - 22)
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை (Sep.-20)
அதிர வருவதோர் நோய்.

நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் (Mar.-20)
சொல்லிய வண்ணம் செயல்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு (July-23)
அச்சாணி அன்னார் உடைத்து.

கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

– திருவள்ளுவர்

### புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்;

– பிசிராந்தையார்

### இரட்சணிய யாத்திரிகம்

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி (PTA - 4, 5)
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

– எச். ஏ. கிருட்டிணனார்

### சிறுபாணாற்றுப்படை

...... என ஆங்கு
எழுசமங் கடந்த எழுஉறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்.

– நத்தத்தனார்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# வினாத்தாள் வடிவமைப்பு

| | | | |
|---|---|---|---|
| | ஒரு மதிப்பெண் வினாக்கள் | | |
| பகுதி – I | | செய்யுள், உரைநடை, துணைப்பாடம் மற்றும் இலக்கணப் பகுதிகளில் இருந்து 14 வினாக்கள் கேட்கப்படும். | $14 \times 1 = 14$ |
| | இரண்டு மதிப்பெண் வினாக்கள் | | |
| பகுதி – II | பிரிவு – 1 | செய்யுள் பகுதியில் இருந்து 4 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $3 \times 2 = 6$ |
| | பிரிவு – 2 | உரைநடைப் பகுதியில் இருந்து 3 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $2 \times 2 = 4$ |
| | பிரிவு – 3 | இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சிப் பகுதியில் இருந்து 9 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $7 \times 2 = 14$ |
| | நான்கு மதிப்பெண் வினாக்கள் | | |
| பகுதி – III | பிரிவு – 1 | செய்யுள் பகுதியில் இருந்து 4 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $2 \times 4 = 8$ |
| | பிரிவு – 2 | உரைநடைப் பகுதியில் இருந்து 4 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $2 \times 4 = 8$ |
| | பிரிவு – 3 | இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சிப் பகுதியில் இருந்து 5 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். | $3 \times 4 = 12$ |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் | |
| பகுதி – IV | | செய்யுள், உரைநடை மற்றும் துணைப்பாடம் என ஒவ்வொரு பகுதியில் இருந்தும் 2 வினாக்கள் கேட்கப்படும். இவை அல்லது வகை வினாவாக அமையும் | $3 \times 6 = 18$ |
| பகுதி – V | | மனப்பாடச் செய்யுள் ஒன்று கேட்கப்படும். – 4 மதிப்பெண்<br>மனப்பாடத் திருக்குறள் ஒன்று கேட்கப்படும். – 2 மதிப்பெண் | $4 + 2 = 6$ |

## நூல்பெயரும் ஆசிரியர் பெயரும்

1. இளந்தமிழே! – சிற்பி பாலசுப்பிரமணியம்
2. ஒரு கிராமத்து நதி – சிற்பி பாலசுப்பிரமணியம்
3. தமிழ்மொழியின் நடைஅழகியல் – தி. சு. நடராசன்
4. தண்டியலங்காரம் – 'ஓங்கலிடை வந்து' – தண்டி–தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்
5. தம்பி நெல்லையப்பருக்கு (கடிதம்) – பாரதியார்
6. பாரதி கடிதங்கள் – ரா. அ. பத்மநாபன் பதிப்பித்தது
7. பிறகொரு நாள் கோடை – அய்யப்ப மாதவன் (கவிதைகள்)
8. மழைக்குப் பிறகும் மழை – அய்யப்ப மாதவன்
9. நெடுநல்வாடை – நக்கீரர்
10. முதல்கல் – உத்தமசோழன்
11. மனிதத்தீவுகள் – உத்தமசோழன்
12. தமிழர் குடும்ப முறை – பக்தவத்சல பாரதி
13. தமிழர் மானிடவியல் – பக்தவத்சல பாரதி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14. தமிழகப் பழங்குடிகள் – பக்தவத்சல பாரதி
15. விருந்தினர் இல்லம் – ஜலாலுத்தீன் ரூமி
16. தாகங்கொண்ட மீனொன்று – என். சத்தியமூர்த்தி
17. மஸ்னவி – ஜலாலுத்தீன் ரூமி
18. கம்பராமாயணம் – கம்பர்
19. உரிமைத்தாகம், வெக்கை, பிறகு – பூமணி (பூ. மாணிக்கவாசகர்)
20. அஞ்ஞாடி – பூமணி
21. கோடை மழை – சாந்தா தத்
22. பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் – உ. வே. சாமிநாதர்
23. இதில் வெற்றி பெற – சுரதா
24. இடையீடு – சி. மணி
25. புறநானூறு – ‘வாயிலோயே!’ – ஔவையார்
26. துறைமுகம், தேன்மழை – சுரதா
27. சிறுபாணாற்றுப்படை – நத்தத்தனார்
28. தெய்வமணிமாலை – இராமலிங்க அடிகள்
29. தேவாரம் (திருமயிலாப்பூர் பதிகம்) – திருஞானசம்பந்தர்
30. அகநானூறு (‘பெருங்கடல் வேட்டத்து’) – அம்மூவனார்
31. மனுமுறை கண்ட வாசகம் – இராமலிங்க அடிகள்
32. ஜீவகாருண்ய ஒழுக்கம் – இராமலிங்க அடிகள்
33. தலைக்குளம் – தோப்பில் முகமது மீரான்
34. சாய்வு நாற்காலி – தோப்பில் முகமது மீரான்
35. நாய்கள், வாக்குமூலம் – நகுலன்
36. சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள்
37. நடிகர் திலகம் – பாலச்சந்திரன் சுள்ளிக்காடு
38. சிதம்பர நினைவுகள் – கே. வி. சைலஜா
39. இலக்கியத்தில் மேலாண்மை – வெ. இறையன்பு
40. வாய்க்கால் மீன்கள் – வெ. இறையன்பு
41. ஏழாவது அறிவு – வெ. இறையன்பு
42. அதிசய மலர், கானல் வரி – தமிழ்நதி (கலைமணி)
43. புறநானூறு (காய்நெல் அறுத்து) – பிசிராந்தையார்
44. அதன் பிறகும் எஞ்சும் – தமிழ்நதி (கலைமணி)
45. தேயிலைத் தோட்டப்பாட்டு – முகம்மது இராவுத்தர்
46. முகம் – சுகந்தி சுப்பிரமணியன்
47. இரட்சணிய யாத்திரிகம் – எச். ஏ. கிருட்டிணனார்
48. போற்றித் திருஅகவல் – எச். ஏ. கிருட்டிணனார்
49. இரட்சணிய மனோகரம் – எச். ஏ. கிருட்டிணனார்
50. சங்க காலக் கல்வெட்டும் என் நினைவுகளும் – ஐராவதம் மகாதேவன்
51. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் (நமது அடையாளங்களை மீட்டவர்) – மயிலை சீனி. வேங்கடசாமி

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com